www.onlineuthayan.com

# உதயன்

சுடர் 27
கதிர் 165

வள்ளுவர் ஆண்டு 2043 சித்திரை 27 புதன்கிழமை (09/05/2012) UTHAYAN - A Lively National Tamil Daily

# இலங்கைப் பிரச்சினை தொடர்பில் டில்லியில் இன்று முக்கிய மாநாடு



## தீர்வு விடயத்தில் இந்தியாவின் அடுத்த நகர்வு குறித்து அனைத்துக் கட்சிகளும் ஆலோசனை

புதுடில்லி, மே 9

இலங்கை இனப் பிரச்சினை விவகாரம் குறித்து ஆராய்ந்து முக்கியமானதொரு தீர்மானத்தை எடுக்கும் நோக்கில் வட்டமேசை மாநாடொன்றை இன்று புதுடில்லியில் அவசரமாக கூட்டுகின்றது இலங்கை வந்து சென்ற இந்திய நாடாளுமன்றக் குழு.

ஈழத்தமிழர் பிரச்சினை தொடர்பில் இந்தியாவின் அடுத்த கட்ட நகர்வுகள்-அணுகுமுறைகள் எவ்வாறு அமைய வேண்டும் என்பது குறித்து தீர்க்கமானதொரு முடிவை எடுக்கும் முனைப்பில் நடைபெறும் இந்த வட்டமேசை மாநாட்டில் இந்திய அரசியல் கட்சிகள் அனைத்தும் பங்குபற்றும் எனத் தெரியவருகின்றது.

கொழும்பு வந்து சென்ற குழுவில் இடம் பெற்ற நாடாளுமன்ற உறுப்பினர்கள் உட்பட இலங்கை விஜயத்தில் அங்கம் வகிக்காத இதரக் கட்சிகளின் முக்கிய உறுப்பினர்களும் இந்த முக்கிய மாநாட்டில் கலந்து கொண்டு தமது கருத்துக்களை முன்வைப்பர் என்று அறிய முடிகின்றது.

அதேவேளை, இலங்கையின் தற்போதைய நிலைவரங்களை எடுத்துரைத்து இந்திய நாடாளுமன்ற எதிர்க்கட்சித் தலைவர் சுஷ்மா சுவராஜ், பிரதமர் மன்மோகன் சிங்கிடம் கையளித்த அறிக்கை தொடர்பிலும் அங்கு கருத்துப்

04

## பூஸாவில் மாத்திரமே புலி உறுப்பினர்கள்

### கோத்தபாய கூறுகிறார்



கொழும்பு, மே 9

போரின்போது சரணடைந்த விடுதலைப்புலிகளுக்காகத் தற்போது பூஸாவில் மாத்திரமே தடுப்பு முகாம் அமைக்கப்பட்டுள்ளது. அங்கு தண்டனைக்குப் பதிலாக முன்னாள் புலிகளுக்கு நன்நடத்தைகள் சொல்லிக் கொடுக்கப்படுகின்றன எனப் பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். விடுதலைப்புலிகள் தோற்கடிக்கப்பட்ட பின்னர் இலங்கையில் எந்த இடத்திலும் பிரச்சினைகள் இடம்பெறவில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஆங்கில ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய

04

## இனப்பிரச்சினை தீர்வுக்கு கூட்டமைப்புக்கு ஒத்துழைப்பு

### ஐ.தே.க உறுதி

கொழும்பு, மே 9

ஒன்றிணைந்த எதிர்க்கட்சி என்ற வகையில் தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு ஆதரவு வழங்குவோம் என ஐக்கிய தேசியக் கட்சி அறிவித்

04

## பேச்சுக்கான கதவுகளை அரசு மூடிவிடவில்லை

### அமைச்சர் டலஸ் கூறுகிறார்



கொழும்பு, மே 9

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதற்கான நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் இடம்பெறுவதற்கு முன்னர் அரசுடன் நேரடியாகப் பேச்சு நடத்த வேண்டும் என்று அரசிடம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இதுவரை உத்தியோகபூர்வமாக கோரிக்கை விடுக்கவில்லை. பேச்சுக்கான கதவுகளை அரசு மூடிவிடவில்லை. கதவுகள் திறந்தேயுள்ளன என ஸ்ரீலங்கா சுதந்திரக்

04

## இந்தியாவின் மாநில முதல்வர்களை வசமாக்கும் முயற்சியில் இலங்கை

### ஒவ்வொருவருக்கும் தனித்தனிக் கடிதம்

கொழும்பு, மே 9

இலங்கை விவகாரம் தொடர்பில் இந்திய மத்திய அரசின் கடும் போக்கினை அடுத்து, அந்த நாட்டின் மாநில முதலமைச்சர்களைத் தனக்குச் சார்பாகத் திருப்பும் முயற்சிகளில் இலங்கை அரசு இறங்கியுள்ளது.

இந்த முயற்சிகளின் முதற்கட்டமாகத் தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா உட்பட இந்திய மாநில முதலமைச்சர்களுக்கு இலங்கை வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தனித்தனியாக கடிதங்களை அனுப்பியுள்ளார்.

இந்தக் கடிதத்தில் இலங்கையில்

04

## 9 மாகாணங்களிலும் ஒரே நாளில் தேர்தல்

### கோருகிறது ஐ.தே.க.

கொழும்பு, மே 9

வடக்கு மாகாண சபைத் தேர்தலை நடத்தி அங்குள்ள மக்களுக்கு வாக்களிக்கும் உரிமையை வழங்க மறுக்கும் அரசு, கிழக்கு, வட மத்திய, சப்ரகமுவ மாகாண சபைகளைக் கலைத்து மக்களின் பணத்தை அநியாயமாகச் செலவுசெய்யப் போகின்றது எனக் கூறிய ஐக்கிய தேசியக் கட்சி, நாட்டின் ஒன்பது மாகாணங்களிலும் அரசு ஒரே தினத்தில் தேர்தலை நடத்த

04

## இலங்கைப் பிரச்சினை குறித்து மன்மோகன் - ஹிலாரி பேச்சு



புதுடில்லி, மே 9

இலங்கையின் இனப்பிரச்சினை விவகாரம் குறித்து அமெரிக்க வெளியுறவுச் செயலர் ஹிலாரி கிளிங்ரன் நேற்று இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்குடன் பேச்சு நடத்தினார்.

இந்தியாவுக்கு மூன்றுநாள் உத்தியோகபூர்வ பயணத்தை மேற்கொண்டுள்ள ஹிலாரி நேற்று பிரதமர் மன்மோகன் சிங்கை அவரது இல்லத்தில் சந்தித்துப் பேச்சு நடத்தினார். உலகப் பொருளாதாரம் மற்றும் தீவிரவாத ஒழிப்புக் குறித்து இந்

04

## அரசின் செயற்பாடுகளால் பொன்சேகாவுக்கு ஆபத்து

### அனோமா குற்றச்சாட்டு

கொழும்பு, மே 9

இருதயம் தொடர்பான மருத்துவ நிபுணர் வஜிர தென்னகோன் கொழும்பு நவலோக வைத்திய சாலையைத் தவிர வேறு வைத்தியசாலைகளில் சிகிச்சைகளை மேற்கொள்வதில்லை என்பதால், சரத் பொன்சேகாவை,

04

### மின்னல் தாக்கி இருவர் சாவு

கந்தளாய் மற்றும் திருகோணமலை பகுதிகளில் மின்னல் தாக்கி இருவர் உயிரிழந்துள்ளனர். விவசாய நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த சந்தர்ப்பத்தில் குறித்த இருவரும் மின்னல் தாக்கத்திற்கு உள்ளானதாக இடர்முகாமைத்துவ நிலையம் குறிப்பிட்டுள்ளது. இதற்கமைய மின்னல் தாக்கத்திற்குள்ளாகி வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 30 ஆக உயர்வடைந்துள்ளதாக வளிமண்டலவியல் திணைக்களம் கூறியுள்ளது.

### பஸ் மோதியதில் மாணவி சாவு

நாரம்மல - குளியாப்பிட்டிய பிரதான வீதியின் தம்பெலஸ்ஸ பகுதியில் தனியார் பயணிகள் பஸ் ஒன்று மோதி 14 வயது பாடசாலை மாணவி ஒருவர் பலியாகியுள்ளார். குறித்த மாணவி தனது தாயுடன் நேற்றுக் காலை 07.10 மணிளவில் வீதியில் நடந்து சென்று கொண்டிருந்தபோது நாரம்மலயில் இருந்து குளியாப்பிட்டிய நோக்கிச் சென்ற பஸ் இவர்கள் இருவர் மீதும் மோதியுள்ளது. விபத்தில் குறித்த மாணவி உயிரிழந்ததோடு தாய் மேலதிக சிகிச்சைகளுக்காக குருநாகல் வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

### தமராவுக்குப் பதிலாக ரவிநாத ஆரியசிங்க?

ஜெனிவாவுக்கான இலங்கையின் நிரந்தர வதிவிடப் பிரதிநிதியாகப் பணியாற்றிவரும் தமரா குணநாயகத்துக்குப் பதிலாக ரவிநாத ஆரியசிங்கவை அந்தப் பதவிக்கு நியமிக்க இலங்கை வெளிவிவகார அமைச்சு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாகத் தெரியவருகிறது. ரவிநாத ஆரியசிங்க தற்போது பிரசல்ஸுக்கான இலங்கைத் தூதுவராகப் பணியாற்றி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

### மாவட்ட மட்டத்தில் புனர்வாழ்வு முகாம்கள்

மாவட்ட மட்டத்தில் புனர்வாழ்வு முகாம்களை ஸ்தாபிக்கவுள்ளதாக சுகாதாரத்துறை அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார். கிராமிய பிரதேசங்களில் மது பாவனை மற்றும் புகைத்தல் செயற்பாடுகளுக்கு அடிமையான வர்களுக்குப் புனர்வாழ்வளிப்பதே இந்த முகாம்களின் நோக்கமாக இருப்பதாக அவர் குறிப்பிட்டார். இலங்கையில் நாளொன்றுக்கு 60 சதவீதமானவர்கள் மது மற்றும் புகைத்தல் காரணமாக ஏற்படும் நோய்களினால் பாதிக்கப்பட்டு மரணிப்பதாக அமைச்சர் தெரிவித்தார்.

### தமிழ் வர்த்தகரின் வீட்டில் கொள்ளை

கம்பளை நகரில் பிரபல தமிழ் வர்த்தகர் ஒருவரின் வீட்டுக்குள் புகுந்த இனந்தெரியாதோரால், அங்கிருந்த சுமார் 23 இலட்சம் ரூபா பெறுமதியான தங்க ஆபரணங்கள், 18 ஆயிரம் ரூபா பணம் ஆகியன கொள்ளையிடப்பட்ட சம்பவம் தொடர்பாக கம்பளை பொலிஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். கம்பளை ரயில் நிலையத்துக்கு அருகில் அமைந்துள்ள வர்த்தகரின் மூன்று மாடி வீட்டிலேயே இந்த கொள்ளைச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொதுமக்கள் பணத்தை அரசு கொள்ளையடிப்பது அம்பலம்

## சாடுகிறார் திஸ்ஸ அத்தநாயக்க

கொழும்பு, மே 9

தேசிய சேமிப்பு வங்கியின் 3940 லட்சம் ரூபாவை அதன் பணிப்பாளர் சபைக்குத் தெரியாமல் தி பினான்ஸ் நிறுவனத்தின் 780,000 பங்குகளைக் கொள்வனவு செய்ய பயன்படுத்தியமையின் மூலம் அரசு பொதுமக்களின் நிதியை வெளிப்படையாகக் கொள்ளையடிப்பது அம்பலமாவதாக ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது.

தேசிய சேமிப்பு வங்கியில் அப்பாவி பொது மக்களும் ஓய்வுபெற்ற ஊழியர்களும் சிறுவர்களுமே பணம் வைப்பிலிட்டுள்ளதாகவும் அந்த நிதியை தனியார் நிதியென நினைத்து வங்கியால் பயன்படுத்தப்படுவதாக ஐ.தே.க. பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.




இந்த சம்பவத்துக்கு பொறுப்புக்கூற வேண்டிய அனைவரும் பதவி விலக வேண்டும் என்கிறார் அத்தநாயக்க.

இந்தக் கொடுக்கல் வாங்கல்களை உடன் நிறுத்துமாறு ஜனாதிபதி ஆலோசனை வழங்கியுள்ளதாகக் கூறப்படுகின்றபோதும் அது குறித்துச் சட்ட நடவடிக்கை எடுக்காதது ஏன் எனத் தெரியவில்லை என்று கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தேசிய சேமிப்பு வங்கியின் தலைவராக இருப்பவர் நாட்டின் சட்டத்துறையில் மிக உயர்ந்த பதவியில் இருக்கும் ஒருவரின் கணவர் எனவும் இந்தக் கொடுக்கல் - வாங்கல் குறித்துப் பணிப்பாளர் சபையில் ஒருவரும் பொருளாளர் பிரதிநிதி ஒருவரும் எதிர்ப்புத் தெரிவித்தபோதும் அது செயற்படுத்தப்பட்டமை ஏன் எனவும் தலைவருக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்காதது ஏன் எனவும் திஸ்ஸ அத்தநாயக்க கேள்வி எழுப்பியுள்ளார்.

தி பினான்ஸ் நிறுவனத்தின் பங்கு 30.30 ரூபாவாக இருந்தவேளை 49.74 ரூபாவுக்குக் கொள்வனவு செய்யப்பட்டதனால் ஒரு பங்கின் விலை 32 ரூபாவரை அதிகரித்துள்ளதாகவும் இதன் மூலம் வங்கிக்கு 15 கோடி ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

இந்தச் சம்பவத்துக்குப் பொறுப்புக்கூற வேண்டிய அனைவரும் பதவி விலக வேண்டும் எனவும் ஏற்பட்ட நட்டத்தை அவர்களே ஈடு செய்ய வேண்டும் எனவும் திஸ்ஸ அத்தநாயக்க கோரிக்கை விடுத்துள்ளார். இவ்வாறான செயல்களால் ஊழியர் சேமலாப நிதியத்தில் நிதித் தட்டுப்பாடுஏற்பட்டுள்ளதாகஅவர் சுட்டிக்காட்டியுள்ளார். (த)




போதைப்பொருள் தொடர்பாக கொழும்பு நீதிமன்றத்தில் நடைபெறும் வழக்கொன்றில், பாதிக்கப்பட்ட தரப்பாக நடிகை அஞ்சலா செனவிரட்ன நேற்று செவ்வாய்க்கிழமை முன்னிலையானார். தனது முகவரிக்குத் தனது பெயரில் ஹெரொயின் போதைப்பொருள் கொண்ட பொதி அனுப்பி வைக்கப்பட்டதன் காரணமாகத் தனது நற்பெயருக்கு களங்கம் ஏற்பட்டுள்ளதுடன் கொழும்பிலுள்ள சவூதி அரேபிய தூதுவராலயத்தில் பணிபுரிந்த தொழிலையும் தாம் இழந்துள்ளதாக அவர் நீதிமன்றத்தில் குறிப்பிட்டார். (த)

# 1000 பேருக்கு ஆசிரியர் நியமனம் மாத இறுதிக்குள் வழங்கப்படும்

## கல்வி அமைச்சர் தகவல்

கொழும்பு, மே 9

இம்மாத இறுதிக்குள் 1000 தகவல் தொழில்நுட்பப் பட்டதாரிகளுக்கு ஆசிரியர் நியமனங்கள் வழங் கப்படவுள்ளன என்று கல்வியமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

புதிதாக நியமனம் பெறும் பட்டதாரி ஆசிரியர்கள் கல்வி அமைச்சினால் வழங்கப்படும் பாடசாலைகளிலேயே கடமையாற்ற வேண்டும் என்றும் இல்லையேல் நியமனங்கள் இரத்துச் செய்யப்படும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

ஆயிரம் பாடசாலைகளை அபிவிருத்தி செய்யும் திட்டத்தின் முதற்கட்டமாக இந்த நியமனங்கள் வழங்கப்படுகின்றன.

தெரிவு செய்யப்பட்டிருக்கும் தொழில்நுட்பப் பட்டதாரிகள் கடமையாற்ற வேண்டிய பாடசாலையைக் கல்வியமைச்சே முழுமையாகத் தீர்மானிக்கிறதே தவிர இதில் பட்டதாரிகளின் தனிப்பட்ட விருப்பங்களுக்கு இடம் வழங்கப்படவில்லை எனவும் அமைச்சர் கூறினார்.

1000 தொழில்நுட்பப் பட்டதாரிகளுக்கு ஒரே தடவையில் ஆசிரியர் நியமனம் வழங்குவது இதுவே முதற் தடவை எனவும் அமைச்சர் தெரிவித்தார். (த)

# வடமத்திய மாகாண சபையை கலைக்க இடைக்காலத் தடை

கொழும்பு, மே 09

பதவிக் காலம் நிறைவுறும்வரை வட மத்திய மாகாண சபையைக் கலைக்க நீதிமன்றம் இடைக்காலத் தடை உத்தரவு பிறப்பித்துள்ளது.

வட மத்திய மாகாண ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர் அணில் ரத்நாயக்க சட்டத்தரணி ஊடாகத் தாக்கல் செய்த மனுவை பரிசீலித்த போதே நீதிமன்றம் இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளது. 2013 செப்ரெம்பர் 17ஆம் திகதி வட மத்திய மாகாண சபையின் பதவி காலம் நிறைவடையவுள்ள நிலையில் அதற்கு முன்னர் மாகாண சபையைக் கலைக்க மாகாண முதலமைச்சர் நடவடிக்கை எடுத்து வருவதாக அந்த மனுவில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அரசியல் இலாப நோக்கம் கருதி மக்கள் தீர்ப்பை நிராகரித்து மாகாண சபையைக் கலைக்க நடவடிக்கை எடுக்கப்படுவதாக மனுவில் கூறப்பட்டுள்ளது. இதனையடுத்து பதவிக் காலம் நிறைவுறும்வரை வட மத்திய மாகாண சபையைக் கலைக்க நீதிமன்றம் இடைக்காலத் தடை உத்தரவு பிறப்பித்துள்ளது. (த)

# இந்திய மருந்துக் கம்பனிகளுக்கு இலங்கையில் தடை எதுவுமில்லை

கொழும்பு, மே 9

எந்தவொரு இந்திய மருந்து உற்பத்திக் கம்பனிகளுக்கு இலங்கையில் தடை விதிக்கப்படவில்லையென இந்திய அரசு கூறியதாக இந்திய ஊடகத் தகவல் நிறுவகம் தெரிவித்துள்ளது.

எழுத்து வடிவ கேள்வியொன்றுக்கு லோக்சபாவில் பதிலளித்த வர்த்தக, கைத்தொழில் அமைச்சர் சிந்தியா,

''கேள்விப்பத்திர நிபந்தனைகளை மீறியமைக்காகச் சில இந்தியக் கம்பனிகளுக்கு இலங்கை அரசு தடை விதித்துள்ளதாக இலங்கைப் பத்திரிகைகளில் செய்திகள் வெளியாகியிருந்தன. தரக் குறைவான மருந்துகளை இந்தக் கம்பனிகள் வழங்கியதாகவும் இந்தச் செய்திகளில் கூறப்பட்டிருந்தது.

இது தொடர்பில் இலங்கையிலுள்ள இந்தியத் தூதரகம் உரிய இலங்கை அதிகாரிகளுடன் பேச்சு நடத்தியது. இலங்கையின் சுகாதார அமைச்சர் 2011 ஜுலை, ஒகஸ்ட்டில் புதுடில்லி வந்தபோதும் இது பற்றிப் பேசப்பட்டது.

அப்போது தரக்குறைவான மருந்து இலங்கைக்குள் வருவதைத் தடுக்கக் கேள்விப்பத்திரம் கோரும்போது தெளிவான நிபந்தனைகளைக் குறிப்பிடுவதன் அவசியம் வலியுறுத்தப்பட்டது'' எனக் கூறினார்.

மருந்துகளின் தரக் குறைவு பற்றிய எந்த முறைப்பாடும் கடுமையாக ஆராயப்படும். இவை தொடர்பில் மருந்துகள் மற்றும் அலங்காரப் பொருள்கள் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் அவர் கூறினார். (த)

# கடலில் தத்தளித்த 4 சோமாலியர்

## இலங்கை மீனவர்கள் காப்பாற்றினர்

கொழும்பு, மே 9

கடந்த சில நாள்களாக நடுக்கடலில் தத்தளித்துக் கொண்டிருந்த சோமாலிய பிரஜைகள் நால்வரை இலங்கை மீனவர்கள் காப்பாற்றி அழைத்து வந்துள்ளனர்.

மோதரைக் கடற்பரப்பில் இருந்து கடந்த ஒரு மாதத்துக்கு முன்னர் மீன்பிடி நடவடிக்கைகளுக்குச் சென்ற ட்றோலர் படகு நேற்றுக்காலை8.30 மணி அளவில் மோதரைக் கடற்பரப்பை வந்தடைந்தது. இப்படகில் மீன்பிடிக்கச் சென்றவர்களை விட மேலதிகமாக நால்வர் கரை திரும்பியுள்ளனர்.

இது தொடர்பில் படகின் கப்டனிடம் வினவியபோது நால்வரும் சோமாலிய நாட்டுப் பிரஜைகள் என்பது தெரியவந்ததாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

2012-05-02 அன்று சிறிய படகு ஒன்றில் இவர்கள் வந்ததாகவும் கடலில் திசை தெரியாது தத்தளித்துக் கொண்டிருந்தவேளை, காப்பாற்றப்பட்டதாகவும் இலங்கை மீனவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

# துமிந்தவைக் கைது செய்ய பிடியாணை தேவையில்லை



கொழும்பு, மே 9

நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வாவை தங்களால் கைதுசெய்ய முடியவில்லையெனக் குற்றப்புலனாய்வுப் பிரிவினர் நீதிமன்றத்துக்கு அறிவிக்கவில்லையெனவும் இதனால் அவரைக் கைதுசெய்வதற்கான பிடியாணை உத்தரவு பிறப்பிக்க வேண்டிய அவசியம் இல்லையெனவும் கொழும்பு பிரதி நீதிவான் பிரசன்ன அல்விஸ் நேற்றுத் தெரிவித்துள்ளார்.

அவர்கள் விரும்பினால் மாற்று நடவடிக்கைகளை எடுக்கலாமெனப் பாரத லக்ஷ்மன் பிரேமச்சந்திரவின் மனைவியின் சார்பில் முன்னிலையான சட்டத்தரணியிடம் நீதிவான் கூறினார்.

இதேவளை-

பாரத லக்ஷ்மன் பிரேமச்சந்திர கொலை வழக்கில் நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வாவின் சார்பில் சட்டத்தரணி ஹேமந்த வர்ணகுலசூரிய முன்னிலையாக முடியாது என கொழும்பு மேலதிக நீதிவான் பிரசன்ன அல்விஸ் அளித்த உத்தரவை கொழும்பு மேல் நீதிமன்றம் நேற்று நிராகரித்தது.

சட்டத்தரணி ஹேமந்த வர்ணகுலசூரியவோ வேறு எந்த சட்டத்தரணியோ துமிந்த சில்வாவுக்காக முன்னிலையாக முடியும் என கொழும்பு மேல் நீதிமன்றம் தெரிவித்தது.-(த)

# 759 மில்லியன் ரூபா செலவில் வடக்கில் அபிவிருத்திப் பணிகள்

## உள்ளூராட்சி அமைப்பின் ஊடாக

யாழ்ப்பாணம், மே 9

வடமாகாண உள்ளூராட்சி திணைக்களங்களின் ஊடாக வீதிப் புனரமைப்பு, கிணற்றைத் துப்புரவு செய்தல், மற்றும் கட்டடப் புனரமைப்புக்காக 759 மில்லியன் ரூபா இதுவரையில் செலவிடப்பட்டுள்ளதாக வடமாகாண சபையின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

704 உள்ளூர் வீதிகள் புனரமைப்பதற்கும், ஆயிரத்து 875 கிணறுகள் துப்புரவு செய்வதற்கும், 28 [illegible]கள், 17 நூல்நிலையங்கள், 61 சந்தைக் கட்டடங்கள் என்பவற்றைப் புனரமைப்பதற்கும் 759 மில்லியன் ரூபா உள்ளூராட்சி அமைச்சினால் செலவு செய்யப்பட்டுள்ளது.

'நெல்சிப்' திட்டத்தின் கீழ் 39 வீதிகள் செப்பனிடப்பட்டுப் புனரமைக்கப்பட்டுள்ளன. 2 நீர் விநியோக வடிகாலமைப்புகளை நிர்மாணிப்பதற்கும், 2 சந்தைக் கட்டடங்களைப் புனரமைப்பதற்கும் 166.706 மில்லியன் ரூபா நிதி செலவிடப்பட்டுள்ளது.

உள்ளூராட்சித் திணைக்களத்தின் உட்கட்டுமான அபிவிருத்தித் திட்டத்தின் ஊடாக 5 வீதிகள் 10 கட்டடங்கள் புனரமைக்கப்பட்டுள்ளதுடன், 2 இயந்திரங்கள் கொள்வனவு செய்வதற்கு 236.52 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளது. (த-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தனியார் கல்வி நிலையங்கள் இனி மாலை 6 மணி வரையே

## மீறுவோர் மீது சட்ட நடவடிக்கை என்கிறார் முதல்வர்

யாழ்ப்பாணம்,மே. 09

*தனியார் கல்வி நிலையங்கள் அனைத்தும் காலை 6 மணி தொடக்கம் மாலை 5.30 மணி வரையே இயங்க முடியும். இதனை மீறும் தனியார் கல்வி நிலையங்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என யாழ். மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா நேற்று அறிவித்தார்.*

*இதனை ஆட்சேபித்த தனியார் கல்வி நிலைய உரிமையாளர்கள் நேரக்கட்டுப்பாடு என்பது மாணவர்களது கல்வியை மேலும் பின்நோக்கி நகர்த்தும் செயற்பாடு. பாடசாலைகளில் முடிவுறுத்தப்படாத பாடத்திட்டங்களை நிறைவு செய்து மாணவர்களின் கல்வியை மேம்படுத்தவே தனியார் கல்வி நிலையங்களை நடத்தி வருகின்றோம் என விவாதித்தனர். இதனையடுத்து நேர வரையளவில் அரை மணி நேரத்தைப் பின்தள்ளினார் முதல்வர்.*

தனியார் கல்வி நிலையங்களுக்கான நேரக் கட்டுப்பாடு தொடர்பான கூட்டம் நேற்று யாழ். மாநகர சபை மாநாட்டு மண்டபத்தில் முதல்வர் தலைமையில் இடம்பெற்றது.

இதன்போதே மாநகர சபை முதல்வரும் தனியார் கல்வி உரிமையாளர்களும் வாதப் பிரதி வாதங்களில் ஈடுபட்டனர்.

கூட்டத்தில், கலாசாரச் சீர்கேடுகளைத் தடுத்து நிறுத்தும் நோக்கில் தனியார் கல்வி நிலையங்களில் கற்பித்தல் நேர ஒழுங்கில் வரையறை விதிக்கப்படுகிறது. இதன்படி காலை 6 மணியில் இருந்து மாலை 5.30 மணி வரையே இனி தனியார் கல்வி நிலையங்கள் இயங்க முடியும் என முதல்வர் அறிவித்தார்.

இந்த நேரக் கட்டுப்பாட்டுக்கு மறுப்புத் தெரிவித்த தனியார் கல்வி நிலைய உரிமையாளர்கள் "எம்மை நம்பி வருகின்ற பிள்ளைகளை நாங்கள் அக்கறையுடன் கவனித்து வருகின்றோம். அவர்கள் சீரழிவில் ஈடுபடாது தடுப்பது, கண்காணிப்பது எமது பொறுப்பு. நேரக் கட்டுப்பாட்டு விடயத்தில் தலையிடுவதற்கு முதல்வருக்கு அதிகாரம் கிடையாது என ஆட்சேபம் தெரிவித்தனர். அத்தோடு அனைவரும் கூட்டாக முதல்வரின் கருத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து ஒன்றுபட்ட கருத்தாக நேரக்கட்டுப்பாட்டை விலக்குமாறு கேட்டுக்கொண்டனர்.

தனியார் கல்வி நிலைய உரிமையாளர்களின் கூட்டான ஆட்சேபனையை கருத்தில் எடுத்த முதல்வர், மாலை 5.30 மணியை 6.00 மணியாக மாற்றியதுடன் சில கட்டுப்பாடுகளையும் விதித்தார்.

தனியார் கல்வி நிலையங்களில் சுகாதார வசதிகளை உறுதிசெய்தல் வேண்டும், பெண் பிள்ளைகளின் தேவைகளுக்குப் போதுமான சுகாதார வசதிகள் ஏற்படுத்தப்பட வேண்டும், தளபாடங்கள் மாணவர்களுக்கு அசௌகரியங்களை ஏற்படுத்தாத வகையில் அமைக்கப்பட வேண்டும், காற்றோட்டமுள்ள, சுத்தமான குடிதண்ணீர் வசதி கொண்ட இடமாக கல்வி நிலையம் அமைதல் வேண்டும், கல்வி நிலையங்களுக்கு வெளியே சைக்கிள்கள் நிறுத்தப்படக் கூடாது போன்ற நிபந்தனைகளை விதித்து இவற்றுக்கு கால அவகாசம் வழங்கப்படுவதாகவும் முதல்வர் அறிவித்தார்.

(10-03)

### சங்கானை வைத்தியசாலைக்கு சுற்று மதில்

சங்கானை, மே.9

சங்கானை அரசினர் வைத்தியசாலையில் சுமார் 200 அடி நீளமான சுற்றுமதில் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. நாடாளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார் தனது பன்முகப் படுத்தப்பட்ட நிதியிலிருந்து 5 லட்சம் ரூபாவை இதற்கென வழங்கியுள்ளார்.

தற்போது வைத்தியசாலையைச் சுற்றி மதில் முழுமையாகக் கட்டி முடிக்கப்பட்டுள்ளதாகவும் இது மிகுந்த பாதுகாப்பாக உள்ளதாகவும் வைத்தியசாலை அபிவிருத்திச் சபை உப செயலாளர் ம.குணசிறி தெரிவித்துள்ளார்.

### சிவபூமி மடத்தில் அன்னதானம்

சிவபூமி அறக்கட்டளை நிறுவனத்தினால் அமைக்கப்பட்ட கீரிமலை சிவபூமி மடத்தில் வாரந்தோறும் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமைகளிலும் அன்னதானம் வழங்கப்பட்டு வருகிறது. அத்துடன் மாதந்தோறும் வரும் அமாவாசை, பௌர்ணமி திதி நாள்களிலும் அன்னதான நிகழ்வுகள் சிறப்பாக நடைபெற்று வருகின்றன.

# மழையைத் தொடர்ந்து டெங்கு பரவும் அபாயம்

யாழ். குடாநாட்டில் மழை பெய்ததைத் தொடர்ந்து டெங்கு நுளம்புகளின் பெருக்கம் ஏற்பட்டு டெங்கு பரவக் கூடிய ஆபத்து ஏற்படலாமென அஞ்சப்படுவதால் தேசிய நுளம்புக் கட்டுப்பாட்டு வாரம் பிரகடனப் படுத்தப்பட்டுள்ளது.

**டெங்கு நோய் தீவிரமாகப் பரவி வருவதனால் நாடெங்கிலும் தேசிய நுளம்புக் கட்டுப்பாட்டு வாரம் பிரகடனப்படுத்தப் பட்டுள்ளது.**

இலங்கையின் பல பாகங்களிலும் டெங்கு நோய் தீவிரமாகப் பரவி வருவதனால் நாடெங்கிலும் தேசிய நுளம்புக் கட்டுப்பாட்டு வாரம் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது என யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை அறிவித்துள்ளது.

தேசிய நுளம்புக்கட்டுப்பாட்டு வாரத்தையொட்டி அனைத்துப் பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் பிரதேச செயலாளர்களின் தலைமையில் பிரதேச மட்ட நுளம்புக் கட்டுப்பாட்டுக்குழுக் கூட்டங்கள் இடம்பெறவுள்ளன.

இங்குள்ள 12 சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளிலும் ஒவ்வொரு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளும் ஏழுவலயங்களாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு வலயத்துக்கும் ஒவ்வொரு நாள் என்ற வகையில் 14ஆம் திகதி முதல் 20ஆம் திகதி வரையான ஏழு நாள்களிலும் அந்தந்தப் பிரதேச வளங்கள் அனைத்தையும் ஒன்றிணைத்து நுளம்புக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் வீடுகள், நிறுவனங்கள், பொது இடங்கள், பராமரிப்பற்ற இடங்கள் எனப் பல இடங்களிலும் முன்னெடுக்கப்படவுள்ளன.

இந்தத் தேசிய நுளம்புக் கட்டுப்பாட்டு வார செயற்பாடுகளில் சகல அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள் உள்ளூராட்சி மன்றங்கள், பொது அமைப்புகள், பொது மக்கள், பொலிஸ் பாதுகாப்புப் படையினர் பூரண ஒத்துழைப்பு வழங்குமாறும் சுகாதார சேவைகள் பணிமனை கேட்டுக் கொண்டுள்ளது.

(த-4)

# கடந்த 4 மாதத்தில் 7 பேர் மலேரியாவுக்கு இலக்கு

யாழ்ப்பாணம், மே 9

கடந்த டிசெம்பர் மாதம் வரை மூளை மலேரியா உட்பட சாதாரண மலேரியா நோயினால் 7 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

வெளிநாடுகளுக்குச் சென்று திரும்புவோரே இவ்வாறு பாதிக்கப்பட்டுள்ளதுடன் நோய்க்கிருமிகளை காவி வந்துள்ளமையும் உறுதிப் படுத்தப்பட்டுள்ளது. எனவே ஆபத்தான இந்த நோயில் இருந்து பாதுகாத்துக்கொள்ள காய்ச்சல் ஏற்படுபவர்கள் உரிய பரிசோதனைகளை மேற்கொண்டு தடுப்பு மருந்துகளைப் பயன்படுத்துமாறு யாழ். பிராந்திய மலேரியா தடை இயக்க வைத்திய அதிகாரி இ.சிவசங்கர் தெரிவித்தார்.

யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பில் இதனைத் தெரிவித்தார்.

அவர் இது பற்றி மேலும் தெரிவித்ததாவது:

ஆபிரிக்க நாடுகள் அநேகமானவற்றிலும் மூளை மலேரியா ஆபத்து உள்ளது. அங்கிருந்து இலங்கைக்கு வருபவர்கள் விமான நிலையத்தில் வைத்து பரிசோதனை சிகிச்சை மேற்கொள்ளப்படுகிறது. யாழ்ப்பாணத்துக்கு வருபவர்கள் இங்கு வந்த பின்னரும் நாம் சிகிச்சை அளிக்கிறோம். எனினும் மலேரியாத் தொற்று இருப்பது கண்டறியப்படுகிறது. தொற்றைத் தடுப்பதற்கான சகல நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளது.

கடந்த டிசெம்பரில் இருந்து மார்ச் வரை 7 பேர் மலேரியாவால் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களில் 5 பேர் தென்னாபிரிக்க நாடுகளில் இருந்து வந்தவர்கள். இவர்களில் பெண்கள், சிறுவர்களும் உள்ளடங்குகின்றனர். இதில் 6 வயதுச் சிறுமி மூளை மலேரியாவால் பாதிக்கப்பட்டு கடும் சிகிச்சைக்கு பின்னர் உயிர் பிழைத்துள்ளார்.

தொழில் நிமித்தம் இங்கிருந்து இந்தியாவுக்கு சென்று வருபவர்கள் மூலமாகவும் மலேரியாத் தொற்று ஏற்படுகிறது.

வெளிநாடுகளுக்கு சென்று வருபவர்கள் காய்ச்சல் வந்தால் பரிசோதனை செய்து கொள்வதோடு மருத்துவர்களின் அறிவுரைகளையும் பின்பற்ற வேண்டும்- என்றார். (10-4)

# பருத்தித்துறையில் இருந்து நாகர்கோவிலுக்கு பஸ்சேவை

வடமராட்சி, மே 9

வடமராட்சி கிழக்கில் மீள்குடியேற்றம் நடைபெற்று வரும் நாகர்கோவிலுக்கு பருத்தித்துறையிலிருந்து தனியான இ.போ.ச. சேவை ஒன்று பல வருடகால இடைவெளிக்குப் பின்னர் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

நீண்ட கால இடைவெளிக்குப் பின்னர் 755 இலக்கம் கொண்ட இந்த பஸ் சேவை தினமும் பருத்தித்துறையிலிருந்து நாகர் கோவில்வடக்குவரை இரண்டு தடவைகள் நடைபெற்று வருகின்றன. தினமும் காலை 7 மணிக்கும் நண்பகல் 12 மணிக்கும் பருத்தித்துறையிலிருந்து நாகர்கோவிலுக்கும், அங்கிருந்து காலை 8.15 மணிக்கும் பிற்பகல் 2.15 மணிக்கும் பருத்தித்துறைக்கும் இந்த பஸ் சேவை இடம்பெறுகிறது.

பயணிகள் எண்ணிக்கை அதிகரிக்கும் இடத்து பருத்தித்துறை நாகர்கோவில் பாதையில் மூன்றாவது சேவையை பிற்பகல் 4 மணிக்குப் பின்னர் நடத்துவதற்குத் தயாராக இருப்பதாக பருத்தித்துறை இ.போ.ச. வட்டாரங்கள் தெரிவித்தன.

கடந்த 2000ஆம் ஆண்டுப் பகுதியில் நாகர்கோவில் பகுதியில் கடுமையான போர் ஆரம்பமானதைத் தொடர்ந்து இந்தப் பகுதிக்கான பஸ் சேவை நிறுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (த-8)

# 13ஆவது திருத்தம், ஆணைக்குழுப் பரிந்துரை மட்டும் இனப்பிரச்சினைக்குத் தீர்வாகாது

## அமெரிக்க அதிகாரிகளிடம் இணையப் பிரதிநிதிகள்

யாழ்ப்பாணம், மே 9

13ஆவது அரசியல் திருத்தச் சட்டம், நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகள் ஆகியவற்றை மட்டும் நடைமுறைப்படுத்துவது இனப்பிரச்சினைக்கான தீர்வாக அமையாது.

இவ்வாறு அமெரிக்கத் தூதரக அதிகாரிகளிடம், யாழ். மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையத்தினால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அமெரிக்க தூதரகத்தின் அரசியல் அதிகாரி ஜேக்கப் கிரிக்யூ மற்றும் இலங்கை, இந்தியா, நேபாளம் ஆகிய பிராந்தியங்களுக்கான அகதிகள் இணைப்பாளர் அம்ன்டா எஸ் ஜேக்கப்ஸன் ஆகியோர் யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணைய உறுப்பினர்களை அதன் அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் மாலை சந்தித்தபோதே இந்த விடயம் சுட்டிக்காட்டப்பட்டது.

இந்தக் கலந்துரையாடல் தொடர்பில் அரச சார்பற்ற இணையங்களின் தலைவர் சி.வீ.கே.சிவஞானம் தெரிவித்ததாவது:-

யாழ். மாவட்டத்தில் முழுமையாக இன்னமும் மீளக் குடியமர்வு இடம்பெறவில்லை. இன்னமும் இடம் பெயர்ந்த மக்கள் நண்பர்கள், உறவினர்கள் வீடுகளில் வாழ்ந்து வருகின்றனர்.

நல்லிணக்க ஆணைக் குழுவின் அறிக்கை தொடர்பில் எமது நிலைப்பாடு குறித்து அமெரிக்க அதிகாரிகள் கேள்வியெழுப்பினர். இந்த அறிக்கையை நடைமுறைப்படுத்துவதை நாம் பாராட்டவும் இல்லை, எதிர்க்கவுமில்லை. 13ஆவது திருத்தம், மாகாண சபை என்றெல்லாம் சொல்லப் படுகின்றன. இவை மட்டும் அரசியல் பிரச்சினைக்குத் தீர்வாக மாட்டாது என்பதை நாம் அவர்களுக்குக் கூறினோம்.

ஜனாதிபதி விசேட செயலணி, உள்ளூர் அரச சார்பற்ற நிறுவனங்கள் மீது கட்டுப்பாடுகள் விதிப்பது பொருத்தமற்றது. மேலும் உள்ளூரில் இடம்பெறும் சகல நிகழ்வுகளுக்கும் இராணுவத்தினர் அழைக்கப்பட வேண்டும் என்று நிர்ப்பந்திப்பது பொருத்தமற்றது. இதனை அவர்களிடம் தெரிவித்தோம்.-என்றார். (த-5)

# இந்து ஆலயத் திருட்டுக்களை உடன் அறியத் தாருங்கள்

## இந்து மா மன்றம் கோரிக்கை

யாழ்ப்பாணம், மே 9

இந்து ஆலயங்களில் இடம்பெற்றுள்ள திருட்டுச் சம்பவங்கள் குறித்து அகில இலங்கை இந்து மா மன்றத்துக்கு அறியத்தருமாறு மன்றத்தின் உப தலைவர் ஆறு.திருமுருகன் அறிவித்துள்ளார்.

கடந்த 95ஆம் ஆண்டுக்குப் பின்னர் இந்து ஆலயங்களில் பல்வேறு திருட்டுச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. இந்த விவரங்கள் தொடர்பாக ஆலயத்தின் கடிதத் தலைப்பில் குறிப்பிட்டு அறியத் தரமுடியும். யாழ். கோயில் வீதி, நல்லூரில் அமைந்துள்ள மன்றத்தின் யாழ். பிராந்திய அலுவலகத்துக்கு இவற்றை அனுப்பி வைக்குமாறு உப தலைவர் ஆறு.திருமுருகன் தெரிவித்துள்ளார்.

ஆலயங்களில் விக்கிரகங்கள், வாகனங்கள், ஆலயப் பொருள்கள் திருட்டுப் போயிருப்பின் அது குறித்து அகில இலங்கை இந்து மா மன்றத்துக்கு அறிவிக்க முடியும்.

ஆலய தர்மகர்த்தா சபையிடமிருந்து கிடைக்கப்பெறும் முறைப்பாடுகளை அரசுக்குத் தெரியப்படுத்தி அதன்மூலம் ஆலயங்களில் இடம்பெறும் திருட்டுச் சம்பவங்களைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு கோரவுள்ளதாக அவர் மேலும் கூறினார்.

ஆலயங்களில் இடம் பெற்ற திருட்டுக்கள் தொடர்பாகப் பொலிஸில் மேற்கொள்ளப்பட்ட முறைப்பாட்டுப் [illegible] மாறு அவர் கூறியுள்ளார். (த-3)

# திருமலை பஸ் சேவை

யாழ்ப்பாணம், மே.9

வல்வெட்டித்துறையிலிருந்து திருகோணமலைக்கான பகல் பஸ் சேவை இன்று முதல் ஆரம்பிக்கப்படவுள்ளதாக வடபிராந்திய போக்குவரத்துச் சபை வட்டாரங்கள் தெரிவித்தன.

தினமும் அதிகாலை 3.45 மணிக்கு வல்வெட்டித்துறை பஸ் தரிப்பிடத்திலிருந்து ஆரம்பமாகி பருத்தித்துறை, நெல்லியடி, கொடிகாமம் ஊடாகச் சென்று பின்னர் திருகோணமலையைச் சென்றடையவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(த-16-253)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரசின் செயற்பாடுகளால் பொன்சேகாவுக்கு ஆபத்து

01 அங்கிருந்து கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு மாற்றுவதன் மூலம் அவருக்கு உரிய சிகிச்சை கிடைக்காமல் செய்வதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அனோமா பொன்சேகா குற்றம்சாட்டியுள்ளார்.

சிறைச்சாலை நிர்வாகமும், சட்டமா அதிபர் திணைக்களமும் இணைந்து, தனது கணவருக்குக் குறைந்தளவான சிகிச்சையை வழங்கி, அவருக்கு இயற்கையான ஆபத்தை ஏற்படுத்தத் திட்டமிட்டுச் செயற்பட்டு வருகின்றனரா என்ற சந்தேகம் ஏற்பட்டுள்ளது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை தற்போது நவலோக வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வரும் சரத் பொன்சேகா, அடுத்த இரண்டு தினங்களுக்குள் கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு மாற்றப்படுவார் என சிறைச்சாலைகள் ஆணையாளர் பீ.டபிள்யூ. கொடிப்பிலி தெரிவித்தார்.

தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர், அவருக்கு வழங்கப்பட வேண்டிய பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்து, சிறைச்சாலை அத்தியட்சகருக்கு ஆலோசனை வழங்கியுள்ளதாகவும் கொடிப்பிலி குறிப்பிட்டுள்ளார். (த)

## இந்தியாவின் மாநில முதல்வர்களை வசமாக்கும் முயற்சியில் இலங்கை

01 இடம்பெற்ற போருக்குப் பின்னரான இலங்கை அரசின் செயற்பாடுகள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவின் பரிந்துரை களை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் பீரிஸ் குறிப்பிட் டுள்ளார்.

இலங்கைக்கு கடந்த மாதம் பயணம் செய்திருந்த இந்திய மக்களவையின் எதிர்க்கட்சித் தலைவி

சுஷ்மா சுவராஜ் தலைமையிலான இந்திய நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழு இலங்கை விவகாரம் தொடர்பில் கடுமையான பரிந்துரைகளை மத்திய அரசுக்குக் கையளித்துள்ளது.

இலங்கையின் இனப்பிரச்சினைக்கு நிலையான அரசியல் தீர்வை வழங்குவதன் ஊடாகத் தமிழ் மக்களுக்கு அதிகாரங்களைப் பெற்றுக் கொடுக்கவும், வடக்கில் நிலை கொண்டுள்ள படைத்தரப்பினரை விலக்கிக் குடியியல் நிர்வாகத்தை ஏற்படுத்தவும் இந்தியா இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும் என்பது உள்ளிட்ட பல பரிந்துரைகளை இந்திய நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழு பிரதமர் மன்மோகன் சிங்கிடம் கையளித்திருந்தது. இது இலங்கை அரசுக்குப் பெரும் அதிர்ச்சியையும், ஏமாற்றத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

அத்துடன், இலங்கை அரசினால் நியமிக்கப்பட்ட நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த வேண்டும் எனவும் இந்தியா வலியுறுத்தி வருகின்றது.

அதேவேளை, இலங்கையின் இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு தொடர்பில் இந்தியாவின் பங்களிப்பைப் பெற்றுக் கொள்ளும் நோக்கில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழு இவ்வாரம் புதுடில்லிக்குப் பயணம் செய்யவுள்ளது.

இந்தியாவின் மத்திய அரசில் மாநில அரசுகளின் செல்வாக்கு அதிகரித்துள்ள நிலையில், அந்த நாட்டின் மாநில முதலமைச்சர்களைத் தன் வசப்படுத்தும் வகையில் இலங்கை வெளிவிவகார அமைச்சர் பீரிஸ் இந்தக் கடிதங்களை அனுப்பி வைத்துள்ளார்.

அதேவேளை, இந்திய மாநில முதலமைச்சர்களை இலங்கைக்கு அழைப்பது தொடர்பிலும் இலங்கை அரசு ஆராய்ந்து வருவதாகத் தெரியவருகின்றது. இதன் ஊடாக இந்திய மத்திய அரசுக்கு எதிராகப் புதிய வியூகங்களை வகுக்க இலங்கை அரசு திட்டமிடுவதாக கொழும்பு அரசியல் வட்டாரங்களில் இருந்து தெரியவருகிறது. (த)

## இலங்கைப் பிரச்சினை குறித்து மன்மோகன் - ஹிலாரி பேச்சு

01 தப் பேச்சின்போது விரிவாக ஆராயப்பட்டது. அத்துடன் இலங்கை இனப்பிரச்சினை விவகாரம் குறித்தும் இதில் கலந்துரையாடப்பட்டுள்ளது.

ஐ.நா.மனித உரிமைகள் சபையில் அமெரிக்கா இலங்கை மீது கொண்டு வந்த தீர்மானத்துக்கு இந்தியா ஆதரவளித்தமை குறித்தும் இதில் பேசப்பட்டது. அத்துடன் இலங்கையில் தமிழர்களுக்கான அரசியல் தீர்வு விரைவுபடுத்தப்பட வேண்டும் எனவும் இதற்காக இலங்கை அரசுக்குத் தொடர்ந்து அழுத்தங்களைப் பிரயோகிப்பது எனவும் இரு நாட்டுத் தலைவர்களும் பேச்சின்போது உடன்பாடு தெரிவித்தனர்.

அத்துடன் இலங்கையில் அரசியல் தீர்வுக்கான வழிகளை ஏற்படுத்துவதற்காக தமிழ்க் கட்சிகளுடன் இலங்கை அரசு பேச்சுகளை மீண்டும் ஆரம்பிப்பது குறித்தும் இங்கு பேசப்பட்டுள்ளது. இந்திய அனைத்துக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழு அண்மையில் இலங்கைக்கு மேற்கொண்ட பயணம் தொடர்பான பெறுபேறுகளை அமெரிக்க வெளியுறவுச் செயலர் பிரதமர் மன்மோகன் சிங்கிடம் கேட்டறிந்து கொண்டதாகவும் பிரதமர் செயலக வட்டாரங்கள் கூறின. (த)

## இனப்பிரச்சினை தீர்வுக்கு கூட்டமைப்புக்கு ஒத்துழைப்பு

01 துள்ளது.தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரதிநிதிகளுடன் நேற்றுமுன்தினம் மாலை நடைபெற்ற விசேட சந்திப் பின்போது அவர்களுக்கு இந்த உறுதிமொழியை வழங்கியதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் எதிர்கால அரசியல் செயற்பாடுகள் குறித்து கட்சியின் உயர்மட்டத் தரப்பினர் கலந்துரையாடியதன் பின்னர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரதிநிதிகளை தமது கட்சி பிரதிநிதிகள் சந்தித்ததாகவும் திஸ்ஸ அத்தநாயக்க கூறினார். (த)

## இலங்கை இனப்பிரச்சினை தொடர்பில் டில்லியில் இன்று முக்கிய மாநாடு

01 பரிமாற்றல்கள் இடம்பெறும் என பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்திய எதிர்க்கட்சித் தலைவி சுஷ்மா சுவராஜ் தலைமையில் கடந்த மாதம் 16 ஆம் திகதி இலங்கைக்கு விஜயம் செய்த இந்தியக் குழு, இலங்கையின் உயர்மட்ட அரசியல் பிரமுகர்களைச் சந்தித்து முக்கிய பேச்சுக்களில் ஈடுபட்டது.

இதன்போது, இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு, வடக்கு-கிழக்கில் நிலைகொண்டிருக்கும் இராணுவத்தை அகற்றுதல், மலையக சமூகத்தின் பிரச்சினைகள் உட்பட பல விடயங்கள் குறித்து கலந்துரையாடப்பட்டன.

அத்துடன், வடக்கு,கிழக்கு, மலையம்,தெற்கு ஆகிய பகுதிகளுக்கு நேரடியாகவே விஜயம் செய்து அங்குள்ள நிலைமைகளை நேரில் கண்டறிந்த இந்தியக் குழு, மக்களுடனும் கலந்துரையாடி பிரச்சினைகளை கேட்டறிந்தது கொண்டது.

இதன் பின்னர், இலங்கை விஜயத்தை முடித்துக் கொண்டு ஏப்ரல் மாதம் 21 ஆம் திகதி நாடு திரும்பி இந்தியக்குழு, இலங்கை விஜயத்தின்போது கண்ட- கேட்டறிந்த விடயங்களை அறிக்கையாக வடிவமைக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டது.

எதிர்க்கட்சித் தலைவர் சுஷ்மா சுவாராஜ் இந்த அறிக்கையை தயாரிக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டார்.

அறிக்கை அமைக்கும் நடவடிக்கை பூர்த்தியான பின்னர் அந்த அறிக்கையை பிரதமர் கலாநிதி மன்மோகன் சிங்கிடம் அவர் கையளித்தார்.

இலங்கைத் தமிழர்களின் பிரச்சினைகளை அறிக்கையில் சுட்டிக்காட்டியிருந்த சுஷ்மா அந்த பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் பரிந்துரைகளையும் முன்வைத்தார்.

இதில் குறிப்பாக, தமிழ் மக்கள் செறிந்து வாழும் வடக்கு, கிழக்கு பிரதேசங்களிலிருந்து இலங்கை அரசு தமது படைகளை வாபஸ் பெறவேண்டும் .

இந்திய அரசின் அனுசரணையுடன் கொண்டுவரப்பட்ட 13 ஆவது அரசமைப்பை அடிப்படையாகக் கொண்டு இனப் பிரச்சினைக்கு கொழும்பு அரசு தீர்வைக்காண வேண்டும்.

வடமாகாண சபைத் தேர்தல் விரைவில் நடத்தப்பட வேண்டும் .

நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையின் சிபாரிசுகள் அமுல்படுத்தப்பட வேண்டும் போன்ற் விடயங்கள் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.

அத்துடன் மேற்கூறப்பட்ட விடயங்களை இலங்கை அரசு விரைந்து செய்து முடிக்க இந்திய அரசு கொழும்புக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும் என்றும் அந்த அறிக்கையில் கோரப்பட்டுள்ளது.

அதேவேளை, இன்றைய மாநாட்டின்போது, ஈழத்தமிழர் பிரச்சினைகளுக்கு உரிய தீர்வைக் காணுமாறு மத்திய அரசு கொழும்பை வலியுறுத்த வேண்டும் என ஏகமனதாக முடிவெடுக்கப்படும் என எதிர்பார்க்கப் படுகின்றது.

அதுமட்டுமின்றி, இலங்கைத் தமிழர் பிரச்சினையில் இந்தியாவின் அடுத்த கட்ட நடவடிக்கைகள் எவ்வாறு அமைய வேண்டும் என்பது குறித்து ஆராயப்படும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கை வந்த இந்தியக் குழு அவசரமாகக் கூட்டும் முக்கிய வட்டமேசை மாநாட்டில் பங்குபற்றுமாறு தமிழக அரசியல் கட்சிகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ள போதிலும், இலங்கைப் பயணத்தை புறக்கணித்த அ.தி.மு.க., தி.மு.க. ஆகிய கட்சிகள் கலந்துகொள்ளுமா என்பது இன்னும் உறுதிப்படுத்தப்படவில்லை.

இது இவ்வாறிருக்க, இந்த வட்டமேசை மாநாடு முடிவடைந்த பின்னர் அதில் கலந்துரையாடப்பட்ட விடயங்களை அடிப்படையாகக் கொண்டு டில்லி அரசு கொழும்புக்கு முக்கிய அறிவிப்பொன்றை விடுக்கும் என்றும் இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்தன. (த-சி)

## 9 மாகாணங்களிலும்ஒரே நாளில் தேர்தல்

01 வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்துள்ளது.

வடக்கில்மாகாணசபையை நிறுவி அங்குள்ள மக்களுக்கு வாக்களிக்கும் உரிமையை அரசு பெற்றுக் கொடுக்க வேண்டுமென ஐ.தே. கட்சியின் மேல்மாகாணசபை உறுப்பினர் ஹர்ஷன ராஜகருண வேண்டுகோள் விடுத்தார்.

எதிர்க்கட்சித் தலைவரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் கூறியவை வருமாறு:-

நாட்டின் எட்டு மாகாணங்களில் மாகாணசபைத் தேர்தலை நடத்தி மாகாண சபைகளை அரசு நிறுவியுள்ளபோதிலும், வடக்கில் மாகாணசபையை நிறுவுவதற்கான நடவடிக்கையை அரசு எடுக்காதுள்ளது. இதன் மூலம் வடக்கு மக்களின் வாக்களிக்கும் சுதந்திரத்தை அரசு பறித்துள்ளது. தமது மாகாண முதல்வரைத் தெரிவு செய்யும் உரிமை அவர்களுக்கு மறுக்கப்பட்டு வருகின்றது.

கிழக்கு, சப்ரகமுவ, வட மத்திய மாகாணசபைகள் கலைக்கப்படுவதற்கு இன்னும் ஒரு வருட காலம் இருக்கும் நிலையில், அதற்கு முன்னரே அந்த மாகாண சபைகளைக் கலைத்து தேர்தலை நடத்த அரசு திட்டமிடுகின்றது. ஆயுட்காலம் முடிவடைவதற்கு ஒரு வருடத்திற்கு முன்னரே இம் மாகாணசபைகளைக் கலைத்து மீண்டும் தேர்தலை நடத்துவதன் மூலம் மக்கள் பணத்தை அநியாயமாகச் செலவுசெய்யப்போகின்றது. அதுமட்டுமல்லாது, அரசு ஏன் இது விடயத்தில் இவ்வளவு அவசரப்படுகின்றது எனத் தெரியவில்லை.

வடக்கில் மாகாணசபைத் தேர்தலை நடத்தி அங்குள்ள மக்களுக்கு வாக்களிக்கும் உரிமையை அரசு பெற்றுக் கொடுக்க வேண்டும். அதை விடுத்து ஏனைய மாகாண சபைகளுக்கு ஒருவருட ஆயுட்காலம் இருக்கும் முன்னரே அதைக் கலைத்து தேர்தலை நடத்துவதில் பயனில்லை. வீண் செலவு மட்டுமே.

ஒவ்வொரு மாகாணத்துக்கும் தனித்தனியாகத் தேர்தலை நடத்தாது நாட்டிலுள்ள ஒன்பது மாகாணங்களுக்கும் ஒரே தடவையில் அரசு தேர்தலை நடத்தவேண்டும் - என்றார் அவர்.

## பேச்சுக்கான கதவுகளை அரசு மூடிவிடவில்லை

01 கட்சியின் பொருளாளரும் அமைச்சருமான டலஸ் அழகப்பெரும தெரி வித்தார்.

அரசுடன் பேச்சு நடத்த வேண்டும் என்று கூட்டமைப்பு கோரினால் அது குறித்து ஆராயலாம். எது எவ்வாறு இருப்பினும் நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இடம்பெற்றால் மட்டுமே அரசியல் தீர்வு என்பது யதார்த்தமாகும் எனவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதற்கான நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இடம் பெறுவதற்கு முன்னர் அரசு கூட்டமைப்புடன் நேரடிப் பேச்சுக்களை நடத்தவேண்டும் என்று கூட்டமைப்பு தெரிவித்துள்ளமை குறித்துக் கருத்து வெளியிடும் போதே அமைச்சர் இதனைக் கூறினார்.

அவர்மேலும்கூறியதாவது:-

அரசுடன் பேச்சு நடத்த வேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முறையாகக் கோரும் பட்சத்தில் அது குறித்து ஆராய முடியும். ஆனால் பேச்சு எனும் போது என்ன விடயங்கள் பேசப்படவேண்டும் என்பது குறித்துப் பார்க்கவேண்டும்.

எனினும் தேசியப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதற்காக அரசினால் அமைக்கப்பட்டுள்ள நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இடம்பெற்றால் மட்டுமே அரசியல் தீர்வு என்பது சாத்தியமானதாகவும் யதார்த்தகரமானதாகவும் அமையும். தெரிவுக்குழு தீர்வுக்கான ஒரே இடமாக உள்ளது.

அதற்காகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் அரசு பேச்சு நடத்தாது என்று அர்த்தம் இல்லை. நாடாளுமன்றத் தெரிவுக்குழுவானது அரசுக்கும் கூட்டமைப்புக்கும் இடையிலான சந்திப்புக்குத் தடையான விடயமல்ல.

எனவே, இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வைக் காண்பதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் இடம் பெறவேண்டும் என்பதனைத் தெளிவாகக் குறிப்பிடுகின்றோம்-என்றார்.(த)

## பூஸாவில் மாத்திரமே புலி உறுப்பினர்கள்

01 செவ்வியிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

போரின்போது இடம்பெயர்ந்த மூன்று லட்சம் பேரையும் மீண்டும் குடியமர்த்தும் போது, விடுதலைப் புலிகள் புதைத்து வைத்த கண்ணிவெடிகளை அகற்றுவதே பிரதான தடையாக அமைந்திருந்தது.எனினும், இடம்பெயர்ந்த மக்களை மீளக்குடியமர்த்துவதில்இலங்கை அரசு வெற்றிக் கண்டது.

பொதுமக்கள் இடம் பெயரும் போது விடு தலைப் புலிகளே மக்களின் வீட்டுக் கூரைகளையும் ஜன்னல் களையும் எடுத்துச் சென்றனர். வடக்கில் நாளுக்கு நாள் இராணுவ பிரசன்னம் குறைக் கப்பட்டுப் பொலி ஸாரின் அதுவும் தமிழ்த் தெரிந்த பொலிஸாரின் சேவைகள் பெற்றுக் கொடுக் கப்பட்டுள்ளன.

அதியுயர் பாதுகாப்பு வலயங்கள் குறித்து பேசப் படுகின்றன. இன்று வடக்கு -கிழக்கில் அதியுயர் பாதுகாப்பு வலயங்கள் இல்லை. பலாலியில் மாத்திரம் பாதுகாப்புத் தேவைகளுக்காக முன்னரை விடச் சிறிய இடம் அதியுயர் வலயமாக ஒதுக்கப்பட்டுள்ளது. அதுவும் அந்த நிலங்களுக்கு உரியவர்களுக்கு நட்ட ஈடுகளும் வழங்கப்பட்டுள்ளன.

விடுதலைப்புலிகளிடம் பாரியளவில் ஆயுதங்கள் இருந்தன. மறைத்து வைக்கப்பட்ட ஆயுதங்கள் இன்றும் மீட்கப்பட்டு வருகின்றன. சரணடைந்த விடுதலைப் புலிகள் விடுவிக்கப்பட்டாலும் அவர்களை கொண்டு மீண்டும் பிரச்சினைகளை உருவாக்க வெளிச்சக்திகள் முயல்கின்றன.

அதற்கு இடம் தரப்பட மாட்டாது. போர் முடிவடைந்துள்ளது. படையினருக்கு இன்று யுத்தத்துக்குப் பதிலாக அபிவிருத்தியில் பங்கு வழங்கப்பட்டுள்ளது. அவர்களே பலவேறு அபிவிருத்திகளை மேற்கொண்டு வருகின்றனர்-என்றார். (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# கேதீஸ்வரத்தில் புத்தர் சிலை; வரிசையில் அடுத்தது எது...?

இலங்கை நாடாளுமன்றத்தில் 1956ஆம் ஆண்டு ஜூன் மாதம் ஐந்தாம் திகதி, தனிச் சிங்களச் சட்டம் நிறைவேற்றப்பட்டதில் இருந்து இந்த நாட்டின் சிங்கள, தமிழ் மக்கள் மத்தியில் பெரும் இனப் பிளவு தோன்றியது. அந்தப் பிளவு மேவுண்டு இரு இனங்களும் சமத்துவமாகவும், சமாதானமாகவும் வாழ்வதற்கான வாய்ப்பு எதுவும் அரும்புவதாக இல்லை.

அந்த இனக் குரோதத்தின் பெறுபேறாக, உள்ளார்ந்த திட்டமாக தமிழ்ப் பிரதேசங்களை கபளீகரம் செய்யும் அரச ஆசியுடனான அத்துமீறல்கள் இப்போது அசுர வேகத்தில் முன்னெடுக்கப்படுகின்றன. முப்பது வருடகாலப் போரின் போது சற்று அமுங்கிப் போயிருந்த தமிழ்ப் பிரதேசங்களின் கபளீகரம் இப்போது கொடிகட்டிப் பறக்கிறது; கோரத் தாண்டவமாடுகின்றது.

இந்த இரண்டு வகை சார் அநியாயங்களும் அக்கிரமங்களும் இப்போது சமாந்தரமாக மலைபோல் உயர்ந்து செல்வது மட்டுமன்றி, அதன் அடிவாரம் பருத்துப் பொருமி எவராலும் இடித்து வீழ்த்த முடியாத அளவுக்கு வைரம் பாய்ந்துள்ளது.

இவற்றுக்கு அடுத்து, மூன்றாவதாக, தமிழ் மக்களில் மிகப் பெரும்பான்மையானோரின் இந்து மதத்தைப் பிய்த்துப் பிடுங்கும், பிறாண்டுதல் செய்யும், அநியாயம் முழு வீச்சில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அது மிகுந்த கனதியுடனும் வேகத்துடனும் முன்னெடுக்கப்படுகிறது. தட்டிக் கேட்க எவருக்கும் உரிமை இல்லை என்ற போக்கில் வடக்கு, கிழக்கில் உள்ள இந்து ஆலயங்களின் பிரசித்தத்தை மறைத்து, பௌத்த விகாரைகள் முளைக்கச் செய்யப்படுகின்றன.

இலங்கையின் பண்டைய சரித்திரப் பிரசித்தி பெற்ற பஞ்ச ஈஸ்வரங்களில் ஒன்றான மன்னார், மாதோட்டத்தில் அமைந்து அடியார்களுக்கு அருள் பாலிக்கும் திருக்கேதீஸ்வரப் பெருமானின் வளாகத்தில் புத்தர் பெருமானுக்கான விகாரை அமைக்கும் பணிகள் மிகத் துரிதமாக அரச அதிகாரிகளால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

புத்தர் பெருமானை இந்த நாட்டு இந்துக்கள் வேற்றுமையுடன் நோக்குவதில்லை. சித்தார்த்தனாக, இந்துவாக வளர்ந்த அவர், அரச வாழ்க்கையை வெறுத்து, மகா துறவியாகி, பரிநிர்வாணம் அடைந்து கௌதம புத்தர் ஆனார். அரிய தத்துவங்களையும், நல்வாழ்க்கைக்கான வழிகாட்டுதல்களையும் உலகத்துக்குத் தந்த போதிசத்துவராகவே அவரை இலங்கை வாழ் மக்களும் போற்றுகிறார்கள். அதற்காக -

எம்மதமும் சம்மதமே என்று ஏற்றுக்கொள்ளும் இந்துக்களின் புண்ணிய பூமியான திருக்கேதீஸ்வரத்தில் பௌத்த விகாரை ஒன்றை அமைத்து, இந்த நாட்டு இந்துப் பெருமக்களை மட்டுமன்றி அனைத்துலகத்திலும் வாழும் இந்துக்களின் இதயங்களை நொருக்கும் இலங்கை அரசின் போக்கு, சமரச சன்மார்க்கத்துக்கும் இன சௌயன்யத்துக்கும் பொறிக்கிடங்கு தோண்டும் படு பாதகமான செயலாகும்.

மதங்கள், சமயங்கள் எல்லாமே மனித மேம்பாட்டையும் ஆன்மிக ஈடேற்றத்தையுமே தமது பிரதான அறநெறிகளாகக் கொண்டவை. அவ்வாறிருக்க இன்னொரு மதத்தின் சரித்திரப் பிரசித்தி பெற்ற புனித தலத்தின் சூழலின் பூர்வீகத்தை, முற்றாக மாற்றும் ஒவ்வாத செயலுக்கு அத்திபாரம் இடும் இலங்கை அரசின் போக்கு சமயச் சண்டைகளுக்கு தீச்சுடர் ஏற்றுவது போலாகும்.

போர்க்காலத்தில் வடக்கு, கிழக்கின் இந்து ஆலயங்கள் மீது குண்டு வீசி அவற்றைச் சேதப்படுத்தியது போதாது என்று, சமாதான காலத்தைத் தமக்குச் சாதகமாக்கிக் கொண்டு இந்து சமயத்தவர்களின் புராதன ஆலயமான திருக்கேதீஸ்வரப் பிரதேசத்தில் கைவைக்கும் எந்த நடவடிக்கையும், இன ஒற்றுமைக்கும் சமய சமரசத்துக்கும் சகவாழ்வுக்கும் சாவு மணி அடிக்கும் முதல் ஓசையாகவே கருதப்பட வேண்டும்.

திருக்கேதீஸ்வரம், திருக்கோணேஸ்வரம், நகுலேஸ்வரம், முன்னேஸ்வரம், தொண்டீஸ்வரம் ஆகிய பஞ்ச ஈச்சரங்களும் பதினையாயிரம் ஆண்டுகள் பழமை வாய்ந்தவை. இலங்கையைச் சூழவுள்ள கடற் பிரதேசங்களின் காவல் ஈஸ்வரங்களாகப் பிரசித்திபெற்றவை. அவற்றில் இரண்டு, சமய குரவர்களின் பாடல் பெற்ற ஈச்சரங்கள். போர்க்காலத்தில் அரச படைகளின் விமானக் குண்டு வீச்சுகளால் இவை பலத்த சேதமுறச் செய்யப்பட்டன. அவற்றில் பூசை வழிபாடுகள் செய்ய முடியாதவாறு பாதிப்புகள் உண்டாக்கப்பட்டன.

அவற்றின் தொடரியாக, தொடர்ச்சியாக இப்போது திருக்கேதீஸ்வரத்தில் வேண்டாத மதப் பூசலை உருவாக்கும் அத்தியாயம் மிகக் கனதியாகத் தொடக்கப்பட்டுள்ளது.

போர் முடிவுற்ற பின்னரும் தமிழ்ப் பிரதேசங்களில் படைகளின் பிரசன்னம் நாட்டின் பாதுகாப்புக்கு அத்தியாவசியமானது-

அவற்றின் ஆளணியை அளவுக்கு அதிகமாகக் குறைக்க முடியாது. இந்த நாட்டில் மீண்டும் ஆயுதப் போராட்டத்தை தொடக்குவதற்கு வெளிநாடுகளில் புலம் பெயர்ந்து வாழும் தமிழர்கள் திட்டமிடுகிறார்கள் - என்ற தடித்த போர்வைகளின் கீழ் வடக்கு, கிழக்கில் முப்படைகளின் எண்ணிக்கை முற்றாக நீக்கப்படாமல்-

அமர்த்தப்பட்டிருப்பது, வடக்கு, கிழக்கில் பெரும்பான்மை இன மக்களை 'வள்ளிசாக'க் குடியேற்றும் உள்நோக்கத்துடனேயே என்பதனை -

மெய்ப்பிப்பதற்கான சதித் திட்டங்களில் ஒன்றே, திருக்கேதீஸ்வரத்தில் பௌத்த விகாரை அமைக்கும் ஏற்பாடு! இதனைத் தொடர்ந்து, வரிசையில் இன்னும் எத்தனை வருமோ?

# வடக்கு சிறுவர் வைத்தியசாலையை அமைப்பதில் தொடரும் அசமந்தம்

## சுகாதார அமைச்சர் பாராமுகம்

யாழ்ப்பாணம், மே9

ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க வடக்கு மாகாண சிறுவர் வைத்தியசாலையை அமைப்பதற்கு நிதி ஒதுக்குமாறு சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேனவுக்கு பணித்து மூன்று ஆண்டுகள் ஆகியும் இதுவரை சாதகமான பதில் கிடைக்கவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த 14-5-2009 இல் இந்த வைத்தியசாலைக்கு நிதி ஒதுக்குமாறு முன்வைக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைய ஜனாதிபதியின் செயலாளர் சுகாதார அமைச்சருடன் தொடர்பு கொண்டு அவசர திட்டத்தில் இதற்கான நிதியை ஒதுக்கீடு செய்யுமாறு பணித்திருந்தார். ஆயினும் இதுவரை எந்தவிதமான நிதி ஒதுக்கீடும் மேற்கொள்ளப்படவில்லை.

இதனால் வடக்கு சிறுவர் வைத்தியசாலை அமைப்பு தொடர்ந்தும் தாமதமடைந்து வருகின்றது என விசனம் தெரிவிக்கப்படுகிறது.

வடக்கில் நவீன சிறுவர் வைத்தியசாலை அமைக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை பலராலும் முன்வைக்கப்பட்டது. இதனையடுத்து 2009 ஆம் ஆண்டில் இருந்து இந்தத் திட்டத்தைச் செயற்படுத்துமாறு பல்வேறு கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டு வந்தன.

வைத்தியசாலையை அமைப்பதற்கான நன்னீர் வளம், நிலவளம் என்பன வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளரினால் ஆய்வு செய்யப்பட்டு சங்கானையில் இதற்கான இடத்தெரிவு நடைபெற்றுள்ளது.

இந்த நிலையில் இந்தத்திட்டத்தினை ஜனாதிபதியின் கவனத்திற்கு கொண்டு வந்த போது 14-5-2009 இல் முதற்கட்டமாக 120 மில்லியன் ரூபாவைச் சுகாதார அமைச்சு ஊடாக ஒதுக்கி தருவதாக உறுதியளித்திருந்தார். அதற்கான பணிப்புரைகளைத் தனது செயலாளர் லலித் வீரதுங்க ஊடாக அவர் விடுத்திருந்தார். ஆயினும் எதுவும் நடைபெறவில்லை இதன் பின்னர் கடந்த பெப்ரவரி மாதமும் இது குறித்துச் சுகாதார அமைச்சருக்கு நினைவு படுத்தப்பட்டதாகவும் எனினும் அது தொடர்பில் ஆக்க பூர்வமான பதில் எதுவும் இதுவரை கிடைக்கவில்லை எனவும் விசனம் தெரிவிக்கப்படுகிறது.

இன்று வடக்கில் சிறுவர்கள் பல்வேறு வித நோய்களினால் அல்லற்பட்டு அவஸ்தைப்படுகின்றனர். சிறுவர் இறப்புக்களும் ஏற்படுவதை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகள் ஊடாக உறுதிப்படுத்த முடிகிறது.

வடக்கின் வசந்தம், மகிந்த சிந்தனை எனப் பல திட்டங்கள் ஊடாக பல அபிவிருத்திகள் இடம்பெறுவதாக கூறப்படுகிறது. எனினும் இந்தத் திட்டத்தை மேற்கொள்ள அக்கறை காட்டாமை குறித்து விசனம் தெரிவிக்கப்பட்டுள்ளதுடன். இந்த விடயத்தில் உடனடிக் கவனம் எடுக்குமாறும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

(த-50)

# நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை மாற்றவேண்டும்

## டியூ. குணசேகர தெரிவிப்பு

கொழும்பு, மே9

நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப் படுத்துவதற்கு மேலதிகமாக நாட்டில் நிறைவேற்று ஜனாதிபதி முறையை மாற்றுவது, போன்ற அரசமைப்புத் திருத்தங்களையும் மேற்கொள்ள வேண்டும் என இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி வலியுறுத்தியுள்ளது.

நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் ஜனாதிபதியின் அறிவுறுத்தலின்படி, ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் அரசியல் கட்சிகள் தமது நிலைப்பாடுகளை அரசிடம் முன்வைத்து வருகின்றன.

இந்த நிலையில், நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவது தொடர்பான யோசனையின் போது, நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை மாற்றுவது, தேர்தல் முறையில் மாற்றம் கொண்டுவருவது போன்ற அடிப்படை அரசமைப்பு விடயங்கள் பற்றி ஆளும் கூட்டணிக் கட்சிகளுக்கிடையில் ஏற்படக்கூடிய கருத்து முரண்பாடுகள் என்னவென்றும்,-

அங்கு எந்தளவுக்கு சாதகமான நிலைமையை ஏற்படுத்தும் என்றும் அரசில் அங்கம் வகிக்கும் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் டியூ குணசேகரவிடம் பி.பி.சி. தமிழோசை வினவியது. இதற்கு பதிலளிக்கும்போதே அமைச்சர் டியூ குணசேகர மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதற்கு மேலதிகமாக நிறைவேற்று ஜனாதிபதி முறையையும் மாற்ற வேண்டும் என்றும்,தமிழ், சிங்கள, ஆங்கில ஊடகங்கள் இலங்கைப் பிரச்சினையை ஒவ்வொரு கோணங்களில் அணுகுகின்றன என்றும் அவர் கூறியுள்ளார். (த-சி)

# கோப்பாய், பலாலி கலாசாலைகளுக்கு இந்த வருடம் 483 பேர் அனுமதி

## அழைப்புக் கடிதங்கள் அனுப்பி வைப்பு

யாழ்ப்பாணம், மே9

கோப்பாய் மற்றும் பலாலி ஆசிரியர் கலாசாலைகளில் இரண்டு வருடப் பயிற்சி நெறியைத் தொடர்வதற்காக 483 பேருக்கு அழைப்புக் கடிதங்கள் நேற்று செவ்வாய்க் கிழமை அனுப்பி வைக்கப்பட்டுள்ளன என்று கோப்பாய் ஆசிரியர் கலாசாலை அதிபர் வி.கே.கணபதிப் பிள்ளை தெரிவித்தார்.

கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் பயிற்சியைத் தொடர்வதற்கு 396 பேருக்கும், பலாலி ஆசிரியர் கலாசாலையில் பயிற்சியைத் தொடர்வதற்கு 87 பேருக்கும் அனுமதிக் கடிதங்கள் தபாலில் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

நாளை மறுதினம் வெள்ளிக் கிழமைக்கு முன்னர் அனுமதிக் கடிதம் கிடைக்கப் பெறாதவர்கள் கோப்பாய் ஆசிரியர் கலாசாலை அதிபர் அலுவலகத்துக்கு நேரில் வந்து கடிதத்தைப் பெற முடியும் என அதிபர் அறிவித்துள்ளார்.

இந்த வருடத்துக்கான பயிற்சி நெறிக்கான பதிவுகள் எதிர்வரும் 14 ஆம் திகதி கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் இடம்பெறவுள்ளன. பட்டதாரிகளாக உள்ள ஆசிரியர்களுக்கு அனுமதிக்கடிதம் கிடைக்கப் பெற்றால் அவர்கள் பதிவுகளை மேற்கொள்ளாமல் தவிர்க்க வேண்டும் என அதிபர் அறிவித்துள்ளார்.

**அனுமதிக்கடிதம் கிடைக்கப் பெறாதவர்கள் கோப்பாய் ஆசிரியர் கலாசாலை அதிபர் அலுவலகத்துக்கு நேரில் வந்து கடிதத்தைப் பெற முடியும்**

ஆரம்பக் கல்விக்கு 247 பேரும், வர்த்தகத்துக்கு 43 பேரும் இந்து சமயத்துக்கு 25 பேரும் தமிழ் மொழிக்கு 13 பேரும், சித்திர பாடத்துக்கு 19 பேரும், சங்கீத பாடத்துக்கு 07 பேரும், நடனத்துக்கு 03 பேரும், மனைப் பொருளியலுக்கு 07 பேரும், உடற்கல்விக்கு 13 பேரும், சமூகக் கல்விக்கு 19 பேரும் பயிற்சிக்காக இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர்.

இதே போல் ஆங்கிலப் பாடத்துக்காக 60 பேரும் கிறிஸ்தவப் பாடத்துக்கு 27 பேரும் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

பலாலி ஆசிரியர் கலாசாலையில் இடம்பெறும் பயிற்சிக்குரிய பதிவுகள் அனைத்தும் கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் இடம்பெறவுள்ளன எனக் கலாசாலை அதிபர் மேலும் கூறினார்.

(த-3)

# சிவபூமி மனவிருத்திப் பாடசாலை ஆசிரியர்களுக்கு இந்தியாவில் பயிற்சி

யாழ்ப்பாணம், மே9

கோண்டாவில் சிவபூமி சிறுவர் மனவிருத்திப் பாடசாலையில் கல்விகற்பிக்கும், அதிபர், ஆசிரியர்களுக்கான மூன்று வார விசேட பயிற்சிக்காக இந்தியா சென்ற இந்தக் குழுவினர் திருச்சி அறிவாலய மனவிருத்திப் பாடசாலையில் இவர்களுக்கான மூன்று வார கால பயிற்சியைப் பெற்றுள்ளனர். திருச்சி டொல்பின் கல்லூரி மற்றும் பேராசிரியர் மாது.ராதாகிருஸ்ணன் ஆகியோரின் ஏற்பாட்டில் பயிற்சி வழங்கப்பட்டது.

(வ-36)

# சகடை அன்பளிப்பு

சுழிபுரம், மே 9

சுழிபுரம் - ஈஸ்வர விநாயகர் ஆலயத்தில் மாதம் தோறும் நடைபெறும் சதுர்த்தித் திருவிழாவில் பாவனைக்கு பயன்படும் வகையில் அடியவர் ஒருவரால் சிறிய இரும்புச் சகடை ஒன்று செய்து வழங்கப்பட்டுள்ளது.

இந்தச் சகடை ஆலயத்தின் உள் வீதிப் பாவனைக்குப் பயன்படும் வகையில் உருவாக்கப்பட்டுள்ளது.

(எ-28)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாணவர்களுக்கு "நாமல் அண்ணா" வாழ்த்து

முள்ளியவளை,மே 9

வன்னிப் பகுதியில் உள்ள பாடசாலை மாண வர்களுக்கு நாடாளுமன்ற உறுப்பினரும் ஜனாதிபதி யின் புதல்வருமான நாமல் ராஜபக்ஷவிடம் இருந்து பிறந்த நாள் வாழ்த்து மடல் கள் வீடுதேடி வருகின்றன.

இந்த வாழ்த்து மடல்கள் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவின் பெயரி லேயே வருகின்றன.

இங்குள்ள பாடசாலை மாணவர்களுக்கு நாடாளு மன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவினால் கொப் பிகள் வழங்கப்பட்டன. அப்போது கொப்பிகளைப் பெற்ற மாணவர்களின் பெயர், முகவரி, பிறந்த திகதி என் பன பெறப்பட்டன.

தற்போது இத்தகைய மாணவர்களின் பிறந்த தினத் தின்போது 'நாமல் அண்ணா' எனத் தமிழில் கையொப்ப மிடப்பட்ட பிறந்த நாள் வாழ்த்து மடல்கள் வீடுதே டித் தபால் மூலமாக வரு கின்றன.

இதனால் வாழ்த்து மடல்கள் கிடைக்கப் பெற்ற மாணவர்களும் அவர்களது பெற்றோர்களும் வியப்பில் ஆழ்ந்துள்ளதாகத் தெரிய வருகின்றது.

அரசியல் என்பது எந்த இடத்திலும் பாயும் வல்ல மையுள்ளதென விஷயம் புரிந்தவர்கள் கதைப்பதா கவும் தெரிவிக்கப்பட்டுள் ளது. (க-433)

# இடம்பெயரும் நிலையில் நாகதாழ்வுக் கிராமம்

**10 வருடங்களின் பின்னர் 2010 ஆம் ஆண்டு அரசால் மீளக்குடியமர்த்தப்பட்ட வர்களுக்கு அடிப்படை வசதிகள் ஏதுமில்லை.**

மன்னார், மே 9

மன்னார் நாகதாழ்வுக் கிராம மக்கள் தமக்கு அடிப் படை வசதிகளை ஏற்படுத் தித் தராவிட்டால் தாம் மீண் டும் இடம்பெயர வேண்டிய நிலை ஏற்படுமெனத் தெரி வித்துள்ளனர்.

மன்னார் - திருக்கேதீஸ் வரம் பிரதான வீதியில் இந்த நாகதாழ்வு கிராமம் அமைந் துள்ளது.

இங்கு வசித்த மக்கள் போர் காரணமாக 1990 ஆம் ஆண்டு இடம்பெயர்ந்தனர். 10 வருடங்களின் பின்னர் 2010 ஆம் ஆண்டு அரசால் மீளக்குடியமர்த்தப்பட்டுள்ள னர்.

மேலும் இந்தக் கிராமத் துக்குச் சற்றுத் தொலைவில் இராணுவத்தின் அதியுயர் பாதுகாப்பு வலயத்தினுள் தள்ளாடி படைத்தளம் அமைந் துள்ளது. இங்கு மக்கள் குடிய மர்ந்து இரண்டு வருடங்கள் கடந்த நிலையிலும் இவர் களுக்கான அடிப்படை வச திகள் எவையும் அமைத்துக் கொடுக்கப்படாத நிலையே காணப்படுகின்றது.

கடந்த இரு வருடங் களாக பல்வேறு அமைப்புக் களையும் சேர்ந்தவர்கள் இந்தக் கிராமத்துக்கு வந்து செல்கின்றனர்.

ஆனால் இவர்களுக்கு எந்தவிதமான உதவிகளை யும் வழங்கவில்லையென மக்கள் கவலை வெளியிட் டுள்ளனர். மின்சார வசதிகள் இல்லை. குடிதண்ணீருக் கும் தட்டுப்பாடு நிலவு கின்றது. மலசல கூடங்கள் இல்லாததால் காடுகளைத் தஞ்சமடைய வேண்டிய அவல நிலையும் உள்ளது. இவை போன்ற பல்வேறு இன்னல்களை இவர்கள் எதிர்கொண்டு வருகின்றனர்.

தற்போதும் இந்தக் கிராம மக்கள் தற்காலிக கூடாரங் களிலேயே தங்கியுள்ளனர். இதனால் இவர்கள் கடும் சிரமங்களுக்கு மத்தியிலேயே வாழ்ந்து வருகின்றனர். நிரந் தர வீட்டுத்திட்டம் மூலம் வீடுகள் அமைத்துத் தருவ தாகக் கூறிய வாக்குறுதிகள் இன்னமும் நிறைவேறாத நிலையில் உள்ளன.

இங்குள்ள சுமார் 35 குடும் பங்கள் பாதிக்கப்பட்ட நிலை யில் வாழ்ந்து வருகின்றன. அதிகாரிகள் தொடர்ந்தும் மெத்தனமாக இருந்தால் தாம் மீண்டும் இடம்பெயர வேண் டிய நிலை தோன்றுமென வும் மக்கள் தெரிவிக்கின் றனர். (க-12)

## பாதிப்புக்களுக்கு மத்தியில் மடுக்கரை கிராமம்

மன்னார், மே 9

மன்னார் மடுக்கரை கிராம மக்கள் பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது மன்னாரில் மிகவும் பின்தங்கிய நிலை யில் வெகு தொலைவில் உள்ள கிராமங்கள் ஓரளவு அபிவிருத்தி அடைந்து வரு கின்றன.

ஆனால் மன்னார் நானாட் டான் பிரதேச செயலர் பிரி வுக்குட்பட்ட மடுக்கரைக் கிராம மக்கள் தற்போதும் மிகவும் பின் தங்கிய நிலை யிலேயே வாழுகின்றனர்.

அங்கு கணவனை இழந்த அல்லது பிரிந்த குடும்பப் பெண்கள் அதிகளவில் உள் ளனர். ஆனால் இவர்களை அரசும் அமைப்புக்களும் ஏறெடுத்தும் பார்ப்பதாகத் தெரியவில்லை.

இந்தக் கிராம மக்கள் மின் சாரம், குடிதண்ணீர், போக்கு வரத்து வசதி என்பன கிடைக் காத நிலையில் அவல வாழ்வு வாழ்ந்து வருகின்றனர்.

குறிப்பாக இங்கு வாழு கின்ற பெண்கள் பல்வேறு அசௌகரியங்களை எதிர் கொண்டு வருகின்றனர்.

**சமூகச் சீர் கேடு களும் பரவலாக இடம்பெறுவதாகத் தெரிவிக்கப்படு கின்றது.**

மேலும் சமூகச் சீர் கேடு களும் பரவலாக இடம்பெறு வதாகத் தெரிவிக்கப்படு கின்றது.

மேலும் இரவு, பகலென வித்தியாசமின்றி அந்நியர் களின் நடமாட்டமும் இங்கு காணப்படுவதாகத் தெரிய வருகின்றது. இது சமூக சீர் கேடுகளுக்கு வழி அமைத் துக் கொடுப்பதாகவும் உள் ளது.

எனவே சமூக ஆர்வலர் களும், பெண்கள் அமைப் புக்களும் கூடிய கவனம் செலுத்தி இந்தக் கிராமத் தைச் சீர்கேடுகளற்ற ஒரு கிராமமாக உருவாக்க வேண் டும் என பலரும் வேண்டு கோள் விடுத்துள்ளனர். (க-12)

## அறநெறி மாணவர்களுக்கு வங்கிக் கணக்குகள்



வவுனியா, மே 9

வவுனியா சிதம்பரபுரம் திருப்பழனி முருகன் ஆல யத்தில் கல்வி கற்கும் அற நெறிப் பாடசாலையைச் சேர்ந்த 50 மாணவர்களின் வங்கிக் கணக்கில் தலா 500 ரூபா வைப்புச் செய்யப்பட் டுள்ளது.

ஆலயத்தில் இடம்பெற்ற சித்திரைப் புத்தாண்டுக் கொண்டாட்டத்தின் போது பணத்தை வைப்புச் செய்த மைக்கான வைப்புச் சான்றி தழ்கள் மாணவர்களுக்கு வழங்கப்பட்டன.

ஏ.கே.ஆர்.என்ரப்பிறைசஸ் நிறுவனத்தால் இதற்கென 25 ஆயிரம் ரூபா நிதி வழங்கப் பட்டதாகத் தெரிவிக்கப்பட் டது.

ஆலய அறங்காவல் சபை யின் தலைவர் அ.மாதவன், செயலாளர் செ.செல்வநாய கம், பொருளாளர் பன்னீர்ச் செல்வம் ஆகியோரின் கூட்டு முயற்சியால் இந்தப் பணம் வைப்புச் செய்யப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

மாணவர்களுக்கான காசோலை வழங்கும் நிகழ் வில் வவுனியாப் பிரதேச செயலர் அ.சிவபாதசுந்தரன், வன்னி மாவட்ட நாடாளு மன்ற உறுப்பினர் வினோ நோகராதலிங்கம், வவுனியா கலாசார உத்தியோகத்தர் இ.நித்தியானந்தன், கூட்ட மைப்பின் முக்கிய பிரமுகர் கள் உட்பட பலரும் கலந்து கொண்டனர். (க-400)

## ஒட்டுசுட்டானில் வெசாக் கொண்டாட்டம்

முல்லைத்தீவு,மே 9

முல்லைத்தீவு மாவட் டத்தில் இராணுவத்தால் வெசாக் பண்டிகை மிகவும் எழுச்சியாகக் கொண்டாடப் பட்டது. ஒட்டுசுட்டானில் அமைக்கப்பட்ட வெசாக் கூடுகள், அலங்காரப் பந்தல் கள் என்பன மின்விளக்கு களால் அலங்கரிக்கப்பட்டு அந்தப் பகுதிகள் எங்கும் விழாக்கோலம் பூண்டிருந் தன.

இராணுவ முகாம்களி லும் பொலிஸ் நிலையங் களிலும் வருவோர்போவோரை மறித்துக் குளிர்பானங்கள் வழங்கப்பட்டன. அத்துடன் மக்கள் வெசாக் நிகழ்வுக ளில் கலந்து கொள்ளுமாறும் பணிக்கப்பட்டனர். அனேக மான மக்கள் அதனைப் பார் வையிட்டதுடன் கண்காட் சிகளையும் கண்டுகளித்த னர். (க-500)

## உயிலங்குளம் கிராமத்தில் ஒரே நேரத்தில் 50 குடிபுகுதல்கள்

கிளிநொச்சி, மே 9

உயிலங்குளத்தில் குடிய மர்ந்த மக்கள் தமது வீடு களில் குடிபுகும் நிகழ்வு இடம் பெற்றுள்ளது.

துணுக்காய் உயிலங் குளத்தில் காடுகள் அழிக் கப்பட்டுச் சுமார் 50 வீடுகள் இந்திய வீட்டுத் திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்பட்டுள் ளன. இந்த வீடுகளின் நிர் மாணப் பணிகள் அரை குறையான நிலையிலேயே காணப்படுகின்றன.

இருந்த போதிலும் இவற் றின் சம்பிரதாயபூர்வமான குடிபுகும் நிகழ்வுகள் கடந்த 5 ஆம் திகதி இடம்பெற்றன.

இதன்போது நாடாளு மன்ற உறுப்பினர் சிறீதரனுக் கும் அழைப்பு விடுக்கப்பட் டிருந்தது. இதனையேற்றுச் சிறீதரனும் அங்கு சென்றி ருந்தார். அத்துடன் ஒவ் வொரு குடும்பத்தினருக் கும் 1500 ரூபா பெறுமதி யான பொங்கல் மற்றும் அன் பளிப்புப் பொருள்களையும் இவர் வழங்கினார்.

**பெரும் காட்டுப் பகு தியை அழித்து அந்த இடத்தில் அமைக்கப்பட்ட இந்த வீட்டுத் திட்டத்தில் வீதிகள், சுகாதார வசதிகள், குடிதண்ணீர், முன்பள்ளிகள் போன்ற அடிப்படை வசதிகள் எதுவுமே அமைக் கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.**

பெரும் காட்டுப் பகு தியை அழித்து அந்த இடத் தில் அமைக்கப்பட்ட இந்த வீட்டுத் திட்டத்தில் வீதி கள், சுகாதார வசதிகள், குடிதண்ணீர், முன்பள்ளிகள் போன்ற அடிப்படை வசதி கள் எதுவுமே அமைக்கப்பட வில்லை என்பது குறிப்பிடத் தக்கது. (க-6)

## இருளில் மூழ்கிக் கிடக்கும் ஒட்டுசுட்டான் மக்கள்

முள்ளியவளை, மே 9

ஒட்டுசுட்டான் மக்கள் தாம் மின்சார வசதியற்ற நிலையில் இருளில் வாழ்ந்து வருவதாகக் கவலை தெரி விக்கின்றனர்.

இங்கு மக்கள் மீளக்குடி யமர்ந்து மூன்று வருடங்கள் கடந்துவிட்டன. ஆனால் மின்சாரம் வழங்குவதற்கான நடவடிக்கை எதுவும் மேற் கொள்ளப்படவில்லையெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இங்கு அடிக்கடி வருகை தருகின்ற அமைச்சர்களும், நாடாளுமன்ற உறுப்பினர் களும் பல்வேறு வாக்குறு திகளை அள்ளி வீசிவிட்டுச் செல்கின்ற போதிலும் செய லளவில் எதுவும் நிகழ்வதில் லையென மக்கள் கடும் விசனம் தெரிவிக்கின்றனர்.

கடந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலின் போது கூட மின்சாரம் வழங்குவது தொடர்பாகப் பலரும் உறுதி மொழி வழங்கிச் சென்றனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (க-500)

# வவுனியா வடக்கில் சமுர்த்தி வங்கி

வவுனியா,மே 9

வவுனியா வடக்கிலுள்ள சமுர்த்திப் பயனாளிகளின் நன்மை கருதி வங்கிச் செயற் பாடுகள் விரைவில் ஆரம் பிக்கப்படவுள்ளன.

கடந்த காலப் போர் இடர் களினால் மக்கள் இடம் பெயர்ந்து வெவ்வேறு பகு திகளில் தங்கியிருந்தனர். தற்போது அவர்கள் மீளக்குடி யமர்த்தப்பட்டதையடுத்து சமுர்த்தி வங்கியானது செயற் படவுள்ளது.

இதன் மூலம் மீளக்குடி யமர்ந்த மக்களின் வாழ்வா தாரத்தை மேம்படுத்தும் நோக்கத்துடன் சுயதொழில் முயற்சிக் கடன் உட்பட பல் வேறு வகையான கடன் திட் டங்கள் நடைமுறைப்படுத் தப்படவுள்ளன.

தற்போது வவுனியா வடக்குப் பிரதேசத்தில் இனங்காணப்பட்ட - வறு மைக் கோட்டின்கீழ் வாழும் சுமார் ஆயிரத்து 200 குடும் பங்களுக்கு சமுர்த்தி வங்கிக் கணக்குகள் ஆரம்பிக்கப் பட்டு வாழ்வாதார உதவி களை வழங்குவதற்கான நட வடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன.

இந்தப் பணிகள் நிறை வடைந்ததும் ஏனையோ ருக்கான உதவித் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட வுள்ளன.

இதேவேளை வவுனியா மாவட்டத்தில் சமுர்த்தி அலு வலர்களுக்கான ஆளணிப் பற்றாக்குறை காணப்படு வதால் வவுனியா வடக்கு மக்களுக்கான சமுர்த்தி வங் கிச் செயற்பாடுகள் தற்காலி கமாக ஓமந்தை வங்கியுடன் இணைந்து மேற்கொள்ளப் படுவதாகவும் போதிய ஆளணி கிடைத்ததும் வவு னியா வடக்குக்கெனத் தனி யான வங்கி அமைக்கப்ப டுமெனவும் தெரிவிக்கப் பட்டது. (க-400)



இளைஞர் சேவை மன்றத்தால் ஒட்டுசுட்டானில் அமைக்கப்படவுள்ள வீட்டுத் திட்டத்துக்கான அடிக்கல்லை இளைஞர் சேவை மன்றத்தின் அதிகாரி நட்டு வைக்கின்றார். (500)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போதனா வைத்தியசாலையில் ஊழியர் போன்று கொள்ளையர்

## நோயாளர்களே! உங்கள் நகை கவனம் ஆஸ்பத்திரிப் பொலிஸார் எச்சரிக்கை

**பெரும்பாலும் வெளிநோயாளர் பிரிவிலேயே இந்தக் கொள்ளை அதிகம் இடம்பெறுகிறது. மருத்துவ விடுதிகளிலும் இவை ஆங்காங்கே இடம்பெறுகின்றன.**

யாழ்ப்பாணம், மே 9

யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெறச் செல்பவர்கள் நகைகளை அணிந்து செல்லக்கூடாது என அறிவுறுத்தப்பட்டுள்ளது. நகைகளுடன் வைத்தியர்களிடம் சென்றால் அவர்கள் பேசுவார்கள். எனவே அவற்றைக் கழற்றி எம்மிடம் தந்துவிட்டு உள்ளே போய் வாருங்கள் நாம் வைத்தியசாலை ஊழியர்கள். நீங்கள் வைத்தியரிடம் காட்டிவிட்டு வெளியே வந்ததும் உங்கள் நகைகளைத் தருகிறோம் என்று மிகப் பண்பாகப் பேசி ஒரு கூட்டம் நகைக் கொள்ளையில் ஈடுபட்டுவருவதாக வைத்தியசாலைப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

நோயாளிகள் வைத்தியசாலைக்குச் செல்லும்போது எந்தவித நகைகளையும் அணியாமல் வாருங்கள். மிக அவதானமாக இருங்கள். உங்கள் நகைகளுக்கு நீங்களே பொறுப்பு எனப் பொலிஸார் மக்களைக் கேட்டுக் கொண்டுள்ளனர்.

இது குறித்துப் பொலிஸார் மேலும் தெரிவித்ததாவது:-

பெரும்பாலும் வெளி நோயாளர் பிரிவிலேயே இந்தக் கொள்ளை அதிகம் இடம்பெறுகிறது. மருத்துவ விடுதிகளிலும் இவை ஆங்காங்கே இடம்பெறுகின்றன.

பல்வேறுபட்ட இடங்களிலிருந்து ஒவ்வொரு நாளும் நூற்றுக்கணக்கான நோயாளர்கள் கிளினிக் மற்றும் மருத்துவ சேவைகளுக்காக வந்து செல்கின்றனர். அவர்களில் அநேகமாக வயதானவர்கள் எவரது உதவிகளுமின்றித் தனியாக வைத்தியசாலைக்குச் சிகிச்சைக்கு வருகின்றனர். அதனால் அவர்கள் தாம் கொண்டு செல்லும் பணம், அணிந்து செல்லும் நகைகள் ஆகியவற்றுடன் உள்ளே வைத்தியர்களிடம் செல்ல முடியாது. அப்படிச் சென்றால் வைத்தியர்கள் பேசுவார்கள் இந்தச் சந்தர்ப்பத்தைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொள்கிறது ஒரு கொள்ளைக் கூட்டம்.

வைத்தியசாலைக்கு வரும் வயதானவர்களிடம் 'நீங்கள் உள்ளே வைத்தியரிடம் காட்டிவிட்டு வாருங்கள். நாங்கள் வைத்தியசாலை ஊழியர்கள் தான். உங்கள் நகைகளைக் கழற்றித் தாருங்கள். நீங்கள் வெளியே வந்ததும் அவற்றை உங்களிடம் ஒப்படைக்கிறோம்' என்று பண்பாகப் பேசுபவர்களிடம் நோயாளிகளும் தமது நகைகளைக் கழற்றிக் கொடுத்துவிட்டுச் செல்கின்றனர். திரும்பி வந்து பார்த்தால் அவர்களை அங்கு காணமுடியாது. அதன் பின்னர் தான் புரியும் அவர்கள் கொள்ளைக் கும்பல் என்று.

இவ்வாறு ஏராளமான முறைப்பாடுகள் எமக்கு வந்த வண்ணமுள்ளன. எனவே வைத்தியசாலைக்கு தங்க நகைகளை அணிந்து வர வேண்டாம். அத்துடன் வயதானவர்களும் யாரையாவது உதவிக்கு அழைத்து வாருங்கள். ஏனெனில் உதவி புரிகிறோம் என்று கூறியும் நகைகள், பணம் கொள்ளையிடும் சம்பவங்கள் இடம்பெறுகின்றன. எனவே வைத்தியசாலைக்குச் செல்லும் ஒவ்வொருவரும் இது பற்றிக் கவனம் செலுத்துங்கள் - என்று பொலிஸார் கூறினர். (த-4)

## 11 வீதிகள் வேலணையில் புனரமைப்பு

யாழ்ப்பாணம், மே 9

உலக உணவுத் திட்டத்தின் கீழ் வேலணைப் பிரதேச சபை எல்லைக்குள் பதினொரு வீதிகள் மீள்புனரமைக்கப் படவுள்ளன.

வேலணை பிரதேச சபைத் தலைவரால் பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ஊடாக அரச அதிபருக்கு முன்வைத்த கோரிக்கையை அடுத்தே இந்த வீதிகள் புனரமைக்கப்படவுள்ளன.

மண்டைதீவு பூம்புகார் வீதி, மண்டைதீவு மாதா கோயில் வீதி, அல்லைப்பிட்டி கடற்கரை வீதி, புங்குடுதீவு மணியகாரன் வீதி, புங்குடுதீவு கம்பிளியன் வீதி, நடுவகாட்டு வீதி - நயினாதீவு, துறையூர் தாளயங்காடு இந்து மயான வீதி, வேலணை அம்பிகைநகர் கண்ணாபுரம் வீதி, சாட்டி நீர்விநியோகத் திட்ட வீதி, வேலணை பாரதி வீதி, சரவணை காளிகோயில் வீதி ஆகியனவே புனரமைக்கப் படவுள்ளன. (த-50)

## யாழ். முஸ்லிம்களின் கிணறுகள் புனரமைப்பு



யாழ்ப்பாணம், மே 9

யாழ்ப்பாணம் - அராலி வீதியிலுள்ள புதிய சோனகத் தெருப் பகுதியில் மீளக்குடியமர்ந்துள்ள முஸ்லிம் மக்களின் வீடுகளில் உள்ள கிணறுகள் புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளன.

அகில இலங்கை முஸ்லிம் லீக் அமைப்பினாலேயே முஸ்லிம் மக்களின் கிணறுகள் புனரமைக்கப்பட்டுள்ளன. இவ்வாறு இதுவரை 50 கிணறுகள் புனரமைக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.

சிமெந்துச் சுவர் நிலமட்டத்தில் காணப்பட்ட கிணறுகளுக்கு நிலமட்டத்திலிருந்து 3 அடி உயரத்துக்கு சிமெந்துச் சுவர் நிர்மாணிக்கப்பட்டு வழங்கப்பட்டுள்ளது.

கிணறுகளைப் புனரமைப்புச் செய்வதற்காக விண்ணப்பித்த முஸ்லிம் மக்களுக்கே முதல் கட்டமாக 50 கிணறுகள் புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளன.

புனரமைப்புச் செய்யப்பட்டுள்ள கிணறுகளை நேரில் பார்த்து நிலைமையை அறிவதற்காகக் கடந்த மே தினத்தன்று அகில இலங்கை முஸ்லிம் லீக் அமைப்பின் தலைவரும், கேகாலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான கபீர் ஹாசீம் தலைமையிலான குழுவினர் யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்திருந்தனர். இந்தக் குழுவினருடன் கொழும்பு மாநகரசபை முதல்வர் எம்.முஸம்மிலும் வருகை தந்திருந்தார். (த-3)

## கோதுமை மாவின் நுகர்வு சங்கங்களில் பெரும் வீழ்ச்சி

### தீட்டல் பச்சை அரிசிக்கு மவுசு

**கோதுமை மாவின் நுகர்வு குறைவடைந்துள்ள அதேவேளை சங்கங்களில் தீட்டல் 'பச்சை அரிசியின் நுகர்வு அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.**

யாழ்ப்பாணம், மே 9

கோதுமை மாவின் நுகர்வு குடாநாட்டில் திடீரென வீழ்ச்சியடைந்துள்ளதாகப் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் தெரிவிக்கின்றன.

அண்மையில் மேற்கொள்ளப்பட்ட மாவின் விலை அதிகரிப்பே இதற்குக் காரணம் என்றும் அவை கூறுகின்றன.

கோதுமை மாவின் விலையை அரசு அண்மையில் 8 ரூபா 50 சதத்தினால் அதிகரித்தது. இதனையடுத்துக் கூட்டுறவுச் சங்கக் கிளைகளில் கோதுமை மாவின் நுகர்வு வெகுவாகக் குறைவடைந்துள்ளதாகக் கிளை முகாமையாளர்கள் கூறுகின்றனர்.

கூட்டுறவுச் சங்கக் கிளைகளில் கோதுமை மா தற்போது ஒரு கிலோ 80 ரூபாவாக விற்பனை செய்யப்பட்டு வருகின்றது.

விலை உயர்வினால் கோதுமை மாவைக் கொள்வனவு செய்வதை நுகர்வோர் குறைத்துள்ளதாகவும் இதனால் சங்கக் கிளைகளில் அவை விற்பனை செய்யப்படாமல் தேங்கியுள்ளதாகவும் கூட்டுறவுச் சங்க வட்டாரங்கள் தெரிவித்தன.

கோதுமை மாவின் நுகர்வு குறைவடைந்துள்ள அதேவேளை சங்கங்களில் தீட்டல் பச்சை அரிசியின் நுகர்வு அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. அநேகமானோர் தற்போது தீட்டல் பச்சை அரிசியை கொள்வனவு செய்வதால் கிளைகளில் அவற்றின் விற்பனை அதிகரித்துள்ளதாகவும் இதனையடுத்துச் சங்கங்கள் அனைத்தும் தீட்டல் பச்சை அரிசியை அதிகளவில் கொள்வனவு செய்து விற்பனை செய்வதாகவும் கூறப்படுகிறது.

கோதுமை மாவைத் தவிர்த்துள்ள மக்கள் தீட்டல் பச்சை அரிசியை வாங்கி அதனை மாவாக்கித் தமது உணவுத் தேவைகளுக்காகப் பயன்படுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (த-17)

## தாளையடிக்கு மின் விநியோகம்

வடமராட்சி, மே 9

வடமராட்சி கிழக்குப் பிரதேசத்தில் உள்ள மருதங்கேணி, தாளையடிப் பகுதிக்கு வரலாற்றில் முதல் தடவையாக மின்சாரம் வழங்கப்பட்டுள்ளது.

முதன் முதலாக அரச அலுவலகங்கள், கூட்டுறவுச் சங்கங்களுக்கே மின்சாரம் வழங்கப்பட்டுள்ளது. அடுத்த கட்டமாக இந்தப் பகுதியில் உள்ள வீடுகளுக்கு மின்சாரம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுவருகிறது.

ஏ-9 வீதியிலிருந்து புதுக்காட்டுச் சந்தி, மருதங்கேணி ஊடாக லக்ஸபான மின்சாரம் பெறப்பட்டு இந்தப் பகுதிக்கு மின்வழங்கப்படுகின்றது.

இந்தப் பகுதிக்கு மின்சாரம் வழங்கப்பட்டமையால் பல குடும்பங்கள் பயனடைந்துள்ளன. மாணவர்களும் தமது கற்றல் நடவடிக்கைகளை மேற்கொள்ள வசதி ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (த-8)

## கடலட்டையுடன் வியாபாரி மெலிஞ்சிமுனையில் சிக்கினார்

யாழ்ப்பாணம், மே 9

ஊர்காவற்றுறையில் இருந்து ஒரு தொகுதி கடலட்டைகளை விற்பனைக்காக எடுத்துச் சென்ற வியாபாரி ஒருவர் யாழ். மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத்திணைக்கள அதிகாரிகளிடம் மாட்டிக் கொண்டார்.

இந்தச் சம்பவம் ஊர்காவற்றுறை மெலிஞ்சிமுனை பகுதியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றுள்ளது.

கடல் அட்டைகளைப் பிடிப்பதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளபோதும் சட்ட விரோதமான முறையில் இவர் மெலிஞ்சிமுனைப் பகுதியில் அவற்றைக் கொள்வனவு செய்து விற்பனைக்காகக் கொண்டு சென்றபோதே கடற்றொழில் பரிசோதகர்களிடம் சிக்கிக் கொண்டார். பரிசோதகர்களுக்கு கிடைத்த இரகசியத் தகவல் ஒன்றை அடுத்து அவர்கள் இந்த வியாபாரியைச் சோதனையிட்டனர். இதன்போது அவரிடம் கடலட்டைகள் இருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது.

உடனடியாக அந்தக் கடலட்டைகளைப் பறிமுதல் செய்த கடற்றொழில் திணைக்கள அதிகாரிகள் அவர் மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்ளவுள்ளனர். (த-17)

## மந்திகை பொது மயானம் காடு மண்டிய நிலையில்

வடமராட்சி, மே 9

மந்திகை கருகம்பன் பொது மயானம் பற்றைகள் நிறைந்து காணப்படுவதுடன், மயானத்துக்குச் செல்லும் வீதியும் மிக அகலம் குறைந்ததாகவும் காணப்படுகின்றது.

மயானத்தில் பற்றைகள் நிறைந்திருப்பதால் மயானத்தில் தகனக்கிரியைகளுக்காகச் செல்வோர் மிகுந்த சிரமப்படவேண்டியுள்ளது. அதேநேரம் பருத்தித்துறை - யாழ்ப்பாணம் பிரதான வீதியிலிருந்து மயானத்துக்குச் செல்லும் சுமார் 200 மீற்றர் நீளத்தில் அமைந்துள்ள வீதி மிக ஒடுக்கமாக - வீதியின் இரு மருங்கிலும் பற்றைகள் நிறைந்தும் காணப்படுகின்றது.

இதனால் இறுதி ஊர்வலத்தில் செல்வோர் நெருக்கடிகளையும் சிரமங்களையும் சந்திக்க வேண்டியுள்ளது. ஒடுக்கமான இந்த [illegible] பிரேதத்தை எடுத்துச் செல்லும்போது வாகன ஓட்டிகள் மிகச் சிரமப்பட வேண்டியுள்ளது.

பல பெரிய கிராமங்களைச் சேர்ந்தவர்கள் பயன்படுத்தும் இந்த மயானத்தில் பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையில் மரணிக்கும் நோயாளர்களின் சடலங்கள் இதே மயானத்தில் தான் தகனக்கிரியைகளோ அன்றேல் நல்லடக்கமோ செய்யப்படுகின்றன.

முக்கியத்தவம் வாய்ந்த இந்த மயானத்தில் உள்ள பற்றைகளையும், மயான வீதியின் இரு மருங்கிலும் இருக்கும் பற்றைகளை முழுமையாக வெட்டி துப்புரவு செய்யவும், ஒடுக்கமான வீதியை அகலமாக்கவும் பருத்தித்துறை பிரதேச சபை உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் எனப் பொது மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (த-8)

## குடாநாட்டுச் சந்தைகளில் மரக்கறி விலை உயர்வு

**சித்திராப் பௌர்ணமி மற்றும் ஆலய உற்சவங்கள் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றமையும் விலை உயர்வுக்கும் காரணம்.**

யாழ்ப்பாணம், மே 9

யாழ். குடாநாட்டுச் சந்தைகளுக்கு கடந்த சில நாள்களாக தென்பகுதியில் இருந்து மரக்கறி வகைகள் வராமையால் அவற்றின் விலைகள் அதிகரித்துள்ளன.

வெசாக் கொண்டாட்டத்தை முன்னிட்டு தம்புள்ளை மரக்கறிச் சந்தைக்குப் போதியளவு மரக்கறி வகைகள் வந்து சேராமையால் அவை யாழ்ப்பாணம் எடுத்து வரப்படவில்லை என்று சந்தை வியாபாரிகள் தெரிவித்தனர்.

இதனால் யாழ்ப்பாணச் சந்தைகளில் அவற்றின் விலைகள் இரு தினங்களாக உயர்ந்து காணப்படுகின்றன.

குறிப்பாகத் திருநெல்வேலிச் சந்தையில் யாழ்ப்பாணத்தில் உற்பத்தி செய்யப்படும் மரக்கறி வகைகளே கடந்த சில நாள்களாக விற்கப்படுகின்றன.

கிலோ 60 ரூபாவாக விற்கப்பட்ட கத்தரிக்காய் 170 ரூபாவாகவும், ஒரு கிலோ 80 ரூபாவாக விற்பனை செய்யப்பட்ட பயிற்றங்காய் 120 ரூபாவாகவும், ஒரு கிலோ 60 ரூபாவாக விற்கப்பட்ட பாவற்காய் கிலோ 140 ரூபாவாகவும் விற்பனை செய்யப்பட்டன. குடாநாட்டின் ஏனைய சந்தைகளிலும் இதே நிலையே காணப்பட்டது.

சித்திரா பௌர்ணமி மற்றும் ஆலய உற்சவங்கள் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றமையும் மரக்கறிகளின் விலை உயர்வுக்குக் காரணம் என்று கூறப்படுகிறது. (த-17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத் தமிழர் படுகொலையில் மத்திய அரசும் குற்றவாளியே

## சாடுகிறார் வைகோ



இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தமிழர்களைக் கொன்று குவித்ததற்கு மத்திய அரசுதான் காரணம். இதில் மத்திய அரசில் அங்கம் வகித்தவர்களும் குற்றவாளிகள் தான் என்று ம.தி.மு.க. பொதுச்செயலர் வைகோ தெரிவித்துள்ளார்.

ம.தி.மு.க.வின் 19 ஆம் ஆண்டுஆரம்ப விழாவையொட்டி திருவான்மியூரில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. இந்தக் கூட்டத் தில் வைகோ பேசினார். அதில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தமிழ்நாட்டில் மதுவின் பிடியில் இளைஞர்கள் உள்ளனர். இளைஞர்களை முன்னேற்றப் பாதையில் அழைத்துச் செல்ல மதுவை ஒழிக்க வேண்டும். கடந்த ஆட்சியில் தொடர்ந்த அதே திருட்டு இந்த ஆட்சியிலும் தொடர்கிறது. யாருக்கும் பாதுகாப்பு இல்லை.

ராஜபக்ஷவின் கொடுங்கோல் ஆட்சியால் இலங்கையில் அப்பாவித் தமிழர்கள் கொன்று குவிக்கப்பட்டனர். இது உலகத் தமிழர்களிடம் வேதனையை உருவாக்கியுள்ளது. ராஜபக்ஷ தமிழர்களைக் கொன்று குவித்ததற்கு மத்திய அரசுதான் காரணம். இதில் மத்திய அரசில் அங்கம் வகித்தவர்களும் குற்றவாளிகள் தான்.

ம.தி.மு.க. 19-வது வருடத்தில் அடியெடுத்து வைத்துள்ளது. ஏற்கனவே பல இன்னல்களையும் சோதனைகளையும் சந்தித்து விட்டோம். இனி நாங்கள் எழுச்சி பெறுவோம். தமிழகத்தில் மாற்றம் வரும். அந்த மாற்றத்தில் ம.தி.மு.க. மகுடம் சூட்டும்-என்றார் அவர்.(வ)

# ஏர் இந்தியா விமானிகள் பணிப் பகிஷ்கரிப்பு

## விமானப் போக்குவரத்து பாதிப்பு



டில்லி,மே.9

புதிய ரக விமானங்களில் பயிற்சி அளிப்பதில் ஏற்பட்ட சர்ச்சைக்கு எதிர்ப்புத் தெரிவித்து ஏர் இந்தியா விமானிகள் முன்னறிவிப்பு இல்லாமல் திடீர் வேலை நிறுத்தத்தில் குதித்துள்ளனர். ஒரே நேரத்தில் 100 பேருக்கு உடல் நலம் சரியில்லை என்று மருத்துவ விடுப்பு கடிதமும் கொடுத்துள்ளனர். இதனால் சர்வதேச விமானபோக்குவ ரத்து கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது.

ஏர் இந்தியா, இந்தியன் ஏர்லைன்ஸ் இணைக்கப்பட்ட பின்னர் இந்த நிர்வாகத்தில் டிரீம்லைன் பயிற்சி என ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதற்கு இந்தியன்ஸ் ஏர்லைன்ஸைச் சேர்ந்தவர்களுக்கே முன்னுரிமை அளிக்கப்படுவதாக ஏர் இந்தியா விமானிகள் சங்கத்தினர் அதிருப்தியில் உள்ளனர். இதனால் நேற்று முன்தினம் நள்ளிரவு முதல் 100 விமானிகள் ஒரே நேரத்தில் மருத்துவ விடுப்பில் சென்றுள்ளனர். இவர்கள் மறைமுகமாக வேலை நிறுத்தத்தில் குதித்ததால் வெளிநாடுகள் செல்லும் சர்வதேசப் பயணிகளின் பயணங்கள் ரத்து செய்யப்பட்டுள்ளன.

இதன்படி புதுடில்லி-டொறண்டோ, டில்லி- சிக்காக்கோ, டில்லி - நியூயோர்க், மும்பை -, ஹொங்கொங் , விமானங்கள் ரத்துச் செய்யப்பட்டுள்ளன. இன்னும் 200 முதல் 300 விமானிகள் வேலை நிறுத்தப் போராட்டத்தில் குதிப்பர் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**அமைச்சர் எச்சரிக்கை**

இதேவேளை விமானத்துறை அமைச்சர் அஜீத் சிங் இதுகுறித்து தெரிவித்தபோது,''இந்த விவகாரம் நீதிமன்றத்தில் இருப்பதால் நாம் எந்த முடிவுக்கும் வரமுடியாது. பேசித் தீர்க்கப்படும். ஆனால் பயணிகளைச் சிரமத்துக்குள்ளாக்கும் விமானிகளின் நடவடிக்கை தவறானது. அவர்கள் உடனடியாகப் பணிக்குத் திரும்ப வேண்டும்''- என்றார். (வ)

# ஜீப் - லொறி விபத்து 18 பேர் பரிதாபச் சாவு



பஞ்சாப் மாநிலத்தில் ஜீப் மீது லொறி மோதிய விபத்தில் 18 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர். பஞ்சாப் மாநிலம் மோகா மாவட்டத்தில் தவுலபுத்ர நீமா என்ற கிராமம் உள்ளது. இந்தக் கிராமத்தைச் சேர்ந்த 12 பேரும், அயலிலுள்ள உஜ்ஜா என்ற கிராமத்தைச் சேர்ந்த 6 பேரும் ஜக்ரான் நகர் என்ற இடத்தில் உள்ள கோயிலுக்கு ஜீப் ஒன்றில் புறப்பட்டனர்.

கோயிலில் சுவாமி தரிசனம் செய்து விட்டு இரவில் ஜீப்பில் திரும்பிக் கொண்டிருந்தனர். நேற்று முன்தினம் இரவு 2 மணி அளவில் மோகா நகர் அருகே ஜீப் சென்று கொண்டிருந்தது. முன்னே சென்ற வாகனம் ஒன்றை ஜீப் சாரதி முந்திச் செல்ல முயன்றார்.

அப்போது எதிர் திசையில் வேகமாக வந்த லொறி ஒன்று ஜீப் மீது பயங்கரமாக மோதியது. இதில் ஜீப் நொறுங்கியது. ஜீப்பில் இருந்த 5 பெண்கள், 5 குழந்தைகள் உட்பட 14 பேர் அந்த இடத்திலேயே உயிரிழந்தனர். தகவல் அறிந்து பொலிஸார் விரைந்து வந்து உயிருக்கு போராடிக் கொண்டிருந்த 4 பேரை மீட்டு மோகா மாவட்ட மருத்துவமனைக்கு அனுப்பினர். அங்கு சிகிச்சை பயனின்றி 4 பேரும் இறந்தனர். ஜீப் மீது மோதிய லொறிச் சாரதி தலைமறைவாகி விட்டார். அவரைப் பொலிஸார் தேடி வருகின்றனர். (வ)

# ராமர் கோயில் குண்டுவெடிப்பு ஓட்டோச் சாரதி கைது


மதுரை, மே.9

மதுரை ராமர் கோயிலில் நடந்த சைக்கிள் குண்டு வெடிப்புத் தொடர்பாக தேடப்பட்ட ஓட்டோச் சாரதி தனிப்படை பொலிஸில் சிக்கியுள்ளார். இதனையடுத்து அவரிடம் பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

கடந்த முதலாம் திகதி மதுரை கிழக்கு அண்ணா நகர் ராமர்கோயில் அருகே சைக்கிள் கேரியரில் வைத்திருந்த நேரம்கணித்த குண்டு வெடித்துச் சிதறியது.

இதுகுறித்து விசாரிக்க மதுரை நகர உதவி ஆணையாளர் வெள்ளைத்துரை தலைமையில் 5 தனிப்படை அமைக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் குண்டு வெடித்த நாளில் இருந்து மதுரை கரும்பாலையைச் சேர்ந்த மூன்று பேர் தலைமறைவாக உள்ளனர். அவர்களைப் பொலிஸார் தொடர்ந்து கண்காணித்து வருகின்றனர். (வ)



அரசுமுறைப் பயணமாக இந்தியா வந்துள்ள அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சர் ஹிலாரி கிளிண்டன், தலைநகர் டில்லியில் பிரதமர் மன்மோகன் சிங்கை நேற்று முன்தினம் சந்தித்துப் பேசினார்.

# தங்க நகைகள் மீதான உற்பத்தி வரி வாபஸ்

டில்லி, மே.9

தங்க நகைகள் மீதான உற்பத்தி வரி வாபஸ் பெறப்படுகிறது என்றும், நகை வாங்கும்போது வரி செலுத்துவதற்கான குறைந்த பட்ச தொகை ரூ.2 லட்சத்தில் இருந்து 5 லட்சமாக உயர்த்தப்படுகிறது என்றும் மத்திய நிதி அமைச்சர் பிரணாப் முகர்ஜி நேற்றுமுன் தினம் அறிவித்தார்.

மத்திய பட்ஜெட் 2012, 2013 இல், தங்கம் மீது உற்பத்தி வரி ஒரு சதவீதம் விதிக்கப்பட்டது. இது பிராண்டட் மற்றும் சிறிய நகை நிறுவனங்கள் இரண்டுக்கும் பொருந்தும் என்று அறிவிக்கப்பட்டது.

இந்த வரி விதிப்பு மார்ச் 17 முதல் நடைமுறைக்கு வந்தது. மேலும், 2 லட்சத்துக்கு மேல் நகை வாங்கினால் அதற்கு ஒரு வீதம் வரி பிடித்தம் செய்யப்படும்(டி.சி.எஸ்.) என்றும் பட்ஜெட்டில் தெரிவிக்கப்பட்டது. இதற்கு நாடு முழுவதும் நகை வணிகர்களிடம் கடும் எதிர்ப்புக் கிளம்பியது. இந்த இரண்டு வரி விதிப்பையும் உடனே திரும்பப் பெற வலியுறுத்தி நகைக் கடை உரிமையாளர்கள் தொடர் கடையடைப்பு நடத்தினர். எனினும், வரி விதிப்பை திரும்பப் பெற வாய்ப்பில்லை என்று பிரணாப் முகர்ஜி தெரிவித்தார்.

குஜராத், மகாராஷ்டிரா மற்றும் தமிழகம் உட்பட பல மாநிலங்களில் நகைக் கடைகள் மூடப்பட்டதால் திருமண காலப்பகுதிகளில் நகை வாங்க முடியாமல் மக்கள் பாதிக்கப்பட்டனர். இந்த நிலையில், நிதி அமைச்சர் பிரணாப் முகர்ஜி, நகை நிறுவனப் பிரதிநிதிகளு டன் டில்லியில் ஆலோசனை நடத்தினார். அவர்களது கோரிக்கைகளைப் பரிசீலித்து நாடாளுமன்றக் கூட்டத் தொடரில் அறிவிப்பதாக உறுதியளித்தார். இதையடுத்து, நகைக் கடைகள் போராட்டம் வாபஸ் பெறப்பட்டது.

இந்த நிலையில், நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் நடப்பாண்டு பட்ஜெட் பிரேரணை அறிவிப்புகளை பிரணாப் முகர்ஜி வெளியிட்டார். தங்கம் உட்பட மதிப்புமிக்க உலோகங்கள் மீது விதிக்கப்பட்ட உற்பத்தி வரி திரும்பப் பெறப்படுகிறது. ரூ.2 லட்சத்துக்கு மேல் நகை வாங்கும்போது செலுத்த வேண்டிய 1 சதவீத வரி, இனிமேல் ரூ.5 லட்சத்துக்கு அதிகமான தொகைக்கு வாங்கும்போது மட்டும் அறவிடப்படும் - என்றார். (வ)

# வெடிகுண்டு மிரட்டல் விமான நிலையங்களில் பாதுகாப்பு தீவிரம்

இந்திய விமான நிலையங்களில் தீவிரவாதிகள் மனித வெடிகுண்டுத் தாக்குதல் நடத்தலாம் என்று அஞ்சப்படுவதால் நாட்டில் உள்ள அனைத்து விமான நிலையங்களிலும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

விமான நிலையங்களில் தீவிரவாதிகள் மனித வெடிகுண்டுத் தாக்குதல் நடத்தலாம் என்று சிவில் விமான போக்குவரத்துப் பணியகம் அனைத்து விமான நிலையங்களையும் எச்சரித்துள்ளது. இதையடுத்து நாட்டில் உள்ள அனைத்து விமான நிலையங்களிலும் பாதுகாப்பு பலப்படுத்தப் பட்டுள்ளது. மத்திய பாதுகாப்புப் படைமற்றும்தேசிய பாதுகாப்புப் படையினர் உஷார் படுத்தப்பட்டுள்ளனர்.

வாகனங்கள் நிறுத்தும் இடம், விமானங்கள் நிற்கும் இடம், பயணிகளின் பொருள்கள் உள்ளிட்ட அனைத்தையும் தீவிரமாக சோதனையிடுமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

கடந்த ஜனவரி மாதம் இதேபோன்று விமான நிலையங்களுக்கு வெடி குண்டு மிரட்டல் இருப்பதாக சிவில் விமான போக்குவரத்து பாதுகாப்பு பணியகம் எச்சரித்தது என்பது குறிப்பிடத்தக்கது.

பாபர் மசூதி தகர்ப்பு

# அத்வானி மீதான சதி வழக்கைத் தொடருமாறு சி.பி.ஐ. வேண்டுகோள்

டில்லி, மே9

அயோத்தியில் சர்ச்சைக்குரிய பாபர் மசூதி கட்டட இடிப்பு வழக்கில், அத்வானி மீது சுமத்தப்பட்டுள்ள சதி வழக்கைக் கைவிடாமல் தொடர்ந்து நடத்த வேண்டும் என்று உச்ச நீதிமன்றத்தை சி.பி.ஐ. கேட்டுக் கொண்டுள்ளது.

இது தொடர்பாக உச்ச நீதிமன்றத்தில் நேற்று முன்தினம் சி.பி.ஐ. தாக்கல் செய்த மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

1992 டிசெம்பர் 6 ஆம் திகதி அயோத்தியில் சர்ச்சைக்குரிய கட்டடம் இடிக்கப்பட்டது. இதுதொடர்பான வழக்கில் குற்றம் சாட்டப்பட்டுள்ள 8 தலைவர்களின் (அத்வானி, முரளி மனோகர் ஜோஷி, உமா பாரதி, வினய் கட்டியார், அசோக் சிங்கல், கிரிராஜ் கிஷோர், விஷ்ணு ஹரி டால்மியா, சாத்வி ரீதாம்பரா) விசாரணையை தனியாகவும்; ஏனைய 41 பேர் மீதான விசாரணையை தனியாகவும் நடத்துவதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கிறோம். விசாரணையை தனித்தனியாக நடத்தலாம் என்று விசாரணை நீதிமன்றமும் அலகாபாத் உயர் நீதிமன்றமும் கூறியிருப்பது முழுக்க முழுக்கத் தவறானதாகும்'.

1992 ஆம் ஆண்டு டிசெம்பர் 6 ஆம் திகதி 2 முதல் தகவல் அறிக்கைகள் தாக்கல் செய்யப்பட்டன. முதலாவது அறிக்கை, கார் சேவகர்கள் செயற்பாடு தொடர்பானது. இரண்டாவது அறிக்கை 8 தலைவர்களுக்கு எதிரானது. சர்ச்சைக்குரிய கட்டடத்திலிருந்து 175 மீற்றர் தொலைவில் இருந்து கொண்டு ஆவேசத்தைத் தூண்டும் விதத்தில் பேசியதாக அவர்கள் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

இதுதொடர்பான 49 வழக்குகளையும் சி.பி.ஐ. புலனாய்வு செய்துள்ளது. அதன்படி பொதுவான ஒரு சதி இருந்ததை சி.பி.ஐ. கண்டுபிடித்துள்ளது.

குற்றம் சாட்டப்பட்ட ஒவ்வொருவரும் ஆவேசம் தூண்ட கோஷமிட்டனர். கட்டடத்தை இடிக்க கார் சேவகர்களுக்கு பயிற்சி அளித்தனர். என்ன நடக்கிறது என்பதை பதிவு செய்துவிடாமலிருக்க செய்தியாளர்களைத் தடுத்தனர். இவையெல்லாம் குற்றச் சதியின் பகுதிகளாகும் என்று அந்த மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போதைப் பொருள், மது ஒழிப்பை வலியுறுத்தி

# பருத்தித்துறை நகரில் இன்று விழிப்புணர்வுப் பேரணி

வடமராட்சி, மே 9

போதைப் பொருள், மது ஒழிப்பு வார விழிப்புப் பேரணி இன்று புதன்கிழமை பிற்பகல் 4 மணிக்குப் பருத்தித்துறையில் நடைபெறவுள்ளது.

பருத்தித்துறை பிரதேச செயலகம், சமுர்த்திப் பிரிவு, பருத்தித்துறை நகர சபை உள்ளிட்ட பல்வேறு பொது நிறுவனங்களின் ஆதரவுடனும், ஒத்துழைப்புடனும் இந்தப் பேரணி ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

பருத்தித்துறை சிவன் கோயிலில் இருந்து ஆரம்பமாகும் இந்தப் பேரணி பிரதான வீதி, மத்திய பஸ் நிலையம் முதலாம், இரண்டாம் குறுக்குத் தெரு வழியாக பருத்தித்துறை கடற்கரை மைதானத்தைச் சென்றடைந்து நிறைவு பெறும்.

பேரணி தொடர்பாக பருத்தித்துறைப் பிரதேச செயலர் இ.த. ஜெயசீலன் வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில்; ''இன்றைய சூழலில் எமது பிரதேசத்தில் தலைதூக்கியுள்ள கலாசார சீரழிவுகளை அடியோடு களைந்தெடுத்து நல்ல பண்பான சமுதாயத்தை உருவாக்க வேண்டும்.'' இது அனைவரினதும் தார்மீகக் கடமையாகும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-08)

## மின்னல் தாக்கிக் காயம்

மின்னல்த் தாக்குதலுக்கு இலக்கான தாயும் மகளும் சிகிச்சைக்காக வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளனர். நெடுங்கேணி பட்டிக்குடியிருப்புப் பிரதேசத்தில் நேற்றுமாலை வீட்டிலிருந்த 'சோளர்' கருவியைக் கழற்ற முற்பட்ட வேளை மின்னல்த் தாக்குதலுக்கு உள்ளாகி அதே இடத்தைச் சேர்ந்த இராசரத்தினம் தனலட்சுமி (வயது-45) இவரது மகளான இராசரத்தினம் யசோதா (வயது-16) ஆகிய இருவருமே காயமடைந்து சிகிச்சைக்காக வவுனியா வைத் தியசாலையில் அனுமதிக் கப்பட்டுள்ளனர். (16-435)

## கொழும்புத்துறை மயானங்களுக்கு பரிபாலன சபை உருவாக்கம்

கொழும்புத்துறை, மே 9

கொழும்புத்துறைப் பகுதியில் உள்ள துண்டி இந்து மயானம், மாதர்காடு சிறுவர் இடுகாடு என்பவற்றிற்கான பரிபாலன சபை உருவாக்கப்பட்டுள்ளது.

கொழும்புத்துறை கிழக்கு சன.சமூக நிலையத்தில் யாழ். மாநகர சபை பொதுசனத் தொடர்பு உத்தியோகத்தர் ச.லோகசிவம் தலைமையில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் புதிய நிர்வாக சபைத் தெரிவு இடம்பெற்றது.

தலைவராக க.நடராசா (கொழும்புத்துறை) உபதலைவர்களாக கு.இராஜசிங்கம் (கொய்யாத்தோட்டம்), பி.ஸ்ரீதரன் (ஈச்சமோட்டை) செயலாளராக இ.விஜயகுமார் (கொழும்புத்துறை) உபசெயலாளராக பா.சசிகரன் (கொழும்புத்துறை) பொருளாளராக மா.கமலநாதன் (கொழும்புத்துறை) ஆகியோரும் போஷகராக பொதுசனத் தொடர்பு உத்தியோகத்தர் ச.லோகசிவமும் தெரிவு செய்யப்பட்டனர். 9 நிர்வாக உறுப்பினர்களும் தெரிவாகினர்.

இதேவேளை கொழும்புத்துறை, பாண்டியன்தாழ்வு, ஈச்சமோட்டை, கொய்யாத்தோட்டம், சுண்டுக்குளி தெற்கு ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்கள் இந்த மயானங்களைப் பயன்படுத்தி வருகின்றனர். (வ-135)

## கண்ணீர் அஞ்சலி

### A.F.அரியநாயகம்



எங்கள் காப்புறுதிச்
சமூகத்தில்
எங்களுடன் தினமும்
இன் முகத்துடன்
வாழ்ந்த நாள்கள்!
மாறாத உங்கள் நினை
வலைகள்!
உங்கள் புன்னகைகளும்
பகிடிகளும்
காற்றலைகளுடன் எம்
காதுகளில் கேட்குதுவே...
நேற்றுவரை எம்மால்
நம்பமுடியவில்லை ஐயா
உங்கள் இழப்பை!

என்றும் உங்கள் அன்பை மறவாத
வெளிக்கள உத்தியோகத்தர்கள்,
இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம்,
வடபிராந்தியம்.

## ஈர விழிகளுடன் ஈராண்டு நினைவுகள்

அன்னை மடியில் 1967 ★ 04 ★ 29



ஆண்டவன் அடியில் 2010 ★ 05 ★ 09

*சக்திவேல்பிள்ளை சத்தியநாதன் (நாதன்)*

பண்பின் இருப்பிடமாய் பாசத்தின் உறைவிடமாய்
எம் கண்முன் இருந்த காலத்தை மறக்கமுடியுமா?
உமது எதிர்பார்ப்பை நிறைவேற்ற
உமது ஆசிவேண்டி நிற்கின்றோம்

*கந்தசுவாமி கோயில் முன்பாக,*
*A9 சாலை, கிளிநொச்சி.*

*தகவல்*
*மனைவி, பிள்ளைகள்,*
*உறவினர்கள்*

## கண்ணீர் அஞ்சலி

### சவிரிமுத்து சிவஞானம் (சிவா)

(முன்னாள் ஊழியர் - பஸ்ரியன் ஹொட்டல்)



நேற்று (08.05.2012) செவ்வாய்க்கிழமை காலமான, எமது ஹொட்டல் ஊழியர் சவிரிமுத்து - சிவஞானம் அவர்களின் பிரிவால் துயருறும் அவரின் குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

37, கண்டி வீதி,
யாழ்ப்பாணம்.

உரிமையாளர்,
ஊழியர்கள்.
பஸ்ரியன் ஹொட்டல்.

## காயம்

தென்மராட்சி, மே 9

கட்டுமானப் பணிகளுக்காக கட்டப்பட்டிருந்த சார மரம் முறிந்து கீழே நின்ற தொழிலாளியின் தலையைத் தாக்கி காயப்படுத்தியது.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

மந்துவில் கிழக்கைச் சேர்ந்த நடேசன் ஜெயக்குமார் (வயது-26) என்பவர் தலையில் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (9)

## மரண அறிவித்தல்



*சின்னத்தம்பி ஜோசப் விக்டர்*

யாழ்ப்பாணம் மாட்டீன் வீதியை பிறப்பிடமாகவும், லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி ஜோசப் விக்டர் கடந்த (03.05.2012) வியாழக்கிழமை காலமாகி விட்டார் மேலதிக விவரங்களை www.onlineuthayan.com இணையத்தளத்தில் பார்க்குக.


## தேவை

Canter வாகனம் வாடகைக்குத் தேவை. (15 அடி நீளம்)

T.P : 077 0872796

## சிங்கள, ஆங்கில வகுப்புகள்

பாடசாலை மாணவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள் தொழில் புரிபவர்கள் மற்றும் மொழியை கற்க ஆர்வமுள்ள அனைவருக்குமான புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன. பேச, எழுத, வாசிக்க அனுபவம் வாய்ந்த ஆசிரியர்களினால் கற்பித்துக் கொடுக்கப்படும்.

தொழில் புரிபவர்களுக்கு விசேட நேரம் வழங்கப்படும்
(குறைந்த, இலகு தவணைக் கட்டண முறை)

North Lead Educational Center
No-328, Stanly Road, Jaffna.
Tel : 222 4459, 0772533390. Fax : 222 4460

## வாகனம் விற்பனைக்கு

ஸ்குஸ்( ISUZU) 250 ELF வாகனம் Full Body உடன் விற்பனைக் குண்டு. தரகர் தேவையில்லை.

(மாலை 4 மணிக்கு பின்பு பார்வையிட முடியும்)

தொடர்புகொள்ள:- 0773604128

## மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு

NP XM-XXXX இலக்க CD 100 Deluxe, Black

விற்பனைக்கு உண்டு


## மரண அறிவித்தல்கள்

### திருமதி சுபத்திராதேவி பாலசுப்பிரமணியம்



''வங்கியடி'' இணுவில் கிழக்கை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சுபத்திராதேவி பாலசுப்பிரமணியம் நேற்று (08.05.2012) செவ்வாய்க்கிழமை பி.ப 3 மணியள வில் காலமானார்.

அன்னார்பாலசுப்பிரமணியத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை- செல்லம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற பொன்னம்பலம் மற்றும் நேசரத்தினம் தம்பதியரின் அன்பு மருமகளும் விதுஷிகா (ஆரணி - மாணவி இணுவில் மத்தியகல்லூரி, தரம் 11) அவர்களின் பாசமிகு தாயும் காலஞ்சென்றவர்களான இலங்கைநாதன், அழகரத்தினம், மற்றும் சின்னராசா காலஞ்சென்ற மகேஸ்வரி மற்றும் செல்வரத்தினம் (அம்மா அச்சகம்- மருதனார்மடம்), ஞானமணி (லண்டன்), காலஞ்சென்ற சரஸ்வதி மற்றும் இந்திராணி, அருளானந்தசிவம், பத்மானந்ததேவி, ஸ்ரீகிருஷ்ணராஜா, மல்லிகாதேவி ஆகியோரின் பாசமிகுசகோதரியும், புஸ் பராணி, கமலாதேவி, புஸ்பலீலா, கதிர்காமநாதன் (ஜேர்மனி), கணேசலிங்கம் (லண்டன்), ஆகியோரின் மைத்துனியும் ஆவார்

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.05.2012) புதன்கிழமை அவரது சகோதரியின் இல்லத்தில் (''விளாத்தியடி'', மானிப்பாய் வீதி, இணுவில்) பி.ப 2 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பூவோடை இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரம் ஏற்றுக்கொள்ளவும்.

*''விளாத்தியடி'',*
*மானிப்பாய் வீதி,*
*இணுவில்.*

*தகவல்*
*கணவர்*
*பாலசுப்பிரமணியம்*

### சின்னத்தம்பி- சோதிமுத்து

விழிசிட்டி தெல்லிப்பளையைப் பிறப்பிடமாகவும், கந்தர்மடம் மணல்தரை வீதியை வதிவிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி- சோதிமுத்து நேற்று (08.05.2012) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சீனிவாசகம்- சின்னம்மா தம்பதியரின் புதல்வியும், காலஞ்சென்ற சின்னத்தம்பியின் (ஆசிரி யர்) அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான பொன்னுப் பிள்ளை, திருநாவுக்கரசு, சுப்பிரமணியம், கனகசபை மற்றும் கிருஸ் ணமூர்த்தி, நவரத்தினம், கந்தசாமி ஆகியோரின் சகோதரியும் ஞான தேவி - கந்தசாமி, விவேகானந்தன் - சாரதா, சரவணபவா-சுசீலா, கனகரத்தினம்- விஜயலக்ஷமி ஆகியோரின் சிறியதாயாரும் நிர்மளா, சியாமளா, சகுந்தலா, வசந்தா, மாரிமுத்து, திருக்குமரன், சுயானி, யட்சி, அனுசியா, ஜெனார்த்தனன், சர்மிலன், சுபாஜினி ( Nalin Information Technologies), தர்சினி, சபேசன் (சமூர்த்தி முகாமை யாளர் பிரதேசசெயலகம், யாழ்ப்பாணம்), ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (08.05.2012) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கொக்குவிலில் இந்துமயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*44/3A, மணல்தரை ஒழுங்கை,*
*கந்தர்மடம்,*
*யாழ்ப்பாணம்*

*தகவல்*
*குடும்பத்தினர்*

### தில்லையம்பலம் பாலரத்தினம்

ஏழாலை வடக்கைப் பிறப்பிடமாகவும், மீசாலை மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட தில்லையம்பலம் பாலரத்தினம் நேற்று (08.05.2012) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தில்லையம்பலம் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற சிவக்கொழுந்தின் அன்புக் கணவரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.05.2012) புதன்கிழமை கத்தாப்படி வீதி, நுணாவில் மத்தி, சாவகச்சேரியில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக பி.ப. 2 மணியளவில் சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

கத்தாப்படி வீதி,
நுணாவில் மத்தி,
சாவகச்சேரி.

தகவல்:
பா.சிவபாலன் (மகன்),
(கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர்,
யாழ்ப்பாணம்).

### சவிரிமுத்து சிவஞானம்



புதுக்குடியிருப்பைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம் சுண்டுக்குளியை வசிப்பிடமாகவும் கொண்ட சவிரிமுத்து சிவஞானம் நேற்று (08.05.2012) செவ்வாய்க்கிழமை கர்த்தருக்குள் நித்திரை அடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சவிரிமுத்து-அருளம்மா தம்பதியரின் அன்பு மகனும், மரிஅந்தோணி, அந்தோணியம்மா, காலஞ்சென்ற அருளம்மா ஆகியோரின் அன்புச் சகோதரனும், சாந்தியின் அன்புக் கணவரும், சறோணி, சாதோக் ஆகியோரின் அன்புத் தந்தையும், ராணி, சத்தியா, சந்திரன், லதா, கவிதா ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (09.05.2012) புதன்கிழமை பி.ப. 2 மணிக்கு அப்போஸ்தலசபை, 5/1, ஈச்சமோட்டை முதலாம் ஒழுங்கை, சுண்டுக்குளியில் ஆரம்பமாகி நல்லடக்கத்துக்காக அப்போஸ்தலசபை சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சுண்டுக்குளி.

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளிநாடுகளுக்குச் செல்வோருக்கும்,
வேலைவாய்ப்பை எதிர்பார்ப்போருக்கும்,
தொழில் புரிவோருக்குமான விசேட கற்கை நெறி

**Certificate in Multi IT**

- Introduction to Computer with Parts Identification
- Windows Installion & Software Installion, Operating System
- Typing Practices (Note pad, Ms word )
- Printing Technology and scanning
- CD/DVD Writing Methods
- Video, Audio Converting
- Home Vedio Editing
- Internet & e - mail (Face Book, Skype, e-mail,Net call)
- Card Designing(ETC)

Duration 3 Momths Course Fee 3500/=

வரையறையற்ற செய்முறைப்பயிற்சி, மாணவர் மீது தனிப்பட்ட கவனம்,
அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ்,
நன்கு அனுபவம் வாய்ந்த விரிவுரையாளர்களால் வகுப்புக்கள் நடாத்தப்படும்.

தமிழ்மொழி விளக்கத்துடன் அடிப்படையிலிருந்து கற்பிக்கப்படுவதால் கணினி பற்றிய முன்னறிவோ ஆங்கில அறிவோ தேவையற்றது.

ஆர்வம் ஒன்றே போதுமானது...

புதிய வகுப்புக்கள் ஆரம்பம் – Batch i - 11.05.2012 9a.m.
Batch ii - 12.05.2012 2p.m.

**Computer Express**
No 15, Sirambiyadi lane (off stanly Road)
Jaffna. T.P - 021 222 8250, 077 2483356

## மருத்துவக் கண்காட்சி

யாழ்ப்பாணம், மே 9

யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட மாணவர்களால் இம்மாதம் மருத்துவக் கண்காட்சி நடத்தப்பட உள்ளது.

எதிர்வரும் 21 ஆம் திகதி நடைபெறவுள்ள மேற்படி கண்காட்சிக்கான ஏற்பாடுகள் தற்போது இடம்பெற்று வருகின்றன.

நீண்ட காலத்திற்கு பின்னர் இந்த வருடம் நடைபெறவுள்ள கண்காட்சி மூலம் மக்கள் நன்மையடைய முடியுமென எதிர்பார்க்கப்படுகின்றது. (வ-130)

## செயலமர்வு

வடமராட்சி,மே 9

வடமராட்சி வலயப் பாட சாலைகளில் தரம் 10,11இல் விவசாயப்பாடம் போதிக்கும் ஆசிரியர்களுக்கும் தரம் 9,10,11இல் சைவ சமய பாடம் போதிக்கும் ஆசிரியர்களுக்கும் எதிர்வரும் 12 ஆம் திகதி சனிக்கிழமை செயலமர்வு நடைபெறவுள்ளது.

விவசாயப்பாட ஆசிரியர்களுக்கான செயலமர்வு புலோலி மெதடிஸ்த மிஷன் தமிழக்கலவன் பாடசாலையிலும் சைவசமய பாட ஆசிரியர்களுக்கான செயலமர்வு பருத்தித்துறை வடஇந்து மகளிர் கல்லூரியிலும் நடைபெறவுள்ளது என்று வடமராட்சி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் சி.புஸ்பலிங்கம் தெரிவித்துள்ளார். (வ-8)

## சனசமூக நிலையங்களுக்கு நிர்வாகிகள் தெரிவு

பருத்தித்துறை, வடமராட்சி வடக்கு பிரதேச செயலர் பிரிவில் உள்ள 77 சனசமூக நிலையங்களுக்கும் வருடாந்தப் பொதுக்கூட்டம் நடத்தப்பட்டு புதிய நிர்வாகிகள் தெரிவுகள் இடம்பெற்று வருகின்றன.

இந்தப் பிரிவில் உள்ள பருத்தித்துறை நகரசபை, வல்வெட்டித்துறை நகர சபை பகுதிகளில் தலா 16 சனசமூக நிலையங்களும் பருத்தித் துறை பிரதேச சபை எல்லைக்குள் 45 சனசமூக நிலையங்களும் செயற்படுகின்றன. இது வரை சுமார் பத்துக்கும் மேற்பட்ட சனசமூக நிலையங்களுக்கு பொதுக்கூட்டங்கள் நடத்தப்பட்டு புதிய நிர்வாகிகள்தெரிவுநடைபெற்று முடிவுற்றுள்ளன. ஏனைய சனசமூக நிலையங்களுக்கான பொதுக் கூட்டங்களும் புதிய நிர்வாகத் தெரிவுகளும் பெரும்பாலும் வார இறுதி நாள்களில் நடத்தப்பட்டு வருகின்றன.

## சங்கானை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ.உ)

விற்பனை உதவியாளர் - 308/17 நிரந்தர பதவிக்கு தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பப் படிவத்தினை 10.00 ரூபா செலுத்தி கடமை நேரத்தில் சங்கானை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் பெற்றுக்கொள்ளலாம். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்தினை "தலைவர், சங்கானைப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், சங்கானை" என்ற முகவரிக்கு நேரிலோ அல்லது பதிவுத் தபாலிலோ அனுப்பி வைக்கவும். விண்ணப்பிக்கும் பதவியினை இடது பக்க மேல் மூலையில் குறிப்பிடல் வேண்டும்.

விண்ணப்ப முடிவு திகதி: 22.05.2012

விற்பனை உதவியாளர் - 308/17

66/2006 சுற்று நிருபப்படி 8950 - 10300 / 60×10–70×10

தகைமைகள்

அ. கூட்டுறவுப் பணியாளர் கனிஷ்ட தராதரப்பத்திரம்

அல்லது

ஆ. எட்டாம் வகுப்புச் சித்தியும் விற்பனைத் துறையில் 03 வருடத்திற்குக் குறையாத அனுபவமும்.

தலைவர்:
சங்கானை ப.நோ.கூ. சங்கம்,
சங்கானை.

07.05.2012

# மரண அறிவித்தல்கள்



## பிள்ளையினார் அப்புத்துரை

(தேவி சேவிஸ் ஸ்ரேசன் உரிமையாளர்)

வசாவிளானைப் பிறப்பிடமாகவும், 1K, சால்ஸ்லேன் தெஹிவளையை வதிவிடமாகவும் கொண்ட பிள்ளையினார் அப்புத்துரை (07.05.2012) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பிள்ளையினார்-அன்னப்பிள்ளை தம்பதியரின் பாசமிகு கனிஷ்ட புத்திரனும், லோகநாயகியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான பொன்னம்மா, ஆச்சிமுத்து, குணரட்ணம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்றவர்களான மயில்வாகனம்-தையல்நாயகி தம்பதியரின் மருமகனும், குமுதினி (கனடா), முகுந்தன் (கட்டார்), வாகினி (கொழும்பு), மாதினி (நோர்வே), ஜனனி (ஜேர்மனி), துஸ்யந்தன் (கொழும்பு) ஆகியோரின் பாசமிகு தந்தையும், அருள்மொழி (கனடா), நந்தினி (கட்டார்), அன்புழகன் (நோர்வே), பஞ்சநாதன் (ஜேர்மனி) ஆகியோரின் மாமனும், சரண்யன் (நோர்வே), சுருதி (கனடா), அர்ச்சனா (ஜேர்மனி), பூஜிதா (நோர்வே), அபிசன் (ஜேர்மனி), மாதுஷா (கட்டார்), அபிரன் (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (10.05.2012) வியாழக்கிழமை காலை 8.00 மணி முதல் கல்கிசை மஹிந்த மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு இறுதிக் கிரியைகள் 2.30 மணிக்கு நடைபெற்று மாலை 5.00 மணியளவில் கல்கிசை பொது மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல் : குடும்பத்தினர்

## சிவகுரு தாமோதரம்பிள்ளை



மண்டைதீவு 6ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், கல்வியங்காட்டை வசிப்பிடமாகவும் கொண்ட சிவகுரு தாமோதரம்பிள்ளை நேற்று (08.05.2012) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிவகுரு-நாகமுத்து தம்பதியரின் சிரேஷ்ட புத்திரனும், சின்னையா-சின்னட்டி தம்பதியரின் மருமகனும், பரமேஸ்வரியின் அன்புக் கணவருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

வீரபத்திரர் கோயில் வீதி,
கல்வியங்காடு (17810)(6-8)

தகவல்:
குடும்பத்தினர்.

**Computer Express**
**Institute Of Information Technology**

அனைத்துக் கற்கைநெறிகளுக்குமான புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன

Diploma in Microsoft office 3000/= 3 Months
Diploma in Desktop Publishing 4000/= 3 Months
Diploma in Web page Designing 4000/= 3 Months
Diploma in Graphic Designing 4000/= 3 Months
Diploma in Hardware Engineering 4000/= 3 Months
Diploma in Computerized Accounting 4000/= 3 Months
Diploma in Computer Science 4000/= 4 Months
Hon. Diploma in Computer Science 4000/= 4 Months
Hon. Diploma in Programming 4000/= 3 Months
AUTO CAD 4000/= 3 Months

Advanced Diploma Courses
Advanced Dip. in Multimedia
Advanced Dip. in Video Editing
Advanced Dip. in Networking
4 Months 4000/=

100% செய்முறைப்பயிற்சி
அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ்

புதிய பிரிவுகள் ஆரம்பம்
Batch I - 09.05.2012 - 9am
Batch ii - 09.05.2012 - 3pm
Batch iii - 12.05.2012 - 9am
Batch iv - 12.05.2012 - 3pm

No.15, Sirambiyadi lane, off Stanley Road, Jaffna.(ஆரியகுளத்துச்சந்திக்கு அருகில் கொசி Hotel மேல்) T.P No :- 021 222 8250, 077 722 2422, 077 490 7444

## வலிகாமம் தெற்கு பிரதேச சபை சுன்னாகம்
## 2012 ஆம் ஆண்டுக்கான கேள்வி அறிவித்தல்

வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட சுன்னாகம் மீன்சந்தையில் மீன் வெட்டுவதற்கான இடம், கடை இல. 03, கடை இல.04 க்கு 2012.05.21 தொடக்கம் 2012.12.31 ஆம் திகதி வரை குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்விகள் என்னால் கோரப்படுகின்றன.

**அட்டவணை**

| தொ. இல | விவரம் | மீளளிக்கப்படாத கேள்விப்பத்திரப் பணம் | கேள்வி வைப்பு | ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆகக் குறைந்த கேள்வித் தொகை (வற் வரி தவிர) |
|---|---|---|---|---|
| | சுன்னாகம் உப அலுவலகம் | | | |
| 1 | சுன்னாகம் மீன் சந்தையில் மீன் வெட்டுவதற்கான இடம் | 1000.00 | 5000.00 | 50000.00 |
| 2 | கடை இல. 03 | 750.00 | 5000.00 | 26000.00 |
| 3 | கடை இல. 04 | 750.00 | 5000.00 | 26000.00 |

1. கேள்விப்பத்திரம் வழங்கும் காலம் 2012.05.09 - 2012.05.17 பி.ப 2.00 மணிவரை
2. கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளுதல் 2012.05.18 நண்பகல் 12.00 மணிவரை
3. கேள்விப்பத்திரம் திறக்கப்படுதல் 2012.05.18 பி.ப 2.00 மணிக்கு
4. கேள்விப்பத்திரங்கள் இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப்பிரதியை தவிசாளர், வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம் என்ற முகவரிக்கு அரக்கு முத்திரையிட்டு தபால் உறையின் இடதுபக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக இடப்பட்டு பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும். அல்லது இதற்கென அலுவலகத்தில் வைக்கப் பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உரிய நேரத்திற்கு முன் இடப்படல் வேண்டும். இரண்டாவது பிரதியை பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், உள்ளூராட்சித் திணைக்களம், யாழ்ப்பாணம் என முகவரியிட்டு பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைத்தல் வேண்டும்.
5. கேள்விப் பத்திரம் பெற விரும்புவோர் விண்ணப்பங்களுடன் அடையாள அட்டையையும் அதன் நிழற்படப் பிரதியையும் கொண்டு வருவதுடன் முக்கியமாக தாம் வதியும் இடத்தின் கிராம அலுவலரின் வதிவிடச் சான்றிதழையும் சமர்ப்பித்தல் வேண்டும்.
6. ஆகக்குறைந்த கேள்வித்தொகையிலும் குறைந்த கேள்வி விண்ணப்பம் கோருபவரின் கேள்வி நிராகரிக்கப்படுவதுடன் கேள்வி வைப்புப் பணமும் மீளளிக்கப்படமாட்டாது.
7. கேள்வி திறக்கப்படும் நேரத்தில் கேள்வியாளரோ, அவரது பிரதிநிதியோ சமுகமளித்தல் வேண்டும்.
8. கேள்வி சம்பந்தமான மேலதிக விவரங்களை எமது தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

வலி. தெற்கு பிரதேச சபை, சுன்னாகம்,
2012.05.08 (C/1499) (6,14,10)

[illegible],
தவிசாளர், வலி.தெற்கு பிரதேச சபை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சியாச்சின் மலையில் இருந்து பாக்.படையினர் விலகமாட்டார்

லாகூர், மே 9
சியாச்சின் மலைப்பகுதியில் இருந்து படைகளை வாபஸ் பெற மாட்டோம் என்று பாகிஸ்தான் அறிவித்துள்ளது. சியாச்சின் பனி மலைப் பகுதி, ஜம்மு காஷ்மீர் மாநிலத்தை ஒட்டிய இந்திய- பாகிஸ்தான் எல்லையில் அமைந்துள்ளது. இது உலகின் உயரமான பனி படர்ந்த போர்க்களமாகும். இங்கு இரு நாட்டு படைகளும் முகாமிட்டுள்ளன.

பாகிஸ்தான் பகுதியில் கியாரி என்ற இடத்தில் அந்த நாட்டு இராணுவத் தலைமையகம் உள்ளது. இங்கு கடந்த ஏப் ரல் 7ஆம் திகதி ஏற்பட்ட திடீர் பனிச்சரிவில் சிக்கி பாகிஸ்தான் இராணுவத்தினர் 150 பேர் கொல்லப்பட்டனர். இதையடுத்து, அங்கிருந்து படைகளை வாபஸ் பெற வேண்டுமென கோரிக்கை எழுந்தது.



இது உலகின் உயரமான பனி படர்ந்த போர்க்களமாகும். இங்கு இரு நாட்டு படைகளும் முகாமிட்டுள்ளன. பாகிஸ்தான் பகுதியில் கியாரி என்ற இடத்தில் அந்த நாட்டு இராணுவத் தலைமையகம் உள்ளது.

இந்தியாவுடன் சியாச்சின் பிரச்சினை உட்பட அனைத்துப் பிரச்சினைகளுக்கும் அமைதியான முறையில் தீர்வு காண வேண்டும் என்று பாகிஸ்தான் பிரதமர் கயானியும் சமீபத்தில் கூறியிருந்தார். இந்த நிலையில், பாகிஸ்தான் இராணுவ அமைச்சர் சவுத்ரி அகமது முக்தார் செய்தியாளர்களிடம் தெரிவிக்கையில்,

தற்போதைய சூழ்நிலையில் இந்தியாவுடன் சியாச்சின் பகுதிப் பிரச்சினையைத் தீர்ப்பது மிகவும் சிரமம். இந்தப் பிரச்னையில் இந் தியா தீவிரமாக உள்ளது.

எனவே, சியாச்சின் மலைப் பகுதியில் இருந்து இராணு வத்தைத் திரும்பப் பெற முடியாது. இராணுவத்தை வாபஸ் பெற்றால், உயிரிழந்த வீரர்களின் குடும்பத்தினர் எங்களை கேள்வி கேட்பார்கள். பனிச்சரிவால் உயிரிழந்த வீரர்களின் சடலங்களைத் தேடும் பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

பாகிஸ்தான் சர்வதேச ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டுள்ளது. எனவே, அமெரிக்கா தலைமையிலான நேட்டோ படைகளுக்கு அத்தியாவசியப் பொருள்கள் வழங்கல் செய்வதைத் தொடர்ந்து நிறுத்தினால், பாகிஸ்தான் மீது சர்வதேச பொருளாதாரத் தடைகள் விதிக்கப்படலாம் என்று தெரிவித்தார்

## வெள்ளை மாளிகையில் ரகுமானுக்கு விருந்து



லொஸ் ஏஞ்சல்ஸ்,மே 9
வெள்ளை மாளிகைக்கு வருமாறு அமெரிக்க ஜனாதிபதி அழைப்பு விடுத்தது குறித்து ஏ.ஆர்.ரகுமான் தனது சந்தோசத்தை வெளிப்படுத்தியுள்ளார்.

இசை அமைப்பாளர் ஏ.ஆர். ரகுமானுக்கு அமெரிக்காவில் உள்ள மியாமி பல்கலைக்கழகம் கலாநிதிப் பட்டம் வழங்கத் தீர்மானித்தது. அதையேற்று கடந்த சனிக்கிழமை அமெரிக்கா சென்றார் ரகுமான். பலத்த கரகோஷத்துக்கு இடையே கலாநிதிப் பட்டம் பெற்றுக் கொண்டார். பின்னர் அவர் ரகுமான் கூறியதாவது:-

அமெரிக்க ஜனாதிபதியும் அவரது குடும்பத்தினரும் தனிப்பட்ட முறையில் கையெழுத்திட்டு என்னை வெள்ளை மாளிகைக்கு வரவேற்று கடிதம் அனுப்பி இருந்தனர். இதைக் கற்பனை செய்துகூட பார்க்கவில்லை. இந்த நேரத்தில் எனது வாழ்க்கையில் முக்கிய திருப்பங்களை ஏற்படுத்தித் தந்தவர்களை நன்றியோடு நினைத்துப் பார்க்கிறேன். எனது தந்தை, தாயார் என் வாழ்க்கையை ஒழுக்க நெறிகளுடன் செம்மையாக அமைத்து தந்தனர். திரையுலகில் 'ரோஜா' படம் மூலம் எனக்கு முதன் முதலாக வாய்ப்பளித்தவர் மணிரத்னம். இஸ்லாமிய ஞானிகள் என்னை நானே உணர்ந்துகொள்ள வழிகாட்டினார்கள். இந்திய ரசிகர்கள் என்னையும், எனது இசையையும் எந்தப் பாகுபாடும் இல்லாமல் அரவணைத்துக் கொண்டனர். அதேபோன்று ஹொலிவுட்டிலும் என்னை ஏற்றுக்கொண்டிருப்பதை உணர்கிறேன். இவ்வாறு ஏ.ஆர்.ரகுமான் கூறினார்.

## அழகிகள் கள்ளக் காதல் செய்யத் தடை

தைபே, மே 9
மிஸ் தைவான் அழகி போட்டி ஜூனில் நடக்கிறது. பல பெண்கள் விண்ணப்பித்துள்ளனர். 200க்கும் அதிகமானோர் கலந்துகொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. போட்டி விதிமுறையில் இந்த ஆண்டு புதிதாக ஒன்று சேர்த்திருக்கின்றனர். இதன்படி, கள்ளக் காதல் செய்யமாட்டேன் என அழகிகள் உறுதி அளித்துப் பத்திரத்தில் கையெழுத்து இட வேண்டும். ஒரு ஆண்டு வரை மீறக்கூடாது. மீறினால், அழகிப் போட்டி நிறுவனம் சார்பில் வழங்கப்பட்ட பரிசு, பாராட்டுப் பத்திரம் திரும்பப் பெறப்படும். குடும்ப உறவுகளின் புனிதத்தை கௌரவிக்கும் நோக்கில் இந்த விதிமுறை சேர்க்கப்பட்டிருப்பதாகப் போட்டி ஏற்பாட்டாளர்கள் கூறினர்.



இந்தியாவுக்குச் சுற்றுப்பயணம் மேற்கொண்டிருக்கும் அமெரிக்க வெளியுறவு செயலர் கிலாரி கிளின்ரன் கல்கத்தாவில் கராத்தே பயிற்சியில் ஈடுபடும் வீராங்கனையைச் சந்தித்தார்.

## பிரான்ஸ் ஜனாதிபதி 15 ஆம் திகதி பதவியேற்பு

பிரான்ஸின் புதிய ஜனாதிபதியாகத் தெரிவாகியுள்ள சோசலிசக் கட்சியின் பிரன்சுவா ஹோலன்ட் எதிர்வரும் 15 ஆம் திகதி பதவியேற்கவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

ஜனாதிபதி நிக்கலஸ் சார்க்கோஸியின் அலுவலகம் இதனை உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது.

நேற்று முன்தினம் நடத்தப்பட்ட இரண்டாம் கட்ட வாக்கெடுப்பல் 51 வீதத்துக்கும் அதிகமான வாக்குகளைப் பெற்ற ஹோலன்ட், பிரான்ஸ் ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிபெற்றிருந்தார்.

இதன் பிரகாரம் 1981 ஆம் ஆண்டின் பின்னர், இரண்டாம் கட்ட வாக்கெடுப்பில் தோற்கடிக்கப்பட்ட முதலாவது பிரான்ஸ் ஜனாதிபதியாக நிக்கலஸ் சார்க்கோஸி கருதப்படுகின்றார்.

இதேவேளை நிதி நெருக்கடிகளை எதிர்நோக்கியுள்ள ஐரோப்பிய வலய நாடுகளுக்குத் தீர்வைப் பெற்றுக் கொள்ளக்கூடிய திட்டங்களை முன்வைக்கவுள்ளதாக ஹோலன்ட் குறிப்பிட்டுள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா உள்ளிட்ட சர்வதேசத் தலைவர்கள் பிரான்ஸின் புதிய ஜனாதிபதி ஹோலன்ட்டுக்கு வாழ்த்துத் தெரிவித்துள்ளனர்.

## விசாரணைகளில் விதண்டாவாதம்



செம்டெம்பர் 11 தாக்குதலின் பிரதான சந்தேகநபர் காலித் ஷேக் மொஹமட் தொடர்பாக வழக்கு விசாரணை குழப்பமான முறையில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

குவாண்டனாமோ இராணுவ நீதிமன்றத்தில் இது தொடர்பான வழக்கு ஆரம்பிக்கப்பட்டதுடன், முதல் நாளில் தாக்குதலின் முன்னணி சந்தேநபர்கள் தொடர்ச்சியாக குழப்பங்களை ஏற்படுத்தியுள்ளனர்.

2001 செம்டெம்பர் 11 தாக்குதலின் பிரதான சந்தேக நபரான காலித் ஷேக் மொஹமட் மற்றும் ஏனைய நான்கு சந்தேகநபர்கள், 13 மணித்தியாலங்கள் நடைபெற்ற இந்த விசாரணைகளின்போது கேள்விகளுக்குப் பதிலளிக்க மறுத்துள்ளனர்.

தமக்கெதிரான கொலை மற்றும் பயங்கரவாதக் குற்றச்சாட்டுகளை ஐந்து சந்தேகநபர்களும் நிராகரித்துள்ளதாக ரொய்ட்டர் செய்தி வெளியிட்டுள்ளது.

இரண்டாயிரத்து 976 பேரின் உயிர்களைக் காவு கொண்ட இந்த தாக்குதலின் சந்தேகநபருக்கு எதிரானக் குற்றச்சாட்டுகள் நிரூப்பிக்கப்படும் பட்சத்தில் அவர்களுக்கு மரண தண்டனை விதிக்கப்படலாம் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

## அல்குவைதா முக்கிய தலைவர் சாவு

அல்குவைதா இயக்கத்தின் முக்கிய தலைவர் ஒருவர், ஏமனில் நடத்தப்பட்ட விமானத் தாக்குதல்களில் கொல்லப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

அமெரிக்கப் படையினரால் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதை அதிகாரிகள் உறுதிப்படுத்தியுள்ளனர்.

அமெரிக்காவால் தேடப்பட்டுவந்தவர்களின் பட்டியலில் இவரின் பெயரும் உள்ளடக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

2000 ஆம் ஆண்டு அமெரிக்கப் போர்க்கப்பல் ஒன்றை இலக்கு வைத்து நடத்தப்பட்ட தாக்குதலின் பிரதான சந்தேகநபராக இவர் கருதப்பட்டிருந்தார்.

பஹாட் அல் குசோ என்ற இந்த நபர், யேமனின் தென் பிராந்தியத்தில் நடத்தப்பட்ட தாக்குதல்களில் கொல்லப்பட்டார் என்று சர்வதேச ஊடகங்கள் கூறுகின்றன.

## அரண்மனையை விட்டு வெளியேறினார் 6ஆவது மனைவி

லண்டன், மே 9
சுவாசிலாந்து மன்னர் முசுவாத்தியின் ஆறாவது மனைவி, கணவனின் கொடுமை தாங்க முடியாமல் அரண்மனையை விட்டு வெளியேறினார்.

தெற்கு ஆபிரிக்க நாடான சுவாசிலாந்தில் மன்னராட்சி நடக்கிறது. இந்த நாட்டில், ஒவ்வொரு ஆண்டும் நாணல் புல் திருவிழா நடக்கும். இந்த விழாவில், இந்த நாட்டைச் சேர்ந்த இளம் பெண்கள் மேலாடை அணியாமல், அரண்மனை அருகே மன்னர் எதிரே அணி வகுத்து செல்வார்கள். இதில் தனக்குப் பிடித்தப் பெண்ணை, மன்னர் தேர்வு செய்துத் திருமணம் செய்து கொள்வார். இதுவரை 13 பெண்களை, மன்னர் முசுவாத்தி திருமணம் செய்து கொண்டுள்ளார். இதற்கிடையே 12 ஆவது மனைவி நொதாண்டோ டூபி என்பவர் அமைச்சர் ஒருவருடன் கள்ளக் காதல் கொண்டது தெரிய வந்ததால் மன்னரால் கொடுமைப்படுத்தப்பட்டு வருகிறார் என்றும்,



விரைவில், அரண்மனையிலிருந்து இவர் வெளியேற உள்ளார் என்றும் கூறப்படுகிறது.

மன்னரின் ஆறாவது மனைவி ஏஞ்சலா டிலாமினி. இவருக்கு ஒன்பது வயதில் குழந்தை உள்ளது. மன்னர் தினசரி கொடுமைப்படுத்துவதை தாங்க முடியாத ஏஞ்சலா, அரண்மனையை விட்டு வெளியேறி, தன் பெற்றோர் வீட்டில் தங்கியிருந்தார். தற்போது அங்கிருந்து வெளியேறி உறவினர் வீட்டில் தஞ்சம் புகுந்துள்ளார். சுவாசிலாந்தில் ஜனநாயக ஆட்சியை நடைமுறைப் படுத்த வேண்டும் என, தென் ஆபிரிக்காவைச் சேர்ந்த அமைப்பு போராடி வருகிறது. மன்னர், ஒவ்வொரு ஆண்டும் ஒரு பெண்ணைத் திருமணம் செய்து கொள்வதால் அங்கு பால்வினை நோய்கள் பரவும் அபாயம் உள்ளதாகவும், எய்ட்ஸ் நோய் தடுப்புப் பிரப்புரையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீனா, இந்தியா தொடர்பில்

# சமநிலை உறவை விரும்பும் அமெரிக்கா

வாஷிங்டன்,மே 9

இந்தியா மற்றும் சீனாவுடன் ஒரே மாதிரியான உறுதியான உறவைத் தொடர விரும்புவதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது. இது குறித்து அமெரிக்கப் பாதுகாப்பு துறையின் மூத்த அதிகாரி கூறுகையில், இந்தியா மற்றும் சீன உறவு நாணயம் போல் ஒரே மாதிரியாகவே தொடர விரும்புகிறோம் என்றார். இந்த நிலையில் சீனப் பாதுகாப்புதுறை அமைச்சர் லியாங் குவாங்லி, 9 ஆண்டுகளுக்கு பின்னர் வாஷிங்டன் வந்தபோது இராணுவ விவகாரம் தொடர்பாக இருநாடுகளிடையே இதே நிலையைத் தொடர விரும்புவதாக கூறியிருந்தார். அது போலவே நாங்கள் இந்தியாவுடனான இராணுவத்துடனும் பாதுகாப்பு நடவடிக்கை குறித்தும் இரு நாடுகளிடையே ஒரு மித்த வழிகாட்டியாக செயல்பட விரும்புவதாகத் தெரிவித்தார்.




### பாக்.படையினரின் தலைகளை கொய்த தலிபான்

பாகிஸ்தானில் வடக்கு வசிரிஸ்தான் பகுதியில் பழங்குடியினர் வசித்து வரும் பகுதியில் நேற்று முன்தினம் தலிபான்களுக்கும் இராணுவத்தினருக்கும் இடையே நடைபெற்ற மோதல்களில் 9 ராணுவத்தினர் கொல்லப்பட்டனர். இதை தொடர்ந்து மிரன்ஷா பகுதியில் நடந்த தேடுதல் வேட்டையின் போது ராணுவத்தினருக்கும் தலிபான்களுக்கிடையே மீண்டும் மோதல்ஏற்பட்டது.

இந்த மோதலில் மேலும் மூன்று ராணுவத்தினர் கொல்லப்பட்டனர். இரு ராணுவத்தினரைக் கைதுசெய்த தலிபான்கள் அவர்களின் தலைகளைத் துண்டித்து, வெட்டப்பட்டத் தலைகளை மரக்கம்பத்தில் தொங்கவிட்டனர்.

# பிரான்ஸ் புதிய ஜனாதிபதிக்கு மனைவியா? துணைவியா?

பாரீஸ், மே 9

பிரான்ஸ் ஜனாதிபதித் தேர்தலில் பிரான்ஷுவா ஹோலண்ட் தேர்வு செய்யப்பட்டது முதல் அந்த நாட்டு வெளியுறவுத்துறை ஒரு பெரிய பிரச்சினையை எப்படி சமாளிப்பது என்று தெரியாமல் தவித்து வருகின்றது.

அது ஒன்றுமில்லை ஜனாதிபதி ஹோலண்ட், வலேரி திரியர்வெய்லர் என்பவரை இன்னும் திருமணம் செய்து கொள்ளாமலே 'வாழ்க்கைத் துணை'யாக ஏற்றுக் கொண்டு வாழ்ந்து வருகிறார்.

ஜனாதிபதியாகப் பதவி ஏற்ற பிறகு வெளிநாடுகளுக்குச் செல்ல வேண்டியிருக்கும். போப்பாண்டவரைச் சந்திப்பதற்காக ரோமாபுரி செல்வதாக இருந்தாலும் வளைகுடா நாடுகளுக்கும் வைதீகமான முஸ்லிம் நாடுகளுக்கும் பழமையில் ஊறிய இந்தியாவுக்கும் செல்வதாக இருந்தாலும் சில சங்கடங்கள் நேரும்.

திருமணமாகாத தோழியை அரசு நிகழ்ச்சிகளில் அதிகாரபூர்வ விருந்தினராக ஏற்க அந்த நாடுகள் அங்கீகரித்து இடம் தராது. மேலும் அவருடைய தங்குமிடம், பயணம், சாப்பாடு, பாதுகாப்பு ஆகியவற்றுக்கு ஏற்பாடுகளைச் செய்வதிலும் தயக்கம் ஏற்படும்.

எனவே மே 15இல் அரசு இல்லமான "எலிஸி அரண்மனை"யில் குடிவருவதற்குள் ஜனாதிபதிக்குத் திரு



மணம் ஆகிவிட்டால் நல்லது என்று அவர்கள் கருதுகிறார்கள். ஜனாதிபதிக்கு வயது 57, தோழிக்கு 47தான்.

வலேரிக்கு வயதுவந்த 2 ஆண் பிள்ளைகள் இருக்கின்றனர். இதற்கு முன்னதாக 2 முறை திருமணம் செய்து 2 கணவர்களையும் விவாகரத்து செய்திருக்கிறார் வலேரி. பத்திரிகையாளராகப் பணி புரிகிறார். பிரான்ஸின் பிரபல்யமான நடிகையும் நிக்கோலாஸ் சார்கோஸியின் முதல் மனைவியுமான கர்லா புரூணியைப் போலவே கவர்ச்சிகரமானவர் என்று பத்திரிகைகள் புகழ்கின்றன.

"திருமணம் செய்யாமல் ஜனாதிபதியுடன் வெளிநாடு சென்றால் பிரச்சினை வருமே?" என்று ஒரு நிருபர் வலேரியிடம் கேட்டபோது, "எங்கே போப்பாண்டவரைச் சந்திப்பதாகஇருந்தால்தானே, பார்த்துக் கொள்ளலாம்" என்று கூறி விட்டார். "இது என்னுடைய தனிப்பட்ட வாழ்க்கை, தேவையில்லாமல் இதில் தலையிட வேண்டாம்" என்றும் அந்த நிருபரை அவர் எச்சரித்து விட்டார்.

### கேபிள் கார்களில் சீனாவில் சல்லாபம்

சீனாவில் கேபிள் கார்களுக்குள் இடம்பெறும் பாலியல் நடவடிக்கைகளைத் தடுப்பதற்கு கேபிள்கார் இயக்குநர்கள் கடும் முயற்சிகளை மேற்கொண்டுள்ளனர்.

அந்தரத்தில் பயணிக்கும் கேபிள் கார்களுக்குள் இளம் ஜோடிகள் பாலியல் சல்லாபத்தில் ஈடுபடுவதைத் தடை செய்ய வேண்டுமென உள்ளூர் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

சீனாவின் ஹெனான் மாகாணத்தில் உள்ள புகழ்பெற்ற அழகிய மலைத்தொடரில் இயக்கப்படும் கேபிள் கார்களுக்குள் பாலியல் நடவடிக்கைகள் இடம்பெறுவதாக ஏராளமான முறைப்பாடுகள் கிடைத்ததையடுத்து, உள்ளூர் அதிகாரிகள் இதற்குத் தடைவிதித்துள்ளனர் என்று சீன ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

# பிரிட்டன் விமான நிலையங்களில் முழு உடல் பரிசோதனை

பிரிட்டன் விமான நிலையங்களில், முழு உடல் ஸ்கேனர் மூலம் சோதனையிட முடிவு செய்யப்பட்டுள்ளது. அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் இரட்டை கோபுரங்களை அல் குவைதா தீவிரவாதிகள் தகர்த்த பின், பல நாடுகள் பாதுகாப்பை பலப்படுத்தின.

அத்துடன் பல்வேறு கெடுபிடிகளையும் கொண்டு வந்தன. அமெரிக்காவில் முக்கியமாக விமான நிலையங்களில் பயணிகளின் முழு உடலையும் சோதனை செய்யும் வகையில், உடல் ஸ்கேனர்கள் கொண்டு வரப்பட்டன. இதற்குப் பல நாடுகள் பலத்த எதிர்ப்புத் தெரிவித்தன. முழு உடல் சோதனை செய்யும் போது வெளிப்படும் கதிர்வீச்சால் உடல்நலம் பாதிக்கப்படும், அத்துடன் தனிமனித சுதந்திரம் பாதிக்கப்படும் என்று சர்ச்சை எழுந்தது. அதன் பின் அந்தத் திட்டம் கைவிடப்பட்டது.

இந்த நிலையில், பிரிட்டனில் உள்ள எல்லா விமான நிலையங்களிலும் முழு உடல் ஸ்கேனர் பொருத்த முடிவு செய்யப்பட்டுள்ளது. இதுகுறித்து ஐரோப்பிய ஒன்றியம் பல்வேறு ஆலோசனைகள் நடத்தி இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளது. ஸ்கேனர் சோதனையின் போது வெளிப்படும் கதிர்வீச்சு மிகவும் குறைவானது. இது பாதுகாப்பானது. எந்த பாதிப்



பும் ஏற்படாது முதல் கட்டமாக மன்செஸ்டர் விமான நிலையத்தில் சோதனை அடிப்படையில் முழு உடல் சோதனை செய்யும் ஸ்கேனர்கள் பொருத்தும் பணி நடந்து வருகிறது.

## அறிவித்தல்

18 மீற்றர் தொலைத்தொடர்பு கோபுரம் அமைத்தல்
101/25, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

இல.101/25, ஸ்ரான்லி வீதியில் (மக்கள் வங்கி ஒழுங்கை) (18) பதினெட்டு மீற்றர் தொலைத்தொடர்புக் கோபுரம் அமைப்பது தொடர்பாக மாநகரசபையில் விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. எனவே இத்தொலைத்தொடர்புக் கோபுரம் அமையவுள்ள சூழலில் வசிக்கின்ற பொதுமக்கள், இத்தொலைத்தொடர்பு இச் சூழலில் அமைவதால் ஏதேனும் பாதிப்புத் தங்களுக்கு ஏற்படும் எனக் கருதுவார்களாயின் தங்களது அபிப்பிராயத்தை இத்திகதியிலிருந்து பதின்நான்கு (14) நாள்களுக்குள் யாழ்.மாநகரசபைக்கு அறியத்தருமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

**மாநகர முதல்வர், மாநகரசபை, யாழ்ப்பாணம்.**

## அறிவித்தல்

100 மீற்றர் தொலைத்தொடர்பு கோபுரம் அமைத்தல்
51, ஆனந்தன்வடலி வீதி, கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்.

இல.51, ஆனந்தன் வடலி வீதி, கொழும்புத்துறையில் (100) நூறு மீற்றர் தொலைத்தொடர்புக் கோபுரம் அமைப்பது தொடர்பாக மாநகரசபையில் விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. எனவே இத்தொலைத்தொடர்புக் கோபுரம் அமையவுள்ள சூழலில் வசிக்கின்ற பொதுமக்கள், இத்தொலைத்தொடர்பு இச் சூழலில் அமைவதால் ஏதேனும் பாதிப்புத் தங்களுக்கு ஏற்படும் எனக் கருதுவார்களாயின் தங்களது அபிப்பிராயத்தை இத்திகதியிலிருந்து பதின்நான்கு (14) நாள்களுக்குள் யாழ்.மாநகரசபைக்கு அறியத்தருமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

**மாநகர முதல்வர், மாநகரசபை, யாழ்ப்பாணம்.**

## அறிவித்தல்

24 மீற்றர் தொலைத்தொடர்பு கோபுரம் அமைத்தல்
62/20, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

இல.62/20, ஸ்ரான்லி வீதியில், (24) இருபத்திநான்கு மீற்றர் தொலைத்தொடர்புக் கோபுரம் அமைப்பது தொடர்பாக மாநகரசபையில் விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. எனவே இத்தொலைத்தொடர்புக் கோபுரம் அமையவுள்ள சூழலில் வசிக்கின்ற பொதுமக்கள், இத்தொலைத்தொடர்பு இச் சூழலில் அமைவதால் ஏதேனும் பாதிப்புத் தங்களுக்கு ஏற்படும் எனக் கருதுவார்களாயின் தங்களது அபிப்பிராயத்தை இத்திகதியிலிருந்து பதின்நான்கு (14) நாள்களுக்குள் யாழ்.மாநகரசபைக்கு அறியத்தருமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

**மாநகர முதல்வர், மாநகரசபை, யாழ்ப்பாணம்.**

## நன்றி நவிலலும் அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பும்

அமரர் சிவஸ்ரீ. கந்தசாமிக்குருக்கள்
கதிர்காமலிங்கக்குருக்கள்
(பெரிய வெள்ளை ஐயா)



கோணாவளை, கெருடாவில்
தொண்டைமானாறு.(021 3211666)

தோற்றம் 1944.03.22 | சிவனடி 2012.04.29

எம் குடும்பக் குலவிளக்கே
எமையேன் தவிக்கவிட்டீர்
உம் நிழலில் வாழ்ந்தோம் அது
காலனுக்கு பொறுக்கலயோ ?
காலமெல்லாம் உமை நினைத்து
கண்ணீர் வடிக்கின்றோம்
உன் ஆத்ம சாந்திக்காக ஈசனை
வேண்டி நிற்கின்றோம்

கடந்த (29.04.2012) ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை சிவனடி சேர்ந்த அமரர் சிவஸ்ரீ கந்தசாமிக்குருக்கள் - கதிர்காமலிங்கக் குருக்களின் (பெரிய வெள்ளைஐயா), மரணச் செய்தி அறிந்தவுடன் பல வழிகளிலும் வீடுதேடி உதவி செய்தவர்களுக்கும், உள்நாடு, வெளிநாடுகளிலிருந்து தொலை பேசிமூலம் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் மற்றும் கண்ணீர் அஞ்சலி வெளியிட்டவர் களுக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவிப்பதுடன். அவரின் பாஷண உத்வாசனமும், சபிண்டீகரணமும் இன்று (09.05.2012) புதன் கிழமை காலை 6 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று அஸ்த்தி கீரிமலை தீர்த்தக்கடலில் கரைக் கப்பட்டு அதனைத்தொடர்ந்து முற்பகல் 11 மணியளவில் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையும், மதியபோ சனமும் இல்லத்தில் இடம் பெறும். அதில் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் வேண்டுகின்றோம்.

க. இரபேஸ்வரியம்மா (மனைவி),
ஜெயக்குமார் குருக்கள் (மகன்)
(பாப்பா ஐயா)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவலைகளுக்கு விடை கொடுங்கள்

(12)

## கவலை வந்தால் நோயும் வரும்

அச்சம் கவலைப்படவைக்கும். கவலை உங்களைக் கலவரப்படுத்தும்: மன இறுக்கத்திற்குள்ளாக்கும். அதன் விளைவாக உங்கள் வயிற்று நரம்புகள் பாதிக்கப்பட்டு, வயிற்றில் புண்ணை ஏற்படுத்தும்.

டாக்டர் ஜோசப். எஃப் மாண்டேகு என்பவர், தம்முடைய நூலொன்றில் இப்படிக் குறிப்பிடுகிறார். 'உங்கள் வயிற்றுப் புண்ணுக்குக் காரணம் நீங்கள் உண்கிற உணவு அல்ல உங்களை எது உண்டு தீர்க்கிறதோ அது தான் (அச்சமும், கவலையும்) உங்களுடைய வயிற்றுப் புண்ணுக்குக் காரணம்' என்று.

அச்சமும் கவலையும் மட்டும் தானா? வெறுப்பு, சுயநலம், உலக நடைமுறையுடன் ஒத்துப் போக முடியாமை இவையும் வயிற்று உபாதைகளுக்குக் காரணம் எனலாம். வயிற்றுப்புண் ஒருவருடைய வாழும் திறனைக் கொஞ்சம் கொஞ்ச மாய் உறிஞ்சிவிடும். 'உயிர்கொல்லி நோய்களின் பட்டியலில் வயிற்றுப் புண்ணுக்கு பத்தாவது இடம்' என்கிறது 'லைஃப்' பத்திரிகை.

அமெரிக்க மருத்துவர்கள் மற்றும் அறுவைச் சிகிச்சை நிபுணர் கழகத்தின் வருடாந்தக் கூட்டம். கூட்டத்தில் தம்முடைய ஆய்வுக் கட்டுரையொன்றை வாசித்தார் மேயோக்ளினிக்கின் மருத்துவர் ஹெரால்டு.ஸி.ஹேபின். சுமார் 200 தொழிலதிபர்கள் மற்றும் வணிகர்களிடம் ஆய்வு மேற்கொண்ட பின் தயாரிக்கப்பட்ட கட்டுரை அது. அவர்கள் சராசரியாக 44 வயதினர். அந்த நிர்வாகிகளில் மூன்றில் ஒரு பங்கினர் உயர் இரத்த அழுத்தம், இருதய நோய் சீரணமண்டலப் பாதையில் புண், இவற்றில் ஒன்றால் அவதிப்பட்டு கொண்டிருப்பவர்கள்.

***'ஒட்டு மொத்த உலகையே பெற்றாலும்
உடல் நலத்தை இழந்து பெறுவதால் என்ன பயன்?***

மன உளைச்சலுக்குள்ளாகும் தொழிலதிபர் ஒருவர் தம்முடைய அறுபதுகளின் முற்பகுதியில் இறந்து விடுகிறார். எவ்வித கவலைக்கும் இடமளிக்காத ஒரு விவசாயி தம்முடைய எண்பதுகளில் வாழ்ந்து கொண்டிருக்கிறார். இதில் யார் உண்மையிலேயே வெற்றி பெற்றவர் என்பீர்கள்?

பெரும்பாலான நோயாளிகள் நரம்பு சார்ந்த நோய்களுக்காகவே மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுக் கொண்டிருப்பவர்கள். கையாலாகாத்தனம், ஏமாற்றம், விரத்தி, வருத்தம், பதட்டம், கவலை, அச்சம், மனச்சோர்வு போன்ற காரணங்களால் நரம்பு உபாதைகள் வருகின்றன.

கிரேக்கத்துவ மேதை பிளாட்டோ கூறுவார். 'மருத்துவர்கள் செய்கிற பெரிய தவறு மனதைக் குணப்படுத்தாமல் உடம்பைக் குணப்படுத்த முயற்சிப்பது தான்' என்று, அதை யாரும் மறுக்க முடியாது. காரணம் உடலும் மனமும் வெவ்வேறானவையல்ல, அவை ஒன்றோடொன்று இணைந்தவை. அவற்றுக்குத் தனித்தனியே சிகிச்சையளிக்கக் கூடாது.

தமிழறிஞர் டாக்டர் மு.வ.கூறுவார் 'உடலும் வேண்டும், உள்ளமும் வேண்டும் என்று, உடல் மனதைச் சார்ந்தும் மனம் உடலைச் சார்ந்தும் இயங்குபவை.

மனநலம் பாதிக்கப்பட்டால் உடல் நலம் குன்றும். உடல் சார்ந்த நோய்கள் உண்டாகும். உடல் நலம் பாதிக்கப்படுமெனில், மனமும் பாதிக்கப்பட்டு மன உபாதைகள் தோன்றும். உடல் நன்றாக இருப்பது மனதைப் பொறுத்தது, மனம் நன்றாக இருப்பது உடலைப் பொறுத்தது. எனவே தான் அவர். 'உடலும் வேண்டும், உள்ளமும் வேண்டும்' என்று வலியுறுத்தியது.

மருத்துவ விஞ்ஞானம் உடல் சார்ந்த நோய்களை வெற்றிகரமாகக் குணப்படுத்திக் கொண்டிருக்கிறது.

ஆனால், அச்சம், வெறுப்பு, ஏமாற்றம், மனச்சோர்வு பேன்றவற்றால் உண்டாகும் மன உபாதைகளைப் போக்குவதற்கு இன்னமும் வழிகாணப்படவில்லை.

கவலையால் வருகிறது நீரிழிவு, தைரொய்ட் பிரச்சினை ஏன் ஜலதோஷமும் கூட.

கவலைப்படாமல் இருங்கள், இருதய, உயர் இரத்த அழுத்த பாதிப்புகள் வராமல் தடுத்துக் கொண்டு விடலாம்.

கவலையைக் குறைத்துக் கொள்ளுங்கள், வாத நோய் பிரச்சினை இருக்காது.

கவலைப்படுகிற மனிதன் தனக்குத்தானே எதிரியாகி விடுகிறான். நம்முடைய மனக்கவலைக்கு மருந்து மருத்துவரிடம் இல்லை. நம் மனத்திடமே இருக்கிறது.

கவலை ஏற்படுத்தும் விளைவுகளை (பாதிப்புகள்) நீங்கள் அறிய விரும்பினால் மருத்துவரிடம் சென்று கேட்க வேண்டும் என்பதில்லை. மருத்துவ நூல்களைத் தேடிப் படிக்க வேண்டும் என்பதுமில்லை.

உங்களைச் சுற்றியுள்ள மனிதர்களைப் பார்த்தாலே போதும் கவலை ஒருவரை நீரிழிவு நோயாளியாகவும் மற்றொருவரை நரம்புக் கோளாறு உள்ளவராகவும் இன்னொருவரை வயிற்றுப்புண் வந்து அவதிப்படுபவராகவும் வைத்திருக்கிறதே!

பங்குச் சந்தை சரிவுக்குள்ளானால் ஒருவருக்கு இரத்த அழுத்தம் எகிறிவிடுகிறது. வேறொருவருக்குச் சிறு நீரிலும் இரத்தத்திலும் சர்க்கரை கூடி விடுகிறது.

எல்லாம் உணர்வெழுச்சிகளால் உண்டாகிற வினை. அத்தனை பரபரப்புக்களையும் மீறி உள்ளார்ந்த நல்லமைதியை நீங்கள் பராமரித்தால் கவலையால் உங்களை என்ன செய்து விட முடியும்.

-சி.எஸ்.தேவநாதன் (தொடரும்)

# சமூகப் பொறுப்புணர்ந்து செயற்பட்டு மாணவர் சட்டத்துறையை வளர்க்க வேண்டும்

## பேராசிரியர் மணிவாசகர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மே 9

சட்டத்தையும் ஒழுங்கையும் நிலை நிறுத்துவதற்கான அர்ப்பணிப்போடு செயற்படும் சட்டத்துறை மாணவர்கள் சமூகப் பொறுப்பையும் உணர்ந்து சட்டத் துறையை வளர்க்க வேண்டும் என யாழ். பல்கலைக்கழகப் பேராசிரியர் அ.வே.மணிவாசகர் தெரிவித்தார்.

சட்ட மாணவர் சங்க ஆண்டு நிறைவும் 'நீதம்' ஆய்விதழ் மலர்வெளியீடும், யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் அண்மையில் நடைபெற்றது. அதில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே மணிவாசகர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தெரிவித்ததாவது:-

சட்டத்துறை ஆரம்பிக்கப்பட்ட காலத்திலிருந்தே அது பல குறைபாடுகளை எதிர்கொண்டு வந்ததை அனைவரும் அறிவர். அந்தக் குறைபாடுகள் இன்றும் தொடர்ந்து கொண்டுதான் இருக்கின்றன. எனினும் யாழ்.பல்கலைக்கழக சட்டத்துறைக்குக் கிடைக்கின்ற உதவிகளைக் கொண்டு இந்தத் துறையை நாம் நடத்தி வருகிறோம். அதற்கு ஆதரவாக சட்டத் துறைக்கு வேண்டிய உதவிகளைச் செய்வோம் என்று யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தரும், கலைப் பீடாதிபதியும் அனுசரணையுடன் செயற்பட்டு வருகின்றனர்.

**சட்டத்துறை ஆரம்பிக்கப்பட்ட காலத்திலிருந்தே அது பல குறைபாடுகளை எதிர்கொண்டு வந்ததை அனைவரும் அறிவர். அந்தக் குறைபாடுகள் இன்றும் தொடர்ந்து கொண்டுதான் இருக்கின்றன. எனினும் யாழ்.பல்கலைக்கழக சட்டத்துறைக்குக் கிடைக்கின்ற உதவிகளைக் கொண்டு இந்தத் துறையை நாம் நடத்தி வருகிறோம்.**

அங்கு நிரந்தர, வருகை விரிவுரையாளர்கள் அக்கறையுடன் மிகுந்த சிரமப்பட்டு அதிகநேரம் சட்ட மாணவர்களுக்கு விரிவுரைகளை நடத்தி வருகின்றனர். அதே வேளை கொழும் புப் பல்லைக்கழக சட்டத்துறையினிடமிருந்தும் நிறைய உதவிகள் கிடைக்கின்றன.

ஆனாலும் எமது மாணவர்கள், எப்போது விரிவுரையாளர்கள் என்ற பதவியைப் பெற்று எமது துறையுடன் இணைந்து கொள்கிறார்களோ அப்போது தான் நாம் எமது கால்களில் நிற்க முடியும். அதனையே பலரும் உணர்த்தியுள்ளார்கள்

எனவே சட்டத்தையும், ஒழுங்கையும் நிலைநிறுத்துவதற்காக அதற்கான அர்ப்பணிப்போடு எமது துறையைக் கற்கை நெறியாகக் கொண்டிருக்கிற மாணவர்கள் எமது சமூகப் பொறுப்பையும் உணர்ந்து, இந்தத் துறையில் தம்மை வளம்படுத்த வேண்டும்-என்றார். (எ-4)

# கையெழுத்து சஞ்சிகை போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம்,மே 9

நல்லூர் பிரதேச சபை மட்டத்தில் உள்ளூராட்சி மன்றம் நடத்திய கையெழுத்துச் சஞ்சிகைப் போட்டியில் வெற்றி பெற்ற பாடசாலைகளின் சஞ்சிகைகள் விவரம் அறிவிக்கப்பட்டுள்ளது. அதன் விவரம் வருமாறு:-

கீழ்பிரிவுப் போட்டியில் முதலாம் இடத்தை கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாலயத்தின் ஞான ஒளி சஞ்சிகை, இரண்டாம் இடம், கோண்டாவில் இராமகிருஸ்ணா மகாவித்தியாலயத்தின் 'எம் வளங்கள் சஞ்சிகை ஆகிய வெற்றிபெற்றுள்ளன.

மத்திய பிரிவில் முதலாம் இடத்தை கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாலயத்தின்'கதம்பமலர்' சஞ்சிகைஇரண்டாம் இடத்தை கோண்டாவில் இந்து மகாவித்தியாலயத்தின் 'வித்தாரம்' சஞ்சிகையும், மூன்றாம் இடத்தை கொக்குவில் நாமகள் வித்தியாலயத்தின் 'அரும்புகள் சஞ்சிகை' ஆகியன வெற்றி பெற்றுள்ளன. மேற்பிரிவில் முதலாம் இடத்தை யாழ். செங்குந்தா இந்துக் கல்லூரியின் 'நீரூற்று' சஞ்சிகை இரண்டாம் இடத்தை கோண்டாவில் இராமகிருஷ்ண மகாவித்தியாலயத்தின் 'ஊர் ஒளி' சஞ்சிகை ஆகியன வெற்றி பெற்றுள்ளன.

இதனை விட கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாலயத்தின் 'கலவை' சஞ்சிகை,கொக்குவில் இந்துக்கல்லூரியன் யாழ்ப்பாண இராச்சியம் கோவில் தொடர்பான வரலாற்றுச் சஞ்சிகை, கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாலயத்தின் 'ஒளிவிளக்கு' சஞ்சிகை, கொக்குவில் இந்துக் கல்லூரியின் உள்ளூராட்சி நிறுவனங்கள் சஞ்சிகை யாழின் 'உதயம்' சஞ்சிகை, 'நல்லூர் இராசதானி' சஞ்சிகை ஆகியவற்றுக்கு சான்றிதழ்களும் கிடைக்கப் பெற்றுள்ளன. இந்தப் போட்டியில் சிறந்த சஞ்சிகையாக யாழ். செங்குந்த இந்துக் கல்லூரியின் 'நீரூற்று' சஞ்சிகை தெரிவு செய்யப்பட்டுள்ளது. (எ-14)

# இடமாற்றம்

தென்மராட்சி,மே 9

சாவகச்சேரி ஆதார வைத்திய சாலை மேற்பார்வையாளராக நா.இரவீந்திரன் இடமாற்றம் செய்யப்பட்டு கடந்த 2 ஆம் திகதி கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளார்.

இந்த வைத்தியசாலையில் மேற்பார்வையாளராகக் கடமையாற்றிய செ.ஜெகதீஸன் ஓய்வு பெற்றுச் சென்றதையடுத்து மந்திகை ஆதார வைத்தியசாலையில் மேற்பார்வையாளராகக் கடமையாற்றிய நா.இரவீந்திரன் இந்த வைத்திய சாலைக்கு யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரால் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ-9)

# நிர்வாகிகள் தெரிவு

வலி.வடக்கு,மே9

யாழ்.மாவட்ட கிரிக்கெட் சங்கத்தின் புதிய நிர்வாகிகள் தெரிவு யாழ்.நாவலர் வீதியில் அமைந்துள்ள கிரிக்கெட் சங்க அலுவலகத்தில் எஸ்.மதிவதனன் தலைமையில் இடம்பெற்றது.

இந்தக் கூட்டத்தில் புதிய நிர்வாகிகளாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டார்கள்:-

தலைவர்-பி.சந்திரநாதன் (கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக்கழகம்), உப தலைவர்கள்- கே.தர்மகுலசிங்கம் (கிரிக்கெட் பவுன்டேசன்), டானியல் மதியழகன் (யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்), எஸ். திலக் (மானிப்பாய் பரிஸ் விளையாட்டுக்கழகம்),

செயலாளர்-ரி.விமலதாசன் (யாழ்ப்பாணம் சென்ரல் விளையாட்டுக்கழகம்).

உப செயலாளர்-எஸ்.சுதாகரன் (கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக்கழகம்).

பொருளாளர்-கே.செல்வராசா (அரியாலை ஸ்ரான்லி விளையாட்டுக்கழகம்).

மைதான விளையாட்டுச் செயலாளர்-கே.கபில்தேவ் (யாழ்ப்பாணம் சென்றல் விளையாட்டுக் கழகம்). (எ-86)

# முல்லைத்தீவு கல்வி வலய தமிழ்த்தினப் போட்டி முடிவுகள்

முல்லைத்தீவு கல்வி வலயப் பாடசாலைகளுக்கு இடையே நடைபெற்ற தமிழ்மொழித்தினப் போட்டி முடிவுகள் வெளியாகியுள்ளன.

அதன் விவரம் வருமாறு:-

பிரிவு 1-வாசிப்பு

முதலாமிடம் த.தரணிகா- வற்றாப்பளை ம.வி, இரண்டாமிடம் ற.சுரபி- விசுவமடு ம.வி, மூன்றாமிடம் கி.கிருசாளினி - சிறீசுப்பிரமணிய வித்தி.

பிரிவு 3- நடனம் - தனி

முதலாமிடம் - சி.சுலக்சனா- வற்றாப்பளை ம.வி, இரண்டாமிடம் த.வான்மதி - வள்ளிபுனம் க.உ.வித்தி, மூன்றாமிடம் ஜெ.கிருத்திகா- கலைமகள் வித்தி.

பிரிவு 5 - நடனம் தனி

முதலாமிடம் க.ஸேருநிலா - வற்றாப்பளை ம.வி, இரண்டாமிடம் ம.தாரகா - வித்தியானந்த கல்லூரி.

பிரிவு 4 - நடனம் தனி

முதலாமிடம் அ.[illegible] - விசுவமடு ம.வி, இரண்டாமிடம் ந.துளசிகா - உடையார்கட்டு ம.வி, மூன்றாமிடம் யோ.சஸ்மிகா - புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி.

பிரிவு 2 குழு இசை

முதலாமிடம் - முல்லைத்தீவு ம.வி, இரண்டாமிடம்- புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி, மூன்றாமிடம் வற்றாப்பளை ம.வி.

தி.போ. நாட்டிய நாடகம்

முதலாமிடம் - வித்தியானந்தா கல்லூரி.

தி.போ விவாதம்-

முதலாமிடம் - கலைமகள் வித்தி, இரண்டாமிடம் முல்லைத்தீவு ம.வி, மூன்றாமிடம் புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி, வித்தியானந்த கல்லூரி.

பிரிவு 1 - இசை குழு

முதலாமிடம் - கலைமகள் வித்தி, இரண்டாமிடம் - கள்ளப்பாடு அ.த.க.பாடசாலை, மூன்றாமிடம் கைவேலி கணேஷா வித்தி.

பிரிவு 1 நடனம் குழு

முதலாமிடம் - முல்லைத்தீவு ம.வி, இரண்டாமிடம் - கள்ளப்பாடு அ.த.க.பாடசாலை, மூன்றாமிடம் - பாரதி வித்தி. (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன் தொடர்புகளுக்கு

**தலைமையகம்:**
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி:021-222 9933,
222 9944, 5679933, 5679944
விளம்பரம்:021-5671111
விநியோகம்: 021-5677222
தொலைநகல்
செய்தி: 021-5678844,
விளம்பரம்: 021-2229731

**மின் அஞ்சல்**
செய்தி : news@uthayan.com
கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

**வன்னிப் பணிமனை:**
ஏ-9 வீதி, கரடிப்போக்கு,
கிளிநொச்சி (புனித திரேசா வித்தி. முன்பாக)
தொலைபேசி: 021 228 0065
தொலைநகல்: 021 228 0066
**நெல்லியடிக் கிளை:**
பிரதான வீதி, நெல்லியடி (HNB அருகே)
தொலைபேசி : 021-2262789,
021 226 2395
**சாவகச்சேரிக் கிளை:**
நவீன சந்தை மேல்மாடி,
சாவகச்சேரி
தொலைபேசி: 021 227 0323

விளம்பர முகவர்கள்: 'சதா பொன்ஸ்' –மாலு சந்தி, அல்வாய் : 021 226 3206, 'நெல்லியடி மொடேன் ஸ்ரோர்ஸ்' – பஸ் நிலையம், நெல்லியடி : 021 490 1519, 'மீசாலை கஜானன்' – கண்டி வீதி, மீசாலை தெற்கு : 021 227 0399, 'மன்னார் சிவசாந்தி' – தாழ்வுபாடு வீதி, மன்னார் : 0752824478, 'கொடிகாமம் அருள்நாயகி' – பஸ் நிலையம், கொடிகாமம் : 0774937585, 'மல்லாவி புவனேஸ்வரி புத்தகசாலை' – மத்திய சந்தையடி, மல்லாவி : 0778175116, 'கோபி எலைக்ரிற்றி' – முல்லைத்தீவு நகர் : 0779598917, 'அன்பரசன்' – சிவன் கோயிலடி, ஒட்டுசுட்டான் : 0775035571, 'சுஹர் ரவல்ஸ்' – 98, பிரதான வீதி, மன்னார் : 023 222 3311

## சொர்க்கத்தைத் தேடி நரகத்தில் விழுந்தவர்கள்

போர் முடிவுற்ற பின்னரும் பொருளாதாரப் புலம் பெயர்வுகள் குறையவில்லை என்பதை புலம்பெயரிகளுக்கான சர்வதேச அமைப்பு [ஐ.ஓ.எம்.] உறுதிப்படுத்தியிருக்கிறது. இவர்கள் தங்கள் இலக்குகளை அடைந்திருந்தார்களானால் பெரியளவில் கவனத்துக்கு வந்திருக்கமாட்டார்கள். மாறாக, எங்கோ திக்குத் தெரியாத ஆபிரிக்க நாடொன்றில் அந்தரிக்க விடப்பட்டிருக்கிறார்கள். முகவர்களால் ஏமாற்றப்பட்டு காசையும் இழந்து, திரும்பி வருவதற்கு வழியும் அற்ற நிலையில் இவர்களின் நிலைமை பரிதாபமாகியிருக்கிறது.

இப்படித் தவிப்பவர்களின் பரிதாப நிலையை ஐ.ஓ.எம். அமைப்பின் இலங்கைக்கான தலைமை அதிகாரி ரிச்சட் டன்சிகன் விளக்கியிருந்தார். பல லட்சக்கணக்கான பணத்தைப் பெற்றுக் கொண்டு மேற்கு ஆபிரிக்க நாடுகளான கானா, மாலி போன்றவற்றில் இப்படித் தமிழ் மக்கள் அநாதரவாகக் கைவிடப்படுகிறார்கள் என்று அவர் கூறியிருக்கிறார்.

சொர்க்கத்துக்கு ஆசைப்பட்டு நரகத்தில் வீழ்ந்தவர்களின் நிலைமையைப் போன்று இப்போது மாறியிருக்கிறது 400 பேரின் நிலைமை. அவர்களின் 175 பேருக்கு நரகத்திலிருந்து தப்புவதற்கான சந்தர்ப்பங்கள் வாய்த்தபோதும் எஞ்சிய 225 பேர் இன்னும் அந்த வாய்ப்புக்காகக் காத்து நிற்கிறார்கள்.

இலங்கையில் தமிழர்கள் எதிர்கொள்ளும் அரசியல் நிலையற்ற தன்மை, அரசால் இரண்டாம்தரக் குடிமக்களாக நடத்தப்படும் நிலைமை, பொருளாதார ரீதியில் தமிழர்கள் முன்னேறுவதற்கு வழியில்லாமை மற்றும் முயன்றாலும் அதனை முடக்கும் அரசின் போக்கு, வேலை வாய்ப்பின்மை என்பனவே போர் முடிந்த பின்னும் தமிழர்களை இன்னும் மேற்கு நாடுகளை நோக்கிப் படையெடுக்க வைக்கின்றன.

இந்தப் பயணங்கள் ஆபத்தானவை, நெருக்கடிகள் நிறைந்தவை என்பது தெரிந்திருந்தபோதும் அதிலிறங்குவதற்கு இளைஞர்கள் இன்னும் தயாராகவே இருக்கிறார்கள். மேற்கு நாடுகளுக்குச் செல்வதற்காக இவர்கள் செலவிடும் பல லட்சம் ரூபா பணத்தையும் இங்கு முதலிட்டிருந்தால் மிகப் பெரிய பொருளாதார மாற்றத்தை ஏற்படுத்தியிருக்க முடியும் என்ற வாதம் ஏற்புடையதே. ஏனெனில் ஒருவர் கனடாவுக்கோ பிரிட்டனுக்கோ பிரான்ஸுக்கோ செல்வதற்கு ஆகக் குறைந்தது 30 லட்சம் ரூபா செலவிடப்படுகிறது. இதனடிப்படையில் மூன்று பேர் கொண்ட ஒரு குடும்பம் போய்ச் சேர்வதற்கு குறைந்தது ஒரு கோடி ரூபா செலவிடப்படுகிறது.

இந்தப் பணத்தில் நடுத்தர தொழில்முயற்சி ஒன்றை வடக்கில் இலகுவாக ஆரம்பிக்க முடியும். அப்படி ஆரம்பிக்கும்போது அந்தக் குடும்பம் மட்டுமின்றி வேறு சிலரும்கூட அதனால் பயன்பெற முடியும். அதையெல்லாம் விடுத்து இவ்வளவு பணத்தைச் செலவிட்டு வெளிநாடு செல்லும் ஒருவர் அந்தப் பணத்தைத் திருப்பிச் செலுத்த தனது வாழ்வின் இளமைக் காலத்தையும் பின்னர் அந்த நாட்டில் தன்னை நிலைநிறுத்திக் கொள்வதற்கு வாழ்வின் மீதி அரைவாசிக் காலத்தையும் செலவிட வேண்டியிருக்கிறது. மொத்தத்தில் இவர்கள் தேடிப் போன சொர்க்கத்தை அடைய அவர்கள் தமது வாழ்நாளில் நரக வேதனையையே அனுபவிக்க வேண்டியிருக்கிறது என்று ஏற்கனவே போய்ச் சேர்ந்தவர்கள் புலம்புகிறார்கள்.

இப்போதும் வெளிநாடு போகத் துடிப்பவர்களுக்கும் இது தெரியாமலில்லை. ஆனாலும் அவர்கள் மீண்டும் மீண்டும் முயற்சிக்கிறார்கள். அது ஏன்? நிலையான அர்த்தமுள்ள தீர்வு ஒன்றே இந்த நிலையில் மாற்றத்தை ஏறபடுத்தக்கூடும்.

# மீண்டடையும் முன்மொழிவுகள்

■ செந்தூரி

"மாதங்களிலே நான் மார்கழியாகவிருக்கிறேன்", - போர்க்களமொன்றில் பிரசவித்த மேற்படி வசனத்தின் உற்பத்திக் கர்த்தா, தேரோட்டியாக விருந்து குருஷேத்திரத்தைக் குருதியில் குளிக்க வைத்த ஸ்ரீ கிருஸ்ணன்.

ஆரிய வருடக் கணிப்பின் படி ஒன்பதாவது மாதமான மார்கழி பல சிறப்புகளைக் கொண்ட, தனித்துவத்துக்குரியது. அதே மார்கழி மாதம் ஒன்றில் உக்கிரம் கொண்ட கிருஸ்ணாகளின் தேசத்தின் பரிபூரண நல்லாசியுடன் வழிநடத்தப்பட்ட, வரலாற்றுச் சிறப்புமிக்க இனவழிப்பின் இறுதிநாள்களின் மூன்றாம் வருட நினைவுதனை அண்மித்துக் கொண்டிருக்கின்றோம்.

பௌத்த தர்மத்தின், தூய்மையான, ஞானஒளி பரிணமித்த முழுநிலவு நாள்களுக்குரிய வைகாசி மாதத்தில், பிரபஞ்ச வெளியில் பதிலேதுமில்லாமல் கரைந்து போன ஓர் இனத்தின் மரணஓலம் வேகமாக மறந்து விடப்பட்டது. உணவுத் தேவைக்காகக் கூட, பூரணை நாள்களில் உயிர்களைக் கொல்லமுடியாது என்கின்ற சட்டங்களோடு போதி மாதவனின் சமத்துவத்தைப் போதிக்கின்ற தேசமொன்றில், அந்த "வைகாசி மாதத்தில் மட்டும்" பூரணைச் சந்திரன் வராமல் போனது ஏன்?

"நிறையப் பேருடைய தெய்வ நம்பிக்கைகள், முற்றாக நின்று போன நாள்களின், இன்னுமொரு நினைவு நாள், - போயொழிந்த வருடத்தின் சம நாள்களில் நண்பனொருவனின் முகவேட்டுப் பதிவிலிருந்து பிரதியெடுத்த வாசகம் அது! இன்னும் நெஞ்சை நெருடுகின்ற கடும் விஷமாய் பழிவாங்கப்பட்டதன் கோபாவேசத்தை வெளிப்படையாகக் காட்ட முடியாமல், மேற்படி "அங்கத வார்த்தை"களால் குமுறுகின்ற பல தேசியவுணர்வாளர்களைச் சமூக வலைத்தளங்களில் தரிசிக்க முடிகின்றது.

"நேர்மையானவர்கள்", "தேசப்பற்றாளர்கள்", "நம்பிக்கையானவர்கள்" போன்ற சொற்களுக்குத் தகுதியானவர்களாக, இறுதிவரை நீடிக்க முடியாமலிருக்கும் குணமே முழு இனத்திற்கும் அந்திமம் கொண்டு சேர்க்கும் இழிவைத் தமிழினத்திற்குத் தந்தது. தருகின்றது மற்றும் தரும் என்கின்ற 'செம்மெய்யை', பொய்யாக்க எம்மால் எப்போதும் முடியாது. புலம் பெயர் தேசங்களுக்கு நகர்ந்து விட்ட தேசவிடுதலைப் போரின் மிகச் சிறிய பகுதிக்குரிய வீரியத்தினைத் தன்னகத்தே கொண்ட 2009 இற்கு பின்னான நகர்வுகளிலும், தனக்கான தகுந்த மீட்பரை தேடிக் கொண்டிருக்கின்ற "மந்தைகளின் தேடல்" நின்றபாடில்லை. சாதாரண இறப்பர் செருப்பினை வாங்குகையிலும் கூட, "அதை விட இது! இதை விட எது!!" எனும் ஒப்பீடுகளுக்குள் தன்னை செருகிக் கொள்கின்ற தமிழினம், தன் தேசியத்துக்கான தலைவனின் தெரிவில் இலகுவில் சமரசம் செய்து கொள்ளப் போவதில்லை. தமிழீழ விடுதலைப் புலிகளின், மனித, ஆயுத சக்திகளின் முற்றான ஒடுக்கலின் பின், தமிழினத்திற்கான எல்லைகளுக்கான வெற்றிடம் ஒன்று ஏற்பட்டுள்ளதைச் சாதாரணமாக ஏற்றுக் கொண்டது சர்வதேசத் தமிழ்க் குலம்.

ஆனால், "இவருக்கு பின்னால் அணி திரளத் தயார்" என்கின்ற பின்பற்றுதல் கொள்கையொன்றின் பிறிதொரு பிரதியீட்டுக்காக முப்பது வருடத்துக் கடும் தவத்தை அவ்வளவு விரைவில் கலைத்து விட உலகத் தமிழினம் தயாரில்லை என்பதோடு, இந்த வெறும் மூன்று வருட அவகாசம் போதியதில்லை என்கின்ற மௌனமும் ஒரு வகையில் சரியானதே!

[illegible] அந்த மனித மகானின் தலைமைத்துவம் என்பது சூரிய ஒளியை தேவைப்படுகின்ற புள்ளியில் குவிக்கின்ற வில்லைக்கு நிகரானது. பின்புலமாக இருந்து இயக்கிய மாபெரும் மனிதப் பேரெழுச்சியின் வெளிப்படு புள்ளியாக நின்ற தலைவன், கொண்ட பெருமைகள் யாவையும் நிச்சயமாக தனிமனித புகழ் இல்லை, கூட்டிணைந்து இயங்கிய பல்வேறு மட்ட தளபதிகள், குற்றம் கண்டால் தயங்காது சாடிய ஆலோசகர்கள், தக்க மதியுரை அறிஞர்கள், ஆயுத வலிமையில் அதியுச்சம் கண்ட வல்லுநர்கள், ஒவ்வொரு சொல்லுக்கும் செயல் வடிவம் கொடுத்த போராளிகள் இவர்கள் அனைத்திலும் மேலாய், பக்தி கலந்தொரு பிடிவாத நம்பிக்கை பற்றுதலோடு வெறிகொண்டு பின்சென்ற மக்கள், சொல்ல முடிந்து விடாத இன்னும் பல்வேறு தரப்பினரின் கூட்டிணைவே, அவர்களை 'இயக்கம்' என்கின்ற ஒற்றைச் சொல்லினால் அடையாளப்படுத்த உதவியது.

எளிமையாக சொல்வதானால், இலங்கைச் சுதந்திரக் கட்சியின் தீர்மானிக்கும் ஏக சக்தியாக "ம.ரா" இருப்பது போலவோ, அ.தி.மு.க.வின் ஒற்றைச் சாட்டையாக "ஜெ.ஜெ" இருப்பது போலவோ "தான்" அல்லது "நான்" என்கிற மமதையில் இயங்கியவர் இல்லை அவர் என்கிற உடைக்க முடியாத பெரிய பிடிவாதம் ஒவ்வொரு தமிழனுக்குள்ளும் நிச்சயம் தேவை.

இனப்பாதுகாப்புக்காக, தனித்தேயிருந்த மனிதனொருவனின் மேல் குவியல்களாக வீசப்படுகின்ற எதிர்காலக் கற்களின், வேகம், பத்துத் தரம் திரும்பத் திரும்பச் சொல்வதால் உண்மையாகி விடுகின்ற பொய்யைப் போன்றது. மீண்டடையும் நம்பிக்கையொன்றை இதயமிருத்தி வைத்திருப்பதைவிட, அந்தத் தனி மனிதனின் போராட்டக் குணத்தின் மேல் துளியும் மாசில்லாத விசுவாசத்தை எப்போதும் விட்டுக் கொடுக்காமலிருப்பதே மேலானதாகும்.

கால்நூற்றாண்டுகளுக்கும் கூடுதலான வருடங்களாக, தமிழனின் வீரத்தை உலகே இமைக்காது பார்க்கும் கம்பீரத்தை எமக்களித்து, விதையாகிப் போன ஒவ்வொரு "எங்க வீட்டு பிள்ளை"களுக்கும் எம்மால் ஆற்ற வேண்டியுள்ள பெருங்கடன் அது!

"வருவான் ஒரு நாள்" என்கின்ற வார்த்தைகளை, நுனிநாக்குகளில் சுமப்பவர்கள் பற்றியும் போதுமான புரிதல்களை ஆய்ந்து தெளிய வேண்டிய தேவை எம்முன் உள்ளது. "நந்திக்கடலோடு முடியவில்லை எதுவுமே" என்கின்ற உணர்ச்சிக் கோஷங்களை, 'உசுப்பேத்தல்' வகைக்குரிய இழுவல்களாக மிடறுகளில் அதக்கி பொங்குபவர்களில் பெரும்பான்மையானோரின் மறைவெண்ணம் "பிரபாகரன் என்கின்ற தனிமனிதனுக்கு என்ன நடந்தது?" என்கின்ற திண்ண விண்ணாணத்துக்குரிய விடுப்பு பிடுங்கிச் சுவைக்கும் ஆவலே தவிர வேறில்லை!

நேரிய சிந்தனைகளுக்குரிய தேசிய விரும்பிகளில் எவருமே தமிழர்களின் விடுதலைப் போராட்டச் சுமையை, இதற்குப் பிறகும் தன் அறுபதாம் அகவையை எட்டிக் கொண்டிருக்கின்றவரின் தோள்களில் ஏற்றிவிட்டு வேடிக்கை பார்க்க விரும்புபவர்களாக இருக்கமுடியாது. மறுபக்கத்தில், கடல் கடந்ததொரு தேசத்தில், காப்பாற்றப்பட்டு வாழ்ந்து கொண்டிருப்பதான மனக்கொள்கையை ஊட்ட விரும்புபவர்கள், நாளைக்கே தம் நாக்கை நடுவில் பிளந்து, "சொந்த மக்களை விட்டு, உயிர்தேடி ஓடிய கோழை", "தேச விடுதலைப்போரை பாதியில் விட்டோடிய பாவி", "உயிருக்கு பயந்த பேடி" எனும் வசவுகளால், தீட்டிய மரத்திலேயே கூர் பார்த்து விடமாட்டார்கள் என்பதற்கு என்ன உறுதி? முன்பே சொன்ன, பின்புலத்தில் நின்ற தரப்பினர்களின், அங்கத்தவர்களில் [illegible] முன்னே இன்று "வெள்ளையும், சொள்ளையுமாக" விளாசித் திரிபவர்கள் யாவருமே, தன்னுயிர் பிடிப்பிற்காகவும், குடும்ப நலன்களுக்காகவும், மீதமிருக்கின்ற ஆடம்பரங்களுக்காகவும், சொல்ல முடியாததையெல்லாம் செய்து காட்டிய சீருக்குரியவர்கள் இல்லையா? பத்து வயதுக்குட்பட்ட தன் மூன்று குழந்தைகளின் பெயர்களையும் வரிசைப்படுத்திக்கூறி, அந்தப் போராளியின், சாவுக்கு முந்தைய நிமிடங்கள், வேறொருவருக்கும் நிகழ்ந்து விடக்கூடாத கொடுமை என்று, அநாதைகளாகி விட்ட அந்தக் குடும்பத்தை எண்ணி பதைபதைத்த போதிலும், "நஞ்சணிந்த கழுத்தும், சிரித்தபடி உயிர்விடும் தீரமும் மறந்தது ஏன் மகனே?" என்று ஒப்புநோக்குகையில் பின்னையதுதான் உயர்ந்ததும் செம்மைக்குரியதும் இல்லையா?

பிணங்களையும் புணர்ந்து வேகமும் தணித்த, நாகரிக இழிவின் சீருடைச் சின்னங்களான அசிங்கப்பதர்களின் கைகளில், குரூரச் சாவை சந்திக்கப் போவதான தீர்க்கதரிசனத்தை முன்கூட்டியே கண்டு, உயிராயுதங்களாக தம்மையே மாற்றிக் கொண்ட இறுதி வலய வீரர்கள் ஏதோ ஒரு விடயத்தில் எம் மனதில் உயர்ந்தே நின்றார்கள் என்பதும் மெய். 365 நாள்களின் மூன்று மடங்கான இரவு பகல்கள் எம்மைக் கடந்து போன பிற்பாடும், கொடூர மரணங்களின் சர்ச்சைகளிலிருந்து எம்மினத்தை மீள விடாமல் அமிழ்த்தி வைத்திருப்பதுகூட ஒருவகையிலான, பயங்காட்டும் பேரினயுக்தியாக ஏன் இருக்கக்கூடாது?

பிரபாகரன் என்கின்ற பெருமனிதன், "சிறந்த ஆயுத தொழில்நுட்ப வல்லுநன்", "சுவையான சமையற்கலை நிபுணன்", "தரமான இசைக்குப் பிரியன்", "இந்திய கிரிக்கெட் அணியின் ரசிகன்", "கொள்கைப் பிடிப்புக்காரன்" என்கின்ற பல அவதாரங்களுக்கு மேலாக, எமக்காக எதிரியிடம் விரல் நீட்டிய துணிச்சல்காரன் என்கின்ற ஒற்றைத் தகுதி போதாதா, "உன் கைகள் எமக்காக சுமந்த வலிகள் போதுமப்பா, ஓய்வுகொள் இனிமேல்" என்று விடைகொடுக்க? "மீண்டும் நீயே!" என்கின்ற வலிந்த பிடிவாதங்களுக்குள், எக்கச்சக்கமாக ஒளிந்திருக்கின்ற சுயநலங்களை எப்போது வடிகட்டி தூய்மையாகப் போகின்றது எம்மினம்? தன் குடும்பம், தன் பொது வாழ்க்கை, தன் உடல் உழைப்பு, தன் சுதந்திரம், தன் சிந்தனைகள் யாவற்றையுமே கணம் கணமாய், இன விடுதலைப் போராட்டத்தின் ஒவ்வொரு அசைவுக்கும் அர்ப்பணித்து விட்டு, தன் விம்பத்தை மறைத்துக் கொண்டவனை, "வா! வா!!" வென்று கரைவது, இயலாமையின் அரற்றல் என்றாகாதா?

புதிய போராட்ட வழி, புதியதொரு புரட்சியின் நெறி, புதியதொரு அரசியல் அணுகுமுறை, புதுமை விரும்பும் இன்னொரு தேசியப்படை, புதியவர்களுக்கு எம் பாடங்களை ஊட்டுதல் போன்ற எத்தனையோ அத்தியாவசிய கடமைகளுக்கு மத்தியில், இன்னமும் "தன்னை" மட்டும் எதிர்பார்த்திருப்பதை துளியும் விரும்புபவனல்லன் எம் தலைவன்!

போட்டிப் பரீட்சையொன்றுக்கான, பொது அறிவு நூல் ஒன்றைப் புரட்ட நேர்ந்தது. ஆக்கியவர் (அப்படித்தான் அச்சிலிருந்தது - பொது அறிவு தகவல்களை தொகுக்க முடியுமேயன்றி, ஆக்க முடியாது) ஆங்கில முதலெழுத்துக்களுக்குரிய சுத்தத் தமிழ்ச்சீமான். "உலக விடயங்கள்" என்கின்ற பரப்பில் பூரித்துச் சிரித்தது பின்வரும் தகவல். "உலகிலேயே முதன்முதலில் பயங்கரவாதத்தை ஒழித்த நாடு: இலங்கை". சிங்களவன் மட்டுமல்ல; சீக்கியன், சோபியன், சீனன் என்று எவன் கடல் கடந்து வந்து பந்து அடித்தாலும், "வலிக்கவேயில்லை தெரியுமா?" என்றபடி கடைவாய் ரத்தத்தை துடைக்கும் தனித்தகுதி ஒன்று போதாதா தமிழனுக்கு!! ✱

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவனிக்கப்படாத அகதிகள்

யாழ்ப்பாணக் குடாநாட்டைச் சேர்ந்த 36 வயதான கிருஸ்ணவேணி நக்கீரன் என்கின்ற நான்கு பிள்ளைகளின் தாயார் இந்த நாட்டில் தொடரப்பட்ட உள்நாட்டுப் போரின் காரணமாக இதுவரை இரு தடவைகள் நாட்டை விட்டு வெளியேறி பின் மீண்டும் திரும்பி வந்துள்ளார். இவர் தனது பதினாறாவது வயதில் அதாவது 1990இல் முதன் முதலாகத் தனது நாட்டை விட்டு வெளியேறி இந்தியாவுக்கு தப்பிச் சென்றிருந்தார்.

ஐந்து ஆண்டுகளின் பின்னர் மீண்டும் தமது நாட்டுக்குத் திரும்புவது பாதுகாப்பானது என்ற தவறான நம்பிக்கையைக் கொண்டிருந்த இவரது குடும்பத்தவர்கள் இரண்டாவது தடவையாக 1998இல் இந்தியாவுக்குச் சென்றிருந்தனர். இந்த நிலையில் இவரது குடும்பத்தவர்கள் 2010இல் அதாவது விடுதலைப் புலிகள் போரின் போது இலங்கைக்கு வந்தனர்.

இலங்கைத் தீவில் தொடரப்பட்ட போர் முடிவுற்றிருக்கலாம். ஆனால், பல ஆண்டுகள் வரை இந்தியாவில் அகதிகளாக இருந்து விட்டு மீண்டும் தமது நாட்டுக்குத் திரும்பியுள்ள நக்கீரன் போன்றவர்கள் தமது வாழ்வில் பல கடினங்களை எதிர்நோக்குகின்றனர். "வாழ்க்கை மிகக் கடினமாக, மிக மிகக் கடினமாக உள்ளது. நாங்கள் இந்தியாவில் செய்த தொழிலைப் போல் இரு மடங்கு தொழில் செய்து சம்பாதிக்க வேண்டிய நிலையிலுள்ளோம்'' என கிருஸ்ணவேணி நக்கீரன் கூறுகின்றார்.

சிறுபான்மைத் தமிழ் சமூகத்தைச் சேர்ந்த பல பத்தாயிரக்கணக்கான இலங்கையர்கள், இலங்கையில் மூன்று தசாப்தங்களாகத் தொடரப்பட்ட போரின் போது தமது சொந்த நாட்டை விட்டு வெளியேறி இந்தியாவுக்குத் தப்பிச் சென்றிருந்தனர். அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் சபையின் உயர் தூதரகத்தின் மதிப்பீட்டு அறிக்கையின் படி, இந்தியாவில் 100,000 வரையான இலங்கை அகதிகள் வாழ்கின்றனர். இவர்களில் 68,000 இலங்கையர்கள் தென்னிந்தியாவின் தமிழ்நாட்டில் அமைக்கப்பட்டுள்ள 112 முகாங்களில் வாழ்கின்றனர்.

மே 2009இல் போர் முடிவுற்றதன் பின்னர், இந்தியாவின் அகதி முகாங்களில் வாழ்ந்த மக்களில் சிலர் மீண்டும் தமது நாட்டுக்குத் திரும்பியுள்ளனர். கடந்த ஆண்டில் இந்தியாவில் வாழ்ந்த 1,700 வரையான இலங்கைத் தமிழர்கள் மீண்டும் தமது நாட்டுக்குத் திரும்பி வருவதில் அகதிகளுக்கான ஐ.நா. தூதரகம் அனுசரணை வழங்கியுள்ளது.

ஆனால் இந்த ஆண்டின் முதல் காலாண்டில் இலங்கைக்கு மீளத் திரும்பிய தமிழர்களின் எண்ணிக்கை 30 சதவீதமாகக் குறைவடைந்துள்ளதாக ஐ.நா. அகதிகள் அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது. அதாவது கடந்த ஆண்டின் முதல் காலாண்டில் 597 பேர் இலங்கைக்கு திரும்பி வந்ததாகவும், ஆனால் இந்த ஆண்டின் முதல் காலாண்டில் 408 பேர் மட்டுமே இந்தியாவிலிருந்து மீளவும் தமது சொந்த நாடான இலங்கைக்கு திரும்பி வந்துள்ளதாகவும் மதிப்பீட்டு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவிலிருந்து ஏற்கனவே இலங்கை சென்றவர்கள் அனுபவிக்கும் கடின வாழ்வே இவ்வாறு எண்ணிக்கை குறைவதற்கான காரணம் என மனித உரிமைகள் அமைப்புக்கள் சுட்டிக்காட்டியுள்ளன. இலங்கையின் வடக்கில், போர் இடம்பெற்று, உடைமைகள் அழிக்கப்பட்ட வன்னிப் பிரதேசத்துக்கு மீள்குடியேறிச் செல்பவர்களின் நிலை மிக மோசமாக உள்ளதாகவும் கூறப்படுகின்றது.

வன்னிப் பிரதேசத்துக்குத் திரும்பி வருவோர் மீண்டும் தமது வாழ்வை ஆரம்பத்திலிருந்து கட்டியெழுப்ப வேண்டியுள்ளது. இவர்கள் இந்தியாவில் இருந்த போது இலங்கையில் பல மாற்றங்கள் ஏற்பட்டுவிட்டன. உண்மையில் அவர்கள் புதிய நாடொன்றில் புதிய வாழ்க்கையைத் தேடி வந்துள்ளனர். இதனால் அவர்கள் எல்லாவற்றையும் தாமே உருவாக்கிக் கொள்ள வேண்டியுள்ளது என 1983 இலிருந்து இலங்கையிலும், இந்தியாவிலும் செயற்பட்டு வரும் ஈழ அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தின் இலங்கைக்கான இயக்குநர் சின்னத்தம்பி சூரியகுமாரி தெரிவித்துள்ளார்.

உள்நாட்டில் இடம்பெயர்ந்து மீளவும் வன்னிப் பிரதேசத்தில், அதாவது போர் இடம்பெற்ற பகுதிகளில் மீளக் குடியேற்றப்படும் மக்களுக்கு உதவி புரிவதை நோக்காகக் கொண்டு பல நிகழ்ச்சித் திட்டங்கள் மேற்கொள்ளப்படுகின்ற போதிலும், இந்தியாவிலிருந்து இலங்கைக்கு திரும்பி வந்தவர்களுக்கு உதவி புரிவதற்கான குறிப்பிடக் கூடிய எந்தவொரு நிகழ்ச்சித் திட்டமும் காணப்படவில்லை என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில் மீண்டும் தமது சொந்த இடங்களுக்குத் திரும்புவதால் குறிப்பாக ஏற்கனவே இலங்கையில் நெருங்கிய உறவுகள் இல்லாதோர் தாம் தனிமைப் படுத்தப்பட்டுவிடுவோம் எனக் கருதுகிறார்கள். எனவே இவர்கள் இலங்கைக்குத் திரும்புவதில் தயக்கம் காட்டுகின்றனர் என சூரியகுமாரி மேலும் தெரிவிக்கிறார்.

இலங்கைக்குத் திரும்பும் தமிழர்கள் தமக்கான அடையாள அட்டைகள், காணி உறுதிகள், பிறப்பு அத்தாட்சிப் பத்திரங்கள் போன்ற முக்கிய ஆவணங்களை இலங்கையில் போர் தொடரப்பட்ட காலத்தில் அதிலிருந்து தப்பி இந்தியாவுக்குச் சென்ற வேளையில் தொலைத்து விட்டார்கள் எனவும், இவ்வாறான ஆவணங்கள் இலங்கையில் இன்றியமையாத ஒன்றாக காணப்படுவதாகவும் இலங்கைக்கான அகதிகளுக்கான ஐ.நா. தூதரக வதிவிடப் பிரதிநிதி மைக்கல் ஸ்வாக் தெரிவித்துள்ளார்.

இதனை விட தங்குமிடம் என்பது இவர்களுக்கு பெரிய பிரச்சினையாகக் காணப்படுகின்றது. இவர்கள் தமக்கான சொந்த வீடுகளைக் கட்டிக் கொள்வதற்கு, அல்லது பழுதுபட்ட தமது வீடுகளைத் திருத்திக் கொள்வதற்கு உதவிகளை எதிர்பார்த்து நிற்கின்றனர் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். உள்நாட்டில் இடம்பெயர்ந்து அல்லது இந்தியாவிலிருந்து மீளவும் வன்னிப் பிரதேசத்துக்கு திரும்பியுள்ள மக்கள் தற்போது காணிப் பிரச்சினையை எதிர்கொள்கின்றனர்.

வன்னியிலுள்ள பெரும்பாலான காணி உரிமையாளர்கள் காணி மீதான தமது உரிமையை உறுதிப்படுத்துவதற்கான உறுதிச் சான்றைப் பெற்றுக் கொள்வதில் கடினங்களை எதிர்கொள்கின்றனர். காணிப் பிரச்சினை என்பது இங்கு பெரிய பிரச்சினையாகக் காணப்படுகின்றது என யாழ்ப்பாணத்தைத் தளமாகக் கொண்டியங்கும் பெண்கள் மற்றும் அபிவிருத்திக்கான மையத்தின் தலைவி சறோஜா சிவசந்திரன் தெரிவித்துள்ளார்.

தனியாள்களாக இந்தியாவுக்குச் சென்றவர்கள் தற்போது குடும்பத்தவர்களாக மீளவும் திரும்பி வந்து கொண்டிருப்பதால் காணி மற்றும் வீட்டுத் திட்டப் பிரச்சினைகள் தற்போதும் தொடர்வதாக சூரியகுமாரி குறிப்பிட்டுள்ளார்.

1980 களில் ஐந்து பிள்ளைகளுடன் இந்தியாவுக்கு தப்பிச் சென்று தற்போது இலங்கைக்குத் திரும்பி வருபவர்கள் ஐந்து தனித் தனிக் குடும்பங்களைக் கொண்டுள்ளனர். இவ்வாறு சென்ற ஐந்து பிள்ளைகளும் தற்போது ஐந்து குடும்பங்களைக் கொண்டுள்ள நிலையில், இவர்கள் தொடர்ந்தும் தமக்குச் சொந்தமான மிகச் சிறிய காணித் துண்டிலேயே வாழவேண்டிய நிலை காணப்படுகின்றது என சூரியகுமாரி மேலும் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்குத் திரும்பியுள்ள நக்கீரன் போன்றவர்கள் இவ்வாறான பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்கின்றனர். அத்துடன் இவர்கள் விட்டுச் சென்ற நிலங்கள் தற்போது வேறு ஆள்களால் உரிமை கோரப்பட்டுள்ளதால், இவர்கள் தமது சொந்த நிலத்திலேயே காணியற்றவர்களாக வாழ வேண்டியநிலைக்கு உட்பட்டுள்ளனர்.

தற்போது இங்கே எமது சொந்த நிலத்தை எம்மால் பெற்றுக் கொள்ள முடியவில்லை. நாங்கள் எமது சொந்த நிலத்தில் வேறு ஆள்களுடன் சேர்ந்து வாழ வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம் என நக்கீரன் கூறுகின்றார்.

நன்றி:புதினப்பலகை

பா.துவாரகன்

# மருத்துவப் பற்றாக்குறை

வன்னியில் மீளக்குடியேறிய மக்கள் எதிர்கொள்ளும் முக்கிய பிரச்சினையாக மருத்துவப் பிரச்சினை காணப்படுகின்றது. இங்கு மருத்துவத் தேவையென்பது மிகவும் அதிகமாக உள்ளபோதும் அதன் சேவையென்பது மிகமிகக் குறைவாகவே காணப்படுகின்றது.

கிளிநொச்சி மாவட்டத்தின் மீளக்குடியேறியுள்ள ஒரு லட்சத்து பதினையாயிரத்துக்கு மேற்பட்ட மக்களுக்கும், முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒருதொகுதி மக்களுக்குமாக கிளிநொச்சி பொது மருத்துவமனையே, சேவையை வழங்க வேண்டிய மருத்துவமனையாக இன்று காணப்படுகின்றது. ஏனைய கிராமிய மருத்துவ மனைகள், மாவட்ட வைத்திய சாலைகள் போதிய வைத்தியர்கள் இன்றிச் சேவைகளை வழங்கமுடியாமல் உள்ளன.

கிளிநொச்சி மாவட்டத்தின் மருத்துவத் தேவையை நிறைவு செய்யும் மாவட்டப் பொது வைத்தியசாலையை அடுத்து, தருமபுரம் மருத்துவமனை, முழங்காவில் மருத்துவமனை, அக்கராயன் மருத்துவமனை போன்ற மருத்துவமனைகளும் அதற்கு அடுத்தாற்போல் கிராமப்புறத் தேவைகளுக்கு ஏற்ப வட்டக்கச்சி மருத்துவமனை, கண்டாவளை மருத்துவமனை, கல்லாறு மருத்துவமனை, உருத்திரபுரம் மருத்துவமனை, பளை மருத்துவமனை, பூநகரி மருத்துவமனை, வேரவில் மருத்துவமனை போன்ற மருத்துவமனைகளும் உள்ளன. ஆனால் இன்னும் கூடுதலான மருத்துவமனைகளில் மருத்துவர்கள் இன்மையால் அவை இயங்க முடியாமல் காணப்படுகின்றன.

கிளிநொச்சி பொது மருத்துவமனை ஓரளவு போதிய வசதிகளைக் கொண்டுள்ளபோதும், மக்கள், அங்கு திருப்திகரமான சேவைகளைப் பெற்றுக் கொள்ளமுடியவில்லை என்றே கூறுகின்றனர். அதாவது கிளிநொச்சி பொது மருத்துவமனையில் இருந்து 35 கிலோமீற்றர் தூரத்துக்கு அப்பால் உள்ள வன்னேரிக்குளம், முழங்காவில், தருமபுரம் பகுதிகளில் உள்ள ஒருவர் காலையில் புறப்பட்டு சீரான போக்குவரத்துக்கள் இன்மையால் மருத்துவமனையை வந்துசேர பகல் 11 மணியாகும். ஆனால் அங்கு சிகிச்சை பெற முடியாது. காரணம், அந்த நேரம் அதிகமான நோயாளர்கள் தமது தேவைகளுக்காக நீண்ட வரிசையில் காத்திருப்பார்கள். பிற்பகல் இரண்டு மணிக்குப் பின்னர் வெளிநோயாளர் பிரிவு செயற்படாது.

இது ஒரு புறம் இருக்க, மாதாந்தம் கிளினிக் சிகிச்சைகள் (சலரோகம், தோல்வியாதி, உயர் குருதி அழுத்தம் உள்ளிட்ட) பெற வரும் நோயாளர்களில் அதிகளவானவர்கள் மாதாந்தம் அல்லது வாராந்த சிகிச்சை பெறமுடியாமல் திரும்பிச் செல்கின்றனர். காரணம் அளவுக்கு அதிக நோயளர்களின் எண்ணிக்கையும், மருத்துவர்களின் பற்றாக்குறையும் ஆகும்.

இது ஒரு புறமிருக்க, மாவட்டத்தின் அடுத்த நிலையில் இருக்க வேண்டிய தருமபுரம் மருத்துவமனை, கிளிநொச்சி மாவட்டத்தில் இருபத்தி இரண்டாயிரம் பேருக்கும், முல்லைத்தீவு மாவட்டத்தின் விசுவமடுமற்றும் உடையார்கட்டு பகுதிகளைச் சேர்ந்த பத்தாயிரம் வரையான மக்களுக்கும் சேவை வழங்க வேண்டிய தேவையுள்ளது.

ஆனால் தருமபுரம் மருத்துவமனையில் தற்போது ஒரே ஒரு மருத்துவர் மட்டுமே சேவையாற்றி வருகின்றார். அதனால் போதிய சேவைகளைப் பெற்றுக் கொள்ள முடியாத நிலை. தினமும் சுமார் நூறுக்கும் மேற்பட்ட நோயாளிகள் மணிக்கணக்கில் காவல் கிடந்தும் சேவை பெற முடியாத நிலையில் வீடு திரும்புகின்றனர். சில நாள்களில் வேறு இடங்களுக்குச் சென்று சிகிச்சைப் பெற வேண்டிய நிலையும் காணப்படுகின்றது. இந்தப் பகுதிகளில் தரமான தனியார் மருத்துவமனைகள் கூட இல்லை. அவ்வாறு கூட சிகிச்சை பெறுவதாயின், கிளிநொச்சிக்கோ அல்லது வேறு இடங்களுக்கோ தான் செல்ல வேண்டும்.

[illegible] முல்லைத்தீவு [illegible] அமைந்துள்ள தருமபுரம் மருத்துவமனை ஒரு கிராமிய மருந்தகம் என்ற நிலையில் கூட வைத்தியர் வசதியின்றி காணப்படுகின்றது. இதை விட வட்டக்கச்சி மருத்துவமனை, கண்டாவளை மருத்துவமனை என்பன இதுவரை இயங்கவில்லை. ஏனைய முழங்காவில் மருத்துவமனை, பூநகரி மருத்துவமனை, வேரவில் மருத்துவமனை, அக்கராயன் மருத்துவமனை என்பன போதிய மருத்துவர்கள் இன்றியும், போதிய ஆளணி வளங்கள் இன்றியும் இயங்கிவருகின்றன. இவ்வாறு மருத்துவமனைகள் வசதிக் குறைபாடுகளை எதிர்கொண்டாலும், இந்தப் பகுதிகளைச் சேர்ந்த மக்கள் யாழ்ப்பாணம், வவுனியா, கிளிநொச்சி பொது மருத்துவமனை சென்று சிகிச்சை பெறுவது என்றாலும், சீரானபோக்குவரத்து வசதிகளும் இல்லை. இவ்வாறு போதிய மருத்துவ சேவைகளைப் பெறுவதற்காக அலைந்து திரியும், மக்கள் அதன் மூலம் கூட அதிக நோய்வாய்ப்பட வேண்டிய நிலை ஏற்படுகின்றது.

இதை விட சுகாதார விழிப்புணர்வுச் செயற்பாடுகளிலும் பின்னடைவுகள் காணப்படுகின்றன. அதாவது மலேரியா டெங்கு போன்ற விழிப்புணர்வுச் செயற்பாடுகள் பின்தங்கிய கிராமப்புறங்களில் மேற்கொள்ளப்படுவதில்லை. குறிப்பாகக் கடந்த 2010ஆம் ஆண்டு முதல் 2012 ஆம் ஆண்டின் இன்று வரையான காலப்பகுதியில் போதிய விழிப்புணர்வுகள் இன்மை காரணமாக விசர்நாய்க்கடிக்கு இலக்காகி ஆறுபேர் வரையில் உயிரிழந்துள்ளனர். இதற்கு அந்தக்காலப்பகுதிகளில் முன்னெடுக்கப்படவேண்டிய போதிய விழிப்புணர்வுகள் இன்மையே காரணமாகும்.

இன்று கிளிநொச்சி நகரை அண்டிய பகுதிகளில் திருப்திகரமான மருத்துவ சேவைகள் உள்ளபோதும், கிராம மட்டங்களில் மேலும் விஸ்தரிக்கப்படவேண்டியதுமான, அபிவிருத்தி செய்ய வேண்டியதுமான ஏராளமான சுகாதார சீர்கேடுகளும், பிரச்சினைகளும் காணப்படுகின்றன. குறிப்பாக மருத்துவர்கள் பற்றாக்குறையே அதிகமாக உணரப்படுகின்றது.

கிளிநொச்சி மாவட்டத்தில் இருந்து கடந்த 1983 ஆம் ஆண்டுக்குப் பின்னரான காலப்பகுதியில் கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த சுமார் நூற்றி இருபத்தி ஐந்துக்கும் மேற்பட்ட வைத்தியர்கள் இன்று வரை தமது மேற்பட்டப்படிப்புக்களை நிறைவுசெய்து வேறு இடங்களில் சேவையாற்றி வருகின்றனர். ஆனால் அவர்கள்தமது சொந்த மாவட்டத்துக்குச் சேவையாற்ற முன்வரவில்லை. இருந்தும் ஓரிரு வைத்தியர்கள் தன்நலன் கருதாமல் மக்களுக்கான தேவைகளை நிறைவு செய்து வருகின்றனர். இவர்கள் போற்றுதற்குரியவர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்ல கெட்டவர்கள்

இந்த உலகத்தில் நல்லவர்கள் என்றோ, கெட்டவர்கள் என்றோ எந்தப் பிரிவும் கிடையாது. எல்லோருமே நல்ல கெட்டவர்கள்.. அல்லது கெட்ட நல்லவர்கள்.

கர்ணனைப் பற்றி பாரதக் கதையில் ஓர் அருமையான செய்தி. அவன் துரியோதனன் பக்கம் இருந்தாலும் கண்ணனைக் கடவுள் என்று உணர்ந்திருந்தான். தருமம் எது என்கிற தெளிவும் அவனுக்கு இருந்தது. தர்மமே வடிவானவன் எனப்பட்ட தருமனுக்குத் தம்பியால் வெல்லப்பட்ட பாஞ்சாலியின் மீது ஒரு கண் இருந்தது. சூதாடும் ஆசையும் இருந்தது. எனவே எல்லோரும் நன்மைக்கும் தீமைக்கும் இடையில் போராடிக் கொண்டிருக்கிறவர்கள்தான் எல்லோரும். கர்ணர்களே! எல்லோரும் தர்மர்களே!

தருமனை நல்லவன் என்பதும் துரியோதனன் கெட்டவன் என்பதும் மேம்போக்கான அபிப்பிராயமே. தருமனும் கூட சில விடயங்களில் கெட்டவன். துரியோதனனும் சில வியடங்களில் நல்லவன். "குணம் நாடி குற்றமும் நாடி அவற்றுள் மிகைநாடி மிக்க கொளல்" என்கிற குறள்படி எது கூடதோ அதை வைத்து நல்லவன் கெட்டவன் என்ற வியாபாரங்கள் உலகில் நடக்கின்றன.

நீங்கள் யாரை மிக நல்லவர் என்று கொண்டாடி மகிழ்கிறீர்களோ அவருடைய இன்னொரு பக்கம் உங்களுக்குத் தெரியாமல் இருக்கலாம். தெரிந்தால் அவர் மீது உங்களுக்கு இருந்த மரியாதையே போய்விடக் கூடும். அதை அறிந்தால் ஆச்சரியம் அடைவீர்கள். எனவே கூடுமானவரை யாரையும் நல்லவர் என்று எண்ண வேண்டாம்.

ஒருமுறை புத்தர் மீது, பகை உடைய ஒருவன் அவர் மீது காறித் துப்பினான். அந்தச் செயலால் புத்தர் பாதிக்கப்படவில்லை. மாறாக அவனை உற்றுப் பார்த்து, "நீ இன்னும் ஏதாவது செய்ய விரும்புகிறாயா?" என்று இயல்பாகக் கேட்டார். அவரது கருணை பொங்கும் விழிகளையும், அன்பு ததும்பும் மொழிகளையும் கேட்ட அவன் நிலை குலைந்தான். அவனது வெறி தணிந்தது. புத்தர் அங்கிருந்து போய்விட்டார். ஆனால் காறித்துப்பியவனால் உறங்கக் கூட முடியவில்லை. புத்தரின் விழிகளும் மொழிகளும் அவனை ஏதோ செய்தன.

காலை எழுந்ததும் புத்தரைத் தேடி ஓடி வந்தான். கண்ணீர் மல்கத் தன்னை மன்னிக்கும்படி மன்றாடினான். "உன்னை நான் எப்படி மன்னிக்க முடியும்?" என்றார் புத்தர். "என் தவறுக்கு மன்னிப்பே கிடையாதா?" என்றான். "இல்லை.. இல்லை.. இப்போது வந்திருக்கும் நீ எந்தத் தவறுமே செய்யவில்லையே! அப்படி இருக்க மன்னிப்பு என்கிற பேச்சுக்கு இங்கே ஏது இடம்?" என்றார் புத்தர்.

நேற்று தான் காறித் துப்பியதை புத்தர் மறந்திருப்பார் என்கிற எண்ணத்தில், "பிரபு நேற்று உம்மைக் காறி உமிழ்ந்த பாவி நான். என்னை மன்னித்ததாகச் சொல்லுங்கள்" என்றான்.

புத்தர் புன்முறுவலுடன், "நேற்று என்னைக் காறி உமிழ்ந்த மனோ நிலையில் இப்போது நீ இல்லை. அது தவறு என்று உணர்ந்த நீ வேறு மனிதன், நல்லன். நேற்று நீ வேறு மனிதன். அந்தப் பிழையுடைய மனிதன் இப்போது உன்னுள் இல்லை. அவன் இறந்துவிட்டான். நீ புதியவன்.. பிழையற்றவன்.. உன்னை மன்னிக்க வேண்டிய அவசியமே எனக்கு எழவில்லை" என்றார். இதுவே உண்மை.

உலகத்தில் பல்வேறு மனிதர்கள் தோன்றித் தோன்றி மறைவது போல் மனிதனுக்குள் கணத்துக்குக் கணம் வெவ்வேறு மனிதர்கள் தோன்றித் தோன்றி மறைகிறார்கள். ஒவ்வொரு மனிதனும் ஒவ்வொரு உலகம்.

கங்கை நதி என்று ஒரு நதியைக் காட்டினாலும் நேற்றைய கங்கை வேறு. இன்றைய கங்கை வேறு. கணத்துக்குக் கணம் புதிய புதிய நீர்த்துளிகள் நீர்த்திவலைகள் உருண்டோடி விடுகின்றன. மனிதனும் அப்படித்தான். அவனது பல்வேறு நிலைப்பாடுகள் மாறிக்கொண்டே இருக்கின்றன. ஆனால் இது புரியாமல் பல வருடங்களுக்கு முன் நடந்த பகைமைகள்- சண்டைகள் அடிப்படையில் பலரை விரோதிகள் என்று பொருமுகிறோம். தலைமுறை தலைமுறையாக நிகழும் பழிவாங்கல்கள், சாதிச்சண்டைகள், கிராமச் சண்டைகள், மதக் கலவரங்கள் இந்த உண்மை தெரியாததால் விளைந்தவையே. அதேபோன்று நாம் மதிக்கும் பலரது மாண்புகளும் கூடக் காலாவதியான பழைய மரியாதைகளாகவே இருக்கலாம். எனவே சிறுமைகளும்சரி, பெருமைகளும் சரி நீடித்தவை அல்ல.

இந்திரனிடம் சோரம் போன அகலிகைக்காக கௌதம முனிவரிடம் பரிந்து பேசிய இராமன்தான், தன் நல்ல மனைவி சீதையைத் துடிக்கத் துடிக்கப் பேசி அக்னிப் பிரவேசம் செய்யச் செய்தவன். நம்ப முடிகிறதா? வாழ்நாள் முழுக்கப் பாண்டவரை வெறுத்தவன் துரியோதனன். அவனே பாண்டவர்கள் குலக் கொழுந்துகளான இளம் பாண்டவர்களைப் போர் முடிவில் அஸ்வத்தாமன் வஞ்சனையாகக் கொன்றபோது, இப்படி செய்திருக்க வேண்டாமே"என்று வருத்தப்பட்டான்.

கல்லுக்குள் ஈரமும்-ஈரக் கடலுள் எரிமலையும் படைப்பின் ஆச்சரிய அற்புதங்கள்.எனவே யாரையும் குறைவாக எண்ண வேண்டாம்.

"குப்பை மேட்டினில் மலர் கொஞ்சுறும் குருக்கத்தி
கொடி வளராதோ- நன்னெஞ்சே
கொடி வளராதோ"

என்று பாடிய பாரதி,

"பகை நடுவினில் பண்புருவான நம்
பரமன் வாழுகின்றான்-
நன்னெஞ்சே என்று பாடியதில் ஆயிரம் ஆயிரம் அர்த்தங்கள் இருக்கின்றன.



சுகி.சிவம்

# போரழிவிலிருந்து புத்துயிர் பெற்ற அரியாலை புனித யூதா ததேயு

(கடந்த வாரத் தொடர்ச்சி)



எஸ்.ஜேசுதாஸ்

அரியாலை புனித யூதா ததேயு ஆலயத்துக்கு வழிகாட்டியாகவும், யாழ். நகருக்கு வந்து செல்லும் பயணிகளை வரவேற்று ஆசீவழங்கும் காவலராகவும் புனித யூதா ததேயுவின் சொரூபமொன்று கண்டி வீதி, அரியாலை முள்ளி வீதிச் சந்தியில் நிறுவப்பட்டது. பிரயாணிகளின் நம்பிக்கையாகத் திகழும் இந்தவிடத்தை குருநகரைச் சேர்ந்த மி.யேசுதாசன் அமைத்துக் கொடுத்தார்.

இந்த ஆலயம் காலத்திற்கு காலம் பாண்டியன்தாழ்வு பாஷையூர்,கொய்யாத்தோட்டம் பங்குகளுடன் இணைக்கப்பட்டு நிர்வகிக்கப்பட்டு வந்தது. தற்போது தனிப் பங்காக வளர்ச்சிபெற்றுள்ளது. பங்குத் தந்தையர்களாக அருட்திரு. அடிகளார்களான மகேந்திரம் இராசநாயகம், ரூபன் மரியாம்பிள்ளை,சூசைநாதன் சந்திரன், றெஜீஸ் இராசநாயகம்லோரன்ஸ், ஹெக்ஸ் சவுந்தரா,ஸ்ரனி அன்ரனி ஆகியோர் பணியாற்றியுள்ளனர். தற்போது அருட்திரு. ஜே.நீக்கிலஸ் அடிகள் பங்குத் தந்தையாக வழிநடத்தி வருகிறார்.

புனித யூதாவின் பரிந்துரையால் கிடைத்த நன்மைகளுக்கு நன்றியாகவும், பரோபகாரிகளின் உதவிகளாலும் படிப்படியாக வளர்ச்சி பெற்ற ஆலயம் போர் முனைப்புக்களால் பெரிதும் பாதிக்கப்பட்டது.1995,2000,2002 காலப்பகுதிகளில் இடம்பெற்ற தாக்குதல்களால் மக்கள் இடம்பெயர்ந்ததுடன் ஆலயம் தரைமட்ட மானது.

கைவிடப்பட்டோரின் பாதுகாவலரான இவரது திருத்தலத்தில் தீவகத்தில் இருந்து இடம்பெயர்ந்த மக்கள் தஞ்சமடைந்தமையால் பலவருடங்கள் அகதி முகாமாகவும் செயற்பட்டது.

> 1995,2000,2002 காலப்பகுதிகளில் இடம்பெற்ற தாக்குதல்களால் மக்கள் இடம்பெயர்ந்ததுடன் ஆலயம் தரைமட்டமானது. கைவிடப்பட்டோரின் பாதுகாவலரான இவரது திருத்தலத்தில் தீவகத்தில் இருந்து இடம்பெயர்ந்த மக்கள் தஞ்சமடைந்தமையால் பலவருடங்கள் அகதி முகாமாகவும் செயற்பட்டது.

ஆலயம் அழிவுற்றதையடுத்து சில வருடங்கள் பாதுகாப்புக் காரணங்களுக்காக அந்தப்பகுதிக்கு மக்கள் செல்ல முடியாதிருந்தது. மக்கள் மீளக் குடியமர ஆரம்பித்ததும் பல்வேறு சிரமங்களின் மத்தியில் கட்டிய ஆலயம் முற்றாகச் சேதமடைந்ததைக்கண்டு திகைத்து நின்றனர்.

மீண்டும் ஆரம்ப நிலையில் இருந்து ஆலயத்தை அமைக்க வேண்டிய நிலை உருவானது. ஓலைக் கொட்டிலில் ஆலயம் அமைத்து திருவிழா கொண்டாடப்பட்டது.

தமது பாதுகாவலரும் வேண்டும் வரங்களை நிறைவேற்றுபவருமான யூதாவின் ஆலய அழிவைக் கண்டு வேதனையுற்ற பக்தர்கள் தமது பங்களிப்பை வழங்க முன்வந்தனர். யாழ். ஆயர் மேதகு தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை மற்றும் ஆலய மக்கள் புலம்பெயர்ந்து வாழும் ஆலயத்தைச் சேர்ந்தவர்கள், பல்வேறு பங்குத்தளங்கள், பரோப காரிகளின் தாராள உதவியுடன் புதிய ஆலயம் அமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன. பங்குத் தந்தையாக இருந்த அருட்திரு றெக்ஸ் சவுந்தர அடிகள் முழு வீச்சுடன் உழைத்தார்.

அவரது நெறிப்படுத்தலிலும் மேற்பார்வையிலும் அழகான பெரிய ஆலயத்திற்கான மாதிரிப்படம் வரையப்பட்டு நிர்மாணிக்கப்பட்டது. மக்களுடன் இணைந்து தானும் ஒரு தொழிலாளியாக அனைத்து வேலைகளிலும் பங்கேற்று அர்ப்பணிப்புடன் செயற்பட்டார்.

தற்போது புனிதரின் அருளால் அழகிய புதிய ஆலயத்தில் மக்கள் தமது வழிபாடுகளை மேற்கொள்கின்றனர். 10 குடும்பத்துடன் ஆரம்பிக்கப்பட்ட இந்த ஆலயத்தில் இப்போது 75 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் இணைந்துள்ளன.

இந்த ஆலயத்தின் திருவிழா சித்திரை மாத இறுதி வாரத்தில் கொண்டாடப்படுகிறது. ஐப்பசி மாதம் 28 ஆம் திகதியும் சிறிய அளவில் திருவிழா இடம்பெறும்.

இந்த ஆலயத்தைச் சேர்ந்த அருட்திரு. எக்ஸ்.ஆர் மிரான்சிஸ் மொன்பேட் அடிகள், அருட் சகோதரர் செ.தொபியாஸ் ஆகியோர் தம்மை இயேசுவின் பணிக்காக அர்ப்பணித்துள்ளமை இப்பங்கின் ஞான வளர்ச்சிக்குச் சான்றாகும்.

இந்த ஆலய வளர்ச்சியிலும் உருவாக்கலிலும் ஜேகுலசிங்கம், சி.பெ. இராசேந்திரம், எக்ஸ்.ஆர்.பிரான்சிஸ், பே.செபஸ்தியாம்பிள்ளை, அ.எட்வேர்ட் ஆகிய மூத்தோர்களுடன் போல் குணநாயகம், க.திருஞானராசா, ஏ.பி.றஞ்சிற் என்போர் முன்னின்று உழைத்து வருகின்றனர். அத்துடன் சேவை மனப்பாங்குடன் பல பெண்களும் ஆலயப் பணிகளில் ஈடுபடுகின்றனர்.

பெண்களுக்கான மரியாயின் சேனை, இளையோருக்கான யூதா இளைஞர் கழகம் என்பனவும் இயங்கி வருகின்றன.

பல்சமய மக்கள் வாழும் பகுதியில் வீற்றிருந்து எல்லோராலும் வணக்கப்படும் புனித யூதாததேயு ஒற்றுமையையும் சமயங்களுக்கிடையிலான நல்லிணக்கத்தையும் ஏற்படுத்தும் காவலராக மக்களை அருளால் நிரப்பி வழிநடத்தி வருகிறார்.

(முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 300 தென்னை மரங்களை துவம்சம் செய்த யானைகள்

எருவில்,மே9

அக்கரைப்பற்று பிரதேசத்துக்குட்பட்ட பள்ளிக்குடியிருப்பு - கரடிப்பால வட்டைப் பகுதியில் காணியொன்றுக்குள் நுழைந்த காட்டு யானைகள் அங்கிருந்த சுமார் 300 இற்கும் மேற்பட்ட தென்னை மரங்களை நாசம் செய்துள்ளன. அத்தோடு, அங்கிருந்த களஞ்சியசாலையையும் சேதப்படுத்தியுள்ளன.

இந்தச் சம்பவம் குறித்து காணி உரிமையாளர் தெரிவித்ததாவது:-

காணியினுள் நுழைந்த சுமார் 5 யானைகள் அங்கிருந்த உரக் களஞ்சியசாலையை உடைத்து அதனுள்ளிருந்த உரப்பைகளைச் சேதப்படுத்தியுள்ளன. தொடர்ந்து அங்கு காணப் பட்ட வளர்ந்து வரும் தென் னைகள் சுமார் 300 வரையில் துவம்சம் செய்யப்பட்டுள்ளன.

இந்தச் சம்பவம் குறித்து வனவிலங்குத் திணைக்கள அதிகாரிகளுக்கு அறிவித்த போதிலும் அவர்கள் எவ்வித மான நடவடிக்கைகளையும் மேற்கொண்டிருக்கவில்லை.

**காட்டு யானைத் தாக்குதல் குறித்து பல தடவை வன விலங்குத் திணைக்கள அதிகாரிகளிடம் எடுத்துக்கூறியும் இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.**

இதேவேளை இப்பகுதியில் யானைகளின் தாக்குதலில் இவ்வாறான பாதிப்புகள் பல தடவை இடம் பெற்றுள்ளன.

இந்தச் சம்பவம் இடம் பெற்ற இடத்துக்கு அக்கரைப்பற்று பிரதேச சபையின் உதவித் தவிசாளர் ஐ.எல்.ஏ.ஹக்கீம் மற்றும் அக்கரைப்பற்று இராணுவ முகாம் அதிகாரிகள் உள்ளிட்ட பலர் வருகை தந்து சேதங்களைப் பார்வையிட்டனர் - என்றார். (ச-31)

# குடும்ப ஆதிக்கத்தை வளர்ப்போரை கட்சிப் பணிக்கு நியமிக்க முடியாது

### முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர் தெரிவிப்பு

எருவில்,மே9

மக்களுக்கு சேவைசெய்யும் விருப்பமுள்ளவர்களையும், சமூக ஆளுமையுள்ளவர்களையுமே கட்சிப்பணிகளுக்கு நியமிக்கவேண்டுமே தவிர, குடும்ப ஆதிக்கத்தை வளர்ப்பவர்களை கட்சிப்பணிகளுக்கு நியமிப்பதை ஏற்றுக்கொள்ள முடியாது என்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர் ஐ.எல்.எம்.நஸீர் தெரிவித்தார்.

சமூக, பொருளாதார, அரசியல் ஆய்வு மையத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட பத்திரிகையாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

நஸீர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் மிகப் பெரும் கோட்டை அட்டாளைச்சேனையாகும். இதுவரை நடைபெற்ற தேர்தல்களில் கூடுதலான சதவீதத்தில் முஸ்லிம் காங்கிரஸ் இங்கு வெற்றிபெற்றுள்ளது. ஆனால், எமது பிரதேசத்தில் கட்சிப்பணிகள் ஒழுங்குபடுத்தப்படாமல் மிக நீண்ட காலமாக இருந்துவந்த நிலையில் அண்மையில் தலைவர் ஹக்கீமினால் கட்சிப்பணிகளை மேற்கொள்வதற்காகப் பன்னிரண்டு பேரைக்கொண்ட ஒரு குழு நியமிக்கப்பட்டுள்ளது. இந்தக்குழுவை எங்களால் ஏற்றுக்கொள்ள முடியாது.

கட்சிக்காக பல தியாகங்களைச் செய்தவர்கள் புறக்கணிக்கப்பட்டு பதவிக்காக கட்சியில் அண்மையில் இணைந்தவர்கள் குழுவில் சேர்க்கப்பட்டிருப்பது கவலைக்குரிய விடயமாகும்.


ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் இந்தநாட்டு முஸ்லிம்களுக்காகத் துணிந்துநின்று குரல்கொடுத்து வருகின்ற நிலையில், உள்ளூர்களில் உள்ள ஒருசில குடும்ப சுயநலவாதிகளின் போக்கினால் முஸ்லிம் காங்கிரஸ் வீழ்ச்சியடைவதைப் பார்த்துக் கொண்டிருக்க முடியாது.

தம்புள்ள பள்ளிவாசல் விடயத்தில் தலைவர் ஹக்கீம் காட்டிய சமூகப்பற்றை எண்ணி நாங்கள் உணர்ச்சி வசப்படுகின்றோம். தலைவரின் கொள்கையின் பின்னால் மக்கள் அணிதிரள வேண்டும் எனக் கேட்டுக் கொள்கின்றேன். பள்ளிவாசல் அதே இடத்தில்தான் இருக்கவேண்டும். கட்சி பேதம் இதில் பார்க்கக் கூடாது.

பள்ளிவாசலைத் தாக்கியவர்களைப் பொலிஸார் கைதுசெய்யவேண்டும். அத்தோடு பள்ளிவாசலுக்கு நஷ்டஈடு வழங்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

குடும்பத்துக்காக கட்சியைப் பிழையாக வழிநடத்துபவர்களை ஒதுக்கிவிட்டு கட்சியின் வளர்ச்சியில் உண்மையான அர்ப்பணிப்புக் கொண்டவர்களைக் கொண்ட ஒரு குழுவைத் தலைவர் உடனடியாக நியமிக்க வேண்டும்.

கட்சி ஆதரவாளர்களினால் தெரிவுசெய்யப்படுகின்ற எவரையும் நாங்கள் ஏற்றுக்கொள்வோம். அதைவிடுத்து, பதவிக்காகப் பின்கதவினால் தட்டுபவர்களை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது. - என்றார். (ச-31)



சர்வதேச தாதியர் தினத்தை முன்னிட்டு கல்முனை ஆதார வைத்தியசாலையில் நேற்றுமுன்தினம் திங்கட் கிழமை இரத்ததான நிகழ்வு இடம்பெற்றது. இந்த நிகழ்வில் இந்த வைத்தியசாலையில் கடமைபுரியும் தாதியர்கள் கலந்துகொண்டு இரத்ததானம் வழங்கினர். (ச)

## மினி சூறாவளி வீசியதால் 80 குடும்பங்கள் பாதிப்பு

எருவில்,மே9

மட்டக்களப்பு, கிரான் பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள கிராமங்களில் நேற்று முன்தினம் மாலை மினி சூறாவளி வீசியுள்ளதாக மட்டக்களப்பு மாவட்ட இடர் முகாமைத்துவ நிலையத்தின் உதவிப் பணிப்பாளர் எஸ்.இன்பராஜன் தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கிரான் பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள ஊத்துச்சேனை, மற்றும் வட முனை ஆகிய கிராமங்களிலேயே மினி சூறாவளி வீசியுள்ளது.

இந்தக் கிராமங்களில் மக்கள் குடியிருந்த தற்காலிக குடிசைகள் சேதமடைந்துள்ளதால் மக்கள் இடம் பெயர்ந்துள்ளனர்.

இந்த மீள் குடியேற்ற கிராமங்களில் வீசிய மினி சூறாவளியினால் இந்தக் கிராமங்களில் இருந்து 80 குடும்பங்கள் இடம்பெயர்ந்து ஊத்துச்சேனை அரசினர் தமிழ் கனிஷ்ட பாடசாலையில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இந்தக் குடும்பங்களுக்கு சமைத்த உணவு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் இவர்களின் சேத விவரங்கள் குறித்த தகவல்கள் திரட்டப்பட்டு வருகின்றன - என்றார்.

இந்தக் கிராமங்களில் வசித்த மக்கள் கடந்த காலப் போரால் இடம்பெயர்ந்து பின்னர் தற்காலிக குடிசைகளில் வசித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச-31)

## புதிய உறுப்பினர் பதவியேற்பு

எருவில்,மே9

மட்டக்களப்பு, காத்தான்குடி நகர சபையின் புதிய உறுப்பினராக நியமிக்கப்பட்டுள்ள நல்லாட்சிக்கான மக்கள் இயக்கத்தைச் சேர்ந்த ஏ.எல்.எம்.சபில் காத்தான்குடி நகரசபை உறுப்பினராக பதவி ஏற்றுக்கொண்டார்.

காத்தான்குடி முகைதீன் மெத்தைப் பெரிய ஜும்ஆ பள்ளிவாசலில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற ஜும்ஆ தொழுகையை அடுத்து இவர் பள்ளிவாசலில் கூடியிருந்த மக்கள் முன்னிலையில் காத்தான்குடி நகரசபை உறுப்பினரானார்.

நல்லாட்சிக்கான மக்கள் இயக்கத்தின் காத்தான்குடி நகரசபை உறுப்பினரான ஏ.ஜி.எம்.ஹாறூன் மீளழைத்தல் திட்டத்தின் கீழ் இராஜினாமாச் செய்ததையடுத்து அந்த வெற்றிடத்திற்கு மேற்படி புதிய உறுப்பினராக சபீல் நல்லாட்சிக்கான மக்கள் இயக்கத்தால் நியமிக்கப்பட்டுள்ளார்.

கடந்த வருடம் நடைபெற்ற காத்தான்குடி நகரசபைத் தேர்தலில் நல்லாட்சிக்கான மக்கள் இயக்கம் சுயேச்சைக் குழுவாகப் போட்டியிட்டு இரண்டு ஆசனங்களைப் பெற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கது. (ச-31)

## வாகன விபத்தில் இருவர் படுகாயம்

மட்டக்களப்பு,மே9

மட்டக்களப்பு, களுவாஞ்சிக்குடி பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற விபத்துச் சம்பவத்தில் இருவர் படுகாயமடைந்துள்ளனர்.

களுவாஞ்சிக்குடிக்கும் ஒந்தாச்சி மடத்துக்கும் இடைப்பட்ட பகுதியில் உள்ள மோட்டார் சைக்கிள் திருத்தும் கடைக்கு அண்மையிலேயே இந்த விபத்துச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இந்தச் சம்பவத்தில் ஓட்டோவைச் செலுத்திச்சென்ற ஒந்தாச்சி மடத்தைச் சேர்ந்த ஆறுமுகம் கனகசுந்தரம் (36வயது), மோட்டார் சைக்கிளை செலுத்திச்சென்ற பெரிய கல்லாறைச் சேர்ந்த பொன்னையா முருகையா (64வயது) ஆகியோரே படுகாமடைந்துள்ளனர்.

இரண்டு வாகனங்களும் நேருக்கு நேர் மோதிக்கொண்டதால் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது என்று களுவாஞ்சிக்குடி பொலிஸார் தெரிவித்தனர்.

காயமடைந்த இரண்டு பேரும் களுவாஞ்சிக்குடி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, மேலதிக சிகிச்சைகளுக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர். (ச)

## உரத்தை திருடிய மூவர் கைது

இரத்தோட்டை,மே9

மாத்தளை, இரத்தோட்டை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நெலுவகந்த ரஜமகா விகாரையில் களஞ்சியப்படுத்தி வைக்கப்பட்டிருந்த விவசாயிகளுக்கான 7 அரச உர மூடைகளைத் திருடிய குற்றச்சாட்டில் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பிரதேச விவசாயிகளுக்கு மானிய அடிப்படையில் விநியோகிப்பதற்காக இந்த உர மூடைகள் விகாரையில் களஞ்சியப்படுத்தி வைக்கப்பட்டிருந்தன.

இந்தத் திருட்டுச் சம்பவம் குறித்து இரத்தோட்டை பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டின் அடிப்படையில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டதை அடுத்தே சந்தேகத்தின் பேரில் மூவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். கைதா[illegible] சங்கம் ஒன்றின் உறுப்பினர்[illegible]வந்துள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேக்கு மரக்குற்றிகள் பொலிஸாரிடம் சிக்கின



மட்டக்களப்பு,மே9

சட்டவிரோதமாக கடத்தப்பட்டு ஏறாவூர் வாவிக்குள் மறைத்து வைக்கப்பட்டிருந்த ஒன்றரை லட்சம் ரூபா பெறுமதியான 26 தேக்குமரக் குற்றிகள் கைப்பற்றப்பட்டன.

இந்த மரக்குற்றிகளை ஏற்றிச் செல்லப் பயன்படுத்தப்பட்ட 2 உழவு இயந்திரங்கள், 2 கெப் வாகனங்கள், 2 மாட்டு வண்டிகள் என்பனவற்றையும் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை கைப்பற்றியதாக ஏறாவூர் பொலிஸ் நிலைய பிரதான பொலிஸ் பரிசோதகர் ஜீ.பி.எச்.எச். சனத்குமார பண்டார தெரிவித்தார்.

கைப்பற்றப்பட்ட தேக்குமரக்குற்றிகளும் அவற்றை ஏற்றிவரப் பயன்படுத்தப்பட்ட வாகனங்களும் ஏறாவூர் பொலிஸ் நிலையத்திற்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளன.

இது தொடர்பாக சந்தேகத்தின் பேரில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

ஏறாவூர் பொலிஸார் மேலதிக விசாரணைகளை நடத்தி வருகின்றனர். (ச)

# இன்றைய நாள்

தருவது வித்தியா

## உங்களுக்கு எப்படி?

**மேடம்:** பல விடயங்களையும் குழப்பிக் கொள்வீர்கள். பிறரைக் குழப்பவும் செய்வீர்கள். எதிலும், சற்று நிதானத்தோடு செயல்படுங்கள். குடும்ப விடயங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்தல், சச்சரவுகளைத் தவிர்க்கும். புதிய ஒப்பந்தங்களை தள்ளி வைப்பது நன்மை தரும்.

**இடபம்:** ஒரு வேகத்தோடு செயற்படுவீர்கள். ஆனால், பலன் மட்டும் தாமதப்படும். ஆதங்கப்பட்டுக் கொள்ளாதீர்கள். பணம் சம்பந்தப்பட்ட விடயங்களில் முன்னெச்சரிக்கையுடன் செயற்படுங்கள். பெண்கள், குழந்தைகளால் பிரச்சினைகளைச் சந்திக்க நேரிடலாம். அலுவலகப் பணிகளில் குடும்ப விடயங்கள் குறுக்கிடாமல் கொண்டு செல்லுங்கள்.

**மிதுனம்:** எதிலும் அசட்டு தைரியத்தோடு செயற்படுவீர்கள். சில காரியங்கள் கைகூடும். சில காரியங்கள் ஏமாற்றம் தரும். பிறரை நம்பி காரியங்களை மேற்கொள்வதைத் தவிர்த்துக் கொள்ளுங்கள். அரசியல் தொடர்புடைய வேலைகளால் பணம் கரையலாம். மாலைக்கு மேல் சோர்வுகள் அகன்று, மனதில் தெம்பு, உற்சாகம் பிறக்கும்.

**கடகம்:** எடுத்த காரியங்கள் எண்ணம்போல நிறைவேறும் நாள். குடும்ப நலன் கருதி, சில கஷ்டங்களை அனுபவிக்க முன்வருவீர்கள். நண்பர்களிடம் வார்த்தை தவறுதலால், மனக்கஷ்டம் ஏற்படும். தொழில் மற்றும் வியாபாரத்தில், சற்று வியூகத்துடன் செயற்படுதல் நட்டத்தைத் தவிர்க்கும். மாலையில், ஆன்மிக சம்பந்தமான சந்திப்புகள் இருக்கும்.

**சிங்கம்:** புரியாமல் சில விடயங்களை குழப்பிக் கொள்வீர்கள். எதனையும் முழுமையாகத் தெரிந்து கொண்டு செயற்படுங்கள். உணவில் கவனம் செலுத்த வேண்டியது அவசியம். மேலதிகாரிகள் விடயத்தில், பொறுமையைக் கடைப்பிடிப்பது பெருமை தரும். மனைவி வழிச் செலவுகள் அதிகரிக்கலாம்.

**கன்னி:** தெளிவாகப்பேசுகின்றேன் என்றும், எண்ணிக்கொண்டு பேசுவீர்கள். ஆனால், உங்களின் குறைகள் வெளிப்படலாம், கவனம். விவாக முயற்சிகளில் முன்னேற்றம் உண்டு. கடன்கள் தீர்ந்து பெருமை கொள்வீர்கள். நண்பர் ஒருவரின் பணியின் பொருட்டு, உங்களுடைய வேலை பாதிக்கலாம்.

## நாளை

சித்திரை 28 வியாழக்கிழமை 10.05.2012
திதி: பஞ்சமி மு.இ 11.16 வரை
நட்சத்திரம்: பூராடம் மு.இ 11.45 வரை
சுபநேரம்: 07.24- 08.54 வரை
ராகு காலம்: 01.24- 02.54 வரை

**துலாம்:** சில காரணங்களால் மனம் சோர்ந்து காணப்பட்டபோதும், பணியின் பளு கருதி சுறுசுறுப்புடன் செயற்படுவீர்கள். வெளியூர் பயணங்களால், அலைச்சல்களைச் சந்திக்க நேரிடலாம். பணவரவு உண்டு. புதிய முயற்சிகளில் வெற்றி பெற போராட வேண்டும்.

**விருச்சிகம்:** அவசர அவசரமாகச் செயற்படுவீர்கள். ஆனால், ஒரு காரியம் முடிவதற்குள்ளாகவேபோதும், போதுமென்றாகிவிடும். எனினும் பொறுத்துதான் செயற்பட வேண்டியிருக்கும். ஆடம்பரப் பொருள்கள் மீது நாட்டம் உண்டாகலாம். அதற்காக வீண் செலவு செய்வதைத் தவிர்க்க வேண்டும்.

**தனுசு:** அடுத்தடுத்த பணிகளால் உடல் சோர்வு, அசதி ஆட்கொள்ளும். வீட்டு வேலை ஒன்றைச் செய்ய மறந்து, அதனால் இல்லறத் துணையோடு சிறு சச்சரவுகள் ஏற்படும். குதர்க்கமான பேச்சுக்களை தவிர்த்துக் கொள்ளுங்கள். தொழிலில், எந்த ஒரு நடவடிக்கையையும், தகுந்த நபர்களின் ஆலோசனையின் பேரில் மேற்கொள்ளுங்கள்.

**மகரம்:** அவசியமான செலவுக்கும் அதிகமாக யோசிப்பீர்கள். ஆடம்பரச் செலவுகளை உடனே மேற்கொள்வீர்கள். சற்று யோசித்துச் செயற்படுங்கள். சில காரியங்களை, உங்களின் சாமர்த்தியமான பேச்சுகளால் விரைவாக முடித்துக் கொள்ள வாய்ப்பு உண்டு. வெளி வட்டாரங்களில், ஒரு வரையறைக்குள்ளான பழக்கங்கள் நல்லது.

**கும்பம்:** தயங்கித் தயங்கி தங்களின் செயற்பாடுகள் இருந்தபோதும், எதிர்பார்த்த நிதி நிறுவன உதவிகள் தக்கநேரத்தில் கிடைக்கும். இல்லறத் துணையின் யோசனைகள், பெருமை கொள்ளச் செய்யும். அலுவலகப் பணிகளில், சக ஊழியர்களின் செயற்பாடுகள், அதிருப்தி தந்தபோதும் வெளிக்காட்டிக் கொள்ளாதீர்கள்.

**மீனம்:** அலைச்சலும் கூடும். மன நிறைவுக்குக் குறைவிருக்காது. திடீர் பண வரவுகள் இருக்கும். நண்பர் ஒருவரின் ஆலோசனை, தக்க நேரத்தில் உதவியாக இருக்கும். குழந்தைகளுக்காக, சில செலவுகளை மேற்கொள்ள வேண்டியிருக்கும். வழக்கு விவகாரங்களில், சாதகமற்ற போக்கைக் காண நேரிடலாம்.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 9 | 4 | 3 | | | | | 7 | |
| | | 1 | | | 5 | | 8 | |
| 8 | 5 | | 3 | 2 | 9 | | 6 | |
| | | | | 9 | 3 | | 4 | |
| 3 | | | 8 | | 6 | | | 5 |
| | 9 | | 2 | 4 | | | | |
| | 3 | | 9 | 8 | 2 | | 5 | 7 |
| | 2 | | 7 | | | 8 | | |
| | 8 | | | | | 9 | 2 | 4 |

## சுடோக்கின் நேற்றைய விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 5 | 6 | 3 | 7 | 2 | 1 | 8 | 4 | 9 |
| 8 | 4 | 7 | 3 | 6 | 9 | 2 | 5 | 1 |
| 9 | 1 | 2 | 5 | 4 | 8 | 7 | 6 | 3 |
| 7 | 9 | 8 | 4 | 5 | 2 | 3 | 1 | 6 |
| 1 | 5 | 6 | 9 | 7 | 3 | 4 | 2 | 8 |
| 2 | 3 | 4 | 8 | 1 | 6 | 9 | 7 | 5 |
| 6 | 8 | 1 | 2 | 9 | 4 | 5 | 3 | 7 |
| 3 | 2 | 5 | 1 | 8 | 7 | 6 | 9 | 4 |
| 4 | 7 | 9 | 6 | 3 | 5 | 1 | 8 | 2 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள்பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டிப்பாகாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.


## இறைச்சிக் கோழி விற்பனைக்கு

உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட புறொயிலர், கல்லோட் நிறமும் கந்தம் செய்யப்பட்டு விற்பனையாகின்றது. கந்தம் செய்யப்பட்ட புறொயிலர் இறைச்சி ரூ.450 மட்டுமே. தினமும் காலை 6 மணி தொடக்கம் இரவு 8 மணி வரை திறக்கப்படும்.
நல்லூர் பாம் சென்ரர்
#. 19, முருகேசர் ஒழுங்கை, நல்லூர், யாழ்ப்பாணம்.

## கொழும்பில் தொடர் மாடி வீடு தேவை

பம்பலப்பிட்டி, வெள்ளவத்தையில் நல்ல சூழலில் இருக்கும் தொடர் மாடி வீடு விலைக்குத் தேவை.
தொடர்பு கொள்ளவும்:
075 0407783


# 3 ஆம் ஆண்டு நினைவலைகள்



## அமரர் இராமலிங்கம் பிரபாகரன்

(நிகழ்ச்சித் திட்ட உதவியாளர், கண்டாவளை)

நெஞ்சை மகிழ வைத்த நாள்
02 ★ 02★ 1978

நெஞ்சை நெகிழ வைத்த நாள்
13 ★ 05★ 2009

வேலை என்னும் ஓர் வடிவில்
ஊர் விட்டு ஊர் சென்று
உன் பயமதனையும் போக்க எண்ணினாய்
கண்ணில்லாத காலனவன் அங்கே
கவர்ந்தானே கணை வடிவில்
எத்தனை ஆண்டுகள் உருண்டோடினாலும்
ஏங்கி நிற்கின்றோம் உன் வரவை எண்ணி
ஓம் சாந்தி ! சாந்தி!! சாந்தி!!!

வரத விநாயகர் கோயிலடி,
தும்பளை மேற்கு,
பருத்தித்துறை.

பிரிவால் துயருறும்
மனைவி, மகள்,
தாய், தந்தை,
சகோதரர்கள்.

# பத்தாம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி
## கமலாம்பிகை ஆறுமுகம்தம்பி

(இளைப்பாறிய ஆங்கில ஆசிரியை)

தோற்றம்:- 23★05★1921
மறைவு:- 09★05★2002

ஆண்டுகள் பத்து உருண்டு ஓடியது பெத்தா;
வாழ்ந்தீர்கள்; பலரை வாழ வைத்தீர்கள்;
எங்களையும் வாழ வைத்த நிறைவோடு....

நினைவுடன்
ராகுலன் (அம்பி – சுவிஸ்),
கங்காதரன் ராகினி (அம்மணி)

274, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.


## காணி விற்பனைக்கு

பின்வரும் காணிகள் உடன் விற்பனைக்கு உண்டு
1. வரணி இயற்றாலையில் பருத்தித்துறை வீதியில், (எருவன் நுணாவடிச் சந்திக்கு அருகில்) புற்றுக்கோயிலுக்கு அருகிலுள்ள காணி
2. வரணி இயற்றாலையில் பருத்தித்துறை வீதியில், மேற்குப் புறமாக (எருவன்) பிரதான வீதியில் இருந்து ஏறத்தாழ 100 m தூரத்திலுள்ள வெறும் காணி

வாரநாள்களில் தொடர்பு கொள்ளலாம்
தொடர்பு : 077 9452036

## வேலை வாய்ப்பு

காப்புறுதித்துறையில் விற்பனை முகவராக இணைந்துகொள்ள ஆர்வம் உள்ளவர்கள் விண்ணப்பிக்கவும்.
(கூடிய வருமானம் பெற போதியளவு பயிற்சிகள் வழங்கப்படும்)
தகைமைகள்: Commerce / Arts - 3 Pass
Bio / Maths - 2 Pass
விண்ணப்பங்களை 14-05. 2012 இற்கு முன்பதாக அனுப்பிவைக்கவும்.
C/o, உதயன், த.பெ.இல. 4356
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

## கோழிக்குஞ்சு விற்பனை

தடுப்பு மருந்து போடப்பட்ட 'A' தரமான பிறிமா புறொயிலர் குஞ்சுகள், பேட்டுக்குஞ்சுகள் மற்றும் சிவப்பு சேவல் குஞ்சுகள் ஒவ்வொரு வெள்ளிக்கிழமைகளிலும் பெற்றுக்கொள்ளலாம். முன் கூட்டியே பதிவுசெய்யவும்.

நல்லூர் பாம் சென்ரர்
#19, முருகேசர் ஒழுங்கை,
நல்லூர், யாழ்ப்பாணம்
தொ.பே : 021 2226911

நல்லூர் பாம் சென்ரர்
கனகபுரம் வீதி,
கிளிநொச்சி
தொ.பே : 077 6225944

சுட்டி பாம் சென்ரர்
வட்டுக்கோட்டை
தொ.பே : 077 8996085

## கோழிக்குஞ்சு விநியோகம்

35 நாளில் 2Kg மேல்
வளர்ச்சியடையக்கூடிய
NO-1 BAHIRAHA புறொயிலர்
குஞ்சுகள் 09.05.2012
விநியோகிக்கப்படும்.
நாஜினி, நவாலி வீதி,
ஆனைக்கோட்டை.


# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
10★ 09★ 1933

மறைவு
09★ 05★ 2011

## அமரர் ஞானப்பிரகாசம் விசுவாசம்

ஆண்டு ஒன்று ஆகிவிட்டாலும்
உங்கள் நினைவுகள் மறையவில்லை
இன்று உங்கள் நினைவை எண்ணி நிற்கின்றோம்
இன்று (09.05.2012) புதன்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இமையாணன், நிடல் வீதி, உடுப்பிட்டி. - குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 30 வீடுகள் காற்றால் சேதம்

கொழும்பு,மே9
பொலன்னறுவை, வில்கமுவ,மாத்தளை ஆகிய பகுதிகளில் நேற்று செவ்வாய்க்கிழமை வீசிய கடும் காற்று மற்றும் மின்னல் தாக்கம் காரணமாக சுமார் 30 வீடுகள் சேதமடைந்துள்ளன என்று இடர் முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, கிழக்கு மாகாணம், வடமத்தி, ஊவா ஆகிய பகுதிகளில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை பெய்த மழையுடன் கூடிய கடும் காற்றுக் காரணமாக சுமார் 80 குடிசைகள் பகுதியளவில் சேதமடைந்துள் ளன. இதனால் மக்கள்இடம்பெயர்ந்துள்ளதாகவும் இடர் முகாமைத்துவ நிலையம் குறிப்பிட்டுள்ளது. (ச)



இலங்கை வந்துள்ள ஆஸ்திரேலிய குடிவரவு அமைச்சர் கிறிஸ் போவன் நீதி அமைச்சர் ரவூப் ஹக்கீமைச் சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

# வாகன விபத்தில் ஒருவர் சாவு: 10 பேர் படுகாயம்

கொழும்பு,மே 9
ஹபரண - பொலநறுவை பிரதான வீதியில் நேற்று செவ் வாய்க்கிழமை அதிகாலை 3.20 மணிக்கு இடம்பெற்ற வாகன விபத்தில் ஒருவர் மரணமடைந்துள்ளார். 10 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

படுகாயமடைந்தவர்களுள் ஒரு ஆண், 6 பெண்கள் மற் றும் மூன்று குழந்தைகள் உள்ளடங்குகின்றனர். அவர்க்ள் தம்புள்ள வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

குறித்தப் பகுதியில் பயணித்துக் கொண்டிருந்த வான் வீதியை விட்டு விலகி மரமொன்றில் மோதியதில் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

விபத்தில் உயிரிழந்தவர் மருதமுனை பகுதியைச் சேர்ந்த வான் சாரதியான மொஹமட் ஹசன் மொஹமட் அலி என்று பொலிஸார் தெரிவித்தனர். (ச)

# தெரிவுக்குழவில் எதிர்க்கட்சி பங்கேற்ற பின்னரே பணிகள்

### அமைச்சர் சிறிபால டி. சில்வா கூறுகிறார்

கொழும்பு,மே9
எதிர்க்கட்சியினர் தமது பிதிநிதிகளை நியமித்த பின்னர் நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் பணிகள் ஆரம்பிக்கப்படும் என்று அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்தார்.

எதிர்க்கட்சிப் பிரதிநிதிகளை விரைவில் பெயரிட் டால் தேசியப் பிரச்சினைக்கு தீர்வு காணும் நடவடிக்கைகளை ஆரம்பிக்க முடியும் என்று அவர் குறிப்பிட்டார்.

நாடாளுமன்றத் தெரிவுக் குழுவில் அங்கம் வகிப்பது தொடர்பில் ஜே.வி.பி. இன்னமும் தீர்மானிக்கவில்லை. தெரிவுக்குழுவில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைப் பங்கேற்கச் செய்வது தொடர்பில் ஐக்கிய தேசியக் கட்சி பேச்சுக்களை ஆரம்பித்துள்ளது என்று அவர் தெரிவித்தார்.



எதிர்க்கட்சிப் பிரதிநிதிகளை விரைவில் பெயரிட் டால் தேசியப் பிரச்சினைக்கு தீர்வு காணும் நடவடிக்கைகளை ஆரம்பிக்க முடியும்

• இதேவேளை, அரசு உண்மையாகவே தீர்வுத் திட்டமொன்றை முன்வைக்க ஆர்வம் காட்டுகின்றதா என்பது தொடர்பில் சந்தேகம் நிலவி வருவதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க கேள்வி எழுப்பியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

# ஓட்டோவில் மூவரே பயணிக்க அனுமதி

### புதிய சட்டம் நடைமுறை

கொழும்பு,மே9
ஓட்டோவில் பின் ஆசனத்தில் 3 பயணிகள் மாத்திரமே பயணிப்பதற்கு அனுமதிக்கும் விதிளை நேற்று செவ்வாய்க்கிழமை முதல் பொலிஸ் திணைக்களம் நடைமுறைப்படுத்தியுள்ளது.

வீதி விபத்துக்களைக் குறைப்பதற்கு இந்த நடவடிக்கை உதவியளிக்கும் என்று பொலிஸ் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

கடந்த ஏப்ரல் மாதம் முதலாம் திகதியிலிருந்து நேற்று முன்தினம் திங்கட்கிழமை வரையான காலத்தில் 27 ஓட்டோ விபத்துக்கள் இடம்பெற்றன. இந்த விபத்துக்களில் 34 பேர் மரணமடைந்துள்ளனர் என்று அவர் கூறினார்.

ஓட்டோ விபத்து ஏற்பட்டால் உரிமையாளர்கள் மற்றும் சாரதிகளுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று அவர் தெரிவித்தார். சேவையில் ஈடுபடும் 67,000 ஓட்டோக்கள் பதிவுசெய்யப்பட்டுள்ளன என்று அவர் தெரிவித்தார். இதேவேளை, ஓட்டோ பின் ஆசனத்தில் 3 பயணிகள் மாத்திரமே பயணிப்பதற்கு அனுமதிக்கும் சட்டத்துக்கு ஓட்டோ மீற்றர் ரக்ஸி சங்கம் நேற்றுமுன்தினம் வரவேற்புத் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

# ரயிலில் மோதி இளைஞர்கள் இருவர் சாவு

கொழும்பு,மே 9
கொழும்பில் இருந்து மாத்தறை நோக்கிப் பயணித்துக் கொண்டிருந்த றுஹுணுகுமாரி ரயிலில் மோட்டார் சைக்கிளில் சென்ற இருவர் மோதுண்டு உயிரிழந்துள்ளனர்.

காலி வீதியில் இருந்து எம்பிலிப்பிட்டி நோக்கிப் பயணித்த மோட்டார் சைக்கிள் பேருவளை - பங்களாவத்தை ரயில் கடவையில் வைத்து இவ்வாறு விபத்துக்குள்ளாகியுள்ளது.

நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை மாலை இடம்பெற்ற இந்த விபத்தில் மொஹமட் அன்சார் மொஹமட் ரிஸ்வான் (வயது-27), சுரங்க பீரிஸ் (வயது-24) ஆகிய இளைஞர்களே உயிரிழந்துள்ளனர்.

சடலங்கள் நாகொட வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளன.

இந்தச் சம்பவம் தொடர்பில் பேருவளை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ச)

# மக்கள் பிரச்சினையிலிருந்து அரசு நழுவிச் செல்கிறது

### கயந்த கருணாதிலக தெரிவிப்பு

கொழும்பு,மே9
பொது மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளில் இருந்து நழுவிச் செல்லக் கூடிய வகையிலேயே அரசு செயல்படுவதாக ஐக்கிய தேசியக் கட்சியின் ஊடகப் பேச்சாளர் கயந்த கருணாதிலக குற்றஞ்சாட்டியுள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்தநிகழ்வில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பொருட்கள் மற்றும் சேவைகளின் கட்டணங்கள் அதிகரிக்கும் போது, நிலையான பொருளாதார கொள்கைகளைக் கடைப்பிடிப்பதில்லை. உள்நாட்டு உற்பத்தியாளர்களை ஊக்குவிக்கும் நோக்கிலேயே பால்மாக்களின் விலைகளை அதிகரிப்பதாக அரசு கூறிவருகிறது.

கோதுமை மாவின் விலையை அதிகரித்து உள்நாட்டு நெல் உற்பத்தியாளர்களை ஊக்குவிக்கின்றோம் என்று அரசு கூறுகின்றது.- என்றார். (ச)

# ஆளும்கட்சி உறுப்பினர்களுக்கு பிரதி அமைச்சர் பதவிகள்

கொழும்பு,மே9
இலங்கையில் ஆளும் கட்சியைச் சேர்ந்த மேலும் சில நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு பிரதி அமைச்சர் பதவிகள் வழங்கப்பட உள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது.

நாடாளுமன்றத் தேர்தலில் கூடுதலான விருப்பு வாக்குகளைப் பெற்றுக் கொண்டவர்கள், மாகாண சபைகளில் முன்னர் அமைச்சுப் பதவிகளை வகித்தவர்கள், சிறிய கட்சிகளின் தலைவர்கள் உள்ளிட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு இவ்வாறு பிரதி அமைச்சுப் பதவிகள் வழங்கப்படவுள்ளன.

மாவட்ட ரீதியில் கூடுதல் விருப்பு வாக்குகளைப் பெற்றுக்கொண்ட சில நாடாளுமன்ற உறுப்பினர்கள், தமக்கு அமைச்சுப் பதவி வழங்கப்படுமா என்று எழுத்து மூலம் ஜனாதிபதியிடம் கோரியுள்ளனர்.

அடுத்த வாரம் அளவில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு இவ்வாறு அமைச்சர் பதவிகள் வழங்கப்படவுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது.

திகாம்பரம், பிரபா கணேசன், சனத் ஜயசூரிய, நிசாந்த முத்துஹெட்டிகம, சரத் வீரசேகர, ஹேமல் குணசேகர உள்ளிட்ட சிலருக்குப் பிரதி அமைச்சர் பதவி வழங்கப்படலாம் என்று தெரிவிக்கப்பட்டது. (ச)

# அறிக்கை விரைவில் கையளிக்கப்படும்

கொழும்பு,மே9
கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கை தொடர்பில் ஜாதிக ஹெல உறுமயவின் நிலைப்பாடு குறித்த அறிக்கை ஜனாதிபதியிடம் கையளிக்கப்படும் என்று மேல் மாகாண சபை அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

இந்த அறிக்கையை நேற்று செவ்வாய்க்கிழமை ஜனாதி பதியிடம் கையளிக்க முயற்சித்தபோதும் அறிக்கை தயாரிப்பு வேலைகள் இன்னும் நிறைவுபெறவில்லை என்று அவர் குறிப்பிட்டார். எனினும் இந்த வாரத்துக்குள் அறிக்கை ஜனாதிபதியிடம் கையளிக்கப்படும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

# தொழிற்சங்க நடவடிக்கையில் வைத்திய அதிகாரிகள் சங்கம்

கொழும்பு,மே9
போக்குவரத்துப் கொடுப்பனவு வழங்குவதில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகள் காரணமாகத் தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடத் தீர்மானித்துள்ளதாக அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

குறித்த பிரச்சினைக்குத் தீர்வு பெற்றுத்தர அதிகாரிகளுக்கு 10 நாள்கள் கால அவகாசம் வழங்கியிருந்ததாகச் சங்கத்தின் செயலாளர் சந்திக்க எபிட்டவெல தெரிவித்தார்.

எனினும் இதுவரை பிரச்சினைக்கு தீர்வு இல்லை என்று அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பிரச்சினைக்குத் தீர்வு வழங்க 10 நாள்கள் கால அவகாசம் கொடுத்தும் இதுவரை தீர்க்கப்படவில்லை.

வைத்தியர்களுக்குத் தமது அன்றாட கடமைகளை நடத்திச் செல்ல முடியாத அளவுக்குப் போக்குவரத்துக் கொடுப்பனவுப் பிரச்சினை தலைதூக்கியுள்ளது என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# 12 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணில்
14★ 07★ 1930

விண்ணில்
22★ 04★ 2000

## அமரர் சின்னத்துரை சோமசேகரம்

(ஓய்வுநிதியர் - யாழ்.மாநகரசபை)

திதி: சங்கடகரசதுர்த்தி (09.05.2012) புதன்கிழமை

**பரமன் பாதம் சேர்ந்து பன்னிரண்டு ஆண்டுகள் ஆனதுவே ஐயா எத்தனை ஆண்டுகள் ஆனாலும் உங்கள் நினைவில் என்றும் வாழும்**

39/2, புதுவீதி,
கொய்யாத்தோட்டம்,
யாழ்ப்பாணம். (17869) (2-6-9)

மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

# விலச்சிக்கு விசேட அதிரடிப்படையை அனுப்பியது நானே!

## பொலிஸ் மா அதிபர் தெரிவிப்பு

அநுராதபுரம் - விலச்சி பகுதிக்கு விசேட அதிரடிப்படையினர் தனது ஆலோசனையின் பேரிலேயே சென்றதாக பொலிஸ் மா அதிபர் என்.கே.இலங்ககோன் தெரிவித்துள்ளார்.

விலச்சிசம்பவத்தால் விசேட அதிரடிப்படையினருக்கு ஏற்பட்டுள்ள அபகீர்த்தி குறித்து மக்களுக்கு தெளிவுபடுத்தும் நோக்கில் பொலிஸ் மா அதிபர் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவித்ததாவது:-

கடந்த முதலாம் திகதி பொலிஸ் தலைமையகம் ஊடாக எனக்கு ஒரு தகவல் வந்தது. விலச்சி - சிவலாபிட்டி பகுதியில் வாவி புனரமைப்பில் ஈடு பட்டிருந்த ஒருவர் விலை மதிக்க முடியாத பிரதான பொருள்களை கண்டதாகவும் அதனை உடன் மீட்காவிட்டால் வேறு நபர்கள் எடுத்துச் செல்லக் கூடும் எனவும் அதில் தெரி விக்கப்பட்டது.

எனவே குறித்த புராதன பொருள்களை மீட்கப் பொருத்தமான பிரிவு விசேட அதிரடிப்படை என அறிந்து திடீரென அங்கு ஒரு விசேட அதிரடிப்படை குழுவை அனுப்பினேன்.

புராதன பொருள்களை பாதுகாப்பாக மீட்கவே அவர்கள் அங்கு சென்றார்களே தவிர களவாட அல்ல. 30 வருட யுத்தத்தில் இருந்து நாட்டை மீட்க விசேட அதிரடிப் படையினர் பெரும் பங்கு வகித்தனர். கிழக்கில் இவர்கள் புரிந்த பணி சொல்ல முடியாதது. கிழக்கு சமரில் 462 விசேட அதிரடிப்படையினர் உயிரிழந்தனர். 119 பேர் முழுமையாகவும் 118 பேர் பகுதி அளவிலும் ஊனமுற்றனர்.

விலச்சி சம்பவத்தில் விசேட அதிரடிப்படையினர் குற்றவாளிகள் அல்ல என்பதை நாட்டு மக்களுக்கு தெரியப் படுத்துகிறேன். இவ்வாறு பொலிஸ் மா அதிபர் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஏ)

## வைத்தியசாலைக்கு நிதி வழங்க முன்வந்தனர்

மூளாய் கூட்டுறவு வைத்தியசாலை ஐக்கிய சங்கத்தினரால் நடத்தும் வைத்தியசாலைக்கு வேண்டிய தேவைகளை செய்து கொடுப்பதற்கு வெளிநாட்டில் வாழ்பவர்கள் பலர் முன்வந்துள்ள தாகத் தெரிவிக்கப் படுகிறது. அண்மையில் மேற் படி வைத்திய சாலைக்கு வருகை தந்து பார்வை யிட்ட பின்னர் நிதி உதவி செய்ய முன்வந்துள்ளனர்.

வைத்திய நிபுணர்கள் சேவையை உள்வாங்கி மக்கள் வைத்தியசாலையில் தங்கி பயன்பெறச் செய்யுமாறும் வேண்டியுள்ளனர். கட்டடத் திருத் தம் முக்கியமாக சத்திர சிகிச்சைக்குரிய உப கரணங்கள் கொள்வனவுக் கும் நிதியை வழங்கவுள்ளனர்.இந்த வைத்திய சாலை, காரைநகர், வலிகாமம் வாழ் மக்க ளின் வைத்திய சேவையை வழங்கி வருவது குறிப்பிடத்தக்கதாகும். (எ-28)

## நிழல்படம் வழங்கல்

சுழிபுரம்- பறாளாய் சிவசுப்பிரமணிய சுவாமி ஆலயத்தில் கந்தரநுபூதி பாடல்களை மனனம் செய்து பாடியவர்களை ஆசிரியர் ஆ.கனகரத்தினம் படம் எடுத்து அதனை போட்டோ அல்பத்தில் வைத்து உரியவர்களுக்கு அன்பளிப்புப் பரிசாக வழங்கி வருகின்றார்.

கந்தரநுபூதியை ஆசார பூர்வமாகப் பாடுபவர்கள் உருத்திராட்ச மாலை அணிந்து பாட வேண்டும் என்ற செயற்பாட்டைக் கடந்த ஆண்டுகளில் டாக்டர் க.சிவராசா சமாதான நீதிவான் ஏற்படுத்தினார். பிழையின்றி பாடல்களை கற்க கந்தரநுபூதி இலவச வெளியீட்டை பஜனைச் சபையால் வருடா வருடம் செய்து வருகின்றார். (28)

# மரண அறிவித்தல்



## திருநாவுக்கரசு கண்ணம்மா (கிளி)

புளியங்கூடலைப் பிறப்பிடமாகவும், வேலணையை வசிப்பிடமாகவும் கொண்ட திரு நாவுக்கரசு கண்ணம்மா (கிளி) நேற்று (08.05.2012) செவ்வாய்க் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா - இலட்சுமி தம்பதி யரின் அன்புமகளும், தில்லையம் பலம் - வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற திருநாவுக் கரசுவின் அன்புமனை வியும், சந்திரா, ஆனந்த ரூபன், இந்திரா ஆகியோரின் அன்புத் தாயும், சிவபாதம், பவானந்தராணி, வேல்வேந்தன் ஆகியோரின் பாசமிகு மாமியும், காலஞ்சென்ற வர்களான சிவபாக்கியம், இராச ரத்தினம் மற்றும் இராஜலிங்கம், பரமேஸ்வரி ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.05.2012) புதன்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று. நண்பகல் 12 மணியளவில் தகனக்கிரியைகளுக்காக பூதவுடல் சுருவில் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
வேலணை மேற்கு, வேலணை : 08 ஆனந்தரூபன் (மகன்)

# மரண அறிவித்தல்

## சுப்பர் சோமு



ஆவரங்கால் கிழக்கு, புத்தூரைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பர் சோமு 06.05.2012 ஞாயிற்றுக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பர் - சின்னப்பெட்டை தம்பதியரின் அன்பு மகனும் சிவப்பியின் அன்புக் கணவரும் இராசலிங்கம், வில்வராணி, கமலேஸ் வரி, தர்மராசா, அனுஷா, கரன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், தவராணி, தேவராசா, பாலேந்திரா, சிவேஸ்வரன், சுதர்ஷினி, சுரேகா ஆகியோரின் அன்பு மாமனும், குகந்தன், ரம்மியா, கிந்துஷா, சயந்தன், கரீஸ், மாகித்தியா, ஜீவிகன், றுட்ஷான், யூட்ஷன், நித்தியா, தனுஸ் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.05.2012) புதன்கிழமை பிற்பகல் 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக ஆவரங்கால் கிழக்கு, புத்தூர் கவுடுதூவு இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஆவரங்கால் கிழக்கு,
புத்தூர்.

தகவல்:
குடும்பத்தினர்.

மலேசியா, இத்தாலி, பிரான்ஸ், நோர்வே லண்டன், கனடா. போன்ற நாடுகளுக்கான Visit, Work and Job, Settlement, Student, Visa க்கள் பெறுவதற்கான ஆலோசனை வழங்கப்படும்.
தொடர்பு : 0777-698078

# 5 ஆம் ஆண்டு நினைவஞ்சலி முதலாம் ஆண்டு





**கணபதி சின்னையா**
தோற்றம் 20★01★1942 மறைவு 29★04★2007

**சின்னையா சுப்புலட்சுமி**
தோற்றம் 13★02★1949 மறைவு 21★04★2011

எம் உயர்வுக்காக உதிரம் கொடுத்து வளர்த்தீர்கள்
நாம் உயர்ந்தவேளை நீங்களோ எமைவிட்டு மறைந்தீர்கள்
ஆண்டுகள் பல சென்றாலும் உம் நினைவுடனேயே நாம் வாழ்வோம்.
உங்கள் ஆத்ம சாந்திக்காக ஆண்டவனை ஆயிரம் முறை பிரார்த்திக்கின்றோம்.

கைதடி தெற்கு.

பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், உறவுகள்.

(45.6.7)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

## ஜெகதீஸ்வரன் ஜெயகரன்

தோற்றம்
16★09★1978

மறைவு
22★04★2011



எம் குடும்பத்து... முத்தே... நீ...!
எமக்கெனப்பிறந்திட்ட இன்னொரு தந்தையடா...
உன்னொடு போயிட்டு எம் வாழ்வின் சந்தோஷம்.
துன்பத்தின் போதெல்லாம்.
எமை நீ....
தூணாய் நின்று தாங்கினாய்...
நாம் உனை தாங்குமுன்பே
விண்தேடி ஓடினாய்...

ஆண்டொன்று ஆனபோதும்
ஆறவில்லை எம் மனசு
நெஞ்செல்லாம் நீ இருக்க
எமக்கேன் இவ் வாழ்வு...
எமை தேடி ஒரு தடவை
திரும்ப நீ வாராயோ
அழுகிறோம் கரை புரண்டு
தேம்பி உனை எதிர்பார்த்து.

இவ்வுலகில் யாரும் நிலைப்பதில்லை
என்பதால்
இருக்கின்றோம் நம்பி நாமும்
உனை ஓர் நாள் சந்திப்போம்
நீ உறங்கு நிம்மதியாய்
ஆண்டவனின் அடிதனிலே
துதிக்கின்றோம் இந் நாளில்
உன் ஆத்ம சாந்திக்காய்.........

...டல் தெற்கு,
ஊர்காவற்றுறை.

குடும்பத்தினர்
மயூரன் (தம்பி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ஐந்து மாவட்டங்களிலும் பெரும்பாலும் மேகக் கூட்டத்துடன் கூடிய வானிலை நிலவும்.

# நுளம்புப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்த கழிவு அகற்றலில் தேசிய கொள்கை

## சுகாதார அமைச்சு அங்கீகாரம்

நுளம்புப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்துவதைப் பிரதான நோக்காகக் கொண்டு கழிவுப்பொருள்களை அகற்றுவது தொடர்பாகத் தேசிய கொள்கையொன்றை வகுப்பதற்கு சுகாதார அமைச்சு அங்கீகாரம் வழங்கியுள்ளது.

சுற்றாடல் துறை அமைச்சும், உள்ளூராட்சி மாகாண சபைகள் அமைச்சும் இணைந்து இந்தத் தேசிய கொள்கையைத் தயாரிக்கவுள்ளது. இதற்கு சுகாதார அமைச்சு முழுமையான ஒத்துழைப்பை நல்கும் என்று சுகாதார அமைச்சின் அதிகாரியொருவர் நேற்றுமுன்தினம் தெரிவித்தார்.

இதேவேளை சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேனவின் அறிவுறுத்தலுக்கு அமைய நுளம்புப் பெருக்கம் தொடர்பாகச் சுகாதார அமைச்சின் நிபுணர்கள் மேற்கொண்ட ஆய்வில் நுளம்புக் குடம்பிகள் குறித்த பல உண்மைகள் தெரியவந்திருக் கின்றன என்றும் அந்த அதிகாரி கூறினார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஆய்வின்படி டெங்கு நுளம்புகள் மனிதனைக் குத்தும் கால எல்லை அதிகரித்திருப்பது தெரியவந்துள்ளது. அதாவது, டெங்கு நுளம்பு தினமும் காலை 6 மணி தொடக்கம் முற்பகல் 10 மணிவரையும், மாலையில் 4 மணி முதல் மாலை 6.30 மணி வரையும் குத்துவதாக ஏற்கனவே நம்பப்பட்டது. ஆனால் இந்த நுளம்புகள் இரவு 10- 11 மணி வரையும் குத்துவது புதிய ஆய்வின் மூலம் கண்டறியப்பட்டிருக்கின்றது.

அதேநேரம் டெங்கு நுளம்புகள் தேங்கி நிற்கும் அசுத்தமான நீரில்தான் பல்கிப் பெருவதாக ஏற்கனவே கூறப்பட்டது. ஆனால் கிழக்கு மாகாணத்தில் டெங்கு நுளம்புகளின் பெருக்கத்தில் 46 வீதம் கிணறுகளில் இடம்பெறுவதும் ஆய்வின் மூலம் தெரியவந்திருக்கின்றது.

டெங்கு நுளம்புகள் தமது வாழ்வில் நான்கு தடவைகள்தான் முட்டையிடும். ஒவ்வொரு தடவையும் முட்டையிடுவதற்காக பல தடவைகள் மனிதனை குத்தி இரத்தம் குடிக்கும் பண்பை அந்த நுளம்புகள் கொண்டிருக்கின்றன. ஏனைய நுளம்புகள் முட்டையிடுவதற்காக ஒருதடவையே மனிதனைக் குத்தி இரத்தம் குடிக்கும் என்பதும் தெரியவந்துள்ளது என்றும் அந்த அதிகாரி மேலும் கூறினார். (ந)

## வெசாக் தினத்தில் விபத்து 276 பேருக்கு காயம்

அவசர விபத்து சிகிச்சைப் பிரிவில் 211 பேர் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

வெசாக் போயா தினத்தில் வெவ்வேறு விபத்துக்களினால் காயமடைந்த 276 பேர் கொழும்பு தேசிய வைத்தியசாலையிலும், களுபோவில வைத்தியசாலையிலும் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதில் கொழும்பு தேசிய வைத்தியசாலையின் அவசர விபத்துச் சிகிச்சைப் பிரிவில் 211 பேர் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களில் 69 பேர் வாகன விபத்துக்களினாலும், 33 பேர் வீட்டில் ஏற்பட்ட விபத்துக்களினாலும், 19 பேர் சித்திரவதை செய்யப்பட்டதனாலும் காயமடைந்து சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

காயமடைந்த 65 பேர் கொழும்பு களுபோவில வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். (ந)

# ஒலிம்பிக் ஆடைத் தயாரிப்பில் தொழிலாளர் உரிமைகள் மீறப்படுகின்றன

## இலங்கையில் உள்ள 'நெக்ஸ்ட்' தொழிற்சாலை மீது பிரிட்டன் நாளிதழ் குற்றச்சாட்டு

பிரிட்டனில் நடக்கவுள்ள ஒலிம்பிக் போட்டிகளின் ஆரம்ப விழாவின் போது பிரிட்டன் விளையாட்டு வீரர்கள் அணியவுள்ள ஆடைகள் இலங்கையில், தொழிலாளர்களின் அடிப்படை உரிமைகள் மறுக்கப்பட்ட நிலையில் தயாரிக்கப்படுவதாகக் குற்றச்சாட்டுக்கள் எழுந்துள்ளன.

ஒலிம்பிக் ஆரம்ப விழாவில் பிரிட்டன் அணிக்கான அதிகாரபூர்வ ஆடைகளைப் பிரிட்டனிலுள்ள 'நெக்ஸ்ட்' ஆடை விற்பனை நிறுவனம் வெளியிட்ட சில நாள்களுக்குள் இந்தக் குற்றச்சாட்டுக்கள் லண்டனின் 'தி இன்டிபெண்டன்' நாளிதழில் வெளியாகியுள்ளன.

> அடிமட்டச் சம்பளத்துக்கு, அளவுக்கதிகமான மேலதிக நேரத்துக்கு, அந்தத் தொழிலாளர்களிடம் வேலை வாங்கப்படுவதாகக் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

நெக்ஸ்ட் நிறுவனத்தின் இலங்கையிலுள்ள தொழிற்சாலையில் சுமார் 2500 தொழிலாளர்கள் லண்டன் 2012 என்ற ஒலிம்பிக் விழாவுக்கான ஆடைகளைத் தயாரிக்கும் பணியில் ஈடுபட்டிருக்கிறார்கள். அடிமட்டச் சம்பளத்துக்கு, அளவுக்கதிகமான மேலதிக நேரத்துக்கு, அந்தத் தொழிலாளர்களிடம் வேலை வாங்கப்படுவதாகக் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

இதனைப் பிரிட்டனின் முன்னணிப் பத்திரிகைகளில் ஒன்றான 'தி இன்டிபெண்டன்' வெளியிட்டுள்ளமை பெரும் சர்ச்சையைத் தோற்றுவித்துள்ளது.

அது தொடர்பில் விசாரணை ஒன்று நடத்தப்பட உள்ளது என்றும் இதற்கு அந்த நிறுவனம் உடன்பட்டிருக்கின்றது என்றும் 'தி இன்டிபெண்டன்' நிறுவனத்தின் செய்தியில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதேவேளை உலகளாவிய ,விளையாட்டுப் போட்டியில் உத்தியோகபூர்வமாகப் பங்கெடுக்கும் நிறுவனத்தின் தகைமையைக் கேள்விக் குட்படுத்தக்கூடிய இந்தக் குற்றச் சாட்டை நெக்ஸ்ட் நிறுவனம் மறுத்திருக்கிறது.

பிலிப்பைன்ஸ், சீனா உள்ளிட்ட உலகின் பல நாடுகளிலும் இவ்வாறான ஒலிம்பிக்கில் பங்கெடுக்கும் பிரபல நிறுவனங்களின் தொழிற்சாலைகளில் தொழிலாளர்களின் அடிப்படை மனித உரிமைகள் மீறப்படுகின்ற நிலைமையே இருப்பதாக ப்ளே ஃபெயார் 2012 என்ற பிரசாரத்தை முன்னெடுத்துள்ள குழுவினர் குற்றம் சாட்டியிருக்கிறார்கள். (ந)

## சார மரம் முறிந்து தொழிலாளி காயம்

தென்மராட்சி, மே 9

கட்டுமானப் பணிகளுக்காகக் கட்டப்பட்டிருந்த சார மரம் முறிந்து கீழே நின்ற தொழிலாளியின் தலையை தாக்கிக் காயப்படுத்தியது.

இந்தச் சம்பவம் மந்துவிலில் நேற்று முன்தினம் இடம்பெற்றது. மந்துவில் கிழக்கைச் சேர்ந்த நடேசன் ஜெயக்குமார் (வயது-26) என்பவரே தலையில் காயமடைந்தநிலையில் சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (வ-9)


# IELTS

http://edu.kugroup.info/ielts

Knowledge Universe Sri Lanka

June/30th -Exam in Jaffna

KU's IELTS hotline : 0777302882

புதிய தனிப்பட்ட வகுப்புகள் ஆரம்பம்

Authorized IELTS registration & Training Centre

K.U Educaiton,No 75,Temple Road,Jaffna


## காணவில்லை



ஆவரங்கால் கிழக்கு, மணற்பகுதி புத்தூரைச் சேர்ந்த 43 வயதுடைய கனகசபை சிவகுமார் என்பவர் கடந்த (31.04.2012) திங்கட் கிழமை தொடக்கம் காணாமற் போயுள்ளார். கண்டவர்கள் கீழ்க்காணும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

தொடர்புகளுக்கு : 077 7606533, 077 7276296
077 8642185

## ஊர்காவற்றுறை - புளியங்கூடல்
## இந்தன் முத்து விநாயகர் ஆலய
## நந்தன வருஷ வருடாந்த மகோற்சவ விஞ்ஞாபனம் 2012

★ மகா கணபதி ஹோமம் - 10.05.2012 வியாழக்கிழமை மு.ப. 9.00 மணிக்கு

★ கொடியேற்றத் திருவிழா உற்சவம் - 11.05.2012 வெள்ளிக்கிழமை மு.ப. 10 மணிக்கு

★ சப்பரத்திருவிழா உற்சவம் - 18.05.2012 வெள்ளிக்கிழமை இரவு 8.00 மணிக்கு

★ தேர்த்திருவிழா உற்சவம் - 19.05.2012 சனிக்கிழமை மு.ப. 10.30 மணிக்கு

★ தீர்த்தத்திருவிழா உற்சவம் - 20.05.2012 ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10.00 மணிக்கு

★ வைரவர் பொங்கல் - 21.05.2012 திங்கட்கிழமை மாலை 5.00 மணிக்கு

ஆலய பரிபாலனசபையினர்

(17798) (6-8-9)

## அரசாங்க அறிவித்தல்
## கேள்வி அறிவித்தல்

பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை, யாழ்ப்பாணம்.

வேலணைப் பிரதேச வைத்தியசாலையில் உள்ள மருத்துவமாது பழைய விடுதியை நிலமட்டத்துடன் அகற்றுவதற்கு கேள்விகள் கோரப்படுகின்றன. கேள்விகள் சமர்ப்பிக்க விரும்புவோர் ஆஸ்பத்திரி வீதியில் உள்ள எமது அலுவலகத்துடன் 17.05.2012 இற்கு முன்னர் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

**வைத்திய கலாநிதி**
**ஆ.கேதீஸ்வரன்,**
பிராந்தியப் பணிப்பாளர்,
சுகாதார சேவைகள்
பணிமனை, யாழ்ப்பாணம்.

## தவறிவிட்டது

கண்டி வீதி, சங்கத்தானை, சாவகச்சேரி என்னும் முகவரியைச் சேர்ந்த திருமதி சிவரஞ்சனி சந்திர மோகன் என்பவரது தே.அ.அ.(667362482 V) 12.04.2012 அன்று திருநெல்வேலிக்கும், கோண்டாவிலுக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் 0770440117 என்னும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

## தொலைந்துவிட்டது

நவாலியைச் சேர்ந்த சிவனேசராசா கஜந்தன் என்பவரது தே.அ.அட்டை (871243425V) நவாலிக்கும் ஆனைக்கோட்டைக்குமிடையில் [illegible] தொடர்பு கொள்ளவும்.

தொலைபேசி : 077 8697185

## மரண அறிவித்தல்



### சவரிமுத்து இராசேந்திரன்

(J.P, B.Com, தேசமாணி, ஓய்வுபெற்ற ஆங்கில ஆசிரியர், ஓய்வுபெற்ற ஆங்கில விரிவுரையாளர் தொழில்நுட்ப கல்லூரி, இரத்தினபுரி)

உடுவிலைப் பிறப்பிடமாக வும், அவிசாவளையை வசிப்பிட மாகவும் தற்போது UK இல் வசித்து வந்தவருமாகிய S.S. இராஜேந்திரன் (25.04.2012) புதன்கிழமை காலமானார்.

அன்னார் சரஸ்வதியின் பாசமிகு கணவரும் காலஞ் சென்றவர்களான சவரிமுத்து - இராசம்மா தம்பதியரின் பாசமிகு மகனும், காலஞ்சென்றவர்களான பாலு - சின்னப்பிள்ளை தம்பதியரின் மருமகனும், தேன்மொழி, இராஜ்குமார் ஆகியோரின் அன்புத்தந்தையும், கருணாநிதி, சர்மினி ஆகியோரின் அன்பு மாமனும் காலஞ்சென்றவர்களான தேவசகாயம், றெஜீனா மற்றும் மரியம்மா எலிசபெத் ஆகியோரின் சகோதரனும், காலஞ்சென்றவர்களான கண்ணுச்சாமி, செபஸ்தியாம்பிள்ளை, சிவராசா, அமிர்தராசா மற்றும் அன்னம்மா, கமலாதேவி, திலகராசா, பத்மராசா, வரதராசா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (09.05.2012) புதன்கிழமை 9.45 மணிக்கு ST. DYFRIG'S CHURCH, TREFFOREST, CF 37, 1DB இல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு முற்பகல் 11 மணிக்கு CLYNTAFF சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

உடுவில் செபமாலை மாதா ஆலயத்தில் இன்று மாலை 4.30 மணிக்கு இவரது இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:
H.P- 00447502206 752 } தேன்மொழி
T.P- 00441443217871 } லண்டன்
H.P- திலகராசா 0778377134, றவினாத் 0779587110

தகவல்: குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



நல்லூர் பிரதேச செயலகத்தில் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தராகக் (J/118,J/120) கடமையாற்றும் திருமதி க.வதனி அவர்களின் அன்புத் தந்தை

**புண்ணியமூர்த்தி வேலும்மயிலும்**

அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

பிரதேச செயலகம், நல்லூர். நல்லூர் பிரதேச செயலக உத்தியோகத்தர் நலன்புரி சங்கம்


# பெண் சாரணிய வழிகாட்டுநருக்கான கூட்டம்

யாழ்ப்பாணம், மே 9

பெண் சாரணிய வழிகாட்டுநருக்கான கூட்டம் நாளை வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு யாழ்.மத்திய கல்லூரி ஆரம்பப்பிரிவு பாடசாலையில் நடைபெறவுள்ளது.

வடமராட்சி, தென் மராட்சி, தீவகம், யாழ்ப்பாணம் ஆகிய வலயங்களைச் சேர்ந்த பெண் சாரணிய வழிகாட்டுநர்களை மேற்படி கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு வடமாகாண சாரணிய ஆணையாளர் திருமதி என்.தர் மகுலசிங்கம் அறிவித்துள்ளார்.

(வ)

## சமய சந்நிதிகளில்

கண்டி வீதி கைதடி ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலயப் பெருந் திருவிழா நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெறும்.

எதிர்வரும் 19ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு தேர்த் திருவிழாவும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமை தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும்.

(வ-9)

* * *

யாழ்ப்பாணம், மே 9

பண்டத்தரிப்பு பத்திமா அன்னை திருத்தல திருநாள் திருவிழாக்கள் கடந்த 4 ஆம் திகதி ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றன.

எதிர்வரும் 13 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வரை நடைபெறும் திருவிழாக்களில் மாலை 4.30 மணிக்கு வழிபாடுகள் இடம்பெறும்.

இறுதி திருநாளான எதிர்வரும் 13 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 5.30 மணிக்கு திருப்பலியும் காலை 6.30 மணிக்கு திருநாள் திருப்பலியும் நண்பகல் 12 மணிக்கு நோயாளருக்கான திருப்பலியும் மாலை 4 மணிக்கு மாலைத் திருப்பலியும் நடைபெறவுள்ளன.

(வ-14)

## கருத்தரங்கு

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் பரீட்சைத்திணைக்களத்தின் ஊடாக ஆண்டுதோறும் நடத்தப்படும் அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களுக்கான இறுதி நிலைப் பரீட்சை வழிகாட்டல் கருத்தரங்கு நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 12 ஆம் திகதி சனிக்கிழமை பண்டாரவளை சிவ சுப்பிரமணிய சுவாமி ஆலய மண்டபத்தில் பதுளை மாவட்டத்தைச் சேர்ந்த அறநெறி ஆசிரியர்களுக்கும், 13 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஹற்றன் கல்லூரியில் நுவரெலியா மாவட்டத்தைச் சேர்ந்த அறநெறி ஆசிரியர்களுக்கும், காலை 9 மணி முதல் மாலை 3 மணி வரையும் நடைபெறும். (ந)


SUZUKI MARUTI
Count on us

JAPANESE TECHNOLOGY

இந்த அரிய வாய்ப்பு மே 15 வரை மட்டுமே



WAGONR — உங்கள் சேமிப்பு ரூ 350,000/-



Zen ESTILO — உங்கள் சேமிப்பு ரூ 325,000/-



ALTO K10 — உங்கள் சேமிப்பு ரூ 280,000/-

½ நீங்கள் செலுத்துங்கள்.....

வரியினால் அதிகரிக்கப்பட்ட விலையை

நாங்கள் செலுத்துகின்றோம் ½



ALTO — உங்கள் சேமிப்பு ரூ 280,000/- (ALTO Lxi), ரூ 287,000/- (ALTO Special), ரூ 252,975/- (ALTO Sportz)



Omni — உங்கள் சேமிப்பு ரூ 220,000/-



MARUTI 800 — உங்கள் சேமிப்பு ரூ 267,450/- (Sportz), ரூ 235,000/- (M 800)

சகல மகிழ்ச்சியும்...
SUZUKI MARUTI உடன்...

இதோ அதிக சேமிப்பிற்கு உங்களுக்கு கிடைக்கின்ற சிறந்த மற்றும் இறுதி வாய்ப்பு புதிய வரியினால் அதிகரிக்கப் பட்ட வரிப் பணத்தில் சரி பாதியை சேமித்துக் கொள்ள அரிய வாய்ப்பை AMW உங்களுக்கு வழங்குகிறது வரிப் பணத்தில் பாதியை சுமந்துக் கொண்டு உங்களுக்கு சிறந்த சேமிப்பு வரத்தை உரித்தாக்க நாம் தயார் அதிகரிக்கப் பட்ட வரி பணத்தில் பாதியை நீங்கள் செலுத்துங்கள் மிகுதி எம்மிடமிருந்து இந்த அதிஷ்டம் மே 15 வரை மட்டுமே ஆகவே தாமதிக்காமல் இன்றே பதிவு செய்யுங்கள்

உடனடி பணம் செலுத்துதலுக்கும்/லீசிங் முறையில் வாகனம் கொள்வனவு செய்யும்போதும் இச்சலுகை செல்லுபடியாகும்.

இன்றே பதிவு செய்துகொள்ளுங்கள்
30 நாட்களில்
வாகனம் உங்கள் கையில்

| | M800 | M800 Sportz | Omni | ALTO Lxi | ALTO | Alto Sportz | ALTO K10 | Zen ESTILO | WAGONR |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| New Price After Duty Increase | 1,785,000 | 1,857,450 | 1,820,000 | 2,165,000 | 2,237,450 | 2,252,975 | 2,360,000 | 2,650,000 | 3,050,000 |
| Discount from new price | 235,000 | 267,450 | 220,000 | 280,000 | 287,450 | 252,975 | 280,000 | 325,000 | 350,000 |
| Final Special Price | 1,550,000 | 1,590,000 | 1,600,000 | 1,885,000 | 1,950,000 | 2,000,000 | 2,080,000 | 2,325,000 | 2,700,000 |

All prices inclusive of VAT

OUR LEASING PARTNERS
BOC 0112 204578 | CDB 0777 702613 | Leasing 0112 660330 | Capital Leasing 0773 863971 | LB FINANCE 0773 589048

AMW bringing the world to you
An Al-Futtaim group company

அஸோசியேட் மோட்டர்வேஸ் (தனியார்) நிறுவனம்


ஈ மெயில் : sales@amwltd.com

துரித அழைப்பு : 0117609609

All branches open on Sundays too. 9.00 a.m. to 4.00 p.m.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# புதுக்குடியிருப்பில் மினி சூறாவளி வீட்டுக் கூரைகள் காற்றில் பறந்தன





புதுக்குடியிருப்பு, மே 9

புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் பிற்பகல் ஒரு மணி நேரம் வீசிய மினி சூறாவளியால் சுமார் 130 க்கும் மேற்பட்ட தற்காலிக வீடுகள் சேதமடைந்ததாக புதுக்குடியிருப்பு உதவி அரச அதிபர் எஸ்.ஜெயக்காந் தன் தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் பிற்பகல் இரண்டு மணியில் இருந்து மூன்று மணிவரை ஒரு மணி நேரமாக மினி சூறாவளி வீசியது. இந்த மினி சூறாவளியால் உடையார்கட்டு வடக்கு, உடையார்கட்டு தெற்கு, சுதந்திரபுரம், வள்ளிபுனம், தேவிபுரம் கிராம சேவையாளர் பிரிவுகளில் மீளக் குடியமர்ந்துள்ள மக்கள் பாதிக்கப்பட்டனர். இவர்களின் 130க்கும் மேற்பட்ட தற்காலிக வீடுகள் சேதமடைந்தன. வீடுகளின் கூரைகள் காற்றில் தூக்கி வீசப்பட்டன. மரங்களும் முறிந்து வீடுகளுக்கு மேல் விழுந்ததால் அவை மோசமாகச் சேதமடைந்தன. எனினும் உயிர்ச்சேதம் எதுவும் ஏற்படவில்லை என்ப் புதுக்குடியிருப்பு உதவி அரச அதிபர் 'உதயனு'க்குத் தெரிவித்தார்.

சேதமடைந்த வீடுகளை திருத்தியமைக்கும் பணிகளில் மக்கள் தற்போது ஈடுபட்டு வருவதாகவும் அவர் கூறினார்.

(த-3)

## ரயில் மோதி யுவதி பரிதாப மரணம்

வவுனியா,மே 9

தண்டவாளத்தில் நின்ற பசுக்கன்று ஒன்றைக் காப்பாற்றுவதற்கு முயன்ற யுவதி ரயிலில் மோதுண்டு பரிதாபகரமான முறையில் உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் கடந்த வியாழக்கிழமை பிற்பகல் 4.30 மணியளவில் வவுனியா பண்டாரப் புளியங்குளத்தில் இடம்பெற்றுள்ளது.

அதே இடத்தை வசிப்பிடமாகக் கொண்ட தில்ஹானி மஹேசிகா என்ற 19 வயது நிறைந்த யுவதி ரயில் வந்து கொண்டிந்தபோது தண்டவாளத்தில் நின்ற பசுக்கன்று ஒன்றைக் காப்பாற்றுவதற்கு முயன்றுள்ளார்.

அப்பொழுது வவுனியாவிலிருந்து கொழும்பு கோட்டை நோக்கிச் சென்று கொண்டிருந்த கடுகதி ரயில் இவர் மீது மோதியதால் சம்பவ இடத்திலேயே அந்த யுவதி மரணமடைந்துள்ளார். இந்தச் சம்பவம் அந்தப் பகுதி மக்களைபெரிதும் பாதித்துள்ளதுடன் கவலையிலும் ஆழ்த்தியுள்ளது. (க)

## மின்னல் தாக்கி ஒருவர் சாவு

திருகோணமலை,மே9

திருகோணமலை மாவட்டத்தில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை மின்னல் தாக்கி ஒருவர் மரணமடைந்துள்ளார்.

முள்ளிப்பொத்தானைப் பகுதியில் ஒருவர் கார் ஒன்றை சேவிஸ் செய்து கொண்டிருந்த சமயம் இடி மின்னல் தாக்கத்திற்குள்ளாகி கந்தளாய் வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லும் வழியில் உயிரிழந்துள்ளார்.

எம்.எம்.முகம்மட் நஸீர் (வயது 36) என்ற மூன்று பிள்ளைகளின் தந்தையே உயிரிழந்தவராவார்.

புல்மோட்டைப் பகுதியில் கடலுக்குச் சென்று திரும்பிக் கொண்டிருந்த போது மீரா நெய்னா சஹாப் தீன் ( வயது- 54 ) என்ற நபர் இடி மின்னல் தாக்கி விழுந்துள்ளார்.

இவரை கடற்படையினர் காப்பாற்றி புல்மோட்டை வைத்தியசாலையில் அனுமதித்த பின்னர் மேலதிக சிகிச்சைக்காக திருகோணமலை பொது வைத்தியசா லைக்கு மாற்றப்பட்டுள் ளார்.

(ச)

# போதும் அகதி வாழ்க்கை எம்மை மீள்குடியமர்த்துங்கள்

**8 வருடங்களாக அகதி வாழ்வு வாழும் எமக்கு நிரந்தரத் தீர்வைப் பெற்றுத் தாருங்கள் எனக் கூட்டமைப்பிடம் கோரிக்கை விடுத்தனர்.**

திருகோணமலை, மே 9

எவ்வளவோ வசதியாக வாழ்ந்த நாங்கள் சுமார் ஆறு வருடங்களாக அகதி வாழ்க்கை வாழ்கின்றோம். எப்படியாவது இந்த அகதி வாழ்க்கைக்கு முற்றுப்புள்ளி வைத்து நாங்கள் சொந்த இடங்களில் மீளவும் குடியேற வேண்டும். இதற்கு எமது பிரதிநிதிகளான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் உதவி செய்ய வேண்டும்.

- இவ்வாறு வேண்டுகோள் [illegible]த்துள்ளனர் சம்பூரிலிருந்து இடம்பெயர்ந்து அகதி முகாம்களில் வாழும் மக்கள்.

திருகோணமலை மாவட்டத்தில் சம்பூரில் இருந்து இடம்பெயர்ந்து, கிளிவெட்டி இடைத்தங்கல் நலன்புரி முகாமில் வசிக்கும் தமிழ் மக்களைக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான பொன். செல்வராசா, பா.அரியநேத்திரன் ஆகியோர் சென்று பார்வையிட்டு அவர்களின் குறைகளைக் கேட்டறிந்தனர். இதன்போதே பிரதேச மக்கள் இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

இந்த மக்கள் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் மேலும் தெரிவித்ததாவது:-

''2006 ஆம் ஆண்டு சம்பூரில் இருந்து இடம்பெயர்ந்து இரண்டு வருடங்கள் மட்டக்களப்பிலும் அதன்பின்னர் கிளிவெட்டியிலும் சுமார் 6 வருடங்களாக அகதிகளாக வாழும் நாங்கள் பல துயரங்களை எதிர்நோக்குகின்றோம்.

நாங்கள் வசிக்கும் தகரத்திலான கொட்டில்களில் அதிக வெப்பமாக இருப்பதனால், காலை 8 மணி தொடக்கம் மாலை 4 மணி வரை குறிப்பிட்ட கொட்டகைக்குள் நுழைய முடியாதுள்ளது. அத்துடன், மலசல கூட வசதிகள், தண்ணீர் வசதிகள், சுகாதார வசதிகள் என்பன போதியளவு வழங்கப்படவில்லை. பொதுச் சுகாதார உத்தியோகத்தர்கள் முகாமுக்கு வருகை தருவதில்லை.

அத்துடன், உலக உணவுத் திட்டத்தின்கீழ் எமக்கு வழங்கப்பட்டு வந்த உலர் உணவு தற்போது அரசால் நிறுத்தப்பட்டுள்ளது. தொண்டர் நிறுவனங்கள் எங்களுக்குத் தேவையான உதவிகளை வழங்குவதற்கு முன்வந்தாலும் படையினர் அதற்கு அனுமதி வழங்காமையால் அந்த உதவிகளும் எமக்குக் கிடைப்பதில்லை.

அண்மையில் இலங்கைக்கு வந்த இந்திய நாடாளுமன்றக் குழுவினர் கூட, எங்களின் முகாமுக்கு வந்து நாங்கள் அனுபவிக்கும் துன்பங்களைப் பார்வையிடாமல் சென்றமை எமக்கு மிகுந்த வேதனையாக இருக்கின்றது- என்றனர்.

(ச-சி)

## சுயேச்சைக் குழு உறுப்பினர் பதவி விலகினார்

திருகோணமலை,மே9

கிண்ணியா நகரசபையின் சுயேச்சைக் குழு உறுப்பினர் சட்டத்தரணி எம்.றிஸ்வான் முகம்மது தனது உறுப்பினர் பதவியை இராஜிநாமாச் செய்துள்ளார்.

இதனால் ஏற்படும் வெற்றிடத்துக்கு சுயேச்சைக்குழு விருப்பு வாக்குப் பட்டியலில் அடுத்த இடத்தில் இருக்கும் எம்.ஏ. நிஜாம்தீன் நியமிக்கப்படவுள்ளார்.

கிண்ணியா நகரசபையில் இந்த சுயேச்சைக்குழுவுக்கு ஓர் ஆசனம் கிடைத்தது.

இந்த ஆசனத்தை சுழற்சி முறையில் விருப்பு வாக்கு அடிப்படையில் முதல் நான்கு இடங்களையும் பெற்றவர்களுக்கு வழங்குவதென்ற தீர்மானத்தின் அடிப்படையிலேயே இந்த இராஜிநாமா இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(ச-40)

## அழைப்பிதழை அனுப்ப உத்தரவு

மட்டக்களப்பு,மே9

அக்கரைப்பற்று மாநகர சபையின் அடுத்த அமர்வு தொடர்பான உத்தியோகபூர்வ அழைப்பிதழை எதிர்க்கட்சித் தலைவர் எஸ்.எல்.எம். ஹனீபா மதனிக்கு அனுப்பி வைக்குமாறு அக்கரைப்பற்று மாநகர சபையின் ஆணையாளருக்கு அம்பாறை மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் அசங்க ரத்நாயக்க உத்தரவிட்டுள்ளார்.

அடுத்த சபை நடைபெறும் திகதி, நேரம் என்பவற்றை சின்னலெப்பை முகம்மது ஹனீபா உட்பட சகல உறுப்பினர்களுக்கும் உத்தியோகபூர்வமாக அறிவிக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அவர் தெரிவித்தார்.

அக்கரைப்பற்று மாநகர சபையின் கடந்த மார்ச் மாதம் நடந்த அமர்வில் தான் கலந்துகொண்ட போதும், வரவுப் பதிவேட்டில் கையொப்பமிடுவதற்கு தனக்கு இடமளிக்கப்படவில்லை என்று தெரிவித்து அம்பாறை மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளருக்கு மாநகர சபையின் முஸ்லிம் காங்கிரஸ் சார்பான எதிர்க்கட்சித் தலைவர் எஸ்.எல்.எம். ஹனீபா மதனி எழுத்து மூலம் முறைப்பாடு ஒன்றை ஏற்கனவே அனுப்பி வைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.(ச)

## வாக்கரையில் கரைவலை மீன்பிடி

மட்டக்களப்பு,மே9

மட்டக்களப்பு, வாகரைப் பிரதேசத்தில் மீனவர்கள் கரைவலை மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர்.

புத்தளம், சிலாபம், உடப்பு, நீர்கொழும்பு உட்பட பல வெளிமாவட்டங்களில் வசிக்கும் மூவினத்தை யும் சேர்ந்த மீனவர்கள், வாகரை கடற்கரையோரங்களில் குடிசைகள் அமைத்து அங்கு மாதக்கணக்காக தங்கியிருந்து தமது தொழிலை மேற்கொண்டு வருகின்றனர்.

(ச)

# திருகோணமலையில் நியாயமற்ற கைதுகள்

## நிலைமையை விளக்கி ஜனாதிபதிக்கு ஆனந்தசங்கரி கடிதம்

கொழும்பு, மே.9

திருகோணமலையில் நியாயமற்ற வகையில் சுற்றி வளைப்புகள் இடம்பெறுவதுடன் இளைஞர், யுவதிகள் மற்றும் முதியோரும் கைது செய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். அண்மைக்காலமாக இவ் வாறான செயற்பாடுகள் தொடர்ந்து இடம்பெற்று வருகின்றன. இதனால் எமது மக்கள் பெரும் அவலத்தை எதிர்கொண்டுள்ளனர். நடந்து முடிந்த அவலங்களைப் புதுப்பிப்பனவாகவே இவை அமைந்துள்ளன.

இந்த விடயம் தொடர்பாகத் தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயலாளர் நாயகம் வீ.ஆனந்தசங்கரி ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

அண்மையில் திருகோணமலையில் நியாயமற்ற முறையிலும் எதுவித காரணம் இன்றியும் பல இளைஞர்களும், யுவதிகளும், முதியவர்களும் கைதுசெய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இத்தகைய கைதுகள் பிற இடங்களிலும் சிறிய அளவில் நடைபெற்று வருகின்றன. துரதிர்ஷ்ட வசமாக எம் மக்களுக்கு குறிப்பாக இளைஞர்களுக்கு பெரும் அவலத்தை ஏற்படுத்திய சம்பவங்கள் மீண்டும் புதுப்பிக்கப்படுவதுபோல் தோன்றுகின்றது.

திருகோணமலையில் நடந்த சம்பவம் மீண்டும் அங்கு நடைபெறாதென்றோ அல்லது வேறு இடத்துக்குப் பரவாதென்றோ எதுவித உத்தரவாதமும் இல்லை. இது மக்களுக்கு பயத்தையும் பீதியையும் ஏற்படுத்தியுள்ளது.

பெற்றோருக்கு உள்ள ஒரேயொரு வழி தம் பிள்ளைகளை வெளிநாடு உட்பட வேறு இடங்களுக்கு அனுப்பி வைப்பது அல்லது ஒரேயொரு மாற்றுவழியாக அவர்களை மறைத்து வைப்பதே ஆகும். துரதிர்ஷ்ட வசமாக ஜனாதிபதி என்ற வகையில் திருகோணமலை [illegible] பின்னர் இரா.சம்பந்தனின் ஆட்சேபனையைக் கவனத்தில் எடுக்கத் தவறிவிட்டீர்கள். அந்தச்செயல் வடகிழக்கிலுள்ள மக்களுக்குப் பெரும் பதற்றத்தை ஏற்படுத்தி உள்ளது.

இந்த நிலை தொடர்ந்தால் நாம் மீண்டும் பதற்றமான சூழலுக்குள்ளேயே செல்ல நேரிடும்.

வடகிழக்கே நிலை கொண்ட இராணுவத்தின் பிரசன்னத்தை நியாயப்படுத்துவதற்காகவே ஏறக்குறைய 30 ஆண்டுகளுக்கு மேல் நிலவிய கொடூரமான நிலைமையை அரசு புதுப்பிக்கின்றது என மக்கள் சிந்திக்க ஆரம்பித்துள்ளனர்.

இந்த நடவடிக்கை அப்பாவிக் கிராம மக்களின் மத்தியில் பீதியை ஏற்படுத்துவதற்கே அன்றி நிச்சயமான நியாயபூர்வமான நோக்கத்தோடு அல்ல. இந்த நடவடிக்கை ஏற்கனவே நலிந்து நிற்கும் நம் நாட்டுக்கு வெட்கத்தையும் அபகீர்த்தியையும் ஏற்படுத்தும்.

எமது பிள்ளைகள் 30 ஆண்டுகளுக்கு மேல் உடல்உள ரீதியாக சொல்லொணாத் துன்பங்களை அனுபவித்து விட்டார்கள். நாங்கள் யுத்தம் முடிந்த வேளையிலும் பார்க்க இப்போது மிகவும் பயமாக உள்ளோம். அபிவிருத்திக்கு உதவ வரும் நாடுகளை நான் மிகவும் பாராட்டுகின்றேன். ஆனால் 30 ஆண்டு காலமாக நாம்பட்ட துன்பங்களை அறிந்திருந்தும் ஒரு அரசுக்கு வடக்கு கிழக்கு மாகாணங்களில் இராணுவ முகாம்களை பலப்படுத்தி உதவியதை நான் வன்மையாகக் கண்டிக்கின்றேன்.

தமிழ் மக்கள் பயந்த சுபாவமும் மிகவும் பலவீனமானவர்களாகவும் தற்போது உள்ளமையால் எதிர்க்கும் சக்தியற்றவர்களாக உள்ளனர்.

இத்தகைய துன்பங்களைத் தமிழ் மக்களுக்குக் கொடுப்பதை உடன் நிறுத்துமாறு அரச படைகளைப் பணிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். இந்த நிலைப்பாடு தொடரும் பட்சத்தில் போராட்டங்களை நடத்தும் நிலைக்கு நாம் தள்ளப்படுவோம்- என்றுள்ளது. (மு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பழி தீர்த்தது பல்கலை அணி

**பல்கலை விளையாட்டு அவை நடத்திய கிரிக்கெட் இறுதிப் போட்டியில் ஜொனியன்ஸ் அணியிடம் ஏற்பட்ட தோல்விக்கு நேற்றுமுன்தினம் பல்கலை அணி பழிதீர்த்துக் கொண்டது.**

வலி.வடக்கு, மே 9

பல்கலை விளையாட்டு அவை நடத்திய கிரிக்கெட் இறுதிப் போட்டியில் ஜொனியன்ஸ் அணியிடம் ஏற்பட்ட தோல்விக்கு நேற்றுமுன்தினம் பல்கலை அணி பழி தீர்த்துக் கொண்டது.

வி.ரி.ஜெயரட்ணம் ஞாபகார்த்தக் கிண்ண இறுதிப் போட்டியில் ஜொனியன்ஸை வீழ்த்தி சம்பியன் பட்டத்தை பல்கலை அணி சூடிக் கொண்டது. வழமையாக அதி கூடிய ஓட்டங்களை வெற்றி இலக்காக நிர்ணயித்த சந்தர்ப்பங்களில் கூட அந்த இலக்கைத் துரத்திப் பிடிக்கும் வல்லமை கொண்ட ஜொனியன்ஸ் விளையாட்டுக் கழகம் நேற்று முன்தினம் இடம்பெற்ற இந்த இறுதிப்போட்டியில் 110 ஓட்டங்களுக்குள் சுருண்டதாலேயே பல்கலைக் கழக அணி சம்பியன் கிண்ணத்தை வென்றது.



வெற்றிக் கிண்ணம் பல்கலை அணியிடம்

அமரர் வி.ரி.ஜெயரட்ணம் வெற்றிக் கிண்ணத்துக்காக யாழ்ப்பாணம் சென்ரல் விளையாட்டுக்கழகம் 8ஆவது ஆண்டாக யாழ். மாவட்ட கிரிக்கெட் விளையாட்டுக் கழகங்களுக்கு இடையே நடத்திய 50 பந்துப் பரிமாற்றங்கள் கொண்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் இறுதி ஆட்டம் யாழ்ப்பாணம் பல்கலைக்கழக விளையாட்டு மைதானத்தில் நேற்று முன்தினம் இடம் பெற்றது.

இதில் யாழ்ப்பாணம் பல்கலைக்கழகக் கிரிக்கெட் அணியும் யாழ்ப்பாணம் ஜொனியன்ஸ் விளையாட்டுக் கழக அணியும் மோதிக்கொண்டன.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற ஜொனியன்ஸ் விளையாட்டுக்கழகம் முதலில் களத்தடுப்பில் ஈடுபட பல்கலைக்கழக அணி துடுப்பெடுத்தாடியது.

பல்கலைக்கழக அணி 47.2 பந்துப் பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 203 ஓட்டங்களைப் பெற்றது.

அந்த அணியைச் சேர்ந்த அச்சுதன் 6 பவுண்டரிகள் ஒரு சிக்ஸர் அடங்கலாக 31 ஓட்டங்களையும் விதுஷ் 28 ஓட்டங்களையும், ஜெயரூபன் 27 ஓட்டங்களையும், ஜெயேந்திரன் 20 ஓட்டங்களையும், லவன் 19 ஓட்டங்களையும், ஜனார்த்தனன் 17 ஓட்டங்களையும் செல்ரன் 16 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர். உதிரிகளாக 30 ஓட்டங்களும் பெறப்பட்டன.



விருதுபெறும் ஜெயரூபன்



விருதுபெறும் றஜிந்தன்

ஜொனியன்ஸ் விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த சஞ்சயன் அபாரமாகப் பந்து வீசி 5 இலக்குகளைச் சாய்த்தார். இவருடன் விதுசன் 2 இலக்குகளையும் கஜீபன், காண்டீபன் ஆகியோர் தலா ஒரு இலக்கினையும் கைப் பற்றினார்கள்.

204 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய ஜொனியன்ஸ் விளையாட்டுக் கழகத்தின் முன்வரிசைத் துடுப்பாட்ட வீரர்கள் பல்கலை அணியின் பந்து வீச்சுக்கு ஈடுகொடுக்க முடியாமல் சொற்ப ஓட்டங்களோடு நடையைக் கட்டினர். இதனால் ஒரு கட்டத்தில் ஜொனியன்ஸ் அணி 5 இலக்குகளை இழந்து 48 ஓட்டங்கள் என்ற பரிதாபமான நிலையில் இருந்தது.

ஆனாலும் தொடர்ந்து வந்த துடுப்பாட்ட வீரர்கள் தம்மாலான பங்களிப்பை ஓரளவுக்கு வழங்கியதன் மூலம் ஜொனியன்ஸ் விளையாட்டுக்கழகம் படு தோல்வியில் இருந்து தப்பிக் கொண்டது. எனினும் அந்த அணி 40.1 பந்துப் பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 110 ஓட்டங்களை மாத்திரமே பெற்றது.

இதனால் பல்கலை அணி 94 ஓட்டங்களால் அபார வெற்றியீட்டி கிண்ணத்தைத் தன்வசமாக்கியது.

அகிலன் 27 ஓட்டங்களையும் விதுசன் 16 ஓட்டங்களையும் றஜீந்திரன் 10 ஓட்டங்களையும் ஜொனியன்ஸ் அணி சார்பாகப் பெற்றனர். உதிரிகளாக 23 ஓட்டங்கள் கிடைத்தன.

பல்கலைக்கழக அணியைச் சேர்ந்த லவன், ஜெயரூபன் ஆகியோர் தலா 3 இலக்குகளையும் விதுபாலா, விதுஷ் ஆகியோர் தலா 2 இலக்குகளையும் கைப்பற்றினார்கள்.

போட்டியின் ஆட்ட நாயகன், தொடர் நாயகன் மற்றும் அரையிறுதிப் போட்டியின் ஆட்டநாயகன் விருதுகள் யாழ்ப்பாணம் பல்கலைக்கழக வீரன் ஈ.ஜெயரூபனுக்குக் கிடைத்தன. இன்னொரு அரையிறுதி ஆட்டத்தின் நாயகனாக யாழ்ப்பாணம் ஜொனியன்ஸ் விளையாட்டுக்கழக வீரன் எஸ்.றஜீந்தன் தெரிவானார்.

பரிசில்களை யாழ். மாவட்ட தொழில் அதிபரும் விளையாட்டுப் போட்டிகளுக்கு ஊக்குவிப்பாளராக செயற்படுபவருமான தொழில் அதிபர் லயன் ஈ.எஸ்.பி. நாகரத்தினம் வழங்கிக் கௌரவித்தார். (ந-86-23)

---



கரப்பந்தாட்ட சுற்றுப்போட்டி

## கோப்பாய் தெல்லிப்பழை

### பிரதேச செயலர் பிரிவுகள் சம்பியன்

**கடந்த ஞாயிற்றுக் கிழமை ஆவரங்கால் நடராஜா இராமலிங்க வித்தியாலய மைதானத்தில் இறுதி ஆட்டம் இடம்பெற்றது.**

யாழ்ப்பாணம், மே 9

யாழ்.மாவட்ட பிரதேச செயலகங்களுக்கு இடையிலான ஆண், பெண் இருபாலாருக்குமான கரப்பந் தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் இறுதியாட்டத்தில் ஆண்கள் பிரிவில் கோப்பாய் பிரதேச செயலர் பிரிவும் பெண் கள் பிரிவில் தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவும் வெற்றி பெற்று சம்பியன் ஆகின.

கடந்த ஞாயிற்றுக்கிழமை ஆவரங்கால் நடராஜா இராமலிங்க வித்தியாலய மைதானத்தில் இடம்பெற்ற இறுதி ஆட்டத்தில் முதலில் இடம் பெற்ற ஆண்களுக்கான இறுதியாட்டத்தில் கோப்பாய் பிரதேச செயலர் பிரிவு அணியை எதிர்த்து கரவெட்டி பிரதேச செயலர் பிரிவு அணி மோதிக் கொண்டது. 5 செற்களைக் கொண்ட ஆட்டத்தில் கோப்பாய் பிரதேச செயலர் பிரிவு அணி 3:1 என்ற செற்கணக்கில் வெற்றி பெற்றுச் சம்பியனானது.

பெண்கள் பிரிவிற்கான இறுதியாட்டத்தில் தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவு அணியை எதிர்த்து கோப்பாய் பிரதேச செயலர் பிரிவு அணி மோதிக்கொண்டது.

5 செற்களைக் கொண்ட ஆட்டத்தில் தெல்லிப்பழை பிரதேச செயலகர் பிரிவு அணி 3:1 என்ற செற்கணக்கில் வெற்றி பெற்றுச் சம்பியனானது. (ந-23)

---

## ஆவரங்கால் மத்திய வி.க. வென்றது இறுதியாட்டத்தில்

யாழ்ப்பாணம், மே 9

கைதடி, நவபுரம் நவசக்தி விளையாட்டுக் கழகம் வடமாகாண ரீதியாக நடத்திய கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் இறுதியாட்டத்தில் ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழக அணி சம்பியனானது.

கடந்த வெள்ளிக்கிழமை மின்னொளியில் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழக அணி மோதிக் கொண்டது.

5 செற்களைக் கொண்ட ஆட்டத்தில் ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழக அணி 3:1 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்றுச் சம்பியன் ஆனது. சிறந்த ஆட்ட நாயகனாக ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழக அணி வீரன் ரி.திவாகர் தெரிவாகினார். (ந-23)

---

## இன்றைய ஆட்டம்

யாழ்ப்பாணம்,மே 9

வவுனியா மாவட்ட பாடசாலைகளுக்கு இடையிலான 15 வயது, 17 வயது, 19 வயது ஆண், பெண் இருபாலாருக்குமான கரப்பந்தாட்டப் போட்டி வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலய மைதானத்தில் இன்று புதன்கிழமை காலை 8.30 மணிக்கு இடம் பெறவுள்ளது.

இதேவேளை 15 வயதுப் பிரிவு, 19 வயதுப் பிரிவு, ஆண், பெண் இருபாலாருக்குமான மேசைப்பந்தாட்டப் போட்டி நாளை வியாழக்கிழமை காலை 8.30 மணியளவில் அல்இக்பால் மகாவித்தியாலய மைதானத்தில் இடம் பெறவுள்ளது. (ந-23-400)

---

## ஜெய்ப்பூர் நிறுவனத்தின் விளையாட்டு போட்டிகள்

**மாற்றுத் திறனாளிகளின் விளையாட்டுத் திறனை வெளிக் கொணர ஜெய்ப்பூர் நிறுவனம் இந்தப் போட்டிகள் மூலம் களம் திறந்துள்ளது.**

யாழ்ப்பாணம்,மே 9

யாழ்.ஜெய்ப்பூர் வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவனத்தின் வெள்ளிவிழா கொண்டாட்டத்தை முன்னிட்டு மாற்றுத் திறனாளிகளாகவுள்ள ஜெய்ப்பூர் நிறுவனத்தின் பயனாளிகள் பங்குபற்றும் முச்சக்கர வண்டி ஓட்டம், சைக்கிள் ஓட்டம், 100 மீற்றர் ஓட்டம், தடைதாண்டி ஓட்டம், மெதுவான சைக்கிள் ஓட்டம், சங்கீதக் கதிரை மற்றும் கயிறிழுத்தல் ஆகிய போட்டிகள் ஜூன் மாதம் 30 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ். பரியோவான் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளன.

இந்தப் போட்டிகளில் பங்குபற்ற விரும்பும் பயனாளிகள் ஜெய்ப்பூர் நிறுவனத்தினால் வழங்கப்படும் விண்ணப்பப் படிவங்களை இலவசமாகப் பெற்று அதனைப் பூர்த்தி செய்து எதிர்வரும் ஜூன் மாதம் 25 ஆம் திகதிக்கு முன்னர் எமக்குக் கிடைக்கக் கூடியதாக தலைவர் ஜெய்ப்பூர் வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவனம் இல.05, பழைய பூங்கா வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம். என்ற முகவரிக்குதபால் மூலமாக அனுப்புதல் வேண்டும் அல்லது நேரடியாகக் கையளிக்க முடியும். பயனாளி ஒருவர் ஆகக் கூடுதலாக இரண்டு போட்டிகளில் மட்டுமே பங்குபற்ற அனுமதிக்கப்படுவர். (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கங்குலி படையணி 'அவுட்'

ஐந்தாவது ஐ.பி.எல் தொடரிலிருந்து கங்குலி தலைமையிலான புனே வாரியர்ஸ் அணி வெளியேறுவது, ராஜஸ்தான் ரோயல்ஸ் அணியுடனான தோல்வியை அடுத்து உறுதியாகியுள்ளது. ஆஸி.யின் வொட்ஸனும், ரைட்டும் துடுப்பாட்டம், பந்து வீச்சில் புனேயைப் போட்டுத் தாக்க ராஜஸ்தான் ரோயல்ஸ் அணி 7 இலக்குகளால் இலகு வெற்றியைப் பெற்றுக் கொண்டது. புனே அணியில் ஸ்ரீவன் ஸ்மித் மாத்திரம் களத்தடுப்பில் ஓரளவு சிறப்பாகச் செயற்பட்டார்.

ஐ.பி.எல். தொடரின் லீக் ஆட்டங்கள் இறுதிக் கட்டத்தை நெருங்கிக் கொண்டிருக்கின்றன. தொடரின் 52 ஆவது ஆட்டம் புனேயில் நேற்று நடைபெற்றது. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற புனே அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

கொல்கத்தாவுடனான ஆட்டத்தில் 7 ஆம் இலக்கத்தில் களமிறங்கிய கங்குலி ஆரம்பத் துடுப்பாட்ட வீரராகக் களமிறங்கி 'பவர்பிளேயில்' பந்துகளை வீணடித்தார். மறுமுனையில் மைக்கல் கிளார்க்கும் மெதுவான ஆட்டத்தை வெளிப்படுத்த புனேயின் ஓட்ட வேகம் நத்தை வேகத்தில் ஊர்ந்தது. கங்குலி, வொட்ஸன் வீசிய ஆட்டத்தின் ஐந்தாவது பந்துப் பரிமாற்றத்தில் கொடுத்த வாய்ப்பை ராஜஸ்தான் தவற விட்ட போதும் அடுத்த பந்துப் பரிமாற்றத்தில், ரைட் வேகத்தில் போட்டுத்தாக்க 30 ஓட்டங்களில் முதலாவது இலக்கு பறந்தது. கங்குலி (18 பந்துகளில், 14 ஓட்டங்கள்) ஆட்டமிழந்தார். அடுத்த பந்து பரிமாற்றத்தில் கிளார்க் (18 பந்துகளில், 16 ஓட்டங்கள்) ஆட்டமிழந்தார்.

அதன் பின்னர் உத்தப்பா, மஜ்முடார் ஜோடி பொறுப்பாக ஆடியது. உத்தப்பா அடக்கி வாசிக்க மஜ்முடார் வெளுத்து வாங்கினார். சவான் வீசிய 11 ஆவது பந்து பரிமாற்றத்தில் 2 சிக்ஸர்கள் விளாசிய மஜ்முடார், போத்தாவின் அடுத்த பந்துப் பரிமாற்றத்தில் பவுண்டரி விளாசினார். அடுத்த பந்தில் (20 பந்துகளில், 30 ஓட்டங்கள்) ஆட்டமிழந்தார். தொடர்ந்து உத்தப்பா (19 பந்துகளில், 13 ஓட்டங்கள்) வெளியேற புனே அணியின் வேகம் குன்றியது. ஸ்ரீவன் ஸ்மித் மட்டும் நின்றாட ஏனைய வீரர்கள் சொற்ப ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க புனே அணி 20 பந்துப் பரிமாற்றங்களில் 6 இலக்குகளைப் பறிகொடுத்து 125 ஓட்டங்களை மாத்திரம் பெற்றுக்கொண்டது. பந்து வீச்சில் ரைட் 4 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 13 ஓட்டங்கள் கொடுத்து 3 இலக்குகளை வீழ்த்தினார்.


வொட்ஸன்

இலகுவான இலக்குக்கு பதிலளிக்கத் தொடங்கிய ராஜஸ்தான் அணி ஆரம்பத்திலேயே அதிர்ச்சியை சந்தித்தது. ரஹானே ஓட்டமெதனையும் பெறாத நிலையில் புவனேஸ் குமார் பந்து வீச்சில், ஸ்ரீவன் ஸ்மித்தின் அற்புதமான பிடியெடுப்பில் ஆட்டமிழந்தார். தொடர்ந்து களமிறங்கிய வொட்ஸன் வந்த வேகத்தில் முரளிக் கார்த்திக்கின் பந்துப் பரிமாற்றத்தில் சிக்கஸர், பவுண்டரி, சிக்ஸர் என்று அதிரடியைப் போட்டுத் தாக்கினார். தொடர்ந்து வொட்ஸன் சரவெடியாக துடுப்பெடுத்தாட ராஜஸ்தானின் ஓட்ட எண்ணிக்கை கிடுகிடுவென எகிறியது. மறுமுனையில் அடக்கி வாசித்த டிராவிட் (16 பந்துகளில், 14 ஓட்டங்களுடன்) பார்னெலின் பந்து வீச்சில் வெளியேறினார்.

இலக்கு சரிவதைப் பொருட்படுத்தா வொட்ஸன் தொடர்ந்தும் தனது அதிரடி வேட்டையைத் தொடர்ந்தார். நெஹ்ரா வீசிய ஆட்டத்தின் 9 ஆவது பந்துப் பரிமாற்றத்தில் வொட்ஸன் பவுண்டரிகள், சிக்ஸர் என்று விளாசி அரைச் சதம் கடந்தார். ஒரு முனையில் வொட்ஸன் போட்டுத் தாக்க மறு முனையில் நின்றாடிய மெனேரியா 18 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். இறுதி வரை அதிரடியைத் தொடர்ந்த வொட்ஸன் 16.2 ஆவது பந்தை ஸ்ரீவன் ஸ்மித் வீச 'லோங் ஓன்' திசையில் பவுண்டரிக்கு அடித்து அணியின் வெற்றியை உறுதிசெய்தார்.

ராஜஸ்தான் அணி 3 இலக்குகளை மாத்திரம் இழந்து 16.2 பந்துப் பரிமாற்றங்களில் 126 ஓட்டங்களைப் பெற்று 7 இலக்குகளால் வெற்றி பெற்றது. வொட்ஸன் 51 பந்துகளில் 4 சிக்ஸர்கள், 10 பவுண்டரிகள் அடங்கலாக 90 ஓட்டங்களை ஆட்டமிழக்காமல் பெற்றுக்கொண்டதுடன் ஆட்டநாயகன் விருதையும் பெற்றார்.

புனே அணி 13 ஆட்டங்களில் 8 புள்ளிகளை மாத்திரம் பெற்று தொடரிலிருந்து வெளியேறியுள்ளது. (5)

# டெக்கானைத் தொடரும் தோல்வி




தொடர் தோல்விகளால் துவண்டு போயிருந்த டெக்கான் அணியை நேற்று பஞ்சாப் அணியும் தன் பங்குக்கு புரட்டியெடுத்தது. ஹைதராபாத்தில் நேற்று டெக்கான் அணிக்கும் பஞ்சாப் அணிக்கும் இடையே நடைபெற்ற ஐ.ப.எல். போட்டியின் 53 ஆவது ஆட்டத்தில் 25 ஓட்டங்களால் பஞ்சாப் அணி வெற்றியைச் சுவைத்தது.


நாணயச்சுழற்சியில் வெற்றியீட்டிய டெக்கான் சார்ஜர்ஸ் அணித்தலைவர் சங்ககார முதலில் களத்தடுப்பல் ஈடுபடத் தீர்மானித்தார்.வழமையாக முதலில் துடுப்பெடுத்தாடி சொற்பமான ஓட்டங்களையே டெக்கான் அணி பெறுவதும் அதனை இலகுவாக எதிரணிகள் துரத்திப் பிடிப்பதும் தொடர்கதையாகி விட்டதால்; இம்முறை பஞ்சாப்பை துரத்திப் பிடிக்க எண்ணியே டெக்கான் அணி இவ்வாறன முடிவை எடுத்தது.

பஞ்சாப் அணி சார்பல் மண்டீப் சிங்கும், மார்ஸும் ஆரம்பத்துடுப்பாட்ட வீரர்களாகக் களமிறங்கினர்.இருவரும் ஆரம்பத்தில் நிதானமாகவும் பின்னார் அதிரடியாகவும் ஆடி டெக்கான் அணியைத் திகைக்க வைத்தனர்.இதனால் சங்ககார வியூங்களை அடிக்கடி மாற்றியமைக்க வேண்டியிருந்தது. அதற்கு 6 ஆவது பந்துப்பரிமாற்றத்தின் 5 ஆவது பந்திலேயே பலன் கிடைத்தது. எதிரணிக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தக்கூடிய வீரரான மார்ஸ் 22 ஓட்டங்களைப் பெற்றிருந்த போது தவானின் பந்துவீச்சுக்கு இரையானார். தொடர்ந்து களமிறங்கிய சைனியையும் 2 ஓட்டங்களோடு அடுத்த பந்துப்பரிமாற்றத்தில் ஆஷிஷ் ரெட்டி வெளியேற்றினார். இரண்டு இலக்குகள் அடுத்தடுத்து சாய்க்கப்பட்ட நிலையில் களம்புகுந்த பஞ்சாப் அணித்தலைவர் டேவிட் ஹஸி , தான் எதிர்கொள்ளும் பந்துகளை வீணடிக்காது அதேசமயம் இலக்கு இழப்பையும் தவிர்த்தவாறு ஆடத் தொடங்கினார். ஆனாலும் பஞ்சாப் அணி 97 ஓட்டங்களைப் பெற்றிருந்த போது, ஹஸி 16 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.அதன் பின்னர் அதிரடியில் கலக்கிய மண்டீப் சிங் 3 சிக்ஸர்களை விண்ணுக்குப் பறக்கவிட்டார். அரைச்சதம் கடந்த நிலையில் மண்டீப் சிங் ஆஷிஷ் ரெடியின் பந்துவீச்சில் வீழ்ந்தார். அவர் 48 பந்துகளில் 75 ஓட்டங்களைக்குவித்திருந்தார்.

அதன் பின் வந்த பஞ்சாப் சிங்கங்கள் எல்லாமே அதிரடியாக ஆடி, ஓட்ட எண்ணிக்கையை உயர்த்த வேண்டும் என நினைத்ததால், சரவெடிகளாகப் பந்துகள் பறந்தன. ஒருபுறம் இலக்குகள் சீராக வீழ்த்தப்பட்டாலும் மறுபுறத்தே ஓட்டஎண்ணிக்கையும் எகிறியது.அஸார் முஹமட் 14 ஓட்டங்கலுடன் ஆட்டமிழந்தார். மில்லரும், சிட்னிஸும் ஆட்டமிழக்காமல் முறையே 28, 6 ஓட்டங்களைப் பெற, பஞ்சாப் அணி 20 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 5 இலக்குகளை இழந்து 170 ஓட்டங்களைப் பெற்றது. பந்துவீச்சில் டெக்கான் அணி சார்பல் ஆஷிஷ் ரெட்டி 2 இலக்குகளை வீழ்த்தியிருந்தார்.ஆட்டநாயகனாக 75 ஓட்டங்களை விளாசிய பஞ்சாப்வீரர் மண்டீப்சிங் தெரிவானார்.

அதன் பின் இலக்கை விரட்டத் தொடங்கிய டெக்கான் அணியின் கனவு அதன் ஆரம்பத்துடுப்பாட்ட வீரர் தவான் 8 ஓட்டங்கலுடன் ஆட்டமிழந்த போதே தகர்ந்துபோகத் தொடங்கியது. இன்னொரு ஆரம்பத்துடுப்பாட்ட வீரரான ஹரிஸும், கமரூன் வைட்டும் அணிக்கு புத்துயிர் ஊட்ட முனைந்தனர்.ஆயினும் பஞ்சாப் அணித் தலைவர் ஹஸி 11ஆவது பந்துப்பரிமாற்றத்தில் டெக்கானுக்கு இரட்டை அடி கொடுத்தார். ஹரிஸும், வைட்டும் அவரது பந்தைத் தூக்கிஅடிக்க முற்பட்டு பிடி கொடுத்து வெளியேறினர். வழக்கம் போல 4 ஓட்டங்களுடன் வெளியேறி அணித்தலைவர் சங்ககாரவும் வெறுப்பேற்றினார், பஞ்சாப் பந்துவீச்சாளர்கள் அனைவருமே திட்டமிட்ட முறையில் பந்துவீசி டெக்கானை மீண்டுமொருமுறை தோல்விப்படுகுழிக்குள் வீழ்த்தினர். டெக்கான் அணி 20 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 8 இலக்குகளை இழந்து 145 ஓட்டங்களை மாத்திரமே பெறமுடிந்தது. இதனால் பஞ்சாப் அணி 25 ஓட்டங்கள் வித்தியாசத்தில் டெக்கான் அணியை வீழ்த்தியது. பஞ்சாப் அணித்தலைவர் ஹஸி ஒரு பந்துப் பரிமாற்றம் மட்டுமே பந்துவீசி 2 ஓட்டங்களை மாத்திரம் கொடுத்து 2 இலக்குகளைக் கைப்பற்றியிருந்தார். (ங)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சென்னையில் இருந்து நகரும் இறுதியாட்டம்

சென்னை சேப்பாக்கம் மைதானத்தில் நடப்பதாக அறிவிக்கப்பட்டிருந்த ஐ.பி.எல். இறுதி ஆட்டம் வேறு மாநில மைதானத்திற்கு மாற வாய்ப்புள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

ஐந்தாவது ஐ.பி.எல்., 'ரி-20' கிரிக்கெட் ஆட்டங்கள் தற்போது நடக்கின்றன. முன்னர் எப்போதும் இல்லாத அளவிற்கு சென்னைக்கு, இந்த முறை அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது. தொடக்கவிழா, வை.எம்.சி.ஏ., மைதானத்தில் நடந்தது. தொடக்க ஆட்டம் சேப்பாக்கம் மைதானத்தில் நடந்தது. எதிர்வரும் 25 ஆம் திகதி 'பிளே-ஓப்', அதை தொடர்ந்து 27 ஆம் திகதி, இறுதி ஆட்டமும் சென்னையில் நடக்கவுள்ளதாக அறிவிக்கப்பட்டு இருந்தது.

சென்னை,சேப்பாக்கம் மைதானத்தில் 10 ஆயிரம் பேர் வரை அமர்ந்து பார்க்கும் வகையில் மூன்று 'ஸ்டாண்டுகள்' புதிதாக கட்டப்பட்டுள்ளன. இதில் குளிர்சாதன வசதி செய்யப்பட்ட மூன்று வி.ஐ.பி., 'பொக்ஸ்களும்' இடம்பெற்றுள்ளன. இந்த புதிய 'ஸ்டாண்டுகளுக்கு' சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் (சி.எம்.டி.ஏ.,) இன்னும் அனுமதி வழங்கவில்லை. இதனால், இந்த 'ஸ்டாண்டுகளைப்' பயன்படுத்த முடியாத நிலையுள்ளது.

மூன்று 'ஸ்டாண்டுகள்' பூட்டிக் கிடப்பதால், ரசிகர்களுக்கு இடம் கிடைப்பதில்லை. இந்த நிலையில், 'பிளே- ஓப்' மற்றும் இறுதி ஆட்டத்தைக் காண்பதற்கு வெளிமாநிலங்களில் இருந்து முக்கிய பிரமுகர்களும், ரசிகர்களும் சென்னை வருவார்கள் என்று தெரிகிறது.

மூன்று 'ஸ்டாண்டுகளைப்' பயன்படுத்த முடியாததால் இட நெருக்கடி ஏற்படுவதுடன், ஐ.பி.எல்., அமைப்புக்கு வருமானமும் குறையவாய்ப்புள்ளது. சென்னை அணியும், அதிக தோல்விகளைச் சந்தித்து வருவதால், 'பிளே-ஓப்' மற்றும் இறுதி ஆட்டத்துக்கு தகுதிபெறுமா என்பதில் குழப்பம் நீடிக்கிறது.

ஐ.பி.எல்லைப் பொறுத்தவரை, வழக்கமாக உள்ளூர் அணி பங்குபெறும் ஆட்டத்தை காண மட்டுமே ரசிகர்கள் ஆர்வம் காட்டுவார்கள் என்பதால், சென்னை அணியை தவிர்த்து மற்ற அணிகள் 'பிளே-ஓப்' மற்றும் இறுதி ஆட்டத்தில் மோதினால் ரசிகர்கள் எண்ணிக்கையும் குறையவாய்ப்புள்ளது. மேலும், தமிழகத்தின் முக்கிய புள்ளியை, இறுதி ஆட்டத்தின் பரிசளிப்பு விழாவிற்கு அழைத்துவர எடுக்கப்பட்ட முயற்சிகளும் தோல்வியில் முடிந்ததாக கூறப்படுகிறது.

இதுபோன்று, பல்வேறு கணக்குகளை போட்ட ஐ.பி.எல்., நிர்வாகம் இறுதி ஆட்டத்தை வேறு மாநிலத்திற்கு மாற்றலாமா என்று யோசித்து வருகிறது. சென்னைக்கு பதிலாக மும்பை அல்லது டில்லிக்கு இறுதி ஆட்டம் மாற வாய்ப்புள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. இருப்பினும் அதிகார பூர்வ முடிவு இன்னும் அறிவிக்கப்பட வில்லை. இது குறித்து சென்னை சேப்பாக்கம் மைதான நிர்வாகிகளிடம் விசாரித்தபோது, இறுதி ஆட்ட மைதானம் மாற வாய்ப்பு இருப்பது உண்மைதான். ஆனால், எதிர்வரும் 12 ஆம் திகதி டில்லி-சென்னை அணிகளுக்கு இடையே, சென்னையில் நடக்கும் ஆட்டத்துக்கு பிறகே முடிவு தெரியும், என்றனர்.

## பந்து பட்டு மரணம்



'ஹொக்கி' உள்ளூர்ப் போட்டியின் போது, பந்து தலையில் தாக்கியதில் ஆஸ்திரேலிய வீராங்கனை எலிசபெத் வொட்கின்ஸ் பரிதாப மாக மரணமடைந்தார். ஆஸ்திரேலியாவின் பேர்த் நகரை சேர்ந்தவர் எலிசபெத் வொட்கின்ஸ் (வயது- 24). மாநில அளவிலான போட்டியில், மேற்கு ஆஸ்திரேலியாவின் நோர்த் கோஸ்ட் ரைடர்ஸ் கிளப் அணிக்காக விளையாடி வந்தார்.

விக்டோரியா பார்க் அணிக்கு எதிரான லீக் போட்டியில், தனது சகோதரி கேத்ரின் கரோலுடன் விளையாடிக் கொண்டிருந்தார். அப்போது, வேகமாக வந்த பந்தை தடுக்க முயன்ற போது, அது எலிசபெத் வோட்கின்ஸ் தலையில் பலமாகத் தாக்கியது. உடனடியாக நினைவிழந்து கீழே விழுந் தார். வைத்தியசாலைக்கு கொண்டு செல்லும் வழியில் மரணம் அடைந்தார்.


## தொழிற் பயிற்சிகள்



* Mobile Phone Repairing
* Electronics
* Air conditioning

சகல பயிற்சிகளும் முழுநேர செய்முறைப் பயிற்சியுடன் பயிற்சியளிக்கப்பட்டு சான்றிதழ் வழங்கப்படுவதுடன் நிறுவனங்களில் தொழில்பெற்றுக்கொடுக்கப்படும்.

பயிற்சிகள் ஆரம்பம்:- 12.05.2012 9A.m

விவரங்களுக்கு
JAFFNA TECHNICAL INSTITUTE

NO 7, பலாலி வீதி, யாழ்ப்பாணம். 0718561654, 0778249949

கிளை NEW ASIAN CENTER 56/15 ஸ்ரான்லி வீதி, 0779254078


## மரண அறிவித்தல்

### திருமதி இராசலட்சுமி இரத்தினம் (தெய்வேந்திரம்)



சந்தைவீதி, உடுப்பிட்டியைப் பிறப்பிடமாகவும், இல.16, குமார வீதி, நல்லூரரை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராசலட்சுமி இரத்தினம் நேற்று (08.05.2012) செவ்வாய்க்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் - அழகம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான விசுவலிங்கம்- சிவக்கொழுந்து தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற இரத்தினத்தின் அன்பு மனைவியும், கோபாலக்கிருஷ்ணன், ரவீந்திரன், ரஞ்சிதமலர் ஆகியோரின் அன்புத் தாயும், காலஞ்சென்ற உதயராணி மற்றும் கமலேஸ்வரி, காலஞ்சென்ற மெற்றாஸ்மயில் ஆகியோரின் அன்பு மாமியும், காலஞ்சென்றவர்களான பரராசசிங்கம், நவரத்தினம், ஞானசேகரம், சிவயோகம், புஸ்பராசம், கௌசலாதேவி மற்றும் ஆனந்தராசா ஆகியோரின் அன்புச் சகோதரியும், ஸ்ரீபிரியா- மங்களேஸ்வரன் (இந்தியா), ஸ்ரீரஞ்சன் (சிங்கப்பூர்), நிதர்சன் (இந்தியா), வஜீவன், கஜன்-கஜமுகதர்சினி (சிங்கப்பூர்), ரேகன்-ஜெயந்தி (சிங்கப்பூர்) ஆகியோரின் அன்புப் போத்தியும், ஸ்ரீரசிக்கா, சங்கீத், சிந்துஜா ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (10.05.2012) வியாழக்கிழமை பி.ப. 4 மணிக்கு இல.16, குமார வீதி, நல்லூரில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.16, குமார வீதி,
நல்லூர்.

தகவல்:
குடும்பத்தினர்.


## கடைக் கட்டடம் விற்பனைக்கு

யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி இலக்கம் 127 இல் அமைந்துள்ள கடைக்கட்டடம் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு : 021 2228306

## Join With Our Leading Team

VACANCIES

To Invite well qualified and experinced personnel to fill the following posts immediately

- Branch Manager (Jaffna) (Male or Female)
- Marketing Executive (Jaffna, Kilinochchi, Nelliyady) (Male or Female)
- Technician
- Net Cafe Maintains
- Office Boy
- Driver

Please forward you,re CV on or before 11-05-2012 to

The Managing Director,
MARSHA GROUP
74, Kannathiddy Road,
Jaffna.
E.Mail:- kmaran77@yahoo.com

## SUBRA (14) சித்தன்கேணி

A/L ஊடகவியல் A/L

யாழ். பிரபல ஆசிரியர்
திரு. P. இராஜேஸ்வரன்
(வளவாளர் N.I.E)

வகுப்புக்கள் ஆரம்பம்

2014 - ஆரம்பத்திலிருந்து கற்பிக்கப்படும்
2013 - Paper Class

மேலதிக விவரங்களுக்கு:
அலுவலகத்தில் தொடர்பு கொள்ளவும்

வங்கி உத்தியோகத்தர்களுக்கானது

C.B.F, D.B.F
வகுப்புக்கள் ஆரம்பமாகிவிட்டன
Sat - Sun - 6.00 - 8.00

## ஜூன் (30) உடன் ஆஸ்திரேலியா 5 வருட குடும்ப விசா நிபந்தனைகள் அரசாங்கத்தால் மேலும் இறுக்கமாகின்றன.

எனவே இம் மாதம் 18 ஆம் திகதிக்கு முன்னர் எம்முடன் தொடர்பு கொண்டு ஆலோசனை பெற விரைந்து வாருங்கள்

(இவ்விடயத்தை இணையத்திலும் பார்வையிடலாம்)

திசைகாட்டி (பிறைவேற்) லிமிட்டெட் (PV 82703)



37, சிவகுருநாதர் லேன்,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல:- 0212219016

கிளைகள்

115 A,
இரத்தினபுரம் வீதி,
கிளிநொச்சி.
0212285544

22 A,
பிராங்பெட் பிளெஸ்,
பம்பலப்பிட்டி.
0112508443

504, Hampton street, Melborn,
Australia
0061390437100

## யாழ்ப்பாணத்தில் புதிய பிரிவுகள் ஆரம்பம்!!!

Diploma in Mobile Phone Repairing
(Software & Hardware Repairing)
(பல புதிய விடயங்களுடன்)

(With Practical Electronic)

சகலவகையான கைத்தொலைபேசிகளையும் மிகக் குறுகிய காலத்தில் நீங்களே திருத்துவதற்கான தொழில்சார்கற்கை நெறி !!!

வகுப்பு ஆரம்பம் - வரும் ஞாயிறு காலை 11 மணி

உங்கள் பதிவுகளை உடன் மேற்கொள்ளவும் !!

விபரங்களுக்கு :- UNI - ICT CAMPUS
No - 83, Palaly Road,
Kantharmadam, Jaffna.
T.P No : - 021 - 321 - 6433 / 0777 110862

## SPOKEN ENGLISH WITH DIPLOMA CERTIFICATE

ஆங்கிலம் - புதிய பிரிவு
10.05.2012 வியாழக்கிழமை

பிரிவு 1 : காலை 8.00 - 9.00
பிரிவு 2 : மாலை 4.00 - 5.00

காலம் : 3 மாதம் கட்டணம் : ரூபா 3000 மட்டும்

அரச, தனியார் அலுவலர், ஆசிரியர், பல்கலைக்கழக, உயர்கல்வி மாணவர், A/L எடுத்தோர், இளைஞர், யுவதிகள், வெளிநாடு செல்வோர் வகுப்பில் கலந்துகொள்ளலாம்.

MyWay 182, STANLEY RD, JAFFNA 077 33 68 456


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 09.05.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

தன்னுடைய
ஆற்றலை
உணர்ந்தவன்
தன்னுடைய
துன்பத்தை
இழந்தவன்
-மாத்ரூ ஆர்னால்டு

# புதன் பொய்கை A

உதயன் 09 மே 2012 புதன்கிழமை பக்கங்கள்: நான்கு

# பிரைடோ காலோவின் உடல் வெளி

இயற்கை எப்படி மலர்களாகவும், கனிகளாகவும் விதைகளாகவும் தன்னை வெளிப்படுத்திக் கொள்கிறதோ அது போலவே ஓவியம் வரைவதும் ஓர் உயிரியல் நடவடிக்கை, தனித்துவமான செயல் என்கிறார் பிரபல மெக்சிகோ ஓவியரான டீகோ ரிவேரா. (Diego Rivera)

ஓவியராக உருமாறாமல் போயிருந்தால் மனநலவிடுதியில் தீவிர நோயாளியாகச் சேர்க்கப்பட்டிருப்பேன் என்று பிரைடாவே தன்னுடைய நாட் குறிப்பு ஒன்றில் கூறுகிறார். அந்த அளவுக்கு ஓவியம் வரைவதை நேசித்த பிரைடாவின் வாழ்க்கை மற்றும் எண்ணங்கள் குறித்த சர்ச்சைகள் அவர் வாழ்ந்த நாள்களில் துவங்கி இன்று வரை ஓயாமல் இருந்து வருகிறது.

காலம் பிரைடாவிற்கு மிக உயர்ந்த அந்தஸ்தையும் மாற்று கலைவெளியின் அடையாளமாகவும் மாற்றியிருக்கிறது. மெக்ஸிக்கோவின் சமகால கலைவெளிப்பாட்டில் தவிர்க்க முடியாத ஆளுமையாக உள்ளார் பிரைடா காலோ.

பிரைடாவின் வாழ்க்கை, துயரமும் தனிமையும் நிரம்பியது. ஆறு வயதில் போலியோவால் ஒரு கால் மெலிந்து போகவே அவளால் சீராக நடப்பதற்குச் சிரமம் ஏற்பட்டது. ஆனால் அதை மீறி விளையாட்டிலும் குத்துச் சண்டையிலும் ஆர்வம் காட்டினாள். அவளது அப்பா ஒரு புகைப்படக் கலைஞர். ஓவியம் வரைவதிலும் அவருக்கு ஈடுபாடு இருந்தது. மெக்சிக்கோவின் அருகில் உள்ள மலைப்பகுதிகளுக்கு அப்பா ஓவியம் வரையச் செல்லும்போது பிரைடாவும் அவரோடு செல்வார். அப்படித்தான் அவருக்கு ஓவிய உலகின் அறிமுகமும் விருப்பமும் உருவானது.

பிரைடாவிற்கு அவளது அப்பா புகைப்படம் எடுக்கவும், புகைப்படங்களை பிரிண்ட் போடவும் கற்றுக் கொடுத்தார். 1925 ஆம் ஆண்டு பிரைடா பயணம் செய்த பேருந்து விபத்துக்குள்ளானதில் படுகாயமடைந்த பிரைடா படுக்கையில் கிடந்த போது அவளது அப்பா கலிர்மோ ஓவியம் வரைவதற்கான தூரிகை மற்றும் வர்ணங்களை வாங்கி வந்து தந்தார்.

அப்பாவின் நண்பரான பெர்னாண்டோ பெர்னான்டஸிற்கு அவளது ஓவியம் வரையும் திறன் பிடித்துப் போகவே பிரபல ஓவியரான Anders Zorn ஓவியங்களை நகலெடுக்கும் பணியை பிரைடா செய்து வரும்படியாக சொல்லி முன்பணம் தந்து ஊக்கப்படுத்தினார். முறையான ஓவியப்பயிற்சி இல்லாத போதிலும் தனது கற்பனையின் காரணமாக அவரால் எந்த ஓவியத்தையும் சிறப்பாகத் தீட்ட முடிந்தது.

தன் வாழ்நாளில் பிரைடா வரைந்த ஓவியங்களில் பெரிதும் அவளது வாழ்க்கையில் நடந்த சம்பவங்களையும், அவளது நெருக்கமான மனநிலையையுமே சித்தரிக்கின்றன. நாட்டுப்புறத்தன்மை மிகுந்த ஓவியங்கள் என்று வகைப்படுத்தும் இவை கனவின் சிதறடிக்கப்பட்ட, வடிவங்கள் என்று சொல்லலாம்.

1980களின் இறுதிவரையில் பிரைடா குறித்த தீவிர அறிதல் மேற்குலகில் துவங்கவேயில்லை. Hyden Herrera வின் பிரைடாவின் வாழ்க்கை வரலாறுப் புத்தகமே அவள் மீதான ஈடுபாட்டுக்கு முதல்காரணமாக அமைந்தது. ஹைடின் பிரைடாவின் வாழ்வு குறித்து துல்லியமாக தகவல்களைச் சேகரித்து அதை அவளது ஓவியங்களின் பின்புலத்தோடு வெளியிட்டிருந்தார்.

அந்த நூலைப் படமாக்குவது என்ற முயற்சி 1990களின் துவக்கத்திலே மேற்கொள்ளப்பட்டது. ஆனால் பொருளாதாரக் காரணங்களால் அது நடைபெறவில்லை. அப்போதே பரைடாவாக நடிப்பதற்கு சல்மா ஹைக்கும் ஜெனிபர் லோபஸ் இருவரும் தேர்வு செய்யமாட்டார்கள். அதில் சல்மா ஹைக்கின் முகச்சாயல் பிரைடா போலவே இருந்த காரணத்தால் அவரை தயாரிப்பாளர்கள் நடிக்க வைப்பது என்று முடிவு செய்தார்கள்.

ஆனால் அவரது வயது மற்றும் அனுபவமின்மையும் காரணமாக சல்மா ஹைக் ஒதுக்கப்பட்டார். ஆனால் எட்டு ஆண்டுகளுக்கு பிறகு அதே சல்மாஹைத் தான் நடிக்க விரும்பிய பிரைடா படத்தினை தானே இணை தயாரிப்பாளராகச் செயல்பட்டு வெளியிட்டார்.

சல்மா ஹைக்கின் வாழ்க்கைக்கும் பிரைடாவின் வாழ்க்கைக்கும் மிக நெருங்கிய தொடர்பிருக்கிறது. இருவருமே குடும்பத்திலிருந்து வெளியேறி கலையின் வழியாக தங்களது சுய அடையாளங்களை வெளிப்படுத்த வேண்டும் என்பதற்காகச் சிரமப்பட்டவர்கள், அத்தோடு காதலின் பெயரால் தங்களை பறிகொடுத்தவர்கள், அவமானமும், புறக்கணிப்பும் தோல்வியுமே இருவரையும் உன்னதமான படைப்பாளர்களாக மாற்றியது. இந்த காரணங்கள்தான் சல்மா பிரைடாவாக நடிப்பதற்கு பின்புலத்தில் இருந்திருக்க கூடும்.

Julie Taymor இயக்கத்தில் 2002ஆம் ஆண்டு வெளியான பிரைடா திரைப்படம் ஹைடின் ஹரரேயின் புத்தகத்தை அடிப்படையாக கொண்டு உருவாக்கப்பட்டது. 1922 ஆம் ஆண்டு பிரைடாவின் பதினைந்து வயதிலிருந்து படம் துவங்குகிறது. ஒரு பள்ளி சிறுமியாக டீகோ ரிவேரா ஓவியம் நெருக்கடிக்கும் உள்ளாகிறார்.

ராக்பெல்லரின் நிறுவனத்தில் சுவரோவியம் வரைய சென்ற ரிவேரா அங்கே தொழிலாளர் வர்க்க அடையாளங்களை ஓவியமாக்கிவிட்டார் என்ற குற்றச்சாட்டோடு, திருப்பி அனுப்பப்படுவதோடு அந்த ஓவியம் வரையப்பட்ட சுவரும் இடிக்கப்படுகிறது. இந்த நாட்களில் பிரைடா கர்ப்பிணியாகிறாள். ரிவேராவிற்கோ தன் சொந்தப் பிரச்சினையைத் தவிர வேறு எதையும் கவனிக்க விருப்பமேயில்லை. அலைக்கழிப்பு, வலி, பயம் யாவும் அவளது கர்ப்பத்தை கலைக்கின்றன. உடல் சோர்ந்து போய் மெக்சிகோவிற்குத் திரும்புகிறாள்.

சில மாதங்களுக்கு பிறகு ரிவேரா மெக்சிகோ வந்து சேர்கிறார். இருவரும் புதிய வீடு ஒன்றில் வசிக்கத் துவங்குகிறார்கள். இடதுசாரி ஆதரவாளர் என்பதால் ரிவேராவை தேடிக் கலைஞர்களும் அரசியல் ஈடுபாடு கொண்டவர்களும் வந்தபடியே இருக்கிறார்கள்.

1937ஆம் ஆண்டு ருஷ்யாவிலிருந்து வெளியேறிய டிராட்ஸ்கியும் அவரது மனைவியும் மெக்சிக்கோவில் தஞ்சம் புகுந்தனர். அவர்களுக்கு ஆதரவுக் கரம் நீட்டினார். ரிவேரா, டிராட்ஸ்கியின் வரவு பிரைடாவை மீண்டும் ரிவேராவோடு ஒன்று சேர்த்தது. அவர்கள் சிதிலமடைந்து போய் உள்ள Teatithuacan பகுதிக்கு ஒரு நாள் பயணம் செய்கிறார்கள். பிரைடாவும் டிராட்ஸ்கியும் சிதிலங்களுக்கு ஊடாக மூச்சிரைக்க படியேறி உயரத்திற்கு செல்லும் அற்புதமான காட்சி படத்தில் இடம் பெற்றிருக்கிறது. அரசியல் காரணங்களால் சில நாட்களுக்குள்ளாக டிராட்ஸ்கி கொல்லப்படுகிறார். அது மேலும் பிரைடாவைத் துக்கத்தில் ஆழ்த்துகிறது.

சாலை விபத்தின் காரணமாக குழந்தை பெற்றுக்கொள்ள முடியாது என்ற நிலை அவருக்கு ஏற்பட்ட பிறகு தன்னுடைய உடல் ஒரு தானியங்கி இயந்திரம் என்பது போன்ற எண்ணங்கள் உருவாகத் துவங்கியது. குழந்தைப் பேறு மற்றும் துர்கனவுகள் குறித்துத் தொடர்ந்து ஓவியங்கள் தீட்டி வந்தார் பிரைடா. அத்தோடு கற்பனையாக ஒரு கனவுத் தோழியை உருவாக்கிக் கொண்டு அவளோடு பேசியபடியே தன் நாள்களைப் போக்கிய பிரைடா மிகுந்த தனிமையில் பீடிக்கப்பட்டார்.

அவளது நாள்குறிப்புகள் முழுவதும் ஏக்கமும் தவிப்புமாகவே பதிவு செய்யப்பட்டிருக்கிறது. எப்போதுமே பெண்கள் சூழ வலம் வந்த ரிவேரா கொஞ்சம் கொஞ்சமாக பிரைடாவின் கலை ஆளுமையை புரிந்து கொள்ளத் துவங்கினார். தனது தவறுகளுக்கு மாற்றாக அவளது ஓவியங்கள் குறித்த அக்கறையை வளர்த்துக் கொண்டார்.

பிரைடாவின் சுய உருவச்சித்திரங்கள் அவரை நவீன ஓவியர்களின் முக்கியமான வராக்கியது. காமத்தைக் குரங்காகவும், தனிமையை தவளையாகவும் உருமாற்றி ஓவியம் வரைந்த பிரைடா தன்னுடைய தோற்றத்தை ஜிப்சிகளை போல மாற்றிக் கொண்டார். ரிவேராவிற்கு பிடித்தமான தனது கேசத்தை அறுத்து எறிந்துவிட்டு அவர் மெக்சிகோவின் நாட்டுபுற அலங்காரத்தோடு தன்னை வரைந்து கொண்ட சுய ஓவியம் வெகு சிறப்பானதாகும்.


இருநூறுக்கும் அதிகமான ஓவியங்கள் மற்றும் கோட்டுச் சித்திரங்கள் வரைந்த பிரைடா நோய்மையும் வெறுமையும் ஒன்று சேர தன்னுடைய 47 ஆவது வயதில் 1954 ஆம் ஆண்டு மரணமடைந்தார்.

அவரது இழப்பை ரிவோராவால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. அலங்கரிக்கப்பட்ட உடலோடு அவரது இறுதி ஊர்வலம் சென்ற வழியெங்கும் கலைஞர்கள் திரண்டு வந்து விடை தந்தனர். பிரைடாவின் வாழ்வு அத்தோடு முடிந்து போனது. ஆனால் அவரது கலைவாழ்வு அன்று துவங்கி இன்று வரை தனக்கான தனிவெளியை எப்போதுமே தக்க வைத்திருக்கிறது.

பிரைடா ஓவியராக மட்டுமின்றி தன் கால கட்டத்தின் சமூக மற்றும் அரசியல் மாற்றங்களோடு தன்னை நேரடியாகத் தொடர்புபடுத்திக் கொள் கின்றவராகவும் இருந்தார். அடிநிலை மக்களுக்காகவே கலையும் இலக்கியமும் தேவைபடுகின்றன. கலை ஒரு போதும் வெற்று அலங்காரமாக இருக்கமுடியாது என்று பகிரங்கமாகவே பிரைடா அறிவித்தார்.

பிரைடாவின் வாழ்க்கை மற்றும் ஓவியங்கள் குறித்து வெளியான திரைப்படங்களில் digeo rivera: i paint what i see, frida"s closet, Frida Kahito documentary By Sada Thampson. The Life and Death of Frida of Kahio By: Karen and David Crommie ஆகியவை மிக முக்கியமானவைகளாகும்.

The Life and Death of Frida Kahiro By: Karen and David Crommie படம் பிரைடாவின் வாழ்வை விவரிக்கும் விவரணப் படமாகும். பிரைடாவோடு நெருக்கமாக பழகியிருந்த பதினொரு பேர்களின் நேர்காணல்கள் இந்தப் படத்தில் இடம் பெற்றுள்ளன. ரிவேராவிற்கும் அவருக்குமான உறவைப் பற்றியும் மெக்சிக்கோவின் அரசியல் செயல்பாடுகளுக்குப் பின்னால் அவர்கள் இருவரும் செயல்பட்ட விதமும் இந்த ஆவணபடத்தில் மிக அழகாகப் பதிவு செய்யப்பட்டிருக்கிறது. மெக்சிக்கோப் புரட்சி நடந்த ஆண்டை தனது பிறந்த வருடமாக அறிவித்து கொண்ட பிரைடா ஓவியராக மட்டுமின்றி தன் காலகட்டத்தின் சமூக மற்றும் அரசியல் மாற்றங்களோடு தன்னை நேரடியாகத் தொடர்புபடுத்திக் கொள்கின்றவராகவும் இருந்தார். அடிநிலை மக்களுக்காகவே கலையும் இலக்கியமும் தேவைபடுகின்றன. கலை ஒரு போதும் வெற்று அலங்காரமாக இருக்கமுடியாது என்று பகிரங்கமாகவே பிரைடா அறிவித்தார்.


இணையவாசி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓவியக் கண்காட்சியில் அசத்திய ஓவியங்கள்







சீனாவின் ஜீலின் எனும் மாகாணத்தில் முப்பரிமாண ஓவியங்களின் கண்கவர் கண்காட்சி ஒன்று இடம்பெற்றுள்ளது. பிரபல முப்பரிமாண ஓவியரான Weiwei என்பவரின் கைவண்ணத்தில் உருவான இந்த ஓவியங்கள் மிக நேர்த்தியான முறையில் பிரதிபலிப்பதைக் காணலாம்.

# கடலுக்கு அடியில் கட்டப்பட்ட விடுதி





துபாயில் கடலுக்கு அடியில் 10மீற்றர் ஆழத்தில் சுற்றுலா பயணிகளுக்கென பிரத்தியேகமாக ஆடம்பர விடுதி ஒன்று கட்டப்பட்டுள்ளது.
இந்த விடுதியில் தங்கும் போது நீருக்கு அடியில் மீன்களுடன் தங்குவது போன்ற ஓர் உணர்வை தரும் என்கின்றனர்.
கடலுக்கு அடியில் 10மீற்றர் ஆழத்தில் அமைந்த இந்த விடுதி 21 அறைகளை உள்ளடக்கியுள்ளது. கடல் சீற்றம் , வெள்ளம் ஆகியவற்றை தாங்கும் அளவுக்கு மிகவும் பாதுகாப்புடன் கட்டப்பட்டுள்ளதாக இதன் உரிமையாளர் தெரிவித்தார்.

# ஜேர்மனியில் இசை மியூசியத்தில் வைக்கப்பட்ட வாய் ரொய்லெட்



சிறு வயதில் நண்பர்களாக இருந்த பிரட்டிஷ் இசை கலைஞர்கள் மிக் ஜாகர், கெய்த் ரிச்சர்ட்ஸ் ஆகியோர் தங்களது நட்பைப் புதுப்பித்துக் கொள்ளும் வகையில் லண்டனில் கடந்த 1962ஆம் ஆண்டு தொடங்கிய ராக் இசைக்குழு தி ரோலிங் ஸ்டோன்ஸ். இந்தக் குழு ஏராளமான இசை நிகழ்ச்சிகளை நடத்தியுள்ளது. பல்வேறு அல்பங்களை வெளியிட்டுள்ளது.
குழுவின் 50 ஆண்டு இசைச் சாதனையை கௌரவிக்கும் வகையில் ஜேர்மனியின் லூசோ நகரில் அருங்காட்சியகம் ஒன்றை உல்ரிச் ஷ்ரோடர் - பர்கிட் தம்பதியர் அமைத்திருக்கின்றனர். இருவரும் குழுவின் தீவிர ரசிகர்கள்.
குழு நடத்திய இசை நிகழ்ச்சிகள் பற்றிய தொகுப்புகள், இசை அல்பங்கள், புகைப்படங்கள் உட்பட பல்வேறு தகவல்கள் இதில் இடம்பெற்றுள்ளன. வாயை திறந்து பாடுவது போன்ற உருவம் தான் இக்குழுவின் லோகோ. அதேபோன்ற அமைப்பில் அருங்காட்சியகத்தின் ரொய்லெட்டும் வடிவமைக்கப்பட்டுள்ளது. இதற்கு ரசிகர்கள் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர். வாய் உருவத்தில் ஏற்கனவே பல ரொய்லெட்கள் இருக்கின்றன. ஆனால், ரோலிங் ஸ்டோன்ஸ் அருங்காட்சியகத்தில் இவ்வாறு அமைத்துள்ளது அதிர்ச்சி அளிக்கிறது. உண்மையான ரசிகர்கள் அதில் சிறுநீர் கழிக்க மாட்டார்கள் என்கின்றனர்.
"அருங்காட்சியகத்தின் ஒவ்வொரு பகுதியும் ரோலிங் ஸ்டோன்ஸ் புகழ்பாட வேண்டும் என்பதுதான் எங்கள் விருப்பம். யாரையும் புண்படுத்துவது அல்ல என்கின்றனர்" அந்தத் தம்பதியர்.

# நகரும் அதிசய உணவு விடுதி




சுற்றுலாப் பிரயாணங்களின்போது தங்குமிட வசதிகளை வழங்கும் உணவுவிடுதிகளில் அதிகமானவை நிரந்தரமானவையாகவே காணப்படும். எனினும் இடத்திற்கு இடம் நகர்த்தக்கூடிய உணவு விடுதிகளும் காணப்படுகின்றன. அவ்வாறு கொள்கலன்களைக் கொண்டு அமைந்த 40 தொடக்கம் 400 வரையான அறைகளைக் கொண்ட உணவுவிடுதி ஒன்று காணப்படுகின்றது. மூன்று நாள்கள் மட்டுமே இந்த உணவுவிடுதியில் தங்கமுடியும். பின்பு உணவுவிடுதியை இடம்மாற்றி விடுவார்கள்.

# பூனையின் அரவணைப்பில் தூங்கும் எலி



மாமிச உண்ணியான பூனைகள் தமது உணவாக அதிகளவில் எலிகளையே உட்கொள்கின்றன. இதற்காக இவை இரண்டிற்குமிடையில் பெரும் போராட்டமே நடைபெறுவதுண்டு. ஆனால் அதனையும் மீறி அதி உயர்ந்த பெறுமதியைக் கொண்ட நட்பு என்னும் சொல் இவ்விரண்டு பிராணிகளையும் பாச மழை பொழிய வைத்துள்ளது. அதாவது எலி ... இன்றி பூனை... பெருமூச்சு விட்டுத் தூங்குகின்றது.

# விநோத சைக்கிள்



தற்போது பயன்படுத்தப்படும் சைக்கிள்கள் மலைகளில் இயக்குவதில் மிகவும் கடினமாக காணப்படுவதுடன் கால்களினாலேயே இயக்கப்படுவதுண்டு. ஆனால் இவற்றையெல்லாம் தாண்டி மலைகளிலும் ...த் செலுத்தக் கூடியதும், கைகளினால் செலுத்தக் கூடியதுமான மூன்று ... கொண்ட விநோத சைக்கிள் ஒன்று விசேட தேவையுடையோருக்காக உருவாக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்கள் கைரேகைகளின் பலன்கள்

கைரேகை சாத்திரம் அல்லது குறிபார்த்தல் என்பது கைரேகையை ஆராய்வதன் மூலமாக ஒருவரின் எதிர்காலத்தையும், குணத்தையும் சொல்லும் கலையாகும். இது கைரேகை வாசிப்பு அல்லது குறிசொல்லுதல் என்றும் அழைக்கப்படும். இது பல்வேறு கலாசார வேறுபாடுகளுடன் உலகின் சகல பாகங்களிலும் காணப்படுகிறது. இவ்வாறு குறிசொல்லும் பழக்கமுடையவர்கள் பொதுவாக கைரேகை ஜோதிடர்கள், கைரேகை படிப்பவர்கள் அல்லது குறிசொல்பவர்கள் என்று அழைக்கப்படுகிறார்கள்.

கை ரேகைக் கலையை ஆங்கிலத்தில் (பாமிஸ்டிரி) என அழைக்கிறார்கள். Pamistry என்னும் வார்த்தையில் Palm, Mastery என இரண்டு சொற்கள் இணைந்துள்ளன. Palm என்றால் உள்ளங்கை எனப்பொருள்படும். Mastery என்றால் ஞானம் எனப்பொருள்படும்.எனவே Pamistry என்றால் உள்ளங்கை பற்றிய ஞானம் எனப்பொருள்படும்.

கை ரேகைக் கலையை ஆங்கிலத்தில் வேறு ஒரு வார்த்தையிலும் குறிப்பிடுகிறார்கள். Cheirosopy (கீரோஸபி) என்பது அந்த வார்த்தையாகும்.

Cheirosopy (கீரோஸபி) என்னும் கை வடிவ இயலில் இரு பிரிவுகள் உள்ளன.அவை: Cheirosopy என்னும் கை புறத்தோற்றவியலில் கைகளின் ஒட்டுமொத்த புறத்தோற்றம்,விரல்களின் தோற்றம்,விரல் நகங்களின் தோற்றம், உள்ளங்கையில் காணப்படும் கிரக மேடுகளின் (கோள் மேடு) தோற்றம் என்பவற்றைக் கொண்டு பலாபலன்கள் கூறப்படுகிறது. (கீரோமன்ஸி) என்னும் கை அகக்கோட்டியலில் உள்ளங்கையில் காணப்படும் ரேகைகள் (கோடுகள்) மற்றும் குறியீடுகளைக்கொண்டு பலாபலன்கள் கூறப்படுகிறது.

இந்தக் குறிகூறும் முறை பொதுவாக போலி விஞ்ஞானமாகவே மதிக்கப்படுகிறது. கீழே கொடுக்கப்படும் தகவல்கள் நவீன கைரேகைச் சாத்திரத்தின் சுருக்கமான குறிப்பீடுகளாகும் வெவ்வேறு கைரேகை ஜோதிட முறைகளுக்கு இடையே வெவ்வேறு போக்குகள் இருக்கின்றன. அதேபோன்று, பல்வேறு கைரேகை முறைகள் குறித்து பல மாறுபட்ட கருத்துக்களும் உள்ளன. பொதுவாக இந்தக் கருத்துக்கள் முரண்பாடுகளாகவே இருக்கின்றன.

வரலாறு, உத்திகள், இடது மற்றும் வலது கையின் முக்கியத்துவம், கை வடிவம், ரேகைகள், விஞ்ஞானமும், விமர்சனமும் என்ற முக்கிய அம்சங்கள் குறித்த விவரங்கள் கீழே தரப்படுகின்றன.




**வரலாறு**

கைரேகைச் சாத்திரம், இந்தியாவில் ஜோதிடத்தோடு வேரூன்றி உள்ளது. இந்து மத முனிவர் வால்மீகி, "ஆண் கைரேகை சாத்திரத்தைப் பற்றிய வால்மீகி மகரிஷியின் படிப்பினைகள்" என்ற தலைப்பில், 567 செய்யுள்கள் அடங்கிய ஒரு புத்தகம் எழுதி இருப்பதாகக் கருதப்படுகிறது. கைரேகைச் சாத்திரக் கலை இந்தியாவிலிருந்து, சீனா, திபெத், எகிப்து, பேர்சியா மற்றும் ஐரோப்பாவின் பிற நாடுகளுக்கும் பரவியதாகக் கூறப்படுகிறது.

**உத்திகள்**

ஒருவரின் உள்ளங்கையில் இருக்கும் கைரேகையைப் "படிப்பதன்" மூலமாக, அவருடைய குணத்தை அல்லது அவரின் எதிர்கால வாழ்க்கையை எடுத்துக் கூறும் முறையே கைரேகைச் சாத்திரமாகும். பல்வேறு ரேகைகளும் ("இதய ரேகை", "ஆயுள் ரேகை", இதர பிற), மேடுகளும், அவற்றைச் சார்ந்த அளவுகள், தன்மைகள் மற்றும் உட்பிரிவுகளும் விஷயங்களை எடுத்துக்காட்டுகின்றன. சில கலாசாரங்களில், இவ்வாறு படிப்பவர்கள் விரல்கள், விரல்நகங்கள், விரல்ரேகைகள் மற்றும் உள்ளங்கை தோல் வடிவங்கள் (ரேகையியல்), தோல் அமைப்புமுறை மற்றும் நிறம், உள்ளங்கையின் வடிவம் மற்றும் கையின் மென்மை ஆகியவற்றையும் பரிசோதிக்கிறார்கள்.

கைரேகை பார்ப்பவர்கள் பொதுவாக ஒருவர் "அதிகம் பயன்படுத்தும் கையையே" (ஒரு பெண்ணோ, ஆணோ எந்தக் கையினால் எழுதுகிறாரோ அல்லது அதிகமாகப் பயன்படுத்துகிறாரோ அதை) பார்க்கிறார்கள். (சிலவேளைகளில் இந்தக் கை நனவுப்பூர்வமான மனதைக் குறிப்பதாகவும், அடுத்த கை ஆழ்நிலை மனதை குறிப்பிடுவதாகவும் கருதப்படுகிறது).

"பண்டைய" கைரேகைச் சாத்திரத்திற்கான அடிப்படைக் கட்டமைப்பு கிரேக்க புராணங்களில் வேரூன்றி உள்ளது. உள்ளங்கை மற்றும் விரல்களின் ஒவ்வொரு பகுதியும் ஓர் ஆண் கடவுளுடனோ அல்லது ஒரு பெண் கடவுளுடனோ சம்பந்தப்பட்டிருக்கும். மேலும் இந்தப் பகுதியின் குறிப்புகள் அந்த குறிப்பிட்ட நபரின் குணத்தை எடுத்துக்காட்டும்: எடுத்துக்காட்டாக, மோதிர விரலானது அப்போலோ என்ற கிரேக்க கடவுளோடு தொடர்புபட்டது; இந்த மோதிர விரலின் குறிப்புகளின் படி, அந்தக் குறிப்பிட்ட நபர் கலை, இசை, அழகு, புகழ், செல்வவளம், மற்றும் கருணை ஆகியவற்றைக் கையாளும் தன்மையோடு தொடர்புபட்டிருக்கும்.

கை ரேகைக் கலை என்னும் கை வடிவ இயலில் ஐந்து அங்கங்கள் உள்ளன.

1.கைகளின் வகைகள்
2.விரல்களின் வகைகள்
3.உள்ளங்கையிலுள்ள கிரக மேடுகள்
4.உள்ளங்கையிலுள்ள ரேகைகள்
5.உள்ளங்கையிலுள்ள குறியீடுகள்

**இடது மற்றும் வலது கையின் முக்கியத்துவம்**

இரண்டு கைகளும் அவற்றிற்குரிய தனித்தனி முக்கியத்துவத்தைக் கொண்டிருப்பதால், எந்தக் கையில் கைரேகை சாத்திரம் பார்ப்பது சிறந்தது என்பதில் பல விவாதங்கள் உள்ளன. இடதுகை ஒவ்வொருவரின் மூல வாய்ப்பு வளத்தைக் காட்டுவதாகவும், வலது கை அவருடைய குணத்தைக் காட்டுவதாகவும் கருதப்படுகிறது. "வலது கையில் எதிர்காலம் தெரியும்; இடதுகையில் கடந்த காலம் தெரியும்." என்றும், "நாம் பிறப்பிலேயே எதைக் கொண்டு வந்திருக்கிறோம் என்பதை இடதுகை காட்டும்.

நாம் எதற்காக பிறந்திருக்கிறோம் என்பதை வலது கை காட்டும்" என்றும், "ஆண்களுக்கு வலதுகையைப் பிடிக்க வேண்டும், பெண்களுக்கு இடது கையைப் பிடிக்க வேண்டும்" என்றும், "என்ன கிடைக்கும் என்பதை இடது கை காட்டும், அதைக் கொண்டு என்ன முடியும் என்பதை வலதுகை காட்டும்" என்றும் கூறப்படுகிறது.

(தொடரும்)

# எஸ்.எல்.ரி.எஸ்க்கும் பதவி கொடுக்கலாமோ?

அரச நிர்வாக அலுவலகங்கள் திறம்பட இயங்காததற்கு பல்வேறு காரண, காரியங்கள் சொல்லப்படுகின்றன. முக்கியமான காரணம் அரசியல் தலையீடு. இந்தத் தலையீடுகள் காரணமாக முக்கியமான பதவிகளுக்கு, பொருத்தமில்லாத - தகுதியில்லாதவர்கள் நியமிக்கப்படும்போது அரச நிர்வாக இயந்திரம் ஒழுங்காக இயங்க முடியாது போகின்றது.

வடக்கு மாகாண சபையைப் பொறுத்தவரையில், நாட்டாமையின் தலையீடு இல்லாமல் எதுவுமே செய்ய முடியாது. அந்தளவுக்கு நாட்டாமை கண்ணும் கருத்துமாய் இருந்து பார்த்துக் கொள்கின்றார். (?)

வடமாகாண சபையில், கலாசாரத்தை பாதுகாப்பதற்கு ஓர் அமைச்சு இருக்கின்றது. அங்கும் தலை பொருத்தமில்லை என்று தற்போது போர்க்கொடி தூக்கப்பட்டுள்ளது.

**ஏன்...**
**எதற்கு...**
**எப்படி?**

இலங்கை ஆசிரியர் தரச் சேவையைச் சேர்ந்தவரே அங்கு தலை . இருப்பினும் அவருக்கு குறித்த பதவி நாட்டாமையின் தயவில் வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. மேல் நிலைப் பதவிகளுக்கு இலங்கை நிர்வாக சேவையைச் சேர்ந்தவர்களே நியமிக்கப்பட வேண்டும். இருப்பினும் நாட்டாமையின் அனுசரணையுடன் குறித்த பதவி நிர்வாக சேவை அற்றவரால் நிர்வகிக்கப்படுகிறது. கடந்த காலங்களில் அவர் ஆற்றிய சேவை அதற்குக் காரணமாக இருக்கலாம்.

இதனால் பாதிக்கப்பட்ட நிர்வாக சேவையை சேர்ந்தவர்கள் இப்போது போர்க் கொடி தூக்கியுள்ளனராம். அத்துடன் இதேபோன்று நாட்டாமையின் தயவில் பதவியைப் பெற்ற பலர் தமக்கு எதிராக எவரையும் போர்க் கொடி தூக்க விடாமல் அனுசரித்துப் போய்க் கொண்டிருக்கின்றார்கள்.

பதவிக்கு தகுதியில்லாதவர்களை தமது செல்வாக்கைப் பயன்படுத்தி இவ்வாறு நியமித்தால் மக்கள் பாடுதான் திண்டாட்டம். எஸ்.எல்.ரி.எஸ்க்கு பலர் உரிய பதவி கிடைக்காமல் இருக்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

-நக்கல் நரசிம்மன்.

# உதயனை விமர்சியுங்கள்

வடபகுதி மக்களின் துன்ப துயரங்களை பல இன்னல்களுக்கு மத்தியில் வெளி உலகுக்கு வெளிக்காட்டிய ஒரே பத்திரிகை 'உதயன்' மட்டும்தான். இன்று பல சுவையான செய்திகளை உடனுக்குடன் வெளிப்படுத்தும் உதயன் பத்திரிகை திருமலை மண்ணிலும் ஒவ்வொரு நாளும் எமது கைகளில் கிடைப்பது மிகவும் மகிழ்ச்சி தான். இது தடையின்றி தொடர வேண்டும்.

கந்தளாய் பேரின்பம்
திருகோணமலை

★ ★ ★

அண்மைய நாள்களில் இராணுவத்தினர் ஒருவருக்கொருவர் துப்பாக்கியால் சுடப்பட்டு சாவடையும் சம்பவங்கள் அதிகரித்துக் காணப்படுகின்றன. இந்தச் சம்பவங்களை உதயன் செய்தி ஊடாக பார்க்கக் கூடியதாக இருக்கிறது. அதேவேளை எதற்காக இராணுவத்தினர் ஒருவரை ஒருவர் துப்பாக்கியால் சுட்டு சாகிறார்கள் என்பதுதான் தெரியாமல் உள்ளது.

இப்படிப்பட்ட செய்திகள் முழுமையாக வெளியிடும் போது உதயன் வாசகர் ஆகிய எங்களுக்கு ஒரு குழப்ப நிலையை ஏற்படுத்தாது என்பது வெளிப்படையானது. சாவகச்சேரி நுணாவில் பகுதியிலும், யாழ் நகர்ப் பகுதியிலும் திருகோணமலைப் பகுதியிலும் இராணுவத்தினர் ஒருவரை ஒருவர் துப்பாக்கியால் சுட்டு சாவடைந்த சம்பவங்கள் பற்றி வெளிவந்த செய்திகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படவில்லை.

போர்க் களமுனைகளில் சாவடைந்த இராணுவத்தினர் போர் முடிவடைந்ததும் தங்களைத் தாங்களே துப்பாக்கியால் சுட்டு சாகும் சம்பவங்கள் அதிகரித்து வருகிறது. ஆகவே இப்படிப்பட்ட செய்திகளை முழுமையாக பிரசுரிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

மாசிலாமணி
கரவெட்டி

★ ★ ★

வன்னிப் பக்கச் செய்திகளை உதயன் வன்னிப் பதிப்பில் பார்க்க முடிகிறது. யாழ்ப்பாணப் பதிப்பில் பார்க்க முடியாமல் உள்ளது. யாழ்ப்பாணத்தில் இருக்கும் எமக்கும் வன்னிச் செய்திகளை முழுமையாகப் பார்க்க ஆவன செய்வீர்களா.

கடுமையான முறையில் போர் இடம் பெற்ற வன்னிப் பகுதியில் மீளக் குடியமர்ந்த மக்கள் வாழ்வாதார பிரச்சினைகளை எதிர் கொண்டு வருகின்றனர். ஆகவே யாழ்ப்பாணத்தை விட வன்னியில் தான் நிறைய செய்திகள் இருக்கின்றன. எனவே வன்னிப் பதிப்புக்கு அனுப்பும் செய்திகளை யாழ்ப்பாணப் பதிப்புக்கும் அனுப்புமாறு கேட்டுக் கொள்கிறேன்.

காவேரி
கொடிகாமம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மின்சாரம் முழுமையாகக் கிடைக்குமா?

வெளிநாடுகளிடம் இருந்து கடனைப் பெற்று விடுதலைப் புலிகளுக்கு எதிராகப் போரை நடத்திய இலங்கை அரசு அந்தக் கடனை அடைக்க முடியாமல் திண்டாடுகிறது. வளங்கள் நிறைந்த நிலப்பரப்புகளை வெளிநாடுகளுக்கு தாரைவார்த்து விட்ட பின்னர் இன்னும் மேலதிகமாக கடன் பளு இருப்பதனால்தான் அத்தியாவசியப் பொருள்களின் விலையையும் உயர்த்தியுள்ளது.

இனிவரும் காலங்களில் என்னென்ன பொருள்களின் விலை எகிறுமோ என்று சொல்ல முடியாதுள்ளது. இதற்கிடையில் அத்தியாவசிய தேவைகளில் ஒன்றான மின்சாரத்தின் கட்டணத்தையும் உயர்த்தியுள்ளது. மின்சாரத்தை தொட்டால் 'ஷாக்' அடிக்கும் என்று எல்லோருக்கும் தெரியும். மின்சாரசபை வழங்கும் மின்சார கட்டணத்தைப் பார்த்தாலும் எமக்கு 'ஷாக்' அடிக்கும் . என்ன செய்ய முடியும், மின்சாரம் இல்லாது விடின் பல தேவைகளை நிறைவேற்ற முடியாமல் போகும் என்பதனால் மக்கள் கூடுதலாக பணம் செலவானாலும் மின்சாரத்தை பயன்படுத்துகின்றனர். ஆனாலும் ஒழுங்கான முறையில் மின்சாரம் கிடைக்கும் என்றால் இல்லை என்று தான் சொல்ல முடியும். மின்சாரத்தை வழங் கிய பகுதிகளுக்கே ஒழுங்கான முறையில் மின்சாரத்தை வழங்க முடியாத அரசு, எப்படி மின்சாரம் வழங்காத பகுதிகளுக்கு மின்சாரத்தை வழங்கப் போகிறது என்பது கேள்விக் குறியாக உள்ளது. பளை மட்டும் லக்ஷபானா மின்சாரம் வந்து விட்டது என்று அரசு சொல்லுகிறது. ஆனால் அந்த மின்சாரம் ஊர்மனைகளுக்குள் வருமா? என்று அந்தப் பகுதி மக்கள் கேட்கிறார்கள். மின்சாரத்தை பெற்றவர்கள் மின்சாரத்தை அளவாக உபயோகிப்பீர்களானால் மின்சாரம் வழங்கப்படாத இடங்களுக்கும் மின்சாரத்தை வழங்கச் சொல்லி நாம் அரசை வற்புறுத்த முடியும். மின்சாரத்தை நாம் அளவுக்கு அதிகமாக உபயோகிக்கும் போது ஒரு மீற்றரில் அது செலவுக் கணக்கில் எண்ணப்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதை எப்போதும் நாங்கள் நினைவில் வைத்திருந்தால் மின்சாரத்தை அளவோடு பயன்படுத்த முடியும். இதன் மூலம் மீளக்குடியமர்ந்த மக்களுக்கும் மின்சாரத்தை வழங்க முடியும்.

மின்சாரத்தை கூடுதலாகப் பயன்படுத்துவதாக மக்கள் மீது மின்சார சபை பழிபோடுகிறது. ஆகவே அந்தப் பழியை முதலில் இல்லாமல் செய்வோம். பின்பு மின்சாரத்தை வழங்காத பகுதிகளுக்கு மின்சாரத்தை வழங்கச் சொல்லிக் கேட்போம்.

மின்சாரத்தை கூடுதலாகப் பயன்படுத்துவதாக மக்கள் மீது மின்சார சபை பழிபோடுகிறது. ஆகவே அந்தப் பழியை முதலில் இல்லாமல் செய்வோம். பின்பு மின்சாரத்தை வழங்காத பகுதிகளுக்கு மின்சாரத்தை வழங்கச் சொல்லிக் கேட்போம். போர் இடம்பெற்ற காலப் பகுதியில் மின்சாரம் இல்லாமல் எத்தனை வருடங்கள் நாம் பாதுகாப்பாகவும் வாழ்வின் முன்னேற்றகரமாகவும் வாழ்ந்தோம் என்பதை எவரும் மறந்து விடக் கூடாது. அன்று மின்சாரம் இல்லை. இருளுக்குள் பாதுகாப்பாக இருந்தோம். இன்று மின்சாரம் உண்டு. வெளிச்சத்துக்குள் எல்லாம் நடக்குது.

மின்சாரத்தை சிக்கனப்படுத்த சில எளிய வழிமுறைகளை கடைப்பிடித்தாலே போதும். முதலாவது தெரிந்து கொள்ள வேண்டிய விடயம் மின்சார சபை கட்டணங்களை அறவிடும் முறை. மின்சாரம் அறவே பயன்படுத்தாவிட்டாலும் குறைந்த பட்ச கட்டணம் செலுத்தியாக வேண்டும். மின்சாரத்தை பயன்படுத்தும் அளவு அதிகரிக்கும் போதும் ஒரு யூனிட்டுக்கான கட்டணம் அதிகரித்துக் கொண்டே போகும். சாதாரண குண்டு பல்ப்புகள் எரியும் போது மின்சாரத்தின் பெரும் பகுதி வெப்ப சக்தியாக வீணாக வெளியிடப்படுகிறது. இது புவி வெப்பம் அடையவும் காரணமாகிறது. எனவே குண்டு பல்ப்பை ஒழித்துக் கட்டி விட்டு யூபல்ப்பினை பயன்படுத்தினால் மின்சாரத்தை பெருமளவு சிக்கனப்படுத்தலாம். இதன் மூலம் மின்சாரக் கட்டணத்தையும் குறைத்துக் கொள்ளலாம். யூபல்ப்புகள் அதிக வெப்பம் அடைவதில்லை. ஆனால் அவற்றில் பயன்படுத்தப்படும் பாதரச வாயு நச்சுத்தன்மை வாய்ந்தது. எனவே சுட்ட பல்ப்புகளை உடைக்காமல் அப்புறப்படுத்த வேண்டும். மின்சாரத்தை வீண் விரயம் செய்து ஊர்முழுக்க மின்விளக்குகளால் அலங்கரித்து காது கிழிய பாட்டுப்போட்டு பொதுவிழாக்களை நடத்தக்கூடாது. விழாக்கள் எதுவானாலும் எளிமையான முறையில் பயனுள்ளதாகவும் மகிழ்ச்சியை பகிர்ந்து கொள்வதாகவும், சுற்றுச் சூழலுக்கு கேடு செய்யாமலும் இருக்க வேண்டும். மின்சாரம் வழங்கும் திட்டத்தை இந்த வருடத்துக்குள் நிறைவு செய்வதாகவும் பல திட்டங்களை முன்னெடுத்துள்ளதாகவும் இதற்காக பல ஆயிரம் மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் அரசு அறிவித்துள்ளது. மூன்று தசாப்த போரில் மின் கட்டமைப்பு முழுமையாக நாசமாக்கப்பட்டது.

வடக்கு முழுமையாக மின்சாரம் இல்லாமல் இருளில் இருந்தது. இப்பொழுது மின்சாரம் வழங்குவது என்பது வடக்கின் வளர்ச்சியில் மைல் கல்லாக அமைகிறது. வடக்கின் பெரும்பாலான பகுதிகள் 20 வருடங்களுக்கு மேலாக மின்சாரம் இல்லாமல் இருளில் இருந்தன. இப்பொழுது மின்சாரம் வழங்கப்பட்டுள்ளது. ஆனாலும் முல்லைத்தீவு மாவட்டத்தில் பெரும் பகுதி இருளில் மூழ்கியுள்ளது. இந்தப் பகுதிக்கு எப்பொழுது மின்சாரம் கிடைக்கும் என மீளக்குடியமர்ந்த மக்கள் கேட்கின்றனர்.

இதற்கிடையில் மின் அதிகரிப்பால் பல பகுதிகளில் உள்ள வீடுகளில் மின்சார பாவனைப் பொருள்கள் செயலிழந்த சம்பவம் அண்மையில் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. அதாவது வலிகாமம் பகுதியில் உள்ள சுன்னாகம், மல்லாகம், தெல்லிப்பழை, அளவெட்டி, மருதனார்மடம், உடுவில் பகுதிகளில் அடிக்கடி நிகழும் மின் அதிகரிப்பால் தொடர்ச்சியாக மின்சார உபகரணங்கள் எரிவதுடன், பழுதடைந்தும் வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனால் மக்களின் பெருமளவிலான இலத்திரனியல் மின் உபகரணங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. இது குறித்து மின்சார சபை வட்டாரங்கள் தெரிவிக்கையில் வீதி அகலிப்பு காரணமாக மின் தூண்கள் இடமாற்றம் செய்யப்படும் போது இந்த விதமான விளைவுகள் ஏற்படுவதாக தெரிவிக்கின்றன.

கோப்பாய் பகுதியில் கடந்த ஞாயிற்றுக் கிழமை இரவு 7 மணியில் இருந்து 8 மணிவரை மின்சாரம் துண்டிக்கப்பட்டது. இதற்கு என்ன காரணம் என்று தெரியவில்லை. அடிக்கடி அந்தப் பகுதியில் மின்சாரம் துண்டிக்கப்படுகிறது. வலி.வடக்கில் மீளக் குடியமர்ந்துள்ள மக்களுக்கு வடக்கின் வசந்தம் எட்டிக்கூட பார்க்க மறுப்பதாக குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன. வலிகாமம் வடக்குப் பகுதியில் மீளக் குடியமர்ந்த மக்களுக்கு வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் வழங்கப்படுவதாக கூறப்பட்ட இலவச மின்சார இணைப்பைத் தராது கடந்த ஒன்றரை வருடங்களுக்கு மேலாக அரசு ஏமாற்றி வருகிறது. போரின் பின்னர் இராணுவத்தினரின் உயர்பாதுகாப்பு வலயமாக இருந்து பெயரளவில் விடுவிக்கப்பட்டுள்ள வலிகாமம் வடக்குப் பகுதியில் உள்ள வசாவிளான் மற்றும் சுதந்திரபுரம் மற்றும் கட்டுவன் மேற்குப் பகுதிகளில் உள்ள சுமார் 145 வீடுகளுக்கான மின்சார இணைப்பைப் பெற்றுக் கொள்வதற்காக விண்ணப்பங்கள் அனுப்பி வைக்கப்பட்டு ஒன்றரை வருடங்களுக்கு மேலாகியும் இதுவரை மின்சாரம் பெற்றுக் கொடுக்கப்படவில்லையென கூறப்படுகிறது. மேற்படி பகுதியில் மின் கம்பங்கள் போடப்பட்டு அருகில் உள்ள ஒரு சில வீடுகளுக்கு மின்சார இணைப்பு கொடுக்கப்பட்டுள்ளது. இராணுவ முகாம்கள் மற்றும் காவலரண்களுக்கும் உடனடியாக மின்னிணைப்பு வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கின்றனர்.

■ பித்தன்

# இழுபறிப் பயணங்கள்

யாழ்ப்பாணத்தோடு ஒட்டிப் பிறந்த பிரச்சினையாக பஸ் போக்குவரத்து தொடர்ந்து வருகிறது. தனியார் பஸ், இ.போ.ச. பஸ் என்பன பெயர்களில் தான் வித்தியாசமே தவிர பொது மக்களை சோதனைக்குள்ளாக்குவதில் இவ் இரண்டு சேவைகளுமே போட்டி போட்டுக்கொண்டு செயற்படுகின்றன. போக்குவரத்து பிரச்சினை பற்றி எத்தனையோ முறை ஊடகங்கள் கூக்குரல் இட்டபோதும் அவற்றை கிஞ்சித்தேனும் கணக்கில் எடுக்கவில்லை இந்தப் போக்குவரத்துச் சேவை நிறுவனங்கள். இ.போ.சவோ, தனியார் பஸ் சேவைகளோ அவற்றுக்கு தத்தம் இலாப நோக்கம் மட்டுமே முதன்மையானதாக அமைகின்றதே தவிர மக்களின் நலன்சார்ந்த விடயங்களில் அக்கறை இருப்பதில்லை. இதனையே தொடர்ந்து வரும்பிரச்சினைகள் கட்டியம் கூறுகின்றன.

பொதுவாக மினி பஸ்களை விடவும், சீ.ரி.பி. என்று செல்லமாக அழைக்கப்படும் இ.போ.ச. பஸ்களில் பயணிப்பதை முன்னைய காலங்களில் அநேகர் விரும்பினர். மினிபஸ்ஸை விட அளவில் பெரிதான - விட்டுவீதி கொண்டதான - பஸ்கள், குறைந்த கட்டணம், குறித்த நேரத்துக்கு பிந்தாத பயணம் என்பனவே இந்த விருப்புக்கு காரணம். ஆனால் இப்போது அந்த நிலைமையில்லை. சீ.ரி.பி. பஸ்கள் குறித்த நேரத்துக்கு குறித்த இடத்தை அடைந்தால் அது பெரிய அதிசயம்தான். அத்தோடு குடாநாட்டில் ஓடித்திரிகின்ற பெரும்பாலான சீ.ரி.பி. பஸ்கள் கடுமையான நோயால் பீடிக்கப்பட்டிருப்பதால் அடிக்கடி வீதிகளில் படுத்து விடுகின்றன. மேலும் ஒரு தொகை பஸ்கள் உரிய உதிரிப் பாகங்கள் இன்மையால் டிப்போக்களில் ஓய்வெடுத்து வருகின்றன. எனவே இருக்கின்ற ஒரு சில பஸ்களை வைத்துக்கொண்டுதான் இ.போ.ச. போக்குவரத்தை செய்ய வேண்டிய நிலை.

## கோணல் கோலங்கள்

நாளுக்கு ஆகக்குறைந்தது ஒரு பஸ்ஸுக்காவது 'வருத்தம்' வந்து விடுவதால் ஏற்கனவே நிர்ணயிக்கப்பட்ட நேர அட்டவணை அடிப்படையில் சீ.ரி.பி. பஸ்கள் பஸ் தரிப்பு நிலையங்களுக்கு வந்து சேர்வதில்லை. அப்படி வந்தாலும் இடைவழியில் திக்கித்திணறி பழுதடைந்து விடுவதால் அதில் பயணித்தவர்கள் இன்னொரு சீ.ரி.பி. பஸ் அந்த இடத்துக்கு வரும்மட்டும் தவமிருக்க வேண்டும். இல்லாவிட்டால் ஓடித்திரியும் மினிபஸ்களில் மீண்டும் ஒருமுறை கட்டணம் செலுத்திப் பயணிக்க வேண்டும். இதனால் பருவகாலச் சீட்டுக்களுடன் சீ.ரி.பி. பஸ்களில் பயணிப்போர் உரிய நேரத்துக்கு தாம் செல்ல வேண்டிய இடங்களை அடையமுடியாமல் உள்ளது.

இதைவிட ஒரு சில பயணிகளின் தனிப்பட்ட நலன்களை சீ.ரி.பி. பஸ் நடத்துநர்களும் சாரதிகளும் கவனத்தில் கொள்வதாலும் உரியநேரத்தில் புறப்படமுடியாத நிலை ஏற்படுகிறது. பஸ் நிலையத்தில் பஸ் புறப்பட தயார் நிலையில் இருக்கும். அப்போதுதான் நடத்துநருக்கும், சாரதிக்கும் இயற்கைக்கடன்கள் பற்றியோ அல்லது வெற்றிலை போடுவது பற்றியோ நினைப்பு வரும். சட்டென்று இறங்கிச் சென்று அந்த அலுவல்களை நிறைவேற்றிவிட்டு வரும் வரை பஸ் கசநோயாளியைப் போல மெலிதாக இருமிக்கொண்டிருக்கும். சரி இனியாவது பஸ் புறப்படப்போகிறது என்று நினைத்தால் திடீரென்று பின்பக்க ஆசனங்களில் இருந்து அவசரத்தனமான குரல்கள் எழும்.

''அஞ்சு நிமிசம் பொறுங்கோ. என்ர அவர் கடைக்குப் போட்டார். இன்னும் வரேலை''

இப்படி குரல் எழுப்பியவர் நடத்துநருக்கோ அல்லது சாரதிக்கோ பழக்கமானவராய் இருந்து விட்டால் கடைக்குப் போனவர் திரும்பிவர ஐந்தென்ன, பத்து நிமிடங்கள் ஆனாலும் பஸ் புறப்படாது. அவர் வந்த பின்னர் தான் பஸ்ஸுக்கு விடிவு பிறக்கும்.

சீ.ரி.பி. பஸ்களில் பயணிப்பவர்களும் இலேசுப்பட்டவர்கள் அல்ல. அவர்களின் திருவிளையாடல்களும் தனிரகமானவை. அவற்றில் முக்கியமானது சீற் பிடிக்கும் படலம். குறிப்பாக இளைஞர்கள் சிலர் பஸ்ஸில் ஏறியவுடனேயே தமக்குப் பக்கத்தில் ஒரு பையை வைத்து விடுவார்கள். யாராவது வயதானவர்கள் அதிலிருக்க முற்பட்டால் ''ஆள் இருக்கு'' என்று சொல்லி அவர்களை அங்கிருந்து அப்புறப்படுத்தி விடுவார்கள். இத்தகைய சமயத்தில் இளம் பெண்கள் பஸ்ஸில் ஏறியவுடன் பக்கத்து சீற்றில் இருந்த பையை எடுத்துவிட்டு எதுவுமே தெரியாதவர்கள் போல் யன்னல் பக்கமாக பார்வையை படரவிடுவார்கள். அவர்கள் எதிர்பார்த்தமாதிரி குறித்த பெண் அந்த சீற்றில் இருந்து விட்டால் பின்னர் தங்கள் லீலைகளை ஆரம்பித்து விடுவார்கள். இன்னும் சிலர் ஆசனங்களை தமக்கு மட்டுமே சொந்தமானது போல கால்களை அகலப்பரப்பிக்கொண்டு அருகிலிருப்போரை மெல்ல மெல்ல சீற் நுனிக்கு கொண்டு சென்று விடுவார்கள். ''கொஞ்சம் தள்ளி இருங்கோ'' என்று பக்கத்தில் இருப்பவர் சொல்லி விட்டால் அவர்களின் மூக்கு நுனியில் கோபம் 'பக்கென்று' வந்துவிடும். புறுபுறுத்துக்கொண்டே கால்களை பழையபடி ஒடுக்கிக்கொள்வார்கள்.

இதைவிட சீ.ரி.பி. சாரதிகள் சிலர் மினிபஸ்ஸோடு போட்டிக்கு ஓடும் அவசரத்தில் சில பஸ் தரிப்பு நிலையங்களில் பஸ்ஸை நிறுத்தாமலே விரைந்து விடுவார்கள். பயணிகள் பதறியடித்துக்கொண்டு பலமுறை மணியை அடித்த பின்னர்தான் அடுத்த பஸ் தரிப்பு நிலையத்தில் அவர்களை இறக்கி விடுவதும் வாடிக்கையாகி விட்டது. அத்தோடு தமக்குத் தெரிந்த நபர்கள் பஸ் தரிப்பு நிலையங்கள் அல்லாத இடங்களில் நின்று கை காட்டினால் அங்கெல்லாம் பஸ்ஸை நிறுத்தி அவர்களை ஏற்றுவதற்கு சாரதிகளும் நடத்துநர்களும் தவறுவதேயில்லை. ஆனால் வயோதிபர்கள் அல்லது நோயாளிகள் பஸ் தரிப்பு நிலையத்தில் இருந்து பஸ்ஸில் ஏறுவதற்கு சற்று நேரம் எடுத்துக்கொண்டால் அவர்களை மினி பஸ்ஸில் வரச்சொல்லி விட்டு பறக்கின்ற சீ.ரி.பி. பஸ்கள் மீது மக்களுக்கு எப்படி விருப்புவரும்?

இவற்றையெல்லாம் சீர்செய்து சீ.ரி.பி. பஸ் முன்னர் போல மக்களின் தேவைகளை பூர்த்தி செய்ய என நினைப்பது நடக்கக்கூடிய காரியமல்ல என்றே அநேகர் கருதுகின்றனர். உண்மை அதுதானா? விடை இ.போ.சவிடம் தான் உள்ளது.

ஓடுகாலி

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நாக மாணிக்க கதை

நாக மாணிக்கம் - நாகரத்தினம் பற்றி பலரும் பலவிதமாக கதைகள் சொல்ல கேள்விப்பட்டிருப்போம். இப்போது நாக ரத்தினம் பற்றி கேள்விப்பட்ட சில விடயங்களை உங்களுடன் பகிர்ந்து கொள்கிறேன். பொதுவாக நவரத்தினங்களில் இருந்து நாக ரத்தினம் முற்றிலும் வேறுபட்டது. நவரத்தினங்கள் பூமியிலிருந்து எடுக்கப்படும்.

நாகரத்தினமோ நாகபாம்பிலிருந்து எடுக்கப்படும். நாக பாம்பு பல வகைப்படும் யோகிகள்,ரிஷிகள் இவைபற்றிய நிறைய ஆய்வுகளை பல ஆயிரம் வருடங்களுக்கு முன்னதாகவே நடத்தியிருக்கின்றனர். அவற்றில் ஒரு வகையான நாகங்கள் நல்ல எண்ணங்கள் கொண்டவை. எவரையும் தீண்டாமல் இறந்தவற்றை மாத்திரம் உண்டு வாழக் கூடியவையாக இருந்தன. இதனால் இவற்றின் விஷம் பயன்படாமல் போய்விடும் இரையை தாக்கவே விஷம் பயன்படும் என்பதால் விஷம் இந்த நாகங்களில் தேங்கியே காணப்படும்.

இப்படிப்பட்ட நாகங்கள் இளமையை பாதுகாப்பதில் வலு கெட்டிக்காரர்கள் சுமார் 110-150 ஆண்டுகள் வாழக்கூடியன. இதனால் பயன்படாத இதன் விஷமானது நாளடைவில் நாக ரத்தினமாக உருவாகும். நாக ரத்தினம் இந்த பாம்புகளுக்கு உருவாகும் தருவாயில் இறக்கைகள்

(11ஆம் பக்கம் பார்க்க)

# உலகின் மிகப்பெரிய மக்டொனால் உணவகம்



உலகின் மிகப் பெரிய மக்டொனால்ட் உணவகம் எதிர்வரும் லண்டன் ஒலிம்பிக் போட்டிக்காக திறக்கப்படுகின்றது.

ஒலிம்பிக் பார்க்கில் திறக்கப்படுகின்ற இந்த உணவகம் 3000 மீற்றர் பரப்பைக் கொண்டு இருக்கின்றது இரண்டுக்கும் அதிகமான மாடிகள் இதில் காணப்படுகின்றன. இந்த உணவகம் அமெரிக்காவின் கால் பந்து மைதானத்தின் அரைவாசி நீளத்தை கொண்டு உள்ளது. இங்கு ஒரே நேரத்தில் 1500 பேர் அமர்ந்து சாப்பிட முடியும். 470 இற்கும் அதிகமான ஊழியர்கள் இங்கு கடமையாற்றவுள்ளனர்.

# இதய நோய்களை தடுக்கும் சொக்லேட்

சிறு குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை சொக்லேட்டை விரும்பாதவர்கள் இல்லை. அந்த சொக்லேட் இதய ஆரோக்கியத்திற்கு நன்மை தரும் என்று சமீபத்திய ஆய்வு முடிவு ஒன்று தெரிவித்துள்ளது.

தினசரி சிறிதளவு சொக்லேட் சாப்படுவதால் இதய நோய், பக்கவாதம் ஏற்படும் அபாயம் குறைவதாக கடந்த சில ஆண்டுகளாக நடந்த 7 ஆய்வு முடிவுகளில் தெரிவிக்கப்பட்டது.



சொக்லேட்டுகளில் ஆண்டி ஆக்ஸிடெண்ட்கள் உள்ளன. சொக்லேட் சாப்பிடுவதன் மூலம் உயர் இரத்த அழுத்தம் குறைகிறது. இன்சுலின் சுரப்பு சரியாகிறது என்றும் ஆய்வாளர்கள் கண்டறிந்துள்ளனர். இவற்றை ஒருங்கிணைத்து 8வது ஆய்வை இங்கிலாந்தின் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்கள் நடத்தினர்.

இதயநோய் பாதித்த, பாதிக்காத ஒரு லட்சம் பேர் பங்கேற்ற இந்த ஆய்வில் ஒரு பிரிவினருக்கு சொக்லேட் அளிக்கப்படவில்லை. மற்றொரு பிரிவுக்கு அதிகளவில் சொக்லேட் அளிக்கப்பட்டு வந்தது.

தினசரி ஒன்று என்ற அளவில் சொக்லேட் சாப்பிட்டு வந்தவர்களுக்கு மற்றவர்களைவிட இதய நோய் ஆபத்து 37 சதவீதம் குறைவாக இருந்தது சோதனையில் தெரியவந்தது. 29 சதவீதம் பக்கவாத அபாயம் நீங்கியது. எனினும், மாரடைப்பை தடுப்பதில் சொக்லேட்டுக்கு பங்கில்லை என்று தெரிந்தது.

முதல்கட்ட 6 ஆய்வுகளில் சொக்லேட்டுக்கும் இதயம் தொடர்பான பிரச்சினைகளுக்கும் தொடர்பு இருப்பது நிரூபணமானது. சொக்லேட், பிஸ்கெட், டெசர்ட் என பால் அதிகமுள்ள சொக்லேட், சொக்கோ அதிகமுள்ள சொக் லேட் என எதுவாக இருந்தாலும் பெரிய வித்தியாசம் ஏதும் தெரியவில்லை.

எனினும் சொக்லேட் சாப்பிடுவதில் எச்சரிக்கை தேவை என ஆராய்ச்சியாளர்கள் கூறியுள்ளனர். ஏனெனில் கடைகளில் விற்கப்படும் சொக்லேட்களில் 100 கிராமுக்கு 500 கலோரிகள் உள்ளன.

அதை அதிகளவு சாப்பிடுவதால் உடல் எடை கூடவும், நீரிழிவு நோய் ஏற்படவும் வாய்ப்புள்ளது. எனவே கலோரி குறைந்த தரமான சொக்லேட்களில் இருக்கும் பொருட்களே ரத்த ஓட்டத்தை ஒழுங்குபடுத்தி இதய நோயை தடுக்க உதவும் என்று ஆய்வாளர்கள் கூறியுள்ளனர்.

பதிவாகியிருந்த நண்பனின்
முச்சக்கர வண்டி தற்போது என்னிடம்

சென்ட்ரல் பினான்ஸில் பதிவுசெய்யப்பட்ட
முச்சக்கர வண்டிக்கு லீசிங்




முச்சக்கர வண்டி ஒன்றை கொள்வனவு செய்ய நான் நினைத்திருந்தபோது நண்பன் சுரேஷ் சொன்னான் அவனின் முச்சக்கர வண்டியை விற்பதாக. நாங்கள் நேரடியாக சென்ட்ரல் பினான்ஸ்ஸுக்கு சென்றோம். பதிவு செய்யப்பட்ட சுரேஷின் முச்சக்கர வண்டிக்கு ஒரு லீசிங் எடுத்தோம். எனக்கு இப்போது நல்ல சவாரி.

CF வருடாந்த குலுக்கல் முறையிலான அதிஷ்டத்தின் மூலம் பெறுமதி வாய்ந்த முச்சக்கரவண்டிகள், குளிர்சாதனப்பெட்டி, தொலைக்காட்சிப்பெட்டி, DVD பிளேயர், சலவை இயந்திரம் போன்ற பரிசுகளை வெல்லும் சந்தர்பம் உங்களுக்குக் கிடைக்கிறது.


CF
சென்ட்ரல் பினான்ஸ் கம்பனி பிஎல்சி
தலைமை அலுவலகம்:
இல. 84, ரஜ வீதி, கண்டி நகரக்கிளை.
நகர் அலுவலகம்:
இல. 270, வெக்சோல் வீதி, கொழும்பு 2.
இணையத்தளம்: www.cf.lk
அண்மையிலுள்ள கிளைக்கு விஜயம் செய்யுங்கள்.



☎ 0772 228 111

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யோகா செய்ய உகந்த நேரம்



யோகா செய்வதற்கு உங்கள் உடலைத் தவிர எந்த உபகரணமும் தேவை இல்லை. யோகாவில் பிரதானமானது மூச்சுப் பயிற்சி. இந்த மூச்சுப் பயிற்சி ரத்த ஓட்டம் சீராகும், மனம் தெளிவடையும், புத்தியில் விழிப்புணர்வு உண்டாகும். மனமும் உடலும் இணைவதுதான் யோகா. மற்ற பயிற்சிகளில் உடல் மிக விரைவாக இளைக்கும்.

ஆனால், பயிற்சியை நிறுத்தினால் முன்பைவிட அதிக எடை வர அதிக வாய்ப்புள்ளது. ஆனால் யோகாவில் எடைக் குறைவது மிக மெதுவாக நிகழும். ஆனால், ஆறுமாத யோகா பயிற்சியின் பலன் ஒன்றரை வருடம் இருக்கும். இடையில் யோகாவை நிறுத்தினாலும் எடை கூடாது. இயற்கை நமக்கு 24 மணி நேரம் கொடுக்கிறது.

நேரப் பகிர்வு அவசியம். அதிகாலையில் எழுந்ததும் யோகா செய்வது மிகவும் நல்லது. இதனால் உடல், மனம், புத்துணர்வு அடைவதோடு, சுத்தமான காற்றும் கிடைக்கும். 20 நிமிட யோகா, 16 மணி நேரம் புத்துணர்ச்சியுடன் வைக்கும்.

காலை 11 மணிக்கு வேலைகளை முடித்துவிட்டு யோகா செய்யலாம். ஆனால், 8.30 மணிக்கு காலை உணவை முடித்திருக்க வேண்டும். மாலையும் யோகா செய்வது நல்லது தான். மதியம் யோகா பயிற்சி செய்வதை தவிர்ப்பது நல்லது.

## சீரகத்தின் மருத்துவக் குணங்கள்



சீரகத்தைப் பரித்தாலே சீர் + அகம் என்ற வார்த்தைகள் கிடைக்கும். நம் உடலின் அனைத்து பாகங்களையும் சீராக்கி நோயின்றி வாழ வழி வகுக்கிறது சீரகம். இதன் மருத்துவ குணத்திற்காகவே சமையலில் அன்றாடம் பயன்படுத்தப்படுகிறது.

சமையலுக்கு சுவையும், மணமும் தருவதில் சீரகம் பல வழிகளில் உதவுகிறது. பலவித மசாலாப் பொடி தயாரிப்பில் இது ஓர் முக்கிய பங்கு வகிக்கிறது. செமிக்காமை, வாயுத் தொல்லை இவைகளுக்கு மாமருந்து.

சீரகத்தில் உயர்தர இரும்புச் சத்து உள்ளது. இது ரத்த சிகப்பு அணுக்களின் உற்பத்தியை அதிகரிக்க உதவுகிறது. இதன் மூலம் ஒட்சிசனை உடலின் அனைத்து பகுதிகளுக்கும் கடத்த உதவுகிறது. உடலுக்கு சக்தி கிடைக்கிறது.

### வயிறு மந்தத்தைப் போக்கும்

உடலுக்கு குளிர்ச்சியும், சருமத்தை பளபளப்பாக வைக்கும் ஆற்றலும் சீரகத்திற்கு உண்டு.சிறிது சீரகத்துடன், இரண்டு வெற்றிலை, நான்கு நல்ல மிளகு சேர்த்து மென்று தின்று, ஒரு குவளை குளிர்ந்த நீர் பருகினால், வயிற்றுப் பொருமல் போய்விடும். சீரகத்தை வாயில் போட்டு குளிர்ந்த தண்ணீரை குடித்தால் தலைச்சுற்றல், மயக்கம் நீங்கி விடும். இதனை உணவில் சேர்த்துச் சாப்பிட்டால் நன்றாக ஜீரணமாகிவிடும்.

### ரத்த அழுத்தம் கட்டுப்படும்

அகத்திக்கீரையுடன் சீரகம், சின்ன வெங்காயம் சேர்த்து கஷாயம் சாப்பிட்டு வந்தால் மனநோய் குணமாகும். திராட்சை ஜூஸுடன் சீரகம் கலந்து பருகி வர இரத்த அழுத்தத்தை கட்டுப்படுத்தலாம். சீரகத்தை இஞ்சி, எலுமிச்சம் பழச்சாறில் கலந்து ஒருநாள் ஊறவைத்துக் கொள்ளவும். இதை, தினம் இருவேளை வீதம் மூன்று நாட்கள் சாப்பிட்டு வர, பித்தம் மொத்தமாகக் குணமாகும்.

### மார்பு வலி நீங்க

மோருடன் சீரகம், இஞ்சி, சிறிது உப்பு சேர்த்துப் பருகினால் வாயுத் தொல்லை நீங்கும்.நெஞ்சு எரிச்சலுக்குச் சீரகத்துடன் கொஞ்சம் வெல்லம் சேர்த்துக் கொட்டைப் பாக்களவு சாப்பிட்டு வந்தால் நெஞ்சு எரிச்சல் குணமாகும். சீரகத்தை எலுமிச்சம்பழச் சாறுவிட்டு உலர்த்தி, தூளாக இடித்து ஒரு டப்பாவில் வைத்துக் கொள்ள வேண்டும். இதனைத் தினமும் ஒரு கரண்டி வீதம் சாப்பிட்டு மோர் குடித்து வந்தால் மார்பு வலி நீங்கும்.

சுக்கு, சீரகம், மிளகு, திப்பலி ஆகியவற்றைப் பொடித் தேனில் கலந்து சாப்பிட்டால் எல்லா உடல் உள் உறுப்புகளையும் சீராக இயங்கச்செய்யும். ஓமத்துடன் சிறிது சீரகம் இட்டு கஷாயம் செய்து, சாப்பிட்டால், அதிக பேதி போவது நிற்கும்.சிறிது சீரகத்துடன், சிறியநெல்லி வைத்து அரைத்து, எலுமிச்சை சாறில் சேர்த்துப் பருகி வர, கல்லீரல் கோளாறு குணமாகும். சீரகத்தூள் செய்து இலேகியமாக மெலிந்து போனவர்களுக்குக் கொடுப்பது உண்டு

### மனநோய் குணமாகும்

சீரகத்தை லேசாக வறுத்து, அத்துடன் பனங்கட்டி சேர்த்துச் சாப்பிட்டு வர, நரம்புகள் வலுப்பெறும். நரம்புத் தளர்ச்சி குணமாகும்.சிறிது சீரகத்துடன், இரண்டு வெற்றிலை, நான்கு நல்ல மிளகு சேர்த்து மென்று தின்று, ஒரு டம்ளர் குளிர்ந்த நீர் பருகினால், வயிற்றுப் பொருமல் குணமடையும்

அகத்திக்கீரையுடன், சீரகம், சின்னவெங்காயம் சேர்த்து கஷாயம் செய்து அத்துடன் பனங்கட்டி சிறிய துண்டுகளாகச் சாப்பிட்டால், மன அழுத்தம் மாறும். ஆரம்பநிலை மனநோய் குணமாகும்.

### கர்ப்பிணிகளுக்கு கசாயம்

சீரகத்தை கொதிக்கும் நீரில் போட்டு கஷாயம் செய்து கர்ப்பிணிகளுக்கு கொடுத்தால் உடல் லேசாகும், பிரசவம் எளிதாகும். இது நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கும்.

## நாக மாணிக்க கதை

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

முளைத்து பறக்கும் வல்லமை கொண்டனவாக காணப்படும். இதுதவிர இவைக்கு வேறுபலன் கிடையாது. கண்பார்வை மங்கிக் காணப்படும் இச்சந்தர்ப்பத்தில் அமாவாசை தினங்களில் காரிருள் காரணமாக இவை ஒளியின்றி, இரை தேட வசதியின்றி இந்த நாக ரத்தினத்தை வெளியில் கக்கி அதன் ஒளியில் இரைதேடும்.

நாக மாணிக்கம் மிகுந்த பிரகாசமானது. இரை தேடி முடிந்த பின் மீண்டும் வந்து உள்ளெடுத்துக் கொள்ளும். நாக ரத்தினம் பற்றிய உண்மைகள்:

இவை பல நூறு வருடங்களாக சேமித்த விஷத்தில் உருவாகியது. இதனால் மகா கொடிய விஷத்தன்மை வாய்ந்தது. கையில் காயம் உள்ளவர்கள் இதனை தொட்டால் உடனே மரணம் நேரும். வாயில் வைத்தாலோ புண்களில் பட்டாலோ உடனே மரணம் நேரும். பார்த்து கையாள்வது சிறந்தது.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org